1665

SCENES OF VILLAGE LIFE

BY

W. V. GOVINDASWAMY RAJU, B. A., L. T.,
*Tamil Prizeman of the Madras University
and of the Madura Tamil Sangam;
Deputy Inspector of Schools, East Range,
Vriddhachalam.*

WITH AN INTRODUCTION BY

Dewan Bahadur L. D. SWAMIKANNU PILLAI Avl.,
M.A., L.L.B., I.S.O.
President, Legislative Council, Madras.

ௐ

MADRAS:
GUARDIAN PRESS
1925

[Price Re. 1.

TB
O31,6
N25
180443

Scenes of Village Life

எங்கள் ஊர்

உ. வே. கோவிந்தசாமி ராஜு, பி.ஏ., எல்.டி.,
எழுதியது.

திவான்பஹதூர் L. D. சாமிகண்ணு பிள்ளை யவர்கள்
M.A., L.L.B., I.S.O.
எழுதிய பாயிரத்துடன்

சென்னை
கார்டியன் அச்சுக்கூடத்தில்
பதிப்பித்தது.

1925

Price: Re. 1.] [விலை: ரூபா 1.

Copyright By
R. LAKSHMANA KAVUNDER,
Coimbatore.

INTRODUCTION

I have been asked to furnish an Introduction to "Scenes of Village Life" in Tamil by Mr. W. V. Govindaswami Raju, B A., L.T., Tamil Prizeman of the Madras University and of the Madura Tamil Sangam. It is hardly necessary for me to write a formal Introduction as the merits of the book will speak for themselves. It represents a type of literature other than the fashionable novel and if only for the sake of variety, we want more of these essays on familiar village scenes to afford legitimate amusement, and more than amusement, instruction, to the average reading public. I hope these essays will enjoy the popularity they deserve. They may well serve as a model of Tamil Composition in High School and College classes.

L. D. Swamikannu.

முன்னுரை.

ஆங்கிலத்தில் ஆங்கிலேயர்களது கிராம வாழ்க்கையை விரித்துக் கூறும் புத்தகங்கள் பல உள்ளன. சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டுக் கிராம வாழ்க்கையைக் குறித்துக் காலஞ்சென்ற திருவாளர் தோட்டக்காடு - இராமகிருஷ்ண பிள்ளை யவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல் ஆங்கிலம் உணர்ந்தோருக்கு மாத்திரமே பயன் தரத்தக்கதாய் இருந்தது; இப்பொழுது அதன் வழி நூல் ஒன்று தமிழில் வெளிவந்துள்ளதென்று கேள்விப்படுகின்றேன். எனினும், தமிழில் தமிழ் மக்களுக்காகத் தமிழ் நாட்டுக் கிராம வாழ்க்கையை இதைப்போல் உள்ளவாறு விவரித்துக் கூறும் முதல் நூல் வேறு ஒன்றும் இல்லை யென்று துணிந்து கூறலாம்.

இதிலே கூறப்படும் ஆண்களும் பெண்களும் உண்மையாக உயிரோடு வாழ்ந்தவர்கள்; அவர்களுடைய பெயர்களும் ஊர்களும் மாற்றிச் சொல்லப்பட்டுள்ளன.

எச்சாதியினரையாவது எவ் வகுப்பினரையாவது இகழ்ந்து பேசுதல் வேண்டும் என்ற எண்ணம் எனக்குச் சிறிதும் இல்லை. உள்ளதை யுள்ளவாறு சொல்லுதல் வேண்டும் என்பதே என் விருப்பம்.

'ஓலையக்காள்' பாட்டிலும் இறுதியிற் சேர்த்துள்ள மணவாழ்த்துப் பாட்டிலும் சொற் பிழைகள் மலிந்துள்ளன. இவற்றில் உரு மாறியுள்ள பல சொற்களையும் திருத்துவது என்னால் இயலாத காரியம்; சிலவற்றைத் திருத்தப் புகினும் நான் அறியாமலே சில வழுக்களை நுழைவித்து இப் பாட்டுகளில் முன்னோர் கருத்தைப் பிறழ்வித்தலுங்கூடும் என்று அஞ்சி, அவற்றைத் தொடாமல் நான் கேட்டபடியே எழுதியுள்ளேன். அறிஞர்கள் சோர்வு படும் இடங்

களைத் திருத்தி எனக்குத் தெரிவிப்பார்களாயின் அவர்கள் பால் நன்றியறிதலோடு அடுத்த பதிப்பில் குற்றங் களைந்து இப் பாட்டு களை அச்சிடலாகும்.

இந்நூலுக்குப் பாயிரம் எழுதிய திவான்பஹதூர் L. D. சாமிகண்ணு பிள்ளை, M. A., L. L. B., I. S. O. அவர்களிடத்தும், அவர்களை எனக்கு அறிமுகஞ் செய்வித்து, இந் நூலை அச்சிடுவதற்கு என்னை யூக்குவித்த ராவ்பஹதூர் J. செல்வாங்க ராஜு (Retired Deputy Director of Agriculture, Guindy) அவர்களிடத்தும் நீங்காத மெய்யன்பும் நன்றியறிவும் உடையேன்.

இப் புத்தகத்தை அச்சிடுகையில், அச்சிட்ட பாரங்களைத் திருத்தியபின் அவற்றில் என் கண்ணுக்குப் புலப்படாத சில எழுத்துப் பிழைகளை அவ்வப்போது சுட்டிக்காட்டி, எட்டு வயதினனான என்மகன் சிரஞ்சீவி கோபால கிருஷ்ணன் செய்த உதவியையும் நான் பாராட்டுகின்றேன்.

இதைப் படிக்கும் அன்பர்கள் தொடக்கத்திலேயே, இதன் இறுதியிற் காணும் பிழைகளை ஆங்கு குறித்தபடி திருத்திக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

விருத்தாசலம் }
10—2—25 } உ. வே. கோவிந்தசாமி ராஜு.

உள்ளுறை.

		பக்கம்.
I.	எங்கள் நாடு	1
II.	எங்கள் ஊர்	14
III.	ஊர்ப்பண்ணுடி	37
IV.	மணியக்கார—குருசாமி ஐயர்	57
V.	ஐயண்ண வாத்தியார்	69
VI.	பட்டிநோன்பு—பூநோன்பு	89
VII.	அமாவாசைக் குறவன்	105
VIII.	கடைக்காரி—காவேரியம்மாள்	123
IX.	பொழுது போக்கு...	141
X.	வள்ளியம்மாள் திருமணம்...	157
	பின்னுரை	169
	அரும்பதவுரை	173

I

எங்கள் நாடு.

கம்பர்,

நீரெலாஞ் சேற்று நாற்றம்; நிலமெலாங் கல்லு முள்ளும்;
ஊரெலாம் பட்டி தொட்டி; உண்பதோ கம்பஞ் சோறு;
பேரெலாம் பொம்மன் திம்மன்; பெண்களோ நாயும் பேயும்;
காருலாங் கொங்கு நாட்டைக் கனவிலு நினைக்கொணுதே.

என்று கொங்கு நாட்டைப் பாடியதாகச் சிலர் சொல்லுகின்றனர். இது கம்பர் பெயரால் வழங்கிவரும் ஒரு தனிப்பாடல். முதலாவது: இது அவர் செய்ததே என்று துணிந்து கூறுவதற்குப் போதிய சான்று ஒன்றேனும் உண்டா? கல்வியிலும் அறிவிலும் ஒருங்கே சிறந்த கம்பர், வீரமும் கொடையும் செறிந்த கொங்கு நாட்டை இவ்வாறு இழித்துக் கூறுவ்ாரா? அங்ஙனம் கூறுவது கவிச் சக்கரவர்த்திகளுக்கு அழகாமோ? அன்றியும், இக்கவி வெண்பொருள் உடையதுதானே. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுந் திறமையுடைய கம்பர் இவ்வாறு கற்பனையின்றியும் ஒரு கவி பாடுவாரோ? இது அவர் கவியாயின், மூவுலகு, மும்மூர்த்திகள், எட்டுத்திக்குகள், அட்டயானைகள், அண்டகோளங்கள், மேருமலை, வட

வைத்தீ—இவற்றில் ஒன்றேனும் இக் கவியில வரவில்லையே. கம்பர் இராமாயணம் பாடியபின் தமது கவித்திறமையை இழந்ததாகச் சிலர் கூறுகின்றனர். இது அக்காலத்தில் பாடியதோ? கவித்திறமையை இழந்தபின் அவர் பாடியன என்று சொல்லுங் கவிகள், கல்வியிற் பெரியவரான கம்பர் பாடியன வல்ல; கவிச் சக்கரவர்த்தியான கம்பர் பாடியன வல்ல; கம்பருக்குள்ளே யிருந்த வம்பர் பாடியன. இக் கவியும் அவ்வம்பர் பாடியதெனின் நான் வாய்புதைத்துக்கொள்கின்றேன். இரண்டாவது: இக்கவி கம்பர் பாடியதே ஆருக. கம்பர் சோழநாட்டார். தாம் பிறந்த நாட்டைப் புகழ்ந்தும் பிற நாடுகளை யிகழ்ந்தும் பேசுவது எவருக்கும் இயல்பே. கம்பரும் அப்பாவத்திற் குள்ளானவரே. அன்றியும் கம்பர் கல்லை மலையாக்குவார், மலையை மண்ணுக்குவார் என்பது அவர் கவிகளை ஆராய்ந்தோர் எவருக்கும் புலனுகும். 'எந்நாளும் காப்பாரே வேளாளர் காண்' என்று பாடியவர் வேளாளர்களே மிகுந்திருக்கும் கொங்கு நாட்டை இங்ஙனம் இகழ்ந்து கூறுர். கம்பர் கொங்கு நாட்டில் நீடித்து வாழ்ந்து உள்ளதை யுள்ளபடி உணர்ந்தவர் அல்லர். ஆகையால், கொங்கு நாட்டிலே பிறந்து, கொங்கு நாட்டிலே வளர்ந்து கொங்கு நாட்டை உள்ளவாறு அறிந்தோ ஞெருவன் தனது நாட்டைப்பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

எங்கள் நாடெங்கும் சோளக்காடும் கம்பங்காடும் வரகுக்காடும் திணைக்காடும் கொள்ளுக்காடும் நிறைந்திருக்கும். சோளச்செடியும் கம்பஞ்செடியும் அணியணியாய் வளர்ந்து கதிர்விடும்பொழுது, அவற்றினூடே செல்வது உயிரற்ற பொருள்களினிடையிற் செல்வதுபோலிராமல் மக்களுக்கிடையே நாம் பழகுவதுபோன்றிருக்கும். கதிர்கள் பால் பிடிக்கையில், காட்டின் நடுவிலே நான்கு கருவேலங் கால்

களையாயினும் வேப்பங் கால்களையாயினும் நட்டு, அவற்றின் மீது கழியும் இலையும் தழையும் பரப்பிப் பரண்போடுவார்கள். பரணின்மேல் சிறியவர்களேனும் பெரியவர்களேனும் ஏறி நின்று காக்கையோட்டிக் கவண் எறிவார்கள். பாழுங் காக்கைகளும் திருட்டுக் குருவிக் கூட்டங்களும் கல்லெறி தூரத்துக்கப்பால் கும்பல் கும்பலாய் வந்து விழுந்து கதிர்களைச் சூறையாடும். பரணின்மீது இருப்போர் சாட்டையடித்து, கவணெறிந்து, கா கூ என்று கத்தித் தொண்டை கம்மினவர்களாவார்கள். தொண்டை கம்மிக் களைத்தவர்களாய்த் தகரங்களை யடித்துக் காக்கை குருவிகளை வெருட்டுவார் சிலர்; வைக்கோலினால் வயிறு புடைத்த ஒரு கோமாளி செய்து, அதை ஒரு மூங்கிலிலே கட்டிக் காக்கை குருவிகளை ஏமாற்றுவார் சிலர். சோளப் பம்பலுக்குமுன் ஒவ்வொரு ஊரின் புறத்தும் காடுகள்தோறும் காக்கை குருவியோட்டும் ஓசை எங்கும் ஒலிக்கும்.

சாமைக் காட்டிலே பெண்கள் களையெடுப்பார்கள். இருபது முப்பது பெண்கள் ஒழுங்காக நின்று குனிந்து கொண்டு கொத்தினால் களை வெட்டுவார்கள். அவர்களிலே வெள்ளைச்சேலை யுடுத்த விதவைகள் சிலர்; புத்தியறிந்து மணமுடியாத குமரிகள் சிலர்; தாலி தொங்கும் கழுத்தினையுடைய பெண்டிர் சிலர்; தச்சன், கொல்லன், வண்ணான், நாவிதன் வீட்டு ஏழைப் பெண்கள் சிலர்; ஓர் ஏர் இரண்டேர் வைத்துப் பயிர்செய்யும் குடியானவர்களின் பெண்கள் சிலர். எல்லோரும் வலது பக்கம் கொண்டை முடிந்தவர்கள்; நெகிழவிட்ட மாராப்புப் போட்டவர்கள். பலர் தலையில் மோர் மணக்கும்; சிலர் தலையில் கஞ்சி மணக்கும்; எஞ்சியவர்கள் தலையில் எண்ணெய் மணக்கும்; எல்லோர் வாயிலும் வெற்றிலை பாக்குப் புகையிலை மணக்கும். ஐம்பது

வயது சென்ற நமது வேலக்காள் வாயைப் பாருங்கள்! அவளுடைய இரண்டு கன்னங்களும் உரலைப்போல் குழிந்திருக்கின்றன. மீந்திருக்கும் ஐந்து கடைவாய்ப் பற்களும் வெற்றிலை பாக்கு மென்று மென்று தேய்ந்து கரித்துண்டுகள் போன்றிருக்கின்றன. ஆயினும் அவள் வாய் சுருக்கிட்டவிழ்த்த பைபோல் விரிந்தும், சுருங்கியும்; அவள் உதடுகள் மூக்கின் நுனியைத் தொடுவதற்குப் பந்தயம் ஓடுபவை போல் உயர்ந்தும் தாழ்ந்தும் ஓயாது வேலை செய்வதைப் பாருங்கள்! அக்குமரி சுப்பக்காளின் வலது கன்னம் புடைத்திருக்கின்றது, அவள் வெற்றிலை பாக்கு அடக்கிக்கொண்டிருக்கின்றனள். அக்குடியானவன் பெண்டாட்டி மடியிலே ஒரு பெட்டிக்கூடை வெற்றிலை பாக்குப் புகையிலை அடங்கியிருக்கின்றன. எல்லோரும் களை பிடுங்கிக்கொண்டிருக்கையில் நாச்சக்காள் பின்பக்கம் திரும்பி புருச் என எச்சிலுமிழ்ந்தாள். அது குப்பக்காள் முன்றானையிற் சிறிது பட்டது. குப்பக்காள் கறுத்துச் சிடுசிடுத்த முகத்துடன் சொல்லுகிறாள்:

“நல்லெழவு போ. ஆளுமேலெ உமியாதபோனு உனக்குக்கண்ணில்லே? ஆனுலுந்தான் நீஎன்ன பொம்பளே,போ.”

நாச்சக்காள், “அடடடா—ஆமா, எனக்குக் கண்ணுப்போனு உம்புருசனுட்லேதான் உக்காந்துகிட்டுத் திங்கறது” என்று சினந்து சொன்னாள்.

கும்பக்காள், “இதென்னடி யெழவு, எம்புருசனுட்லே திங்கறதுக்கு நீ யாரு? நீ யென்ன எனக்கு சவுத்தியா, சக்களத்தியா? எனக்குப் புள்ளெயில்லே, குட்டியில்லே!” என்று படுக்கெனக் கேட்டாள்.

நாச்சக்காள், “ஏண்டியெஞ் சவுத்தி,ஏண்டி எஞ் சக்களத்தி, வாடி பாக்கலாம் ஆ! ஆ! நீ என்னைச் சவுத்தி யெம்

பியா, சக்களத்தி எம்பியா?" என்று விரைந்துபேசி, தன் சேலையை வாரிக் கட்டிக்கொண்டு, கொத்தை எறிந்துவிட்டு, கையையும் காலையும் ஆட்டி நீட்டி, சாமைக்காட்டிலே கூத்-தாடுவதற்குத் தொடங்கிவிட்டாள்.

அவளுக்கிளைக்காத குப்பக்காள், "அடியே, அடியே, என்னைச் சவுத்தியிண்ணு சொன்னயா, மொட்டப் பறை யங் கையிலே செருப்பைக் குடுத்துக்கிட்டு அடிக்கச் சொல்லுவேன் அம்மா அமக்களமே! உண்ணிக் குதிச்சுகிட்டு வந்தியா, கழுத்துலே சிலையப்போட்டு வீதிக்கு இழுத்துகிட்டுப்போய் மானத்தைக் கெடுத்துப்போடுவேன்." என்றாள்.

அங்கிருந்த மற்றைப் பெண்களும் இச்சண்டையில் தலையிட்டனர். சிலர் இரு பக்கத்தாரையும் சாந்தப்படுத்தினர். இதற்குள் துவரைமாறுப் போரிலே மாறு உருவிக்கொண்டிருந்த பண்ணுடிச்சி அங்கே வந்து, ஒருவரும் ஒன்றும் பேசுதல் கூடாதென்று கட்டளையிட்டுச் சண்டையை ஒழித்தாள்.

களத்துக்கருகிலே கண்ணிலே பீழை வழிய ஓர் எருமைக்கன்று நின்றது. பக்கத்து வேப்பமரத்திலிருந்து ஒரு வஞ்சகக் காக்கை அதன் முதுகின்மீது வந்து உட்கார்ந்து வாற்புறத்திருந்த புண்ணைக் கொத்திற்று. வருந்திய கன்று வாலை ஆட்டி வீசிற்று. காக்கை குதித்துக் குதித்துச் சென்று, அடிக்குத் தப்பி, கன்றின் தலைமீதமர்ந்து, கன்றின் காதினுள்ளே தன் மூக்கை நுழைத்து, பொறுமையோடு ஆராய்ச்சி செய்யத் தொடங்கிற்று. கன்று தலையைத் தாழ்த்தி நிலத்துக்குக் கொண்டுவந்து காக்கையை ஓட்ட முயன்றது. உடனே காக்கை கன்றின் முதுகை நோக்கி விரைந்துபோயிற்று. கன்று தலையை நிமிர்த்தவே காக்கை திரும்பிவந்து பழைய ஆராய்ச்சியைத் தொடங்

கிற்று. கன்று செய்வதறியாது கலங்கிற்று. இதற்குள் கன்றின் காது உணி ஒன்றிரண்டை விருந்துசெய்த காகம், தன் சாதித்தன்மைக் கேற்பக் கா கா என்று கத்தித் தன் உறவினரை அழைத்தது. அக்கணமே பெருந்தலைக் காகம் ஒன்றும் அதன் மனைக் கிழத்தியும் பறந்துவந்து கன்றின் முதுகின்மேல் குந்தின. இக் கொலைச்செயலைக் கண்ட கன்று தடுமாறி ஓலமிட்டது. அருகே கருவேல மரங்கள் சூழ்ந்த ஒரு செருவில், சேற்று நிலத்தில் இன்னுஞ் சில எருமைகளோடு நீர்விளையாட்டில் அமர்ந்திருந்த தாயெருமை கன்று ஓலமிட்டதைக் கேட்டு, இயன்ற அளவு வேகமாய்ச் செருவைவிட்டு வெளியே வந்து, செங்கண்ணும் சேருடு கோலமுமாய்க் கன்றைநாடி வந்தது. அது கன்றின் பக்கம் வருமளவும் காகங்கள் குறு குறு எனப் பார்த்திருந்து திடீரென்று பறந்துபோயின.

விளை நிலங்களிலே அடிமலர்ந்து நுனி சிறுத்த பூக்களையுடைய பண்ணைக் கீரை முளைத்திருக்கும். வெற்றிடங்களிலே கொழுஞ்சியும் எருக்கும் தழைத்திருக்கும். வேலிகளிலே தண்ணீர்ப்பூடும் நாயுருவியும், நீலநீறப் பழந்தரும் பூலாஞ்செடியும், வேலும் வேம்பும், கூரிய முள்ளையுடைய சூரியும் கற்றாழையும் செழித்திருக்கும். இட்டேரிகளில் கள்ளியும் திருகு கள்ளியும் நுணாவும் வளர்ந்திருக்கும். ஆலமரத்தின்கீழ் பழுப்பிலைகள் உதிர்ந்துகிடந்து காற்றில் அலைப்புண்டு புரளும்; அதன் சிவந்த பழங்கள் அணில்களும் பறவைகளும் தின்று ஒருபுடை சிதைந்து உருண்டு கிடக்கும்; அவற்றை யெடுக்கும் பொருட்டு ஆலமரம் தன் கைகளை நீட்டுவது போல விழுதுகள் தொங்கும். குடை போற் கவிந்து பரவிய கிளைகளையும், பெருத்த குண்டூசிகள் போன்ற வெண்முட்களையும் உடைய குடைவேல மரமும்,

வெள்வேல மரமும் பெரிய காளான்களைப் போன்று ஊர் மந்தையிலே அங்கங்கே முளைத்திருக்கும். அவற்றின் நிழலிலே ஆடுமாடு மேய்க்கும் சிறுவர்கள் தமது மந்தைகளை வெய்யிலுக்கு ஓட்டிவிட்டு விளையாடிக்கொண் டிருப்பார்கள். மாடுகள் அசைபோடும் ; ஆடுகள் தமது குட்டைவால்களை அசைத்துக் கொண்டு சோம்பிநிற்கும்.

மந்தைக்குப் பக்கத்தில், ஊர் வாயிலில், இச்சி மரத்தின்கீழ் பிள்ளையார் கோவிலிருக்கும். அவ் விச்சி மரத்திலே ஓட்டுச் செடிகள் அங்குமிங்கும் தொங்கும். அம்மரத்தின் கீழ் மார்பளவு உயர்ந்த ஒரு மேடையின்மீது அடிமரத்தினருகே பிள்ளையார் கிழக்கு நோக்கித் தொப்பை விளங்க அமர்ந்திருப்பார். அவருக்கு இருபுறமும் இணைப் பாம்புகளும் குட்டிச் சாமிகளும் எண்ணெய் படிந்து படிந்து கறுத்து, திருநீறும் சந்தனமும் அணிந்துகொண்டு வீற்றிருக்கும். சாமிகள்மீது விழும் தண்ணீரும் தேங்காய் நீரும் வழிந்து ஓடும்பொருட்டு அம் மேடையில் சாமிகளைச் சுற்றி ஒரு சிறு சலதாரை செய்திருக்கும். பிள்ளையாருக்கு வலது பக்கம் விளக்கு வைப்பதற்கு மண்ணுற் செய்த ஒரு கூண்டு வைத்திருக்கும். சாமிகளின் புறத்தே தேங்காய்க் குடுமிகளும் பயறுகளும் சிந்தியிருக்கும். இக்கோயிலிலே தூய்மையும் இச்சி மரத்தின் நிழலால் தண்மையும் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். மரத்தின் இலைகள் காற்றில் அசையும்பொழுது அவற்றின் நிழல் கீழே ஓடியாடும்.

ஊரார் குடிப்பதற்குத் தண்ணீர் மொண்டுவரும் பொருட்டுப் பிள்ளையார் கோவில் வாயிலைக்கடந்து ஊர்க் கிணற்றுக்குச் செல்வார்கள். கோவிலை நீங்கியதும் அவர்கள் இருபுறமும் பூத்துவளர்ந்த ஆவாஞ்செடிகள் நிறைந்த ஒரு மேட்டு நிலத்தினூடே சென்று கிணற்றை யடைவார்கள்.

ஊர்க்கிணறு சதுரவடிவாய் நிலத்தில் தோண்டிய ஒரு நீர் நிலை. கிணற்றைச் சுற்றிலும் வேம்பும், வேறு செடிகொடிகள் நெருங்கிப்படர்ந்த புதர்களும் நிறைந்திருக்கும். நீருக்குள்ளே தாமரையும் பாசியும் படர்ந்திருக்கும். நீர் மொள்ளுவோர் குடத்தால் தாமரையை விலக்கிச் சிறிது நீர் மொண்டு, குடத்தினுள் கையைப்புகுத்தி அலம்பி, பொள்ளென அழுக்கு நீரையும் மொண்ட இடத்திலேயே கொட்டி, செப்புக் குடங்களிலும் மண் குடங்களிலும் நீர் மொண்டு கொண்டு திரும்புவார்கள். பெண்கள் தம் முன்றானையாற் சும்மாடு சுற்றித் தலையின்மீது வைத்து, அதன்மேற் குடத்தை வைத்துக்கொண்டு போவார்கள். ஆண்கள் தமது வலது முதுகில் குடத்தைச் சார்த்தி வலது கையாற் பற்றிச் செல்வார்கள். நாள் முழுவதும் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் வரிசை வரிசையாய் ஊருக்கும் கிணற்றுக்கும் நடந்துகொண்டே இருப்பார்கள். அவர்கள் காலடி பட்டுப்பட்டு வெண் சுக்கங்கல் நிறைந்த கிணற்றுத் தடமும் சமப்பட்டிருக்கும்.

தோட்டங்களிலே பூமியில் ஆழத்தோண்டிய சதுர வடிவான கிணறுகள் உள்ளன. அவற்றிலே எப்பொழுதும் இரண்டு மூன்று ஆள் தண்ணீர் இருக்கும். தண்ணீர் நிலத்தினியல்புக்குத் தக்கவாறு நீல நிறமாயும் பசுமை நிறமாயும் காற்றலைப்பால் திரைகளோடச் சலித்துக்கொண்டிருக்கும். இக்கிணற்றின் சுவர்களில் அத்தியும் வேம்பும் தண்ணீர்ப் பூடுகளும் இச்சியும் முளைத்துத் தொங்கும். அம்மரங்களின் வேர்கள் கிணற்றுச் சுவரிலுள்ள கற்களினிடையில் நுழைந்து வளைந்து சடுதியிற் பார்ப்போருக்குப் பாம்புகள் போலத் தோன்றும். சுவர்களின் கற் சந்துகளில் பாம்புகள் சட்டைவிட்டிருக்கும். கிணற்றின் நான்கு மூலைகளும்

சிறிது இருண்டு அச்சம் விளைவிக்கும். ஓரிரண்டு மூலைகளில் தண்ணீர்ப் பாம்புகள் நெளிந்துகொண்டிருக்கும்; நண்டு-கள் இடம்விட்டு இடம் மெதுவாய் நகர்ந்துகொண்டிருக்கும். கிணற்றின் நடுவில் நீர் நிலைக்கு மேலே தொங்கும் கிளைகளில் தூக்கணங் குருவிகளின் கூடுகள் தொங்கும். மேட்டிலே, கிணற்றின் ஓரத்திலே கவலை யிறைப்பதற்காகத் தொலை கட்டியிருக்கும். கவலை யிறைக்கும் இடத்தைச் சுற்றிலும் பூவாசமரங்களும், புளிய மரங்களும், இச்சி மரங்களும் ஓங்கி வளர்ந்து தண்ணிழல் கொடுக்கும். எங்கள் நாட்டிலே, கானல் பரந்த செங்காடுகளிலே நிழல் தரும் தோட்டங்களும், தண்மை பரப்பும் கிணறுகளும் அங்கங்கே காணப்படுவது, பாலைவனத்தில் தோன்றும் பைந்நீர்ச் சோலைகளை நினைப்பூட்டும்.

வயலின் வரப்புகளில் நண்டின் ஓடுகளும் மீனின் சிதல்களும் சிந்தியிருக்கும்; பறித்தெறிந்த களைப்பூண்டுகள் கொத்துக்கொத்தாகக்கிடக்கும்; அவற்றின் பூக்களிலே தேன் குடித்து மயங்கிய வண்டுகள் தூங்கிக் கிடக்கும். வயல்களிற் சில இடங்களிலே நீர் தேங்கி சலசலவென்று அடுத்த வயல்களுக்கு ஓடிக்கொண்டிருக்கும். தோட்டங்களிலே கவலை யிறைத்த நீர் பசிய அறுகம்புல் மேட்டையுடைய வாய்க்கால் வழியாய்ச் சிலுசிலுவென ஒளிர்ந்து ஓடி, சாமைப் பாத்திகளுக்கும் கேழ்வரகுப் பாத்திகளுக்கும் செல்லும். தினைப் பயிரும் வரகம் பயிரும் நிறைந்த காட்டுக்குள்ளே காடையும் கவுதாரியும் கத்தும். புகையிலைக் காடுகளிலே புகையிலையை வெட்டி அம்பாரம் போட்டிருப்பார்கள். வெட்டிய சோளக் காடுகளிலே கூரிய கட்டைகள் நெருங்கியிருக்கும்; அவற்றின் இடையே முளைத்த புற்களை ஆடுமாடுகள் தம் கழுத்திற் கட்டிய மணிகள் அசைய மேய்ந்துகொண்டிருக்கும். செங்

காடுகளில் இட்ட பட்டிகளிலே நூற்றுக் கணக்கான ஆடு மாடுகள் அடைந்திருக்கும். அப் பட்டிகளுக்கு வெளிப் புறத்தே பட்டியாட்களும் நாய்களும் காவலிருப்பர். புது முகத்தைக் காணின் அந்நாய்கள் வள் வள் என்று குரைத்து ஓடிவரும்.

கவலை யிறைக்கும் ஓசையும், வாய்க்கால் நீர் பாயும் ஓசையும், களையெடுப்போர் பேசும் ஓசையும், கவண் எறி வோர் கூவும் ஓசையும், எருமைகள் செருவிலே ஆடும் ஓசையும், வயல்நீர் பாயும் ஓசையும், எருதுகளின் கழுத் தில் கட்டிய மணிகள் அசையும் ஓசையும், களங்களிலே கோழிகள் கூவும் ஓசையும், பட்டிநாய்கள் குரைக்கும் ஓசையும், காடை கவுதாரி கத்தும் ஓசையும், கான்யாறுகள் பாறைகளிற் படிந்தோடும் ஓசையும், மாடு மேய்ப்போர் புல்லங்குழ லூதும் ஓசையும் நாடெங்கும் ஒலிக்கும்.

எங்கள் நாட்டிலே, பல இடங்களிலே, சேவற் கட்டு வலுவாய் நடைபெறுகிறது. இரண்டு ஊர்களுக்கு நடு விலே, நிழல்தரும் ஒரு புளியந்தோப்பிலே, ஓர் அகன்ற இடைவெளியிலே, இரண்டு ஊராரும் சந்திப்பார்கள். சில இடங்களில் பத்துப் பதினைந்து கிராமத்தார் கூடி ஒரு பொது விடத்திலே கட்டு நடத்துவதுமுண்டு. காலைதொடங்கி மாலைவரையும் கட்டு நடைபெறும். ஒரூரார் மற்றூ ரூராரை வென்று புகழ்பெறவேண்டும் என்று நினைப்பதாலும், சேவற்கட்டில் வெற்றி தோல்வியால் முறையே பெரும் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் உண்டாவதாய் அவர்கள் கருதுவ தாலும்,சில சமயங்களில் அவர்களுக்குள்ளே வாய்ச்சண்டை கைச்சண்டையும் நிகழும். கட்டு நடத்துவோர் சிலர், வேடிக்கை பார்க்க வருவோர் பலர். சிலர் நடுப்பகலுக் கென்று கட்டுச் சாதம் கொண்டுவருவார்கள்; சிலர் கட்டை

வண்டிகளில் வருவார்கள். ஒருசிலர்—பண்ணுடிகள்—சதங்கை மாலை யிட்ட காளைகள் பூட்டிய பெட்டி வண்டிகளிலே வருவார்கள். சேவற்கட்டில் செல்வர்களும் எளியோரும் வேற்றுமையின்றிக் கலந்துகொள்வார்கள்.

நஞ்சுண்டான் பாளையம்—குருசாமி நாயக்கர், காடன் பட்டி—முத்துவீரப்ப கவுண்டரை வெல்லும் பொருட்டு, கட்டு நடப்பதற்கு இருபது நாளைக்கு முன்னரே கன்னி வாடி முதலான இடங்களுக்கு ஆட்களைப் போக்கி, பெரும் பணம் செலவு செய்து, செங்கால் பச்சைக்கால் முதலிய சிறந்த அங்கங்களையும் குறிகளையுமுடைய சேவல்களை வர வழைத்திருக்கின்றார். முத்துவீரப்ப கவுண்டரோ, தாம் இம்முறை நாயக்கரை வெல்லாவிடின் தமது மீசையை எடுத்துவிடுவதாய் எல்லோர் முன்னிலையிலும் சபதமிட் டிருக்கிறார். இதையறிந்த சனங்கள் இம்முறை நடக்கும் சேவற்கட்டுக்குத் திரள் திரளாய் வேடிக்கைபார்க்க வந் திருக்கின்றனர். கட்டு நடக்கும் இடைவெளியைச் சுற்றி லும் சனங்கள் கும்பல் கும்பலாய் உட்கார்ந்தும், நின்றும், உரையாடியும், வெற்றிலை பாக்கு மென்று புகையிலை அடக்கி எச்சில் உமிழ்ந்துமிழ்ந்து சேவல் கட்டுமிடத்தை உள்ள வாறே இரத்தகள மாக்கினர். எங்குப் பார்த்தாலும் செஞ் சேவல்களும் வெள்ளைச் சேவல்களும், பல நிறச் சேவல் களும் கற்களிலும் மரவேர்களிலும் கட்டப்பெற்று, தமது தாடி கொண்டைகள் விளங்க, வயிறு புடைக்க இரைதின்று இறுமாந்து கொக்கொக்கோ கோ என்று கூவுகின்றன. இதோ கட்டுத் தொடங்கிற்று! முதற்கட்டு ஓர் ஆண்டியும் குடியானவனும் நடத்துகிறார்கள். அவர்கள் தம் தம் சேவலை எடுத்து, தலைமுதல் வால்வரையிலும் நீவி, தங்கள் மடிகளிலே வைத்திருக்கும் தோற் பைகளை அவிழ்த்து, அவற்றிலே

செருகியிருக்கும் பளபளவென்று மின்னுகிற நாலைந்து அங்குல நீளமுள்ள கூரிய சிறு கத்திகளைச் சேவல்களின் கால்களில் வரிந்துகட்டி, சேவல்களை எடுத்துக்கொண்டு இடைவெளிக்கு வந்து எதிரெதிரே நிற்கின்றனர். அவர்கள் தங்கள் சேவல்களை மார்பளவு உயர்த்தி, நீவி, நிலத்தளவு தாழ்த்தி, எதிரெதிரே நிறுத்தி, ஒன்றை யொன்று தாக்கும்படி விடுகின்றனர். அக்கோழிகள் ஒரு கணப்பொழுது ஒன்றை யொன்று உற்று நோக்கி, கண்கள் சிவக்க, கழுத்து மயிர் பரக்க, ஒன்றின்மே லொன்று பாய்ந்து கத்திகளை வீசி அடித்துக்கொள்கின்றன. அடுத்த கணத்தில் குடியானவன் கோழி அறையுண்டு இரத்தங் கக்கி வீழ்கின்றது. எதிரிகள் தம் தம் கோழிகளை வாலாற் பற்றி மேலே எடுத்துச் சிறிது தண்ணீர் ஊட்டி, மீளவும் போருக்கு விடுகின்றனர். இம் முறை குடியானவன் கோழி கடுஞ் சினத்துடன் தன் பகைவன் மார்புக்கு இலக்குவைத்தமையால் ஆண்டிகோழி அயர்ந்து வீழ்கின்றது. மூன்றுமுறை குடியானவன் கோழி ஆண்டிகோழிக்கு எளிதில் விண்ணுலகுக்கு வழிகாட்டி விட்டது. சனங்கள் விழித்தகண் கொட்டாது உருக்கமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு பல சேவல்கள் சண்டையிட்டன. கடைசியாய் நாயக்கர் திறத்தாரும் கவுண்டர் திறத்தாரும் மும்மூன்று சேவல்கள் கொண்டு வருகின்றனர். முதலில் கவுண்டர் கோழியொன்று இறந்துபட்டது. பின்னர் இருமுறை அவர் கோழிகள் வென்று மீண்டன. கவுண்டர் பக்கத்தில் எங்கும் பேச்சும் விளையாட்டும், களிப்பும் தோன்றுகின்றன. இன்று காடன்பட்டியாருக்கு வெற்றி! இதோ பொழுது வீழ்ந்தது. சிலர் வண்டி பூட்டுகின்றனர்; பலர் விரைந்து நடந்து தம் தம் வீடு நோக்கிச் செல்கின்றனர்.

எங்கள் நாடு குறிஞ்சி விரவிய முல்லைநிலமாகும். எங்கள் நாட்டிலே குன்றுகளும் மலைகளும் நிரம்பியிருக்கின்றன. அவைகள் கூரிய உச்சிகளையும் மொட்டைத் தலைபோன்ற உச்சிகளையும் உடையன. காலையில் மலைகள் மஞ்சு படிந்து நீல நிறமாகத் தோன்றும். எங்கள் நாட்டிலே பாயும் ஆறுகளுக்கு இம்மலைகளே தாயகம். இம் மலைகளில் வேங்கை, ஈட்டி, கருங்காலி முதலிய மரங்கள் அடுக்கடுக்காய் அடர்ந்த பல காடுகள் உண்டு. புலி, கரடி, காட்டுப்பன்றி, மான், முயல் முதலான காட்டுவிலங்குகள் இக் காடுகளிலே ஏராளமாய் வசிக்கின்றன.

எங்கள் நாட்டார் வேட்டையாடுவதில் மிகுந்த விருப்பங்கொண்டவர்கள். இரண்டு மாதத்துக் கொருமுறை ஊர்த் தலைவர்களான பண்ணுடிகளும், குடியானவர்களும், கூலிவேலை செய்யும் தச்சன் கொல்லன் வண்ணுன் முதலாயினேரும் முன்னுளிரவில் பேசி முடித்தபடி, கட்டுச்சோறும் வெற்றிலைபாக்குப் பைகளும் வளைதடிகளும் இருப்புப்பூண் பிடித்த குண்டுத் தடிகளும் வலைகளும் ஈட்டிகளும் எடுத்துக் கொண்டு, வேட்டை நாய்கள் தொடர்ந்துவர, காலையில் புறப்படுவார்கள். பண்ணுடிகள் வெடிகளோடு செல்வார்கள். மலையடிவாரங்களிலே காடுகளில் வலை விரித்து, முயலைக் கிளப்பி, அதன் பின்ஞேடி, நாய்களை ஏவி, தடியெறிந்து முயல்வேட்டையாடுவார்கள். காட்டுப் பன்றியைக் கண்டவிடத்து வீரர்களான முப்பதின்மர் அதைச் சுற்றி நின்று, நாய்களை ஏவி, அது வந்து பாயுந்தோறும் ஈட்டியாற்குத்தி, அது களைக்கும்வரையிற் போர்புரிந்து கொல்வார்கள். சிலர் மலையிலே மான்களைத் துரத்தி, கல்லும் முள்ளும் தைக்கத் தொலைதூரம் ஓடி, மானுங் களைக்கத் தாமுங்களைத்து, மான் சோர்வு பட்டபொழுது அது தம்மைப் படுத்திய பாட்டை

நினைந்து, கடுஞ்சினங்கொண்டு அதைக் கொன்று ஆரவாரிப்பார்கள்; அவர்கள் போடுங் கூச்சலால் சுற்றுப்புறங்களில் சிலே எழும்பும். புலி வேட்டையாடுவோர் இரவு மலேயடிவாரத்தில் தங்கி, மரக்கிளேகளில் ஒளிந்திருந்து, புலி அடுத்து வருவதைக்கண்டு வெடியாற் கொல்வார்கள். புலி அகப்பட்டதாயின், அதை நான்கு மூங்கில்களின்மேல் வைத்து நிறுத்திக் கட்டி, கொன்றைப்பூ, எருக்கம்பூ முதலிய பூக்களால் அழகு செய்து, தப்பட்டையும் பறையும் முழங்கப் புறப்பட்டு ஊர்வலம் வருவார்கள். மான் முயல் முதலியவற்றின் இறைச்சியை வேட்டையாடச் சென்றவர்கள் எல்லோரும்—ஒவ்வொருவருக்கும் சிறிதளவே கிடைப்பதாயினும்—சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள். மறுநாள் யாவரும் எண்ணெய் தேய்த்துத் தலேமுழுகி விருந்துண்டு இளேப்பாறுவார்கள்.

II

எங்கள் ஊர்.

எங்கள் ஊரின் பெயர் மா——பாளேயம். அது மேட்டு நிலங்கள் சூழ்ந்த ஒரு படுகையில் உள்ளது. தூரத்தே நின்று பார்த்தால் ஊர் இருப்பதே தோன்ருது; மேட்டிலிருந்து பார்க்கையில் தென்னே மரங்களும் புளிய மரங்களும் பூவரச மரங்களும், அவற்றிற் கிடையே ஓட்டு வீடுகளும் கூரை வீடுகளும் சிறிது சிறிதாகப் புலப்படும். காலே நேரத்தில் படுகை முழுவதும் மூடுபனி நிறைந்திருக்கும். பொழுது விடிந்து சில நாழிகைகளானபின் வீடுகளினின்றும் புகை கிளம்பிக் கூரையின்மீது படர்ந்திருப்பது தோன்றும். ஊரைச் சுற்றியுள்ள மேட்டு நிலங்களிலே

சோளம், கம்பு, வரகு, தினை, அவரை, துவரை முதலியன விளையும் காடுகளும் தோட்டங்களும் உள்ளன. எங்கள் ஊர் முந்நூறு வீடுகள் கொண்ட ஒரு கிராமம்.

ஊருக்கு நான்கு திக்கிலும் நான்கு மந்தைகள் உள் ளன; அங்கிருந்து இட்டேரிகள் பிரிந்து காடுகளுக்குப் போகும். காலையில் பொழுது கிளம்புகையில் அம்மந்தை களினருகே நின்று பார்த்தால் குடியானவர்கள் தங்கள் தங் கள் காடுகளுக்குப் போவதைப் பார்க்கலாம். சிலர் கவலை மாடுகளையும் ஏர்களையும் ஓட்டிக்கொண்டு செல்வார்கள்; சிலர் கடைமுளை, கண்ணிக்கயிறு தாம்பு முதலியவை கொண்டுபோவார்கள். சிலர் தமது வீட்டிலுள்ள ஆண் பெண் அடங்கலும் கட்டை வண்டிகளில் ஏறி, வண்டியின் இருபக்கங்களிலுமுள்ள முளைகளைப்பற்றி உட்கார்ந்து கொண்டு செல்வார்கள். சில சிறுவர்கள் எருதுகளையும் எரு மைகளையும், சிலர் ஆடுகளையும் மேய்ப்பதற்கு ஓட்டிக் கொண்டு போவார்கள். பணக்காரனான பண்ணாடி சிறிது நேரம் கழித்துப் பின்னாலே வருவான். வலதுபக்கம் மடியும் இடதுபக்கம் குச்சும் வைத்துக்கட்டிய அவன் வேட்டி பாதத்தில் தவழும்; வேட்டிக்குமேலே சதுரமுகப்போடு கூடிய சுண்டுவிரற் பருமனுள்ள வெள்ளி அரைஞாண் அரைக்கச்சையாகக் கிடக்கும். பண்ணாடி பெரிய மேல் வேட்டியேனும் சிறு துண்டேனும் தரித்திருப்பான். அக்கு-ளில் நுனியில் வெள்ளிமுடிச்சுடன்கூடிய கயிற்றுற் கட்டிய வெற்றிலை பாக்குப்பை வைத்திருப்பான். அவன் வாய் நிறைய வெற்றிலை பாக்குப் புகையிலை யிருக்கும். அவன் காலிலே, தன் பறிகட்டும் நஞ்சசக்கிலியன்செய்த அரைச்-சாண் உயரமுள்ள மிதியடிகள் மாட்டி யிருப்பான். அவ் வேளையிற் சிலர் பட்டிகளிலிருந்து பாற்கலயங்கள் கொண்டு

வருவார்கள். சில பெண்கள் சிவிமுடிந்து திருநீறணிந்து தம் முன்றனையைச் சும்மாடு சுற்றித் தலையில் வைத்து, அதன் மேலே தங் கணவர்களுக்குப் பழையசோறும் பட்டி நாய்களுக்கு அம்புலியும் ஊற்றின கலயங்களை அடுக்கி வைத்து, வெற்றிலை பாக்கு மென்ற எச்சில் இருபுறமும் உமிழ்ந்து, வழியில் மற்றைப் பெண்களைக் காணுந்தோறும் "அடிநாச்சக்கா, அடிகருப்பக்கா, நீ வல்லே? சோளம் வளவுக்கு வந்திட்டுதா? பயனுக்கு ஆத்தா எப்படி யிருக்குது?" என்பன போன்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டு செல்வார்கள்.

எங்கள் ஊரில் வசிப்போரிற் பெரும்பான்மையினர் கொங்கு வேளாளர்கள்: கவுண்டர்கள் என்னும் பெயருடைய குடியானவர்கள். அவர்கள் பண்ணடிகள், குடியானவர்கள், கூலியாட்கள் என மூவகைப்படுவர். பண்ணடிகள் பெருநிலமும் பணமும் உடையோர். குடியானவர்கள் ஓர் ஏர் இரண்டேர் வைத்துப் பயிர் செய்வோர். மற்றுப் பண்ணையிலே கூலிக்கு வேலை செய்யும் எளிய குடியானவர்கள் கூலியாட்களாவர். குடியானவர்களுக்கு அடுத்த படியிலிருப்போர் தமிழச் செட்டிகள். அவர்கள் கம்பு சோளம் முதலிய தானியங்களையும், பருத்தி புகையிலை நிலக்கடலை முதலிய பொருள்களையும் வாங்கிவிற்கும் வணிகர்கள்; வியாபார தந்திரங்களை நன்றுயுணர்ந்தவர்கள்; செட்டாகச் செலவு செய்து காசு மீத்து வைப்பவர்கள்; கூரிய அறிவும் உழைப்பும் உள்ளவர்கள். எங்கள் ஊரில் நாலைந்து வீடுகள் கொண்ட பார்ப்பனச்சேரியும் ஒன்றுள்ளது. பார்ப்பார்களில் இருவர் மிட்டாய்க்கடை வைத்திருப்போர்; ஒருவர் புரோகிதர்; ஒருவர் மணியக்காரர். அவரை ஊராரெல்லோரும் ஐயர் என்ற பொதுப்பெயரால் அழைப்பார்கள்;

அவர் திறத்தைப் பின்வரும் பக்கங்கள் உணர்த்தும். சில கொல்லர்களும் தச்சர்களும் தட்டார்களும் ஊரில் குடியிருக்கின்றனர். தச்சர்களும் கொல்லர்களும் கலப்பை மண்வெட்டி முதலிய பண்ணைக்கு வேண்டுங் கருவிகளையும், வீட்டுக்கு வேண்டும் பிற பொருள்களையும் செய்வோராதலால் அவர்கள் குடியானவர்களுக்கு இன்றியமையாதவர்கள்; அவர்கள் வருடந்தோறும் அறுவடைக் காலத்தில் குடியானவர்களிடத்தில் மிடாக்கணக்காய்த் தானியத்தைக் கூலியாகப் பெறுவார்கள்; பண்ணாடிகளுடைய உதவியை நாடினவர்களாதலால், அவர்களுக்கு அவ்வப்போது குற்றேவலும் புரிவார்கள். தட்டார்கள், குடியானவர்கள் அணியும் கடுக்கன், மிஞ்சி, அரைஞாணும்; பெண்கள் அணியும் சிந்தாக்கு, தாழ்வடம், தோள்வளையல், முதலிய நகைகளையும் செய்துகொடுப்போர். ஐம்பது துருக்கர் வீடுகளும் எங்களூரில் இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் தமிழ்ப் பேசுவோர்; வழக்கப்படி தாடி மொட்டைத்தலைகளை உடையோர்; தமிழக் குடிகளோடு வேற்றுமை யின்றி வாழ்வோர். அவர்களிற் சிலர் இறைச்சி விற்போர்; சிலர் பாக்கு விற்போர்; சிலர் சிறு கடைகள் வைத்திருப்போர்; சிலர் பயிரிடுவோர்.

இன்னும், எங்கள் ஊரில் மூன்று கொங்கு வண்ணார்களும், நான்கு கொங்கு நாவிதர்களும், மூன்று குயவர்களும் வசிக்கின்றனர். வண்ணார்கள் தினந்தோறும் குடியானவர்கள் முந்தியநாளிரவில் நனைத்துவ்வைத்த துவையல் வேட்டிகளை எங்களூருக் கருகில் ஓடும் வாட்டாற்றில் துவைத்துக் கொடுத்தல் வேண்டும்; பதினைந்து நாளுக்கு ஒருமுறை வெள்ளாவி வைத்து வேட்டிகளுக்கு நீலம் போடுதல் வேண்டும். நீலம் போட்ட வேட்டிகளைக் குடியானவர்

கள் வாங்கி மட்டிப்பால் வாசமேற்றி, விசேடகாலங்களுக்கு உதவும்பொருட்டுப் பெட்டிபேழைகளில் அடக்கஞ்செய்து வைப்பார்கள். நாவிதர்கள் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை குடியானவர்களுக்கு மயிர் களைதல் வேண்டும். ஒரு நாவிதன் பொழுது கிளம்புகையில் தன் அடப்பத்துடன் பண்ணாடி வீட்டுக்குச் சென்று, பண்ணாடி எழுந்திருக்கும் வரையிற் காத்திருந்து, பண்ணாடிக்கு வேலைசெய்ய ஆரம் பித்து முடிக்கையில் அடிசாய்ந்துபோம். நாவிதர்கள் வாரத்துக் கொருமுறை குடியானவர்களுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பித்தல் வேண்டும். அவர்கள் பண்ணாடி களைக்காணும்பொழுது முழங்காலுக்குமேல் வேட்டியுடுத்து, கும்பிட்டு, வாய்புதைத்துத் தாழ்மையான குரலிற் பேசுதல் வேண்டும். கொங்கு நாவிதர்கள் கொங்கு வேளாளர்களுக் குப் பிள்ளை முறையானவர்கள். வேளாளர்வீட்டு விவாகங் களில் அவர்கள் சில சடங்குகள் செய்யும் உரிமையும் பெற்றவர்கள். திருவிழாக் காலத்திலும், கலியாண காலத்தி லும், ஒரு பெண்பிள்ளை புத்தியறிந்த காலத்திலும் நாவிதர் களும் வண்ணார்களும் குடியானவர்கள் பொருட்டு அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களுக்குச்சென்று, உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அழைப்புச் சொல்லுதல்வேண்டும்; மற் றைக் காலங்களில் குடியானவர்களிட்ட ஏவலைச் செய்தல் வேண்டும். குயவர்கள் குடியானவர்களுக்கு வேண்டிய சட்டி பானைகளைக் காலந்தோறும் தவறாது கொடுத்தல் வேண்டும். வண்ணார்களும் நாவிதர்களும் குயவர்களும் அறுவடைக்காலத்தில் குடியானவர்களிடமிருந்து பெறும் தானியம் அவர்களுக்கு ஓராண்டு உணவுக்குக் காணும்.

ஊரின் புறத்தே பறையர் சேரியும் சக்கிலியர் சேரியும் உள்ளன. அச்சேரிகளிலுள்ள குடிசைகள் யாவும் மட்சுவர்

வைத்து ஓலே வேய்ந்தவை. கூரை பல இடங்களில் சிதைந்து பலகணிபோல் உதவும். குடிசைகள் ஒன்றின்மேலொன்ருக நெருங்கியிருக்கும். சேரியெங்கும் முடைநாற்றமும் குப்பையும் கூளமும் நிறைந்திருக்கும். எருமைத்தோல்களும் மாட்டுத் தோல்களும் வெய்யிலில் உலர்ந்துகொண்டிருக்கும். பறைப்பையன்களும் சக்கிலியப்பையன்களும் பறையும் தப்பட்டையும் அடித்துக்கொண்டு கூத்தாடுவார்கள். கந்தையுடுத்து அழுக்குச்செறிந்த மேனியையுடைய பெண்கள் அங்கங்கே குடிசை வாயில்களிலும் இறப்பின் நிழலிலும் உட்கார்ந்து, ஒருவர்க்கொருவர் பேன் பார்த்துக்கொண்டிருப்பார்கள். சக்கிலியர் குடியானவர்களுக்குச் செருப்புத் தைத்துக்கொடுத்தல் வேண்டும், பறிமூட்டுதல் வேண்டும். பறையர் விழாக்காலங்களிலும் விவாககாலங்களிலும், அசுபகாலங்களிலும் பறைவாசித்தல் வேண்டும். மற்றைக்காலங்களில் சக்கிலியரும் பறையரும் பண்ணேகளில் வேலேசெய்தல் வேண்டும்.

எங்கள் ஊரிலுள்ள வீடுகள் ஒழுங்கின்றி ஒன்றையொன்று பிடிக்கவருவனபோல் நெருங்கி யுள்ளன. ஊரினுள்ளே சந்துகளும் தடங்களும் முடுக்குகளும் நிறைந்திருக்கின்றன. அகன்று தோன்றும் தெரு, சிறிது தூரம் சென்று, குறுகிய ஒரு சந்தாய், முடிவில் ஒரு வீட்டு வாயிலில் முடியும். குறுகித் தோன்றும் ஒரு சந்து, இடையிலே அகன்றதோர் வீதியாக மாறி, பின் சென்று தேய்ந்திறும். தெருக்களிலே நாய்கள் அங்கங்கே குழிபறித்துச் சோம்பிப் படுத்திருக்கும்; ஊர்க் கிணற்றினின்றும் நீர் மொண்டு ஆண்களும் பெண்களும் குடங்களேத்தாங்கிநடந்து கொண்டிருப்பர்; கோவணமென்றே தரித்த சிறுவர்கள் இரைச்சலிட்டு விளேயாடிக்கொண்டிருப்பார்கள். கடைகள்

உள்ள இடத்தின் மாத்திரம் நேரான பாதை ஒன்றுண்டு. அன்றியும் ஊரைச் சுற்றிச் சில இடங்களில் எதிரெதிரே வரும் இரண்டு வண்டிகள் மாறிச் செல்வதற்குத் தகுதியாய் அகன்ற வழிகளும் உள்ளன. அவை சுற்றிச்சென்று ஊர் மந்தைகளில் முடிகின்றன. ஊர் மந்தையினின்றும் இரு பக்கமும் திருகுகள்ளி வேலிகள் நீண்ட மணற்பாதைகள் செல்லும்; அவற்றிற்கு இட்டேரி என்பது பெயர்.

எங்களூர்ப் பொதுவிடங்களாவன: பிள்ளையார் கோவில், காளியம்மன் கோவில், காளியம்மன் கோவிலுக்கருகிலிருக்கும் ஊர்ச் சாவடி, மணியக்காரன் சாவடி, அதற்கு முன் பக்கத்தில் உள்ள தொண்டுபட்டி, ஐயண்ணவாத்தியார் பள்ளிக்கூடம், ஊர்க்கிணறு, மிட்டாய்க்கடை, கள்ளுக் கடை என்பன.

நடை யுடை பாவனைகளில் கொங்குநாடு இக்காலத்தைப் பார்க்கினும் முற்காலத்தையே பின்பற்றியுள்ளது. முற்காலத்துத் தமிழ் மக்களின் உண்மைக்கும் கொடைக்கும் வீரத்துக்கும் எளிய வாழ்விற்கும் கொங்கு நாட்டாரே இன்றும் சான்றாக இருக்கின்றனர். இக்காலத்துப் போலி நாகரிகம் இந்நாட்டில் சிறிதே தலைகாட்டி யிருக்கின்றது. முற்காலத்துத் தமிழ் நாகரிகம் என்னுங் கடலிலே, இக் காலத்து நாகரிகம் என்னும் ஆறு வீழ்ந்து தன் இயற்கைக் குணம் பெரிதும் வேறுபட்டு உருமாறியுள்ளது.

ஆண்மக்கள் பெரும்பாலும் மாநிறமானவர்கள்; அவர்கள் நடுத்தர உயரமுடையோர். அவர்களின் முகங்களிலே உண்மையும் கொடையும் பொலிந்து விளங்கும். பண்ணடிகளிற் சிலர்தவிர மற்றெல்லோரும் பெரிய உழைப்பாளிகள். நாள் முழுவதும் புலங்களிலே தூய காற்றை உட்கொண்டு வியர்வை வடிய அவர்கள் வேலைசெய்கின்றமையால் அவர்

கள் உடம்பு வலியுற்று நெடுநாள் உழைக்கத் தக்கதாய் இராநின்றது. அவர்கள் பேச்சு அவ்வளவு திருத்தமானது அன்று; ஆயினும், எல்லோரும் வடமொழியும் ஆங்கிலமும் கலவாத தூயதமிழ் பேசுவார்கள். அவர்கள் பேசும் தமிழ்ச் சொற்கள் உருமாறியிருக்கலாம், ஆயினும் தூயவை தூய வையே. எச்சுவையையும், ஆழ்ந்த எக்கருத்தையும் தமிழ் மொழியால் விளக்கலாம் என்பதை நம்பாதோர் கொங்கு நாட்டார் பேசும் தமிழைக்கேட்டு ஐயம் நீங்குவாராக. அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் படிக்கத் தெரியாதவர்கள். எளிய குடியானவர்களிற் சிலர் பகல் முழுதும் காட்டிலே தோட்டத்திலே வேலைசெய்து, இரவு வீட்டுக்கு வந்து உணவு முடித்துப் பின் விளக்கு வெளிச்சத்தில் சிறிது நேரம் பொழுதுபோக்குக்காக அல்லியரசாணிமாலை, பவளக்கொடிமாலை, பஞ்சபாண்டவர் வனவாசம் முதலிய புத்தகங்களில் ஒன்றை இராகத்தோடு எழுத்துக் கூட்டிக் கூட்டி மெதுவாகப் படிப்பார்கள். சிறிது படித்த குடியான வர்களும் பண்ணாடிகளும் தம்மிடத்து வரும் புலவர்களும் உள்ளூர் வாத்தியாரும் திருவிளையாடற் புராணத்தையும் அரிச்சந்திர புராணத்தையும் வாசிக்கக் கேட்டு இன்புறு வார்கள். பண்ணாடிகள் மானமும் வீரமும் கொடையும் பெரிதும் உடையோர்; தமக்குத் தாழ்வு வருவதாயின் தமது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள உயிரையும் மதி யாதார். சங்க நூற்களிலே கூறப்படும் தமிழ் வள்ளல்களின் குணங்கள் இப்பொழுதும் இவர்களிடம் குடிகொண்டிருக் கின்றன. இவர்கள் சொந்த பண்ணயம் நடத்துகின்றமை யாலும், செல்வர்களாயிருத்தலாலும் மிகவும் தன்மதிப்பு உடையவர்கள். ஆயினும், பெரிய பண்ணாடிகள் ஆள்கட்டும் பணக்கட்டும் உடையவர்களானமையால் அவர்கள் அடிக்

கடி அயலிலிருக்கும் தம்மைப்போன்ற பண்ணுடிகளோடு கலகம் விளைவித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் வாய்ச் சண்டை கைச்சண்டையாக மாறி; இருதரத்திலும் பண் ணுடிகளின் ஆட்களுடைய மண்டைகள் உடைபடும். கொலை களும் இந்நாட்டில் மிகுந்துபோயின. பண்ணுடிகளின் சண் டைகளும் வழக்குகளும் முதிர்ந்து கச்சேரி யேறிவிடுகின் றன. அவாவர் வழக்கு வெல்லவேண்டுமென்று பண்ணுடி கள் படும் பாடும் உழைக்கும் உழைப்பும் இதனினும் நல்ல காரியத்துக்குப் பயன்படத்தக்கவை. 'எந்நாளும் காப்பாரே வேளாளர்காண்' என்று பாடிய கம்பர் இவர்கள் குணத் தைச் செவ்வையாய் அறிந்தவர் ஆதல்வேண்டும். இவர் கள் எல்லோரும் கோழைபடாத மேழிச்செல்வத்தை யுடையவராதலின், இவர்களுக்குக் 'கொடையும் தயையும் பிறவிக்குணம்.' விருந்தோம்பல் என்னும் உயர்ந்த தன்மை யை இன்று இவர்களிடத்தேதான் காணலாம். எக்குடி யானவனும், தன் வீட்டிற்கு எப்பொழுது எவர் வரினும், வந்தவரை யுள்ளன்போடு உபசரித்து, கூழேயாயினும் வயிறுநிறைய ஊற்றி, வெற்றிலை பாக்கு அளிப்பான். அவன் வீட்டுப் பெண்டிர்கள் பிள்ளைகளும் விருந்தினரை யுபசரிப்பதில் ஒருவர்க்கொருவர் முந்துறுவர். இக்காலத் தில் 'அடைத்திருந்து உண்டொழுகும்' மாந்தர்கள் இவர் களைக்கண்டு பழகுவாராக. இவ்வேளாளர்கள் சாதிவேற்று மையையும் போலிப்பெருமையையும் காட்டுவதில்லை. இவர் கள் வீடுகளில் சமையல்வேலை செய்வோர் இவர்களினும் தாழ்ந்த சாதியாரே. மக்கள் எல்லோரும் கடவுளின் கண் முன்பு சமமானவர்களே என்ற பழந் தமிழ்க் குடிகளின் கொள்கை இன்றும் இவர்களிடத்தே நிலைத்திருப்பது பெரி தும் வியக்கத்தக்கது.

ஆண்மக்கள் எல்லோரும் சுற்று குடுமி வைத்து மயிர் முடிந்தவர்கள்; முறுக்கிவளர்க்காது படிந்த மீசையுடைய வர்கள். அவர்கள் அணியும் நகைகள்: காதிற் பொற்கடுக் கன்; கால்விரலில் வெள்ளிமிஞ்சி; அரையில் உடுத்தும் வேட்டிக்குமேலே தொங்கவிட்ட வெள்ளி அரைஞாண் என்பன. முழங்கால் உயரத்தில் தொங்கும் முரட்டு வேட்டி யும், மேலே போர்த்துக்கொள்ள உதவும் ஒரு சிறு துண்டும் அவர்கள் தரிக்கும் உடைகள். கிழவர்களும் மற்றுஞ் சிலரும் அரைவேட்டியின் வெளிப்பக்கத்துச் சுங்கைத் தொங்கவிட்டு, உட்பக்கத்துச் சுங்கை முதுகின்புறம் கோவணமாக இழுத்துக்கட்டி உறுமாலும் தரித்துக்கொள் வார்கள்; ஆயினும், உறுமால் தரிக்கும் வழக்கம் நாளுக்கு நாள் அருகிவருகின்றது. குடியானவர்களிடத்து எப்பொழு தும் தவறாமல் வெற்றிலைபாக்குப் பையைக் காணலாம் அப் பையிலே நான்கு அறைகள் இருக்கும்: ஓர் அறையில் வெற் றிலையும், மற்றொன்றில் பாக்கும் சுண்ணாம்பும், இன்னும் ஒன்றில் புகையிலையும், கடைசி அறையில் முள்வாங்கி, காதுக்குரும்பி நோண்டி முதலிய இன்றியமையாத கருவி களும் இருக்கும். குடியானவர்கள் காலிலே மூன்றங்குல உயரமுள்ள குதிவைத்த கொங்குநாட்டுச் செருப்புகள் அணிந்திருப்பார்கள். அவர்கள் உண்மையுள்ளவர்கள்; வஞ் சகமில்லாத மனத்தை யுடையவர்கள்; உள்ளொன்று வைத் துப் புறம்பொன்றுபேச அறியாதவர்கள். கடவுளிடத்தும் பெரியோர்களிடத்தும் அன்பும் வணக்கமும் நிறைந்த நெஞ்சினர்.

பெண்கள் அழகைப் பார்க்கினும் குணத்திற் சிறந்த வர்கள்; காற்றோட்டமுள்ள காடுகளிலும் தோட்டங்களி லும் அலைந்து திரிந்து நோயற்ற வாழ்வுபெற்றவர்கள். அவர்

களில் இயற்கையிலேயே குழிந்த கன்னங்களையும், சதைப் பற்று இல்லாது எலும்பு தெரியும் மெலிந்த உடம்புகளையும் கொண்டலரிது.எல்லோரும்பெரியஉழைப்பாளிகள்; பிடித்த மாகச் செலவு செய்வோர்கள்; நெற்றியிலே திருநீறும் கொண்டையிலே மருக்கொழுந்தும் அணிந்தவர்கள். காதுப் பொன்னும் முருகும், கொப்பும், சிந்தாக்கும், கடகமும், தோள்வளையலும், தண்டையும் எல்லோரும் அணியும் நகை கள். அவர்கள் கழுத்திலே சந்தனமும் தாலிச்சரட்டிலே திருநீற்றுப் பத்திரியேனும் அலரிப் பூவேனும் அணிந்த வர்கள்; கள்ளங்கபடறியாத பேதையர்; பேய் பிசாசுகளி லும் மந்திரங்களிலும் அளவுக்குமீறிய நம்பிக்கையுடைய வர்கள். கொங்குநாட்டுப் பெண்களின் வாழ்வு பெரு வாழ்வு: அவர்கள் தடுதலையின்றி எங்கும். போவார்கள், வருவார்கள். ஒழுக்கம் என்று பெயர்வைத்துக்கொண்டு உறவினர்முன் மறைந்திருத்தலும், தாழ்ந்த குரலிற் பேசு தலுமாகிய வழக்கத்தை அவர்கள் அறியாதவர்கள். குமரி களும் கபடின்றி எல்லோர்முன்னும் வருவார்கள், பேசு வார்கள். மனைவிகள் வீட்டுக்கரசிகள்; கணவர்களுடைய வரவு செலவையும், வீட்டுக்காரியங்களையும் நடத்துவோர் அவர்களே; வீட்டுவேலை ஒழிந்தபொழுது காட்டுக்குப் போய்த் தங்கள் கணவர்களுக்கும் உதவிபுரிவார்கள்.

எங்கள் ஊருக்குக் கிழ்புறத்தில் பிள்ளையார்கோவிலுக் கருகில் ஒருபுளியமரம் நிற்கின்றது. அது ஒரு நூறுண்டு கண்டது. அத்துணைப் பெரிய மரம் இவ்வட்டத்திலேயே கிடையாது. அதன் அருங்கொம்பு எண்பதடி உயரத்தில் உள்ளது. எங்கள் ஊரில் இப்பொழுது பற்கள் கழன்று ண்ணொளி மழுங்கிய பாட்டன் பாட்டிகளும் குழந்தைகளா யிருந்தபொழுது இம்மரத்தின் நிழலில் விளையாடி இன்புற்ற

வர்களே. இம்மரத்தைப்பற்றிய ஒரு விசேடம் யாதெனில், இது இன்றும் காய்ப்பதில்லை, என்றும் காய்த்ததில்லை. இம் மரத்தின் கிளைகள் வெகுதூரம் பரவி, அடர்ந்து, இருண்டு சடைசடையாய் நீண்டிருக்கும். இம்மரத்துக்குக் 'காக்கைப் புளியமரம்' என்பது பெயர். மாலையில் பொழுது விழுந்தவுடன் இவ்வூரிலும் இவ்வூரைச் சுற்றியுள்ள இடங்களிலுமுள்ள காக்கைகள் எல்லாம் இம்மரத்தில் வந்துகூடி காகாகா என்று பேரிரைச்சலிடும்; அவ்விரைச்சல் ஊருக்கப்பால் ஒரு கல்தூரம் கேட்கும்; இரண்டு நாழிகைநேரம் மரம் எங்கும் ஒரே கூப்பாடாகவிருக்கும். இருள்கவிந்து நன்றாய் மூடியவுடன் காக்கைகள் ஓய்ந்து அடங்கும். விடியற்காலையிலிருந்து பொழுது கிளம்பும்வரையிலும் காகங்கள் முந்தியநாளிரவில் விடுத்த தம் ஓசையை மீளவும் தொடங்கும். வருடம் முந்நூற்றறுபத்தைந்துநாளும் இது இவ்வாறே. காகங்கள் மரத்தின் அடிமுதல் நுனிவரையில் கிளைகளில் அங்கங்கே தங்கி, ஐந்து பத்தாகக்கூடிக் கூச்சலிடும். அவைகளுக்குள்ளே ஒவ்வோரிடத்தில் கலகம் விளைய, வலிய காக்கைகளால் கொத்துண்ட இளைத்த காக்கைகள் காகா எனக்கூவி வெளியே பறந்து வேறொரு கிளையில் உட்காரும். இம்மரம் எங்கள் ஊருக்கு ஓர் அறிகுறி. மாலையில் காடுகளிலிருந்து ஆடுமாடுகள் ஓட்டிக்கொண்டு வருவோர்களும், எங்கள் ஊருக்குப் பதினைந்து கல் தூரத்திலே கூடும் சந்தைக்குப் போய்க் கட்டைவண்டிகளிலே திரும்பி வருவோர்களும் ஊரை யணுகுமுன்பே தொலைதூரத்தில் காக்கைகளின் இரைச்சலைக் கேட்பார்கள். காலையில் காக்கைகள் கத்துவதைக் கேட்டவுடனே, தமது காடுகளுக்குப் போகவேண்டிய குடியானவர்கள் விழித்தெழுந்து ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு போகத்தொடங்குவர். எங்

கள் ஊரில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் ஈருக எவரும் இக்காக்கைகளுக்கு எவ்வித இடரும் செய்யார்: காக்கைகள் பிள்ளையார் அருள் பெற்றவை என்பது ஊரார் கொள்கை.

எங்கள் ஊருக்குத் தென்கிழக்கே, மரங்கள் சூழ்ந்த ஓர் அகன்ற இடத்திலே, காளியம்மன் கோவில் இருக்கின்றது. அதுவே ஊருக்கு முக்கியமான கோவில். அதைச் சுற்றிலும் கொடிக்கள்ளி இரண்டாள் உயரம் வளர்ந்து வேலியாகப் படர்ந்துள்ளது. அவ்வேலியில் வேலிப்பருத்தி படர்ந்து காய்த்திருக்கும். வேலிக்குள்ளே போனல் சூழ்ந்துள்ள மரக்கிளைகளால் மறைப்புண்ட கோபுரத்தோடு கூடிய ஒரு சிறு கோவில் தென்படும். கோவில் எங்கும் தண்மையும் தூய்மையும் குடிகொண்டிருக்கும்: அதிகாலையில் கோவிற் பண்டாரம் கோவிலையும் முன்றிலையும் பெருக்கிச் சாணந் தெளித்துத் தூய்மையாக வைத்திருப்பான். அங்கே இருக்கும் அரசமரங்களும் வேப்பமரங்களும் நடுவேனிற் காலத்திலும் வெய்யில் படாதபடி நிழலையும் குளிர்ச்சியையும் தரும். அங்கே இளங்காற்று எப்பொழுதும் வீசும்; பறவைகளின் இசையும் மணியோசையும் கேட்கும்;கோவிலிலிருந்துவரும் தூயமணம் எங்கும் வீசும். இடைவிடாது சலித்துக் கொண்டிருக்கும் அரசந்தழைகளின் நிழல் நிலத்தில் ஓடியாடும். கோவிலுக்குப் பின்புறத்தில் அலரியும் செவ்வந்தியும் மருக்கொழுந்தும் மலர்ந்திருக்கும்; மாதுளஞ் செடிகள் பூவுங்காயுமாக நிற்கும். கோவிலுக்கெதிரிலே ஓராள் உயரத்தில் மகாமுனி மண்டியிட்டு அம்மனை நோக்கியவண்ணமாய் நிற்கின்றது. அதன் கண்கள் ஒவ்வொன்றும் தேங்காய்ப் பருமனுயிருக்கும்; அதன் நாக்கின் நீளம் ஒரு முழம்; அதன் உதட்டுக்கு மீறிய கடைவாய்ப் பற்கள் ஒரு சாண் நீண்டுள்ளன; அதன் முறுக்கு மீசையும் கையிலேந்திய

வாளும் பார்க்கப் பயமானவை. மகாமுனிக்குப் பக்கத்தில் அம்மனுக்கு ஊஞ்சல் தொங்கும்; சிறிதும் பெரிதுமான வேல்களும் வாள்களும் நிற்கும். நடுச்சாமத்தில் அம்மன் அவ்வாயுதங்களை எடுத்துக்கொண்டு, வாத்தியம் முழங்க, வேட்டையாடப் போவதைத் தாம் பார்த்திருப்பதாய் எங்கள் ஊரிலுள்ள பண்டு கிழவர்கள் சொல்லுகின்றார்கள். அம்மனுக்கு வேட்டையாடக் குதிரைகள் வேண்டுமன்றோ. இதை யுணர்ந்த நண்பர்கள் அம்மனுக்கு அக்குறையை நீக்கும் பொருட்டுப் பல குதிரைகளைக் கொடுத்திருக்கின்றனர். அக்குதிரைகள் மகாமுனிக்குக் கிழக்கே வேப்பமரங்களாலான ஒரு வேலிக்கு நடுவில் நிற்கின்றன. அவைகள் யாவும் எங்கள் ஊர்ச் சுப்பக்குயவன் கைகளால் படைக்கப்பட்டவை. அவற்றிற்கும் உயிருள்ள குதிரைகளுக்கும் எவ்வழியிலும் சிறிதும் ஒற்றுமையில்லை: அவை ஒருகாலத்தில் இவ்வுலகத்திலிருந்து மாண்டுபோன ஒருவகைப் பிராணிகள் எனினும் தகும். அது எவ்வாறாயினும் ஆகுக. இக்குதிரைகளிலே ஆணும் பெண்ணும் இருத்தல்வேண்டும் என்பது நிச்சயம்; அன்றேல், இவற்றினிடையில் பலகுட்டிகள் காணப்படுகின்றனவே, ஆண்டாண்டுதோறும் குதிரைகள் எண்ணிக்கையில் மிகுந்துவருகின்றனவே இவற்றிற்குக் காரணந்தான் யாது? காரணம் எதுவாயினும், அம்மன் இக் குதிரைகள் மீதே வேட்டைபோகிறார் என்பது துணிபு. இன்றேல், இவற்றில் எத்தனை குதிரைகளுக்குக் கால் போயிருக்கிறது; எத்தனை குதிரைகளுக்கு வால் போயிருக்கிறது; எத்தனை குதிரைகளுக்குத் தலையுடைந்திருக்கிறது; இவற்றிற்குக் காரணம் வேறு யாது?

காளியம்மன் திருவிழா எங்கள் ஊரில் சிறப்பான காலம். அது மாசி மாதத்தில் நடைபெறும். ஊரில் பண்ணடிகள் கூட்

டம் கூடி, திருவிழாக்காலத்தைக் குறித்து,பறையறைவித்து, கொடிகட்டிக் கும்பக்கால் நடுவார்கள். அதன்பின் பதினைந் தாம்நாள் தொடங்கி மூன்றுநாள் விழா நாட்களாகும். பண்ணடிகள் முதல் வண்ணான் நாவிதன் ஈறாக எல்லோரும் அழைப்பு அனுப்பித் தங்கள் தங்கள் பந்துக்களை வருவிப்பார்கள். ஊரெங்கும் பந்துக்கள் கோட்டமும் வேடிக்கையும் கேளிக்கையுமாயிருக்கும். கூலியாட்கள் முதலாக எல்லோரும் தங்கள் தங்கள் பண்ணை வேலைகளை நிறுத்திப் பந்துக்களோடு விருந்துண்டு மகிழ்வார்கள். ஊரார் குளித்து முழுகிப் புதிய ஆடைகளணிந்து, கோவிலுக்குச் சென்று பூசை முடித்துத் தட்டுகளில் தேங்காய் மூடி பழங்களை யேந்தி, அணியணியாய்த் திரும்பி வந்துகொண்டிருப்பார்கள். முதல் நாள் விடியற்காலையில், பந்த வெளிச்சத்தில் பெண்கள் வாத்தியம் முழங்கக் கோவிலுக்குச் சென்று மாவிளக்கெடுப்பார்கள். பொழுது விடிந்ததும் ஊரார் பொதுச் செலவில் அம்மனுக்காக வாங்கிய எருமைக் கடாவைக் குளிப்பாட்டி, திருநீறணிவித்து, அம்மன் சந்நிதியில் நிறுத்துவார்கள். பண்ணடிகள் எல்லோரும் பயபக்தியுடன் வந்து நிற்பார்கள். பூசாரி வேல பண்டாரம் நீராடி, ஈரவேட்டியுடன் கையில் வாளேந்தி நிற்பான். சிறிதுநேரத்தில் எருமைக்கடா மயிர் சிலிர்க்க உடம்பைக் குலுக்கும். உடனே யாவரும் கிலுகிலுகிலுகிலு என்று கூச்சலிடுவார்கள். நால்வர் அப்பொழுது எருமைக்கடாவின் கழுத்தைப்பற்றி, அதற்கென்று இரண்டு கால்கள் நட்டு அமைத்த முட்டியின்மீது அதன் தலையைக் கிடத்துவார்கள். பின்னும் கிலுகிலு வென்னும் பேரொலி முழங்கும். அக்கணத்தில் பூசாரி வாளை யோங்கி ஓரிரண்டு வெட்டால் எருமைக் கடாவின் தலையை வெட்டி வீழ்த்துவான். பின்பு

ஊர்ப்பண்ணுடியின் வெள்ளாட்டுக் கடாவும், மற்றைப் பண்ணுடிகளின் கடாக்களும், சிறு குடும்பத்தாரின் கடாக்களும் முறைதவருது பலியிடப்படும். கடாக்களை வெட்டுவோனுக்குக் கடாத்தலைகள் சொந்தம்; குடியானவர்களுக்கு வெளுக்கும் வண்ணுனுக்கு ஆட்டுக் கால்கள் சொந்தம். அன்று எல்லோர் வீடுகளிலும் கடாக்களே விருந்து.

திருவிழாக்காலத்தில் எங்கும் வேடிக்கையும் கேளிக்கையுமே மிகுந்திருக்கும் என்று சொன்னேன். பல இடங்களிலுமிருந்து வந்த கடைகள் கோவிலைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருக்கும்: மிட்டாய்க் கடைகள் ஒருபுறம்; விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகள் ஒருபுறம்; 'மகாப்பகுவாய்' மோதிரங்கள், பீலி, சடைவில்லை முதலிய போலி வெள்ளி தங்க நகைகள் விற்கும் கடைகள் ஒருபுறம்; காதோலை கருமணி வளையல்விற்கும் கடைகள் ஒருபுறமும்; அத்தர் புனுகு விற்கும் வாசனைக்கடைகள் ஒருபுறம்; நாட்டுச்சேலைகள் விற்கும் கடைகள் ஒருபுறம்; குரங்குகளும் காடிகளும் ஆடுமிடங்கள் ஒருபுறம்; இராட்டினத்தூரிகள் சுழலுமிடங்கள் ஒருபுறம், பவளக்கொடிமாலை, புலந்திரன் களவு, கலிகாலச் சிந்து முதலிய புத்தகங்கள் விற்கும் கடைகள் ஒருபுறம்; சுப்பிரமணியர் மாலை வேண்டுமென்போரும், காளியம்மன ஊசல் வேண்டுமென்போரும் விலை பேசுவது அக் கடைகளில் ஒருபுறம்; வெற்றிலைபாக்குப் புகையிலை விற்கும் கடைகள் ஒருபுறம்;கடலை, பொரி, அவல், வெல்லம், மொச்சைக்கொட்டை விற்கும் கடைகள் ஒருபுறம்; வேடிக்கைப் படப்பெட்டி காட்டுவது ஒருபுறம்; பகடை எறிந்து பந்தயம் வைத்து ஆடுமிடங்கள் ஒருபுறம்; ஆக, அங்கே உள்ளன அனைத்தும் கண்ணைக் கவர்வன, காதைக் கவர்வன, நாக்கைக் கவர்வன, காசையும் கவர்வனவாகும்.

காட்டில் வேலைசெய்யும் ஆடவர்கள் தம் நெற்றிகளிற் பாதி மறையும்படி வைத்த வட்டப் பொட்டிலே குங்குமம் துலங்க, மயிர் நெருங்கித் திமிர்ந்த தங்கள் மார்பிலே வாசனைக் கடையில் வாங்கித் தேய்த்த அத்தர் புனுகு சந்தனம் விளங்க, மண்வெட்டி பிடித்து வெட்டி வெட்டிக் காய்ப்பேறிய தங்கள் கையிலே பற்றிய முரட்டுத் துண்டுகள் தொங்க, பாத்தி பிடிக்கையில் நீரிலே நின்று நின்று விளக்கமடைந்து தடித்த பாதங்களிலே எருமைத்தோலிற் கட்டிய அரைச்சாண் உயரமுள்ள செருப்புகள் கிறிச்சுக்கிறிச்சென்றுகத்த, அரைவேட்டி முழங்காலுயரத்தில் தொங்க, கால்விரல்களில் வெள்ளிமிஞ்சியும் அரையில் வெள்ளி அரைஞாணும் ஒளிர, தலையிலே சுங்குவைத்துக் கட்டிய உருமால் காற்றிலசைய, கடைகளினூடே சென்று தாம் விரும்பும் சுண்ணும்புக்காய், முள்ளிடுக்கி முதலிய இன்றியமையாத பொருள்களை வாங்கிக்கொண்டு, கடைக்காரர்கள் தம்மைப் பட்டிக்காட்டார்களென்று இழித்துக்கூறக்கேட்டு, அதற்குத் தக்கபடி விடையிறுத்து வேடிக்கைபார்த்து உலாவி வருவார்கள். பெண்டிர் சிலர் சீவிமுடிந்து, கொண்டையிட்டு, மருக்கொழுந்து சூடி, நெற்றியிலே மூன்று விரலால் திருநீறணிந்து, பணக்காரிகளாயினும் ஐந்து ரூபாவுக்கு மேற்படாத நாட்டுச்சேலைகளைக் கொய்சுவம்வைத்து உடுத்து, வெற்றிலை பாக்குத்தின்று, கடைகளையெல்லாம் கண்டு மகிழ்ந்து, காதோலைகளும் மயிர்க்கயிறுகளும் ஈயமோதிரங்களும் வாங்கி யணிந்துகொண்டு இராட்டினத் தூரியை அடைவார்கள். கீழுமேலுமாகச் சுழலும் இராட்டினத் தூரிகளே அவர்கள் விரும்புவன; அவையே அவர்கள் பல நாட்களாய் எதிர்பார்த்திருந்தன. அத்தூரியில் அவர்கள் உட்கார்ந்து வேகமாய்ச் சுழல்கையில் சிலர் கொண்டை

யவிழும்; சிலர் மாராப்பு நெகிழும்; சிலர் மயக்கமடைதலால் வாய் நிறைந்திருந்த தாம்பூலம் அவர்களறியாமல் பளிச் சென்று கிளம்பி எதிரில் இருப்பவர்களை அபிடேகம் பண்ணும். சிலர் சுழல்கையில் களிப்பினால் கொல்லென்று சிரிப்பார்கள். சுழற்சி தணிகையில் எல்லோரும் கொண் டைகளைத் தொட்டுப்பார்த்துக்கொள்வார்கள்; நெகிழ்ந்த மாராப்பை ஒழுங்குபடுத்துவார்கள்; வெற்றிலைபாக்கால் சிவந்த பற்கள் துலங்கப் புன்முறுவல் புரிவார்கள்.

திருவிழாக்காலத்தில் பூவோடு எடுத்துக் கொண்டு உடுக் கையடிக் கிணங்கச் சிலர் ஆடுவார்கள். பலர் ஆண்வேடங் களும் பெண்வேடங்களும் புலிவேடங்களும் கோமாளி வேடங்களும் தரித்து, தப்பட்டைகளும் பறைகளும் முழ ங்க வீதிதோறுஞ் சென்று, ஆடிப்பாடி, பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் அளவில்லாத மகிழ்ச்சியை உண்டாக்குவார் கள். அவைகள் எல்லாவற்றிலும் எங்களூர்க் கருப்பநாவிதன் பெண்வேடமே பெயர்போனது. ஆண்டுதோறும் அவன் பெண்வேடந்தரித்து ஆடுவது ஊரில் எல்லோருக்குந் தெரி யும். அவன் முகத்திலே அரிதாரந் தடவி, போலிமயிர் கட்டிக் கொண்டையிட்டு, பொட்டிட்டுப் புருவமெழுதி, சேலையுடுத்து, காலிற் சதங்கைகட்டித் தப்பட்டைகள் முழங்கப் புறப்படுவான். அவன் ஆட்டத்தைக் கண்டு களிக்கப் பலர் கூட்டமாகப் பின்தொடர்வார்கள். அவன் காலிற் சதங்கை கலீர் கலீரெனக் குலுக்கி நடந்து, பண்ணு டிகள் வீட்டைக் கண்டதும்,

மதுரைக்குப் போறமச்சா—நல்ல
மருக்கொழுந்து வாங்கி வாங்கோ;
மருக்கொழுந்து வாங்கி வாங்கோ—நல்ல
மயிர் முளைச்சது வாங்கி வாங்கோ;

மயிர் முளைச்சது வாங்கி வாங்கோ---நல்ல
வழவழத்தது வாங்கி வாங்கோ;
வழவழத்தது வாங்கி வாங்கோ---நல்ல
கொளகொளத்தது வாங்கி வாங்கோ;
மயிர் முளைச்சது வெட்டிவோம்—நல்ல
வழவழத்தது வாழைப்பழம்;
வழவழத்தது வாழைப்பழம்---நல்ல
கொளகொளத்தது கொய்யாப்பழம். (மதுரைக்கு)

என்று பாடிக்கொண்டே பாட்டுக்கிணங்கக் கைநீட்டியும் தலையசைத்தும் ஆடுவான். பாட்டு ஒவ்வொரு விநாடியும் முடுகிச்செல்லும். ஒவ்வொரு பண்ணுடி வீட்டைக் காணுந் தோறும் அவன் ஒவ்வொரு புதுப்பாட்டுப் பாடுவான்: அவன் பாட்டுகளுக்கு அளவே இல்லை. தெம்பாங்கு (தேம்பாகு) பாடுவதில் கருப்பநாவிதனுக்கு இணையில்லை யென்று எங்கள் ஊரார் சொல்லுவார்கள்.

கருப்பநாவிதன் பெண்வேடம்போலவே கொல்ல-நஞ்சன், தச்ச-ராமன் இவர்கள் புலிவேடமும் அறியத்தக்கன. நஞ்சன் ஆள் குட்டை, நிறம் கருப்பு; இராமன் நெட்டை, நிறம் கருப்பு. இம் மனிதப் புலிகளுக்கும் உண்மையான் புலிக்கும் உள்ள வேற்றுமை இது: இம்மனிதப் புலிகளின் வாலை ஒவ்வோர் ஆள் பிடித்துத் தூக்கிக்கொண்டு வருதல் வேண்டும்; இப் புலிகளின் வாயில் எலுமிச்சம்பழம் ஒவ்வொன்று இருக்கிறது ; இப்புலிகள் மூக்குக்கண்ணுடிகளும் அணிந்துள்ளன; இவை ஒவ்வொன்றிற்கும் கால்கள் இரண்டு, கைகள் இரண்டு; கைகளில் வாங்கு பிடித்திருக்கின்றன. ஊர்ப்பண்ணுடியின் வீட்டு வாயிலில் போட்டிருக்கும் நீண்டு உயர்ந்த பந்தலிலே, பண்ணுடியின் முன்னிலையில் இவ்விரண்டு புலிகளும் தங்கள் திறமையைக்

காட்டுவதைப் பாருங்கள்! வேடிக்கை பார்க்கப் பலர் கூடி யிருக்கின்றனர். இவ்விரண்டு புலிகளுக்கு மிடையில் ஒரு கொழுத்த செம்மறியாட்டுக் கடாவை ஒருவன் பிடித்துக் கொண்டு நிற்கின்றான். அவ்வாட்டுக்கு இருபுறத்திலும் இப்புலிகள் பதுங்குகின்றன; கால்களை வீசுகின்றன; கைகளை ஆட்டுகின்றன. கண்கள் ஆட்டுக்கடாவையே நோக்குகின் றன. கடாவைக் கடித்துப் பிய்த்துவிடுவனபோல் இரண்டு புலிகளும் நெருங்குகின்றன; பின்வாங்குகின்றன; கசரத் துப் பண்ணுகின்றன; கரணமடிக்கின்றன; எழுந்து நின்று பின்னும் பதுங்குகின்றன; முன்னால் ஓடிவருகின்றன; இரையை உற்றுப் பார்த்துப் பின்னோக்கிச் செல்கின்றன; உறுமுகின்றன; பல்லைக் காட்டுகின்றன; பின்னும் கரண மும் கசரத்தும் போடுகின்றன. எனினும், ஆட்டுக்கடா இப்புலிகளைக் கண்டு அஞ்சிக் கத்தவேயில்லை; இப்புலிகளின் கண்களில் ஒளிரும் வசிய சக்தியால் நிலை தடுமாறி மிரண்டு நின்றுவிட்டதுபோலும். புலிகளின் உடம்பில் உள்ள சிவப் புக்கோடுகள் இன்னுஞ் சிறிதுநேரத்தில் அழிந்துபோகும் போல் தோன்றுகின்றன;—இல்லை, இல்லை. இதோ புலி கள் நெருங்கிவிட்டன. தச்சப்புலி ஆட்டுக்கடாவின் முது கைத் தன் கைகளாற் பற்றி, பல்லாற்கவ்வி அசைத்துத் தன் தலைக்குமேல் முதுகின்புறமாய்த் தூக்கியெறிகின்றது. கடா விழுந்தவுடன் கொல்லப் புலிபாய்ந்து, அதன் முதுகைக் கவ்வித் தன் தலைக்குமேலே எறிகின்றது. புலிகள் களைத் துப்போயின. ஊர்ப்பண்ணடி ஆட்டுக்கடாவையும் ஒரு சோடி சாயவேட்டிகளையும் இப்புலிகளுக்குப் பரிசாக அளிக் கின்றனர். சிறிதுநேரத்தில் புலிகளும், கூட்டமும், தப்பட் டைகளும் அங்கிருந்து மறைந்துவிடுகின்றன.

* * * *

அதோ, அக் கொள்ளுக்காட்டு வரப்பில் ஒருத்தி தலையில் சும்மாடு சுற்றிவைத்து, அதன்மேல் மூன்று கலயங்களைச் சுமந்துகொண்டு போகின்றாள். அவளுக்குப் பின்னாலே கோவணமட்டும் தரித்த ஐந்தாறு வயதுள்ள ஒரு சிறுவன் தொடர்ந்து செல்கின்றான். அவன் அடிக்கடி பின்னாலே தங்கி, கீரைத் தழைகளைப் பிடுங்கியும் காட்டுப் பூக்களைப் பறித்தும் தனக்குத்தானே பாடியும் சிறிது தூரம் முன்னாலே செல்லும் தனது தாயை 'அம்மா, நில்லு; அம்மா, நில்லு' என்று அழைத்து, விரைந்து ஓடி, அவள் மருங்கில் அணைந்து செல்கின்றான். அவள் சிறிது தூரம் நடந்து ஒரு மேட்டு நிலத்தை அடைகின்றனள். அங்கே ஒரு புங்குமரம் தன் கிளைகளைப் பரப்பி நிற்கின்றது. அம் மரத்துக்கு முன்னாலே, செங்காட்டில் ஒரு குடியானவன் ஓர் ஏர் பிடித்து உழுதுகொண்டிருக்கின்றனன். பொழுது விடிந்து பத்துநாழிகை யாயிற்று. அவன் எதிர் வெய்யிலில் உழுதுகொண்டிருப்பதால் அவன் நெற்றியில் வியர்வைத் துளிகள் வழிகின்றன. அக் குடியானவனே இப் பெண்ணின் கணவன். அவள் தன் கணவனுக்குப் பழையசோறு கொண்டுவந்திருக்கிறாள். குடியானவன் தன் மனைவியைக் கண்டதும் ஏரோட்டிக்கொண்டே சிறிது சிடுசிடுத்த முகத்துடன் "ஏம் புள்ளே இந்நேரம்?" என்றான்.

பையன் விரைந்தோடி, "ஐயா, மாமன் சந்தையிலே ஒரு காளை வாங்கிட்டு வந்திருக்காருங்கோ." என்றான்.

மனைவி தன் குற்றத்தை உணர்ந்தவள்போல் எதிர் பேசாது, புன்முறுவல்கொண்ட முகத்தோடே மாநிழலில் கலயங்களை இறக்கிவைத்து, "பின்னெ வாங்கோ" என்று கணவனை அழைத்தாள்.

பையன், "காளே நல்ல காளேயிங்கையா, ஆனு உண்ணம் மூக்கண்ணங்கவுறு குத்திலீங்க" என்றான்.

குடியானவன் பையனைப்பார்த்து "காளே நெறமென்னப்பா?" என்று கேட்டான். பையன், "செவலேயிங்க" என்று சொல்லி, பின்னுங் காளேயைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே, குடியானவன் மனைவியை நோக்கி, "ஆனுலும் என்னள்ளே, உணக்கு சோறு கொண்டுபோகோணுமுண்ணு நெனவில்லே?" என்று கடியுந் திறமின்றிச் சிறிது வருத்தத்தோடு சொன்னான்.

மனைவி, "ஆமாங்கொ, வெடியாலே எந்திரிச்சு செய்யறேம் செய்யறேம் உண்ணம் வேலேதீர்லே. வாசக்கூட்டி சாணி தொளிச்சு எருமை கறந்துபோட்டு, ஆத்தா வந்த புள்ளேக்கிச் சட்டுண்ணு தலேக்கி ஊத்தவேணுமுண்ணு தண்ணிகாயவெச்சு, தண்ணியூத்தறுதுக்கு சுப்பக்காளேக் கூப்புட்டா, அவ சட்டுண்ணு வாற முங்கரு?—அப்பறம், அவொ வந்தபொறகு புள்ளக்கித் தண்ணியூத்திப் பயனுக்குச் சோறுபோட்டேம்; அதுக்குள்ளே பண்ணுடிச்சி கூப்பட்ருங்கண்ணு ஆளுவந்துது. அங்கே போனேம், ரண்டு வள்ளச் சோளங் குத்திக் குடுக்கச் சொன்னுங்கம். அதைப் பண்ணிப்போட்டு, அவசர அவசரமா ஊட்டுக்கு ஓடியாந்து புள்ளக்கிப் பால்குடுத்துத் தொட்டல்லே போட்டுப்போட்டு நானுங்கூட சோறுதிங்கிலே, ஓடியாந்திருக்கறனே, என்ன நானு சோறுதிண்ணுக்கிட்டேம்?" என்று தன் குறையை வருத்தமுற்றவள்போற் சொன்னாள்.

குடியானவன் தன் மனைவிக்குச்செய்த கொடுமைக்கிரங்கி, சாலிலே ஏரை விட்டுவிட்டு வந்து, ஒரு கலயத்திலிருந்த நீரால் கையும் முகமும் கழுவி, மனைவி மோர்விட்டுக் கரைத்த பழைய சோளச்சோற்றைக் குடங்கையாற்

கொண்டு, வயிறு நிரம்பி ஏப்பம் வருமளவும் பச்சைமிளகாயைக் கடித்துக்கொண்டு குடித்தான். குடிக்கையில் தான் விட்டுவந்த ஏரை ஓட்டுவதற்கு முயன்றுகொண்டிருந்த தன் மகனைப் பார்த்து, "ஏண்டா சாமி, நீ ஒரு வாயி குடிக்கலே?" என்றான். பையன், "இல்லீங்கையோ, எனக்கு வாண்டாமுங்கோ, நீங்க சாப்புடுங்கோ" என்று சொல்லிவிட்டுக் கலப்பை மாடுகளை நட்புச்செய்துகொண்டிருந்தான்.

குடியானவன் சாப்பிட்டபின் மரநிழலில் உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் புகையிலை போட்டுக்கொண்டு, பழையது குடித்துக்கொண்டிருந்த தன் மனைவியோடு களிப்புடன் பேசிக்கொண்டிருந்தான்.

குடியானவன், "இந்த வருசம் கொள்ளுலே அம்பது; சோளத்துலே நூறுக்குக் கொறவில்லே. பண்ணாடி கடன் அம்பதும் குடுத்துட்டா நூறு மிச்சமாகும்" என்றான்.

மனைவி, "ஆமா, அந்த நூறை என்ன பண்ணப் போறீங்க?" என்று வினவினாள்.

குடியானவன், "நாலு காளை வாங்கி யுட்டா மேலைக்கி இருநூறுகும் பாரு" என்று வெற்றி தோன்ற நகைத்தான்.

மனைவி, "ஆமாங்கோ, அம்மிணி எப்படிப் போனாலும் போறா; நம்முளுக்கென்ன?" என்று விசனித்தாள்.

குடியானவன், "அம்மிணிக்கி என்னங்கறே, புள்ளே?" என்று கேட்டான்.

மனைவி, "இது நல்ல கூத்தாத்தா, நாளை மாசிமாசம் வந்தா ஒரு வருசமாகுதே, அவளுக்குத்தா ஒரு சிந்தாக்குப் பண்ணிப்போடறதில்லே? மாப்பிளைக்கி ஒரு கங்கணம் பண்ணிப் போடறதில்லே? எரவல் சிந்தாக்கு வாங்கிப்போட்டுக் கலியாண மூச்சாளுண்ணு ஊரெல்லாஞ் சிரிக்குதே. எம்

புள்ளைக்கித்தானு இப்படி யாகோணும்?" என்று கூறி, கண்ணீர் பெருக்கி மூக்குச் சிந்தினாள்.

கடைசியாகக் குடியானவன் மனைவிக்கு ஆறுதல் சொல்லி, மகளுக்கு நகை செய்துகொடுப்பதற்கு இசைந்து வாக்களித்தான். பின்பு அவன் மகனுக்கு ஏர் பிடித்தோட்டும் முறையைக் காட்டினான். அப்பொழுது வெய்யில் அதிகரித்ததால் மகனும் மனைவியும் விடைபெற்றுச் சென்றனர்.

III

ஊர்ப் பண்ணாடி

எங்கள் ஊருக்கு மேல் கோடியில் இருப்பது ஊர்ப் பண்ணாடியின் வீடு. 'மேற்கு வளவு' என்று ஊரார் அதைச் சொல்லுவார்கள். அவ்வீடு 'ㄇ' வடிவுடையது. ஊரில் உள்ள வீடுகள் யாவும் இவ்வாறு வளைந்த வடிவையே உடையன; ஆதலால் 'வளைவு' (வளவு) என்பது கொங்குநாட்டில் வீட்டுக்குப் பெயராயிற்று. ஊர்ப்பண்ணாடியின் வீடு ஒரு வள்ளக்காடு இடங்கொண்டது. வீட்டைச் சுற்றிலும் ஒன்றரையாள் உயரத்தில் ஓடைக் கற்களாலான சுவர் கட்டியிருக்கும். அவ் வீட்டைச் சுற்றிலும் நெருக்கமாக அமைந்த வீடுகள் எல்லாம் குடியானவர்களுடைய சிறிய வீடுகள். ஊர்ப்பண்ணாடி ஊர்க்குடியானவர்களுக்கு எங்ஙனம் தலைவரோ, அங்ஙனமே அவர் வீடும் மற்றையோர் வீடுகளுக்குத் தலைமையாயுள்ளது. இப்பொழுதிருக்கும் ஊர்ப்பண்ணாடியின் தந்தை காலஞ்சென்ற வேலப்ப கவுண்டரால் இவ் வீடு கட்டப்பட்டது. ஊர்ப்பண்ணாடிக்குச் சொந்தமான காடுகள் யாவும் ஊருக்குத் தெற்கே மலையடிவாரத்தில் உள்

ளன. மலையிலுள்ள சிறைக்காடுகள் துரைத்தனத்தாருக்கு எவ்வளவு சொந்தமோ, ஊர்ப்பண்ணாடிக்கும் அவைகள் அவ்வளவு சொந்தமானவை. வேலப்பகவுண்டர் இவ்வீடு கட்டத் தொடங்கியபொழுது சிறைக்காட்டிலுள்ள தேக்கு, ஈட்டி, கருங்காலி முதலிய கெட்டியான மரங்களைத் துரைத் தனத்தார் அறியாதபடி இரவிலே வெட்டி, விடியுமுன் அவற்றைத் தமது வீட்டுக்குக் கடத்திவிடுவது வழக்கம். அவர் இரண்டாண்டுகள் அல்லும் பகலும் உழைத்து இவ் வீட்டைக் கட்டினர், தூண்கள் யாவும் ஈட்டி மரங்களா லானவை; விட்டங்களெல்லாம் கருங்காலி; கதவுகளும் பல கணிகளும் தேக்கு; இம்மரங்களிலே ஒரு சொத்தை சொள்ளை கிடையாது. ஒவ்வொரு கதவும் அரை அடி கனமானது, ஒரே பலகையால் செய்யப்பட்டது. பல கணிக்கதவு ஒவ்வொன்றும் காலடி கனமானது, ஒரே பலகையாலானது. தாழ்களும் அவற்றிற்கேற்பக் கெட்டி யானவை. ஒல்வொரு தூணும் ஓர் ஆள் கட்டிப் பிடிக் கத்தக்க பருமனுடையது, கடைந்த ஈட்டி மரத்தா லானது. பண்ணாடி வீட்டிற்குப் புதிதாக வருவோர் தூண்களையும் சட்டங்களையும் கதவுகளையும் அவற்றின் வலுவையும் பார்த்துப் பார்த்து வியப்புறுவார்கள். சுவர்க ளெல்லாம் ஆராய்ந்தெடுத்த செங்கற்களாற் கட்டப் பெற்றவை;மூன்றுமுழ கனமுடையவை. ஓர் இரவெல்லாம் திருடன் கன்னம் வைத்தாலும் பாதிச் சுவருக்குமேல் அவன் தாண்ட முடியாதபடி தாம் சுவர் கட்டியதாய்க் காலஞ் சென்ற வேலப்ப கவுண்டர் சொல்வதுண்டு. வீட்டிற்கு வெளியே வாசற்படிக்கு இருபுறத்திலுமுள்ள திண்ணை கள் கழுத்தளவு உயர்ந்து பரந்து நீண்டவை. அத் திண்ணை களில் ஒரேகாலத்தில் முந்நூறு ஆட்கள் உட்காரலாம்

திண்ணைகளில் எப்பொழுதும் ஒவ்வொரு திண்ணைக்கு ஐவைந்து பாயாகப் பத்துப் பிரம்புப் பாய்கள் விரித்திருக்கும். கீழ்புறத்துத் திண்ணையில் ஒரு தூணுக்கருகே தோலால் தைத்த ஒரு திண்டு வைத்திருக்கும்: அதன் நீளம் மூன்று முழம், அகலம் இரண்டு முழம். ஒவ்வொரு பாயின்மீதும் ஒவ்வொரு தட்டு வைத்திருக்கும்: அவற்றிலே வெற்றிலைபாக்கும் புகையிலையும் நிறைந்திருக்கின்றன. நாற்பது ஐம்பதுபேர் திண்ணைகளில் அங்கங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர். அவர்களிற் பலர் பண்ணடியிடம் தமது வழக்குகளைச் சொல்லித் தீர்த்துக்கொள்ள வந்தவர்கள்; சிலர் பண்ணடியினிடத்தில் பேசிக்கொண்டிருக்க வந்தவர்கள்; ஒருசிலர் பண்ணடிவீட்டில் நடப்பவற்றைப் பார்க்கவந்தவர்கள். வந்தவர்கள் போனவர்கள் எல்லோரும் சிறிதும் கூசுதலின்றி வெற்றிலை பாக்கை மென்று மென்று ஒவ்வொரு பாய்க்கும் நேரே திண்ணைகளின் கீழே பளபளவென்று துலக்கி வைத்திருக்கும் பித்தளை எச்சிற் காளாங்கிகளில் எச்சிலை உமிழ்கின்றார்கள். பொழுது விழுவதன்முன் ஒவ்வொருநாளும் எல்லாக் காளாங்கிகளும் எச்சிலால் நிறைந்துவிடும். கிழக்குத் திண்ணையின் கீழ்புறத்தில் நான்கு இராசபாளையத்து நாய்கள் கட்டியிருக்கின்றன; அவற்றில் மூன்று பெரியவை, ஒன்று குட்டி; எல்லாம் தூயவெண்மை நிறமும் கூரிய முகமும் அழகிய மேனியும் உடையவை. அவற்றை ஊர்ப்பண்ணடி ஐந்நூறு ரூபா கொடுத்து வாங்கினார். அவை பன்றிவேட்டை யாடுவதிலும் உடும்பு வேட்டையாடுவதிலும் மிகுந்த திறமுடையவை.

வீட்டின் பின்கட்டிலே குளிக்கும் அறையும், சமயலறையும், தயிர் கடைந்து வெண்ணெய் எடுக்குமிடமும், பெண்கள் விடுதியும், உண்ணுமறையும், ஆடுமாடுகள்

கட்டுமிடமும், பட்டிநாய்களுக்கு அம்புலி காய்ச்சும் இடமும், சிறைக்காட்டிலிருந்து செலவில்லாமல் வெட்டிக் கொண்டுவந்து மலைபோல் குவித்த விறகுகள் அடுக்கும் இடமும் உள்ளன. மேழிச் செல்வத்தின் மேன்மையை அறிய விரும்புவோர் அங்குச்சென்று காண்பாராக.

ஒருநாள் பொழுதுவிடிந்து பத்துநாழிகை ஆயிற்று. ஊர்ப்பண்ணுடி வீட்டுத் திண்ணையில் வழக்கப்படி பலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். வீட்டின் முன்கதவு மூடியிருந்தது. திண்ணையிலிருந்தவர்களுடைய கண்கள் அடிக்கடி கதவை நோக்கின. பண்ணுடி திண்ணையிலில்லை. அவர் வீட்டுக்குள் உண்டி முடித்துக்கொண்டிருந்தார். அவர் வருகையை எல்லோரும் எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர். அப்பொழுது திடீரென்று கதவு திறந்தது. திண்ணையிலிருந்தோரிற் பலர் தம்மை யறியாது சடுதியி லெழுந்து நின்றனர்; சிலர் தமது மேல்வேட்டியை அரையிற் சுற்றினர். கதவைத் திறந்துகொண்டு வந்தது வேலையாள் வெங்காயன் என்றறிந்ததும் கொல்லென்று சிரித்து நாணி மீண்டும் அமர்ந்தனர். வெங்காயன் பண்ணுடி வருவதற்குமுன் வழக்கப்படி அவருக்குத் தனியாக வெற்றிலைபாக்குக் கொண்டுவந்தான். எல்லோரும் குசுகுசு வென்று பேசிக்கொண்டிருந்தனர், பண்ணுடியும் அங்குத் தோன்றினார். மீளவும் எல்லோரும் எழுந்து நின்றனர். வாசலில் நின்றுகொண்டிருந்த தண்டற்காரன் வண்ணுன் முதலானவர்கள் அடக்க ஒடுக்கத்துடன் அவரைக் கும்பிட்டனர். திண்ணையிற் கட்டியிருந்த நாய்கள் சங்கிலியை இழுத்துக் காதை நெரித்து வாலையாட்டி பண்ணுடியை உற்று நோக்கி உருமி அவரிடம் வருவதற்கு முயன்றன. பண்ணுடி நின்றவர்களைக் கையமர்த்தி, சிலரை 'வாங்க, அண்ணு',

'வாங்க, மாப்பிளே,' 'வாங்க, மாமா' என்று முறைக்கேற்பக் கேட்டுவிட்டு; நாய்கள் பக்கம் அணுகி, அவை அவர் முழங் காலேப்பற்றி நிமிர்ந்து நின்று அன்பு காட்டுகையில், அவற் றை முதுகிலும் பிடரியிலும் தட்டித்தடவி, சாந்தப்படுத்தி, திரும்பி, தமது இருக்கையில் அமர்ந்து திண்டிற் சாய்ந் தார்.

ஊர்ப்பண்ணுடியின் பெயர் சுப்பைய கவுண்டர். அவருக்கு வயது சுமார் நாற்பதிருக்கும். அவர் மானிற மும் நடுத்தரமான உயரமும் கற்போன்ற வலுத்த தேகமும் உடையவர். அந்த வட்டத்தில் அவருக்கிணை யான பலசாலி இல்லேயென்பது எங்கள் பள்ளிப் பிள் ளேகளும் அறிவார்கள். அவர் ஒருமுறை ஒரு கோவிலுக் குப் போய், இசைகடன் முடித்து, இரவில் தமது வண்டி யில் வந்துகொண்டிருக்கையில், நடுவழியில் கொள்ளேக்குப் பெயர்போன ஒரு பள்ளத்திலே, எட்டுக் கள்வர்கள் அவர் வண்டியை மறித்துக்கொண்டனர். வண்டியாள் அஞ்சி வண்டியை விட்டுவிட்டு ஓடிப்போனுன். கவுண்டர் வண்டியி னின்றும் குதித்து, கள்வர்கள் புடைக்கப் புடைக்க அவர் களேத் தம் கையாலும் காலாலும் உதறிக்கொண்டே வண் டிக்காளேகளே யவிழ்த்துவிட்டு, நுகத்தடியை உருவிக் கள்வர் மேற் சாடினுர். கள்வர்கள் உயிர்பிழைப்பது அரிதாய் ஓடிப்போனுர்கள். அதுமுதல் கவுண்டர் எட்டாளே யடிக்க வல்லவர் என்று எல்லோரும் சொல்லுவார்கள். அவர் புயங் கள் திரண்டிருக்கும்; மார்பு பரந்து இருபுடையும் உயர்ந்து கருங்கற் பலகைபோல் அமைந்தது. மூன்று வயதான குழந்தை அவர் மார்பில் படுத்துக் கைகால் குறுக்காமல் தாராளமாய்த் தூங்கலாம். அவர் கைகள் ஒவ்வொன்றும் மற்றவர்களின் தொடைப் பருமனுளது. அவர் விசாலமான

நெற்றியும், சிறிது தடித்துக் குட்டையான மூக்கும், அம்மைத் தழும்புகள் அங்குமிங்கும் காணப்படும் கன்னங்களும், செங்கண்களும் உடையவர். அவர் தலை உடம்புக்குத் தகுந்தபடி பெரிதன்று; தலைமயிர் கழுத்தளவு நீண்டு சுருண்டிருக்கும். அவர் கழுத்தும் கைகளும் கால்களும் நரம்பு திரண்டு முறுக்கடைந்திருக்கும். கவுண்டர் தமது வலது கை மணிக்கட்டிலே ஒரு கருப்புக் கயிறு கட்டியிருந்தார். அவர் கொடைக்குப் பெயர்போன வள்ளல், ஆயினும் முன்கோபம் உள்ளவர். கோபம் வந்தபொழுது அவர் ஆத்திரப்பட்டு என்ன தீங்குசெய்வார் என்பதை எவரும் அறியார். சிலவேளைகளில் அவர் தம் மனம் போனபடி திடீரென்று ஏதாவது செய்வார்; அதற்குக் காரணங் கூறுவது எளிதன்று. ஒருகால் அவரைக் காணும்பொருட்டு ஓர் ஏழை உறவினனான குடியானவன் வந்தான். அப்பொழுது பண்ணாடி தோட்டத்திலே இருந்தார். உறவினன் அங்குச் சென்று அவரைக் கண்டான். அவர் அவனோடு பேசிக்கொண்டே அவனைத் தமது கிணற்றண்டை யிட்டுக்கொண்டு போனார். கிணற்றில் கவலையிறைத்துக்கொண் டிருந்தார்கள். கவுண்டர் திடீரென்று திரும்பி, பின்னால் நின்ற உறவினனை இடதுகையாற் பற்றியிழுத்து நடுக்கிணற்றினுள்ளே வீசியெறிந்துவிட்டார். ஐயோ! பாவம், உறவினனுக்கு நீந்துவது தெரியாது. அவன் இரண்டொருமுறை தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி வெளியே வருவதைக் கவுண்டர் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்து, பின்பு ஒரே பாய்ச்சலாய்க் கிணற்றுக்குள் குதித்து, உறவினனை வெளியே இழுத்துக் கொண்டுவந்தார். கவுண்டர் சாந்தமாகப் பேசுவது அடுத்த பத்து வீட்டுக்குக் கேட்கும்; அவர் கோபித்துப் பேசுவதைக் கேட்பானேன்? அவர் வெகு விரைவாகவும் பேசு

வார்: அவரண்டை சிலநாட் பழகினவர்களுக்கன்றி, புதிய வர்களுக்கு அவர் பேச்சு எளிதில் விளங்காது. கவுண்டர் திண்ணைக்கு வந்தபொழுது அரை வேட்டியும், தோளின் மேல் ஒரு துண்டு வேட்டியும் தரித்திருந்தார்.

கவுண்டர் அமர்ந்ததும், "கந்தயனெங்கே?" என்றார். கந்தையனிடம் போய்வந்து பந்தலில் நின்றிருந்தவன் முன்னுக்கு வந்து, "அப்பா, சாப்பிடராங்கொ, சாப்பிட்டுக் கை கழுவுனதும் வாரமுண்ணு சொன்னாங்க" என்றான்.

கந்தையன் கவுண்டருடைய மந்திரி, அவருக்கு வலது கை போன்றவன். அவனுடைய ஆலோசனையைக் கேட்டே அவர் எந்தக் காரியமும் செய்வார். கந்தையன் ஏறக்குறைய கவுண்டர் வயதுள்ள ஒரு நெட்டையான ஆள்; கூரிய அறிவும் ஆண்மையும், மிகுந்த சுறுசுறுப்பும் உடையவன். அவனுக்குக் கையெழுத்து மாத்திரம் போடத் தெரியுமேயன்றி படிப்புச் சிறிதும் இல்லை. கவுண்டருடைய வழக்குகளையெல்லாம் சித்தப்படுத்திக் கச்சேரியில் வெற்றியுண்டாகும்படி செய்பவன் அவனே. அவன் வென்ற வழக்குகளுக்குக் கணக்கில்லை. எவ்வளவு சிக்கலான வழக்குகளையும் பிய்த்துப் பிய்த்துச் சபையோர் ஏற்றுக்கொள்ளும்படி பேச வல்லவன். கந்தையன் இருக்கும் கூட்டத்திலே சனங்கள் வாய்திறப்பது அரிது. அவன் எடுத்த வழக்கு வெல்லும்; தொட்ட காரியம் நிறைவேறும். செப்படி வித்தைக்காரன் செய்யும் கண்கட்டு வித்தைகளைச் சிறிது உற்றுநோக்குவானாயின், அவற்றிலுள்ள தந்திரங்களை யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி விவரித்துச் சொல்லுவான்; ஒருவர் படிப்பதை உற்றுக்கேட்பானாயின், அதன் கருத்தைப்பற்றிப் படித்தவர்களும் வியக்கும்படி வாதாடுவான். அவனுடைய ஆண்மை அவன் கூரிய அறிவுக்குத் தக்கபடி அமைந்தது. ஒருகால் கவுண்

டர் ஓர் அவசர காரியத்திநிமித்தம் நான்கு வண்டிகளோடு ஓர் ஊருக்குப் பயணப்பட்டுப் போனார். வழியிலே ஆறு பெருகியோடினதால் வண்டிபோவது இயலவில்லை. கந்தையன் தான் வண்டியோட்டுவதாய்ச் சொல்லி, தண்ணீர் வண்டிக்குள் நுழைந்ததாயினும் வெகு திறமையோடு காளைகளைச் செலுத்தி வண்டியை அக்கரை சேர்த்தான். பிறர் அவனைப்பார்த்து ஓட்டிய மற்ற மூன்று வண்டிகளும் ஆற்றில் கவிழ்ந்துபோயின. அவற்றைப் பின்னர் கரைகொண்டு வந்து சேர்த்தவனும் கந்தையனே. எங்கள் ஊரை யடுத்த மலைகளிலே இரவெல்லாந் தனித்திருந்து சிறிதும் அஞ்சாது அவன் வேட்டையாடுவான். கவுண்டர் அருளால் அவன் இப்பொழுது கொஞ்சம் பணம் சம்பாதித்திருக்கிறான். எங்கள் நாட்டில் ஒவ்வொரு பெரிய செல்வனுக்கும் இத்தகைய மந்திரிகள் உண்டு.

சிறிது நேரத்தில் கந்தையனும் வந்துசேர்ந்தான். தம் தம் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அயலூர்களினின்றும் உள்ளூரினின்றும் வந்திருந்தவர்கள் கவுண்டரிடத்தில் அவற்றைச் சொல்லுவாராயினர்.

"என்னங்க அண்ணா?" என்றார் கவுண்டர் தமது அண்டையில் உட்கார்ந்திருந்த ஒருவரைப் பார்த்து.

"என்ன அப்புனு" என்றார் அவர்.

"எங்கெ வந்தீங்க?" என்று கவுண்டர் கேட்டார்.

"என்ன அப்புனு, அம்மிணி யிப்பிடி தினந் தினம் ஊருக்கு ஓடியாந்திட்டா நல்லா இருக்குதா? பொண்டாட்டி புருசன் குடும்பம் பண்றது இப்படித்தானா? நீங்களெல்லாம் இருக்கிறீங்களே, இதை விசாரிக்கிறதில்லை? தாயாரு வார்த்தையைக் கேட்டுகிட்டு நாயம் அநியாயமில்லாமே அடிச்சுத் தொரத்துனா நல்லா இருக்குதா? தினந்

தினம் எனக்கு இதுதானா வேலை?" என்றார் வழக்குச் சொல்லவந்த பெண்ணின் தந்தை.

"யாரு, மாப்பிள்ளையா?" என்று கேட்டார் பண்ணாடி.

"மாப்பிள்ளைதா. மாப்பிள்ளை" என்று வருத்தத்தோடு சொன்னார் அக்கிழவர்.

"அடே முத்தா, தெக்காலூட்டு மாப்பிள்ளையைக் கூட்டிக்கிட்டு வா" என்று பண்ணாடி ஒரு வேலைக்காரனுக்கு உத்தரவளித்தார்.

மாப்பிள்ளையைக் கூப்பிட்டுக்கொண்டு வருவதற்கு முத்தன் ஓடினான்.

"நடந்ததென்ன? மாப்பிள்ளை ஏனடிச்சுது?" என்று கவுண்டர் கேட்டார்.

"இதோ அம்மிணியைத்தா. கேளுங்களே." என்றார் பெண்ணின் தந்தை.

பந்தற்காலைக் கட்டிக்கொண்டு மூக்குச் சிந்தி அழுது கொண்டிருந்த அம்மணி, கவுண்டர் கூப்பிட்டவுடனே சிறிது உரத்து அழுது, பலமாய் ஒருமுறை மூக்குச்சிந்தி குனிந்த தலையுடன் பண்ணாடிக்குமுன் வந்து நின்றாள்.

"மாப்பிள்ளை ஏனடிச்சுது அம்மிணி?" என்று பண்ணாடி கேட்டார்.

அம்மணி சொல்லுகிறாள்: "அவுகமேலே ஒரு குத்தமுமில்லீங்க. எல்லா. அவ பண்றது தானுங்கொ. நா. செரியா வகுத்துக்குத் திண்ணா அவளுக்குப் பொறுக்காது. எண்ணை தேய்ச்சுத் தலை முழுகுனா, 'இவ்வளவு எண்ணை தேய்ச்சுக்கிறதா?' எண்ணு கேக்கரு. அண்ணக்கி கம்பரிசி குத்தி ஊரப்போட்டு வெல்லமுந் தேங்காயுங் கடிச்சுகிட்டுத் திண்ணணுங்கோ. அதுக்கவொ, கம்பரிசியைப் போட்டு கிட்டு இந்த மெத்து மெத்தறயே, அதிருந்தா ஒருநாளைச்

சோத்துக்காகாது? நீ யூட்டிலெ இருந்தா பொளப்புத் தள தளெங்கும்' எண்ணு. நானு அவுககிட்ட ஒருபேச்சுப்பேசினு அவுக போறவரையிலே சும்மா இருந்துட்டு, போனவுடனே அடிச்சிக்கிரு. 'அடி சிறிக்கி, மாமியா இருக்கிறபோது தாம் புருசங்கிட்டப் பேசோணுமோ? கொழுக்கத் திண்ணு அப்பிடித்தானடி' எண்ணு சண்டைப்புடிக்கிரு. பக்கத் தூட்டுப் பொம்பளைககிட்டெல்லாம் இதுதாம் பேச்சு. நாலு நாளைக்கி முன்னே ஒரு ஈருகோலி வாங்குனனுங்கோ. அதுக்கு அதிலியே தலைதலையா அடிச்சா. நானும் ரெண்டு பேசிப்போட்டேம். அவுக ஊட்டுக்கு வந்தா நல்லாப்போதிச்சுப் பின்னையும் அடி வாங்கிக் குடுக்கரு."

இதற்குள் மாப்பிள்ளையும் அவனது தாயாரான கிழவியும் வந்துசேர்ந்தார்கள்.

"என்ன மாப்பிளை, இப்படி ஊட்டுப்பேச்சு வெளியே வாரது உங்களுக்கு நல்லா இருக்குதா?" என்று கேட்டார் பண்ணாடி.

"எல்லாம் அம்மாளைக் கேளுங்கோ" என்று மாப்பிள்ளை சொல்லிவிட்டுப் பேசாதிருந்தான்.

"என்ன அக்கா, உணக்கு வயுசாகாக புத்தி கட்டையாப் போகுதுபோ விருக்குது" என்று பண்ணாடி கிழவியைக் கடிந்தார்.

"என்ன சாமி, ஊட்டுப் பொம்பளே எப்பிடியிருக்கோணும்? மூணுகாளை வாங்கி இருனூறு ரூபா கடனாயிருக்குது. அவனதைக் கட்டோணுமுண்ணு அரை வயிறு கால் வயிறு குடிச்சுப்போட்டுக் கடனைத் தீக்கறதுக்கல்லோ வழி பாக்கோணும்? ஒரு நாளைக்கி மூணுவிசை கடலை பொரி வாங்கித் திங்கறதுக்கு கடையிலே சோளங்கொண்டு பேர்யப் போடோணும். கெணத்துக்கு தண்ணிக்கி

போனு நாலோடு நாலுநாளியா?" என்று கிழவி தன் குறையை விவரித்தாள்.

"அதெல்லாம் இருக்கட்டும். அவளை ஏனடிச்சே?" என்று கவுண்டர் கேட்டார்.

"ஐயோ. அப்பனுணே சாமிசாச்கியா நாங்கைதொடவே இல்லெ. ஈருகோலி பழசு இருக்கயிலே புதுசு எனத்துக்குண்ணு சொன்னே. அதுக்கவொ என்ன சொன்னுண்ணுகேளு சாமி. நறுக்குண்ணு கேக்கருளல்லப்பா" என்றுள் கிழவி.

"நில்லு, நில்லு; மாப்பிளே, நீங்க என்ன சொல்றிங்கொ?" என்று பண்ணாடி கேட்டார்.

"நானென்ன சொல்லுட்டுமுங்கொ? பக்கத்தூட்டுக் காரரு சொல்றதைப் பார்த்தா அம்மா அடிச்சது அடிச்சது தாம்போலிருக்குது: ஆனு அவொ லேசுப்பட்டவண்ணு நெனைக்காதீங்கோ. இவுகொ ரண்டு பேரையும் வச்சுகிட்டு நானு ஒருநா குடித்தனம் பண்ணமுடியாதுங்கொ. நீங்க ரண்டுபேரையும் பிரிச்சுட்ருங்கொ" என்று மாப்பிள்ளை சொன்னான்.

"அதுதானு சரி; என்ன கந்தயா?" என்றார் பண்ணாடி.

கந்தையனும் அவர் கருத்தே உடையனுதல் கண்டு, கவுண்டர், "சரி, அக்காளுக்கு மாசம் இவ்வளவுண்ணு குடுத்து ஒரு கொட்டம் ஒழிச்சுக் குடுத்துருங்கோ, மாப்பிளே. அம்மிணி, நீ போய் இதுவரையில் பண்ணினுப்படி சிறுபுள்ளைத்தனமா இருக்காதே. ஒழுங்கா நடந்துக்கோ, போ" என்று புத்திகூறி, வழக்காளிகளை அனுப்பிவிட்டனர்.

பின்பு அடுத்த ஊரிலிருந்து வந்தவர்கள் மூவர் தம் வழக்கைச் சொல்லினர். ஒரு குடியானவன் மகள், புத்தியறிந்தபெண், பட்டிக்குச் சோறு கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுத் திரும்பி ஓர் இட்டேரி வழியாய் வந்தாள். பெற்

ளோர் அவளுக்கு அடுத்த பதினைந்தாம் நாள் மணம் பேசி முடித்திருந்தனர். அவளுடைய அத்தை மகன் அவளை மணக்கவிரும்பிப் பெண் கேட்டபொழுது, அவன் முரடனு யிருந்தமையால், பெண்ணின் தகப்பன் கொடுக்க மறுத் தான். அத்தை மகன் சமயம் பார்த்திருந்து, அவள் இட் டேரி வழியாய் வருகையில், ஒரு திருகுகள்ளிப் புதரில் மறைந்திருந்து, சடுதியில் அவள் முன் தோன்றி, அவளை மறித்து, அவள் கழுத்தில் கள்ளத்தாலி கட்டிவிட்டான். இச் செய்தி யறிந்த தாய்தந்தையர்கள் மகள் கழுத்தி லிருந்த தாலியை அறுத் தெறிந்துவிட்டு அவன்மீது வழக்குத் தொடர்ந்தனர். கவுண்டர் பொறுமையோடு எல்லாவற்றையும் விசாரித்துப் பின் கந்தையனை ஆலோசனை கேட்டார். இது சாதியைப்பற்றிய வழக்காதலால் சாதி யாருக்கெல்லாம் ஓலையனுப்பி, சாதிக்கூட்டம் கூட்டுவித்து, இவ் வழக்கை விசாரித்து, பையன் செய்தது பிழை என்று கூட்டத்தாருக்குத் தெரிந்தால் அவன் குடும்பத்தாரைச் சாதியினின்றும் நீக்கிவைத்தல் வேண்டும் என்று கந்தை யன் தன் கருத்தை வெளிப்படுத்தினன். எல்லோருக்கும் அதுவே தகுதியென்று பட்டது. கவுண்டர் பத்தாம் நாள் சாதிக்கூட்டம் கூட்டுவிப்பதாய் வாக்களித்தபின் வழக் காளிகள் தம் ஊருக்குப் போயினர்.

இவைபோன்ற சில வழக்குகள் முடிவுசெய்யப்பட்டன. அயலூரார் எல்லோரும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட் டதனுல் வாசலில் வாயிற்படிக்கருகில் குவிந்திருந்த செருப்பு கள் படிப்படியாய்ப் பல திசைகளை நோக்கிப் போயின. திண்ணையிற் கூட்டமும் பாதி கலைந்தது; பொழுதும் அடி சாய்த்தது; கந்தையனும் மறுநாள் வருவதாய்ச் சொல்லிப் போனுன்.

கவுண்டர் தமக்கருகில் செம்பில் வைத்திருந்த தண்ணீ' ரை வாயிலூற்றி, மும்முறை வாய் கொப்பளித்து, அரை பட்ட வெற்றிலை பாக்குப் புகையிலை கலந்த எச்சில் நீரைக் காளாங்கியி லுமிழ்ந்து, செம்பை அருகில்வைத்து, சிறிது ஒழிவுடையவராய் "உஸ், அப்பா" என்று காலை நீட்டிக் கையை உயர்த்திக் கொட்டாவி விட்டுத் திண்டிற் சாய்ந்தார். அவர் கண்ணெதிரில், வாசலின் ஒருகோடியில், பத்து வேலையாட்கள் அங்கே குவித்திருந்த மாவிட்டங்களைக் கவுண்டர் ஆணைப்படி தோட்டத்துக்குக் கடத்திக்கொண்டிருந்தனர். கவுண்டர் பார்த்தபொழுது, அவர்கள் இரண்டு கைகளாலும் தழுவிப் பிடிக்கமுடியாத ஒரு பெரிய கருங்காலி விட்டத்தை வண்டியில் ஏற்றும் பொருட்டுக் கடப்பாறைகளைக் கீழேகொடுத்துத் தம்மா லியன்றவளவு முயன்றும் மரம் சிறிதும் உயரவில்லை. கவுண்டர் அவர்களது இயலாமையைக் கண்டு, "ஏண்டா, நீங்களும் ஆம்பளைகண்ணு பொறந்தீங்களே" என்று வைது, திண்ணையினின்றும் கீழே குதித்து, மரத்தருகில் வந்து அப்பத்துப்பேர்களையும் அவ்விட்டத்தின் ஒருநுனியைப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார். அவர் ஒருகடப்பாறையை வாங்கி, மற்ற நுனியின் பக்கம் தனியே நின்று கடப்பாறையால் உந்தினார். உடனே மரம் உயர்ந்து சிறிது நேரத்துக்குள் வண்டிக்கு வந்துவிட்டது. கவுண்டர் தமது இருக்கைக்குத் திரும்பினர். சூழ்ந்திருந்தோர் யாவரும் கண் கொட்டாது வாய் பேசாது இவ் வியப்பைக் கண்டு மெய்ம்மறந்திருந்தனர்.

பண்ணடி உட்கார்ந்தபின் மணியக்கார ஐயரிடமிருந்து ஓர் ஆள் வந்தான். கவுண்டர் அவனை 'எங்கே வந்தே?' என்று கேட்டார். அவன், இரண்டு நாட்களாக அவ்வூரில் தங்கியிருந்த தாசில்தார் அடுத்த ஊருக்குப் போவதால்

ஐயர் பண்ணுடியின் பெட்டிவண்டியைத் தாசில்தாருக்கு அனுப்பும்படி சொன்னதாகக் கூறினன். கவுண்டர் வண்டிக்காரனை அழைத்து, சோடி எழுநூறு ரூபாவுக்கு வாங்கின காளைகளைப் பூட்டி வண்டியோட்டிக்கொண்டு போகுமாறு கட்டளையிட்டார். சிறிதுநேரத்தில் சதங்கைமாலை ஓசையிட, திண்டு தலையணைவைத்த பெட்டிவண்டி எல்லோர் முன்னிலையிலும் புறப்பட்டுப் போயிற்று.

வண்டி போனபின் கவுண்டர் தம் கால்களை நீட்டி எதிரில் இருந்த தூணிற் சார்த்தி, திண்டிற் சாய்ந்தபடியே, கூடியிருந்த உறவினரோடு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே அன்னக் காவடியைத் தோளிற் போட்டுக்கொண்டு, கண கணவென்று மணிகள் ஒலிக்க அயலூரானன மொட்டைத்தலைச் சாமியார் ஒருவன் பிச்சைக்கு வந்தான். கவுண்டர் வீட்டுக்குவரும் பிச்சைக்காரர்கள் திண்ணைப்பக்கம் வருதல் கூடாது; அவர்கள் பின் வாயிலின் வழியாய்ப் பின்கட்டுக்குச் சென்று பிச்சை வாங்கிக்கொண்டு போவது வழக்கம். இப்பொழுது வந்த மொட்டைத்தலைச் சாமியாருக்கு இவ்வுண்மை தெரியாது; மேலும் அவனுக்குத் தோட்டம் தூரம். ஆகவே, அவன் கவுண்டர் இருந்த திண்ணைப்புறம் வந்து ஒதுங்கி நின்ருன். கவுண்டர் அவனைக் கண்டு பின்பக்கம் போகும்படி மெது வாய்ச் சொன்னர். அது அவன் காதில் விழவில்லை. கவுண்டர் தம் உறவினரிடம் பேசிக்கொண்டிருந்து திரும்பிப்பார்த்தபொழுது காவடிக்காரன் பழைய இடத்திலேயே நின்றுகொண்டிருந்தான். கவுண்டர் கண் சிவக்க, மீசை துடிக்கத் திண்ணையிலிருந்து சரேலென்று இறங்கிவந்து, "காமாட்டிப் பயலே, நாஞ் சொன்னது கேக்கலையாடா?" என்று சொல்லி, வலதுகையை ஓங்கிப் பளாரென்று சாமியார்

கன்னத்தில் அறைந்தார்; கைவிரல்கள் ஐந்தும் கன்னத்தில் அப்படியே பதிந்துபோயின. சாமியார் காவடியுடன் திருகிக் கீழே வீழ்ந்தான்: திண்ணையிற் கட்டியிருந்த நாய்கள் ஊளையிட்டன. சாமியார் வாயிலும் மூக்கிலும் இரத்தம் கொட்டிற்று. கவுண்டர் திண்ணையேறித் திரும்பிப்பார்த்து நாலு ஆட்களை அழைத்து, சாமியாரை ஓர் அறைக்குள் கொண்டுபோகச் செய்து விசிறி வீசச் சொன்னார். சிறிது நேரஞ்சென்றபின் சாமியாருக்கு உணர்ச்சி பிறந்தது. கவுண்டர் சாமியாரை மூன்று நாள் தம் வீட்டிலேயே விலாப்புடைக்கச் சோறிட்டு வைத்துக்கொண்டிருந்து, பின்பு அவனுக்குச் சிறிது பணமும் கொடுத்து அனுப்பினார்.

சாமியார் உணர்ச்சியின்றி அறையில் படுத்திருக்கையில் ஒரு வில்லைச் சேவகன் கவுண்டருக்கு ஒரு சமன் கொண்டுவந்தான். சமனை வாங்கிக்கொண்டு கவுண்டர் சேவகனைப் பின்கட்டுக்குச் சென்று சாப்பிட்டு வரும்படி அனுப்பினார். சமையற்காரர்கள் சாதம் பிசைந்து சேவகன் கையிலிடுவதற்குக் கொண்டுவந்தார்கள். சேவகன் பட்டணத்துக் கை காட்டுவானாயினன். அவன், "நான் கையில் சாப்பிடுகிற வழக்கம் இல்லை, இலையில் போட்டால்தான் உண்பேன்" என்றான். சமைப்போர் கவுண்டரிடஞ் சென்று சேவகன் சொன்னதை அறிவித்தனர். பேச்சு நடுவிலே இருந்த கவுண்டர் இதைக் கேட்டதும் எழுந்திருந்து உள்ளேபோனார். வேலையாட்கள் மூவரை யழைத்து அச்சேவகன் கைகளைப் பின்கட்டு முறையாகக் கயிறுகொண்டு வலுவாய்க் கட்டச்சொன்னார். சேவகன் கவுண்டர் கோபத்தை உணர்ந்து கண்ணீரும் சிறுநீரும் ஒருங்கே பெருக்கினான். பன்முறை அவன் இரந்து கேட்டும் கவுண்டர் இணங்க

வில்லை. கைகளைக் கட்டியபின் ஒரு நீண்ட வாழையிலையைக் கொண்டுவந்து அதில் சோறு கறி முதலியவற்றைப் பரிமாறச்செய்து, கவுண்டர் சேவகனை நோக்கி, "இதோ எலே போட்டுப் பரிமாறியிருக்குது. நீ கையிலே சாப்படற வழக்கமில்லேண்ணு சொன்னயே, இப்பொ உண்ணு" என்று கட்டளையிட்டார். சேவகன், "என் கையைக் கட்டிவிட்டீங்களே, நா எப்படி யுண்பேன்?" என்றான். கவுண்டர், "நீ தா கையிலே உங்கற வழக்கமில்லியே, வாயாலுண்ணு" என்று கூறி, குதிரைச் சவுக்கால் சேவகனைப் பளீர் பளீர் என்று அடித்தார். சேவகன் குய்யோ முறையோ என்று கதறி, கட்டவிழ்த்து விட்டவுடன் தன்னூர்போய் நின்றான். கவுண்டர் திண்ணைக்குத் திரும்பிவந்தார்.

கவுண்டர் தம் இருக்கையில் அமர்ந்து நிமிர்ந்து பார்த்தார். வாசலிலே பந்தலின் கடைசியில் ஒரு பந்தற்காலுக்கருகில் ஒருவன் நிற்பதைப் பார்த்து, "யாரு, கருப்பனா?" என்றார்.

"ஆமா, சாமி" என்று கருப்ப நாவிதன் தாழ்ந்த குரலில் மறுமொழி சொல்லிக் கும்பிட்டுப் பணிவாய்த் தன் வேட்டி, கால், கை முதலியவற்றை ஒடுக்கி ஒதுங்கி நின்றான்.

"எங்கடா வந்தே?"

"தொரைகளைப் பாக்கத்தானுங்கோ."

"என்ன?"

"எம் பயனுக்கு நாளெ வாரத்திலே கலியாணமுங்கோ."

"மாரனுக்கா?"

"ஆமா, சாமி."

"எந்தூர்லடா?"

"கோட்டப்பாளயத்திலீங்க."

"சரி."

கருப்பன் தலை சொறிந்து இன்னும் பணிவுள்ளவனானான்.

"அதுக்கென்னடா?"

"செலவுக்கு ஒரு இரணூறு ரூபா வேணுமுங்கோ. கொள்ளு வந்தா வித்துக் குடுத்துப்போடறேං"

"அடே, குட்டி" என்றார் கவுண்டர். அவர் கணக்குப் பிள்ளை ஓடிவந்து நின்றான்.

"கருப்பனுக்கு இரணூறு ரூபா குடுத்துக் கணக்கு வை."

"ஆகட்டுமுங்கோ" என்று கூறி மறைந்தான் கணக்குப்பிள்ளை.

நாவிதன் இருந்த இடத்திலேயே நின்றான்.

"அப்பறம் என்னடா?"

"கலியாணத்துக்குக் கொஞ்சம் வெறகு வேணுமுங்கோ."

"வெறகு எங்கடா இருக்குது?"

"ஊரு மந்தையிலே ஒரு புளியமரம் காஞ்சு நிக்குது. அதை வெட்டிக்கிறேං, உத்தரவாகவேணுமுங்கோ."

"சரி, போ."

"மணியக்காரரு ஏதாவது சொல்லுவாங்களோ, என்னமோ——."

"யாராவதுகேட்டா,நாஞ்சொன்னேண்ணு சொல்லு."

"ஆகட்டும், புத்தி."

"அந்தப் பக்கம் போயி குட்டிகிட்டப் பணம் வாங்கிக்கிட்டுப் போ."

"நல்லது, புத்தி" என்று சொல்லி நாவிதன் கும்பிட்டுப் போனான்.

கவுண்டர் திண்ணையில் ஐம்பது அறுபது பேர் உட்கார்ந்திருந்தனர். கவுண்டர் இன்னும் இரண்டாவது வேளைச் சிற்றுண்டிக்கு எழுந்திருக்கவில்லை. அப்பொழுது வேலையாள் ஒருவன் தோட்டத்திலிருந்து இரண்டு குலை இளநீர்க்காய்கள் கொண்டுவந்து பண்ணுடியின்முன் வைத்தான். கவுண்டர் அருகில் உட்கார்ந்திருந்த ஒரு குடியானவன் மற்றவர்களைப் பார்க்கினும் அவரிடம் வேடிக்கையாகவும் தாராளமாகவும் பேசிக்கொண்டிருந்தான். அவன் பண்ணுடிக்கு மாப்பிள்ளை முறையாதல் வேண்டும். இளநீர்க்காய்களைக் கண்ட அம்மாப்பிள்ளை, கண்ணிமைத்து, மச்சா, மச்சா, உங்களுக்குப் பெலம் இருக்கறது மெய்யாளு, இந்த எளநீரை ஒரே குத்திலே ஒடையுங்கோ பாப்போம்" என்ருன். கவுண்டர் நிமிர்ந்து உட்கார்ந்து, "முடியாதுங்கோ, மாப்பிளை, இது முடியுமா?" என்று சொல்லிக்கொண்டு; மாப்பிள்ளையின் மணிக்கட்டைத் தம் கையால் இறுகப் பிடித்து அழுத்தினுர். மாப்பிள்ளை, "ஐயோ, ஐயோ, விட்டுருங்க மச்சா, விட்டுருங்க மச்சா, மச்சா" என்று கண்ணில் நீர்ததும்ப இரந்து கேட்டார். சிறிது நேரத்துக்குப் பிறகு கவுண்டர் தம் கையை மெதுவாய் எடுத்தார். மாப்பிள்ளைக்குப் போன உயிர் சிறிதுநேரம் வரவில்லை. மணிக்கட்டைப் பிடித்துக்கொண்டே அவர் சிறிது அங்கலாய்த்தார். அப்பொழுது கவுண்டர், "மாப்பிளே, இருக்கட்டு மாப்பிளே; இதுக்கழுகிறவருக்குப் பொண்ணுக் குடுத்துகிட்டு என்ன பண்றது மாப்பிளே. இதோ பாருங்க, ஒரு குத்துலே ஒடைக்கச் சொன்னீங்களே, அது முடியாது; ஆனுலும் பாக்கறனுங்கோ" என்று உரத்துக்கூறி; தமது தோள்மீது இருந்த துண்டு வேட்டியை எடுத்து வலதுகையிற் சுற்றிக்கொண்டு, இளநீர்க்காய்களில் பெரியதொன்றை எடுத்து,

தரையில் பொருத்துப் பார்த்து வைத்து, வலதுகையை ஓங்கி ஓர் அடி அடித்தார். இளநீர்க்காய் இரண்டாகப் பிளக்க உள்ளே இருந்த ஓடு சுக்கல் சுக்கலாகப் போயிற்று.

வெற்றிச் செருக்குற்ற கவுண்டர், தமக்கருகில் ஒரு குடியானவன் வைத்திருந்த ஒரு தடியை எடுத்தார். அது உலக்கை செய்வதற்கு ஒன்றிரண்டாகச் செதுக்கிய ஈட்டித் தடி. கவுண்டர் அதைத் தம் தோள்மேற் சார்த்தி, ஒரு நுனியைத் தரையில் அழுத்தி, இடதுகையால் அதை நடுவிற் பிடித்து, அதை ஓடிக்க முயன்றார். பார்த்திருந்தோர் அது இயலாதகாரியம் என்று எண்ணினர்கள். கவுண்டர் இரண்டொருமுறை மெதுவாக அதை வளைக்க முயன்று பார்த்து, பின்பு இடதுகையைப் பலமாய் அழுத்தினர். தடி இரு துண்டாய் வீழ்ந்தது.

இதற்குள் இடைப்பகலானதால் கவுண்டர் எழுந்திருந்து சிற்றுண்டிகொள்வதற்கு வீட்டினுள்ளே சென்றார். கவுண்டருடைய சிற்றுண்டியாவது: வேகவைத்துத் தாளித்த ஒரு படி பச்சைப்பயறுகும். சிற்றுண்டி முடித்துக் கவுண்டர் வாய்பூசி, மீசைதுடைத்துக் கனைத்துக்கொண்டு திண்ணைக்கு வந்தார். வரும்வழியில் வாயிற்படியண்டை காட்டுப்பண்ணுடி காத்திருந்தான். அவர் அவனைப் பார்த்து, "நாளைக்கி, பொழுது கிளம்பத் தெக்குக் காட்டுப் பாறையிலே அறுபது மாடு விட்டு கம்பு தாம்போட்டிப்போட்டு, அங்கிருக்கிற சோளத்தை நம்ம சோளக்குழியிலே கொண்டாந்து அளந்துபோடச் சொல்லு. நாளைக்கி பத்து எறவாளரை விட்டு அஞ்சு வண்டி வெறகு கொண்டாந்து ஐயரு வளவுலெ போடச்சொல்லு. காங்கயத்துச் செவலைக்கி மூக்கணாங்கவுறு குத்தச் சொல்லியிருக்கறேං; சரியாப் பாத்துக்கொ" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு வந்து உட்கார்ந்தார்.

திண்ணையில் பலர் கூடியிருந்தனர். அப்பொழுது மலையாளத்துச் சாமியார் ஒருவர் அங்கே வந்தார். அவர் நீண்ட சடைமுடி வளர்த்திருந்தார். அவர் கைவிரலின் நகங்கள் காற்சாண் நீண்டிருந்தன. அவர் தம் பாதகுறட்டைக் கழிந்துவிட்டு நேரேவந்து பண்ணுடியினருகில் உட்கார்ந்தார். சூழ இருந்தோர் அவருக்கிடம்விட்டு நகர்ந்திருந்தனர். யாவரும் சிறிதுநேரம் ஒன்றும் பேசாமல் இருந்தனர். சாமியார் கவுண்டரைச் சிறிது உற்று நோக்கி, தம் கண்களை மூடி, இரு கைகளும் தலைமீதேற, அவற்றை விரித்து வெறுங்கைகளை எல்லோருக்குங் காட்டி, "சல், ஓடிவா" என்று இடியிடித்தாற்போல் உரக்கக் கூவி, கைகளைத் தட்டினர். பின்பு அவர் தம் கைகளைக் குவித்துப் பண்ணுடியின் கைக்குள் வைத்தார். கவுண்டர் கையிலே ஓர் இலை முடிச்சும் அதுநிறையக் கற்கண்டும் இருந்தன. அதை எல்லோருக்குங் கொடுத்துத் தின்னும்படி சாமியார் கவுண்டரிடம் சாடைசெய்தார். கவுண்டர் அங்ஙனமே செய்தார். மீண்டும் சாமியார் எல்லோரும் பார்த்திருக்கக் கைகளைத் தட்டி "சல், ஓடிவா" என்றார். இம்முறை முந்திரிப்பழம் நிறைந்த முடிச் சொன்று கவுண்டர் கையில் வீழ்ந்தது. பின்பு சாமியார் தமது அடிவயிற்றில் பண்ணுடியின் கைகளைப்பற்றி யிழுத்து வைத்துக்கொண்டு, அடிவயிற்றை அழுத்தும்படி பண்ணுடியினிடம் சாடை செய்தார். பண்ணுடியும் அவ்வாறே செய்தார். சாமியார் தலையை நிமிர்த்துக் கண்களை மூடினர். அவர் தொண்டையில் கறட்டுக் கறட்டென ஓரோசை கேட்டது. சாமியாரின் கண்கள் பிதுங்கின. சிறிதுநேரத்தில் அவர் குடல் ஒன்று வாயின் வழியாக வெளியேவந்து, பூரித்துப்பாரித்து, உருட்சியடைந்து, தேங்காய்ப் பருமனாகத் திரண்டு, காற்றில் அலைப்புண்டு நின்றது. சாமி

யார் அதைத் தம் இரு கைகளாலும் பற்றி உருட்டினர். மற்றும் சிறிதுநேரத்தில் அது சிறுகச் சிறுகக் குறைந்து அவர் வாயினுள்ளே சென்று மறைந்தது. கண்டோர் முகத்தில் அச்சமும் வியப்பும் குடிகொண்டிருந்தன. கவுண்டர் ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு, சாமியாரை வீட்டுக்குள் அழைத்துச்சென்று சோறுபோடும்படி கட்டளையிட்டார். சாமியார் எழுந்து சென்றார்.

மாலைநேரம் வந்தமையால் கவுண்டர் தோட்டத்திற்குப் புறப்பட்டார். கூடியிருந்தோரும் எழுந்து சென்றனர்.

IV

மணியக்கார - குருசாமி ஐயர்.

பழனிச்சாமி கவுண்டர் எங்களூரிலுள்ள பண்ணாடிகளில் ஒருவர்; பெரிய பணக்காரர். அவர் மணியக்கார ஐயர் தூண்டுதலினால் தமது காட்டையடுத்த ஒரு புறம்போக்கு நிலத்தைத் தமக்கு உரிமை செய்துகொள்ளும் பொருட்டுத் தாசில்தாருக்கு விண்ணப்பஞ் செய்தார். ஐயர் தம்மாலான உதவி செய்வதாய் வாக்களித்திருந்தார்.

ஒருநாள், ஐயர் தமது கருமைத்திருமேனி விளங்க, வழக்கப்படி உட்சட்டையின் விளிம்புகள் மேற்சட்டையின் விளிம்புக்குக் கீழே தோன்றுமாறு சட்டையணிந்து, நெற்றியில் சந்தனப்பொட்டும் அதனிடையில் குங்குமப் பொட்டும் தரித்து, தமது அடிகளிலே எருமைத் தோலாற் செய்து பெருவிரல் வார், சுண்டுவிரல் வார் முதலியன பொலிவு பெறுமாறு தைத்த பெரிய கொங்குநாட்டுச் செருப்புகள் மாட்டி, வாதநோய் நீங்குவதற்கு இடது

கணுக்காலில் அணிந்த வெள்ளிக்கம்பிக் காறை துலங்க, வாற்கோவணந் தொங்கக்கட்டிய பட்டுக்கரைவேட்டி வெய்யிலிலே மிளிர, காதுகளிலே வெள்ளைக்கற் கடுக்கன்கள் ஒளிசெய்ய, இடதுகையிற் குடைபிடித்து, வழிநடக்கையில் குடியானவர்கள் போடுங் கும்பிடுகளுக்குத் தலையாட்டியும், முறுவலித்தும், பேசுவோரிடம் ஒன்றிரண்டு பேச்சுகள் பேசியும் கவுண்டருடைய வீட்டை நோக்கி வந்தார்.

கவுண்டர் உண்டி முடித்துக் கூடத்திலே விரித்த பாயில் நண்பர்களும் உறவினர்களும் சூழ உட்கார்ந்து, வெற்றிலை பாக்கு மென்றுகொண்டிருந்தார். பக்கத்தில் வெற்றிலை பாக்கும் எச்சிற் காளாங்கியும் வைத்திருந்தன. ஐயர் வருவதைக் கண்டதும் எல்லோரும் "சாமி, சாமி, சாமி, வாங்க, வாங்க" என்று முகமன் கூறி வந்தனஞ் செய்தனர். சிலர் எழுந்துநின்று மரியாதை செய்தனர். ஐயர் எல்லோரையும் கையமர்த்தி, "மகாராசர்களா யிருக்கணும்" என்று வாழ்த்திக் கவுண்டர் அருகிற் சென்று அமர்ந்தனர். சிலர் வெளியே எழுந்துபோயினர். பின் கவுண்டருக்கும் ஐயருக்கும் நடந்த பேச்சு இது:

"எதுங்கொ, சாமி? அத்தி பூத்ததுபோல இருக்குதுங்கொ."

"இன்னைக்கிக் காலமேதாஂ வந்தேஂ. வந்தநும் சாப்பிடக்கூட இல்லை. ஒர்த்தருக்கு ஒரு காரியம் பண்றேன்னு, அதெ முடிச்சுக் குடுக்கணும் பாரு. நம்ம சிரமம் ஒரு பெரிசல்ல."

"தாசில்தாரைப் பாத்தீகளா?"

"உனக்கெப்படிப் படுது? இதுக்குன்னு வேல கெட்டுப் போயி நாஂ பார்க்காமெ வருவனோ?---சொல்லு."

"நீங்க போயுட்டு சும்மா வாரதுண்டா? அப்புறம் என்னுச்சுங்கோ?"

"தாசில்தாருக்கு உன்னைத் தெரியாதிண்ணு சொன்னியே, அவர் உன்னைப்பத்தி எவ்வளவு விசாரிச்சாரு."

"என்னையா?"

"ஆமா."

"அது எப்படி அவுகளுக்குத் தெரியுஞ் சாமி? நம்மூருக்கு அவுக வந்திருக்கையிலே, அவுகளெப் பாக்கறதுக்குப் பத்தோடு பதினெண்ணுகத்தானே நானும் போயிருந்தேம்?"

"நன்னு இருக்கு, அவர் ஆளடையாளமெல்லாஞ் சொல்ருர். 'ஆமா, அந்தப் புது வீட்டுக்காரர்தானே' இன்னு கேட்டார்ன்னு."

"அதுகூட கேட்டாருங்களா?"

"மேலதிகாரிகள் அதெல்லாம் கவனிச்சு வச்சிருப்பாள். அது எனக்கு ஆச்சரியமன்னு. உன் நடத்தை அவருக்குத் தெரிஞ்சிருக்கு பார்: 'ஆமய்யா, அந்தக் கவுண்டர்தானே. அந்த ஆள் வம்பு தும்புக்குப் போகமாட்டான், யோக்யன். அதிகாரிகளிடத்திலே ரொம்ப மரியாதையுள்ளவன்' என்று கேட்டார்."

"ஆ, ஆ. அப்படிச் சொன்னுங்களா? (வேலைக்காரனை விளித்து) அடே கருப்பா, ஐயுருக்கு வெத்தலை பாக்குக் கொண்டா."

"அடுத்தாப்போலெ இந்த ஊருக்கு வரச்சே ஒன்னைப் பார்க்கறதாகவுஞ் சொன்னுர். அவர் தபவு கிடச்சுப்போச்சுண்ணு வச்சுக்கோ."

"சரீங்க. நெலத்தப்பத்தி என்ன சொன்னுங்கோ?

"அதைப்பத்தி ஒனக்குக் கவலே யேதுக்குன்னு? மாமூல் படி அவர் வந்து நெலத்தைப் பார்த்து எழுதணுமாம். இன்னும் ஒரு மாசத்திலே இங்கே வாருர். அப்பொ நீ அவருக்கு வேண்டிய சௌகரியம் தேடிக் குடுக்கணும். அவருக்கு என்னவேணும்? எதோ ரெண்டு நாளேக்கி நெய் பால் தயிர்; வெளியே எங்கெயானும் போனு உன் பெட்டிவண்டி குடுக்கணும்; அதுக்கு மேல் என்ன கேக்கப்போருர்?"

"இது ஒரு பெரிசா, சாமி? அவுக வரட்டும், நா பாத்துக்கறே."

அடுத்தமுறை தாசில்தார் வருகையில் தமது கைப் பணம் ஒன்றும் செலவாகாதபடி ஐயர் இப்பொழுதே வேண்டுவன செய்துவிட்டார்.

"நாம் போகையிலேதா காப்பி சாப்புட்டுட்டு வெளியே வந்தார். நல்ல பாலு ஆம்படறதில்லென்னு ரொம்ப வருத்தப்படருர். இந்த சமயத்தில் நீ ஒரு கறவைமாடு அனுப்பினீண்ணு அவருக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். நம்ம காரியமும் ஆய்ட்டுதுண்ணு வச்சுக்கலாம். அப்புறம் அவர் இங்கே வந்தா உன்னே மறக்கமுடியுமா!"

"அதுக்கென்ன சாமி, ஒருமாடு அனுப்புனுப்போச்சு."

"அப்பொ, நாளேக்கி அனுப்பிச்சிப்புடலாமா?"

"ஆகுட்டும், சாமி"

"நீ அனுப்பிச்சதாக நான் அவருக்கு அனுப்பிச்சுப் புடறே"

"அதுக்கென்ன, சாமி."

ஐயர் காரியம் கைகூடியதை நினைத்துக் களிப்புற்று வீட்டுக்குப் போனர். மறுநாள் பசுமாடு தாசில்தாருக்கு அனுப்பப்பட்டது. எனினும், மாடு கவுண்டர் அனுப்பியதென்பது தாசில்தாருக்கு இன்றளவும் தெரியாது; ஐயரே

அனுப்பியதாய் அவர் எண்ணம். ஐயர் விருப்பமும் தாசில்தார் அவ்வாறு நினைத்தல் வேண்டும் என்பதே. பேதைக் குடியானவன் ஏமாந்தான்

காளியண்ண கவுண்டர் என்போர் எங்கள் ஊரிலுள்ள மற்றோர் பண்ணாடி. ஒருநாள் அவர் வீட்டுத் திண்ணையில் அவரும் மணியக்காரரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ஐயர் இடையிடையே பண்ணாடியைப் பலகாலும் புகழ்ந்துபேசி அவருக்குக் களிப்பையுண்டாக்கினார். அப்பொழுது ஒரு போலீசதிகாரி எட்டுச் சேவகர்களோடு வெளியே நிற்பதாயும், கவுண்டர் வீட்டில் இருக்கிறாரா என்று கேட்பதாயும் ஒரு வேலைக்காரன் வந்து கவுண்டரிடம் சொன்னான். கவுண்டர் முகம் கறுத்தது. ஐயர் முகக்குறியினால் அவர் உளவாளி என்பது உற்று நோக்கினோர்க்குப் புலப்பட்டிருக்கும். இதற்குள் அதிகாரி வீட்டுக்கு வெளியே வாயில்தோறும் ஒவ்வொருவனாக நான்கு சேவகர்களைக்கால் வைப்பித்து, நான்கு சேவகர்கள் பின் தொடரக் கவுண்டரிடம் வந்தான். மணியக்காரர் அவனைக் கண்டதும் எழுந்து நின்று, மேல்வேட்டியை இடுப்பிலே சுற்றிக்கொண்டு, தமது தலை இடுப்பை முட்டிப்பார்க்கும்படி குனிந்து கும்பிட்டார். கவுண்டரும் எழுந்து நின்று ஐயர் செய்தபடி செய்தார். அதிகாரி தமக்கிட்ட ஆசனத்தில் அமர்ந்தபின், மணியக்காரர் அவரை நோக்கி, ஒடுங்கி நின்று பணிவாய், "எசமான் இன்னைக்கி இங்கே வந்தது என்ன?" என்று கேட்டார். அதிகாரி கவுண்டரைப் பார்த்து, "என்ன ஐயா, அநுமதியில்லாமல் கைவெடி வைத்திருக்கிறீர் என்று கேள்விப்பட்டேன்; இப்பொழுது உங்கள் வீட்டைச் சோதனை செய்யவேண்டும்" என்றான். கவுண்டர் "ஊட்டுக்குள்ளே நுழஞ்சா அப்பறம் தெரியுது" என்று

கூறினார். அதிகாரி உடனே தன் சேவகர்களைக்கூவி, வீட்டுக்குள் நுழைந்து பார்க்கும்படி ஏவினார். கவுண்டருடைய ஆட்களும் அவர் கட்டளையினால் தடி, வாள், ஈட்டி முதலியன தேடியெடுத்து அதிகாரிமேலே பாய்வதற்குக் கவுண்டர் கட்டளையை எதிர்பார்த்து நின்றனர். மணியக்காரர் அதற்குள் கவுண்டர் கையைப் பற்றிச் சிறிதுதூரம் அழைத்துக்கொண்டுபோய், "அப்பா, சர்க்காருக்குப் பகையாய் ஒன்னும் செய்யாதே, குடிகெட்டுப்போகும். அவன் வந்தது வந்தாச்சு. இப்பொ என்ன முழுகிப்போச்சு! அவன் எடுத்தால் வெடியைத்தானே எடுப்பன். ஒரு ஆயிரம் வெள்ளிக் காசு இருந்தா சமாசாரம் மூணும்பேருக்குத் தெரியாமெ நான் அடக்கிப்போடறேம். அதுக்கு நானுச்சு, நீ ஒன்னுக்கும் விசனப்படாதே. இது உன் பந்துக்களுக்குத் தெரிஞ்சா உனக்குத்தானே கேவலம். நீயே யோசிச்சுப்பார்" என்று ஓதினார். கவுண்டர் சிறிது எண்ணிப்பார்த்து, ஐயரை விரைவாய் வீட்டுக்குள் அழைத்துச்சென்று, பத்து நூறு-ரூபா நோட்டு எடுத்துக் கொடுத்தார். ஐயர், அவற்றை வாங்கி அதிகாரியிடம் செல்லும்பொழுதே, எண்ணூறு ரூபா நோட்டைத் தமது சட்டை புட்டையுட் செருகிக்கொண்டு, மீதியிரண்டு நோட்டை அதிகாரிக்குக் கொடுத்தார். சோதனை செய்து எடுத்த வெடி மீளவும் கவுண்டரிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஐயர் கவுண்டரைப் பார்த்து, "மேலதிகாரிகளிடத்திலே நாம வொச்சுக்கலாமா? அவன் குடுத்த பணம் போதாதுன்னு சொல்றான். அவனுக்கு நல்ல காயி, மோரு, பாலு, தயிரு எல்லாம் அனுப்பிச்சுடு. நானே எம் வீட்டுக்கு அழச்சுகிண்டுபோயி சாப்பாடு செய்துபோட்டு, அவனை எப்படியாவது சரிபண்ணி யனுப்பறேன்" என்று சொல்லிப் போனார். கவுண்டருடைய உணவுப்பொருள்களைக் கொண்

டே ஐயர் வீட்டாரும் அதிகாரியும் விருந்துசெய்து விலாப் புடைக்கத் தின்றனர். அதிகாரி தம் வீட்டில் இறங்கினதால் ஐயருக்குப் பெருமையும் ஏற்பட்டது. ஐயர் அதிகாரி மூல மாய்த் தமக்குள்ள சில எதிரிகளை வரவழைத்து அவர்களைத் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டார். ஐயரிடத்தில் கவுண்ட ருக்கு அன்பும் மரியாதையும் மேன்மேலும் பெருகின.

ஐயர் ஒருநாள் எங்கள் ஊரை யடுத்த பட்ட ணத்துக்குப் போயிருந்தார். அங்கே போலீசதிகாரி ஐயரைக் கண்டு அளவளாவி, சில நாட்களாகத் தனக்கு வரு வாய் குறைந்துபோயிற்றென்று சொல்லி வருந்தினன். அப் பொழுது ஐயர் கவுண்டரிடம் வெடியிருப்பதைச் சொல்லி, அதிகாரி தம்மூருக்கு வருவதாயின் நல்ல வேட்டை யளிப்ப தாய் வாக்களித்தார்; வாக்களித்தபடியே அதிகாரி வரும் வேளையறிந்து கவுண்டரிடம் பல பேசிக்கொண்டிருந்தார். பின் நடந்ததை நாம் அறிவோம்.

இவ்வாருகச் சூழ்ச்சிசெய்து ஐயர் ஊரிலுள்ள ஒவ் வொரு பண்ணடியினிடத்தும் எவ்வழியிலாயினும் பணம் கொள்ளையடித்திருப்பார், அவர் திறம் முற்றிலும் இவ்வேட் டில் அடங்காது. ஆகவே, அவர் ஊர்ப்பண்ணடிக்குச் செய்த ஒன்றையேனும் இங்குக் கூறுதல் பொருந்தும்.

ஊர்ப்பண்ணடி தமது மலைக்காட்டை யடுத்த சிறைக் காட்டிலே சில மரங்கள் வெட்டுவதைக் குறித்து ஐயரிடம் ஆலோசித்தார். ஐயர் கவுண்டரைத் தூண்டினதோடமை யாமல், தாமும் மறுநாள் கவுண்டரோடு காட்டுக்கு வருவ தாய்ச் சொல்லி எழுந்து வீட்டுக்குப் போனர். போனவர் அடுத்த பட்டணத்திலுள்ள காட்டதிகாரிக்கு இரகசிய மாய்க் கடிதம் எழுதி ஆளனுப்பி, கவுண்டர் கருத்தைத் தெரிவித்து, மறுநாள் மாலையில் நான்கு சேவகர்களைச் சிறைக்

காட்டில் ஒளித்துவைக்கும்படி அறிவித்தார். மறுநாள் ஐயர் கவுண்டரோடு சேர்ந்து காட்டுக்குப்போனுர். கவுண்டருடைய ஆட்கள் சிறைக்காட்டில் மரம் வெட்டத்தொடங்கினர். கவுண்டரும் ஐயரும் இன்னுஞ் சிலரும் கவுண்டரது தோப்பிலே இளநீர் குடிக்கச் சென்றனர். ஐயரை ஒரு தென்னந்தடுக்கி லமர்த்தி, கவுண்டர் தமது ஆட்களை முதவில் ஐயருக்கு இளநீர் சீவிக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். ஆட்கள் சீவிக் கொடுக்குந்தோறும் ஐயர் இளநீரில் எலுமிச்சம்பழம் பிழிந்து குடிக்கத் தொடங்கி, ஒன்றன்பின் ஞென்ருய்ப் பன்னிரண்டு இளநீர்களை முடித்து,எப்பமிட்டு, பதின்மூன்ருவது இளநீரைக் கையில் ஏந்தினர். அப்பொழுது காட்டதிகாரியின் சேவகர்கள் மரம் வெட்டுவோரைப் பிடித்துக்கொண்டனர் என்று ஓர் ஆள் ஓடிவந்து செய்தி சொன்ஞன். கவுண்டர் முதலாயினேர் மோசம் வந்ததென்று திடுக்குற்று எழுந்தனர். ஐயர் ஓரே மூச்சில் கையிலிருந்த இளநீரையும் இழுத்துவிட்டு, 'அப்பாடா' என்று சொல்லிக் கையூன்றி எழுந்து, தம் தொப்பையை அசைத்துக்கொண்டு மற்றவர்களோடு சென்ருர்.

கவுண்டர் என்னசொல்லியும் அச் சேவகர்கள் இணங்காமையால் ஐயர் அவர்களுக்குத் தலைக்குப்பத்து ரூபா விதம் பண்ணுடியினிடமிருந்து பணம் வாங்கிக்கொடுத்து, தாம் போய் நேரே காட்டதிகாரியைக் கண்டு பேசிக் காரியம் வலுக்காமல் முடித்துவருவதாய்க்கூறி, கவுண்டரிடம் ஐந்நூறு ரூபா வாங்கிக்கொண்டு அதிகாரியினிடம் சென்ருர். அதிகாரிக்கு நூறு ரூபா கொடுத்துவிட்டு மீதியை ஐயர் வட்டிக்குப் போட்டுக்கொண்டதன்றி, அவர் மீள்வும் கவுண்டரிடம் சென்று, அதிகாரி இன்னும் இருநூறு ரூபா கேட்பதாய்க் கூறிப் பணம்வாங்கி, அதையும் தாமே வைத்துக் கொண்டார்.

ஐயர் சாப்பாட்டுப் புலி. குடியானவர்கள், ஐயர் சட்டந் தெரிந்தவரென்றும், உலக மறிந்தவரென்றும், அதிகாரிகளை யெல்லாம் அறிந்தவரென்றும் நினைத்துத் தாம் நிலம் வீடு முதலியன வாங்குந்தோறும், கொள்வன கொடுப்பன செய்யுந்தோறும், தமது பத்திரங்களைக் காப்புச்செய்யும் பொருட்டு அவரைத் தங்கள் சொந்த வண்டிகளில் ஏற்று வித்துக்கொண்டு அடுத்த பட்டணம்போய், அவருடைய உதவியைக்கொண்டு தம் காரியம் பார்ப்பது வழக்கம். தமது காரியம் கைகூடியபின் குடியானவர்கள் ஐயர் பட்ட பாட்டிற்காக அவருக்கு அஞ்சு பத்தாகப் பணம் கொடுப்ப துண்டு. இதற்குள் ஐயர் அதற்கென்றும் இதற்கென்றும் பணம் பறித்துக்கொள்வார்; அன்றியும் அவர் தம்மை அழைத்துவரும் ஒவ்வொரு குடியானவனிடமும் ஒவ்வொரு முறையும் காப்பிச் செலவுக்கென்று மூன்று ரூபா பெற்றுக் கொள்வார். அந்தப் பணத்தில் மாத்திரம் அவர் வஞ்சகம் செய்வது என்றும் இல்லை. இம்மூன்று ரூபாவுக்குமேல் அவர் கைக்காசு கொஞ்சம் செலவானாலும் ஆகும்; ஏனெனில், அவர் காப்பிக்கடையில் நுழைந்ததும் பத்துத் தோசை கொண்டுவருமாறு கட்டளையிட்டு வாய்க்கொரு தோசையாக விழுங்குவார். மீறினால் பன்னிரண்டு பிட்டு, குறைந்தால் எட்டுப் பிட்டு, இதற்குமேல் அவர் தின்னார்; பதினைந்து இருபது வடை கொண்டுவரச்சொல்லி, கடைவாய்க் கொவ்வொன்றும் நடுவாய்க் கொன்றுமாகச் சேர்த்துத் தின்பார்; அதற்குமேல் வாழைக்காய் வடை கத்தரிக்காய் வடை முதலியவற்றை உருசி பார்த்து, பின்பு தீம் பண்டங்களில் நுழைந்து நொறுக்கித்தள்ளி, முடிவில் எட்டுக் கிண்ணம் காப்பி குடித்துவிட்டு வெளியே கிளம்பு

வார். அவர் தமது ஊர் வந்து சேர்ந்தபின் வழக்கப்படி இராப்போசனமும் உண்ணத் தவறூர்.

பண்ணுடிகள் எவ்வழக்குத் தொடர்வதாயினும் மணியக்காரரைக் கேளாது செய்யார்கள். அவர் மனதுவைத்தால் வழக்கு வெல்லும். வழக்காளிகளில் எத்தரத்தினர் தம்மைச் சூழ்ச்சி கேட்கின்றனரோ, அவர்களுக்கே அவர் உதவிபுரிவார்; இரு திறத்தினரும் அவர் உதவியைக் கோருவார்களாயின், இருபக்கத்தாராலும் தமக்கு வருவாய் வரும் வழியை நாடுவார். பண்ணுடிகள் அவர் உதவியை வேண்டுவதற்கு ஒரு சிறந்த காரணம் இது: மணியக்காரர், கச்சேரிக் கணக்குப்பிள்ளை முதல் தாசில்தார் ஈருக எல்லோருக்கும் பண்டிகை நாட்களிலும் கலியாண நாட்களிலும் பணம், விறகு, பழங்கள், காய்கள் முதலிய பரிசுகளை ஏராளமாய் வழங்கி, அவர்களுக்கு இன்றியமையாதவராய், அவர்கள் தம்மை மதிக்கும் வண்ணம் செய்துகொள்வார். ஆதலினுல் அவர் தம்பொருட்டாயினும் குடியானவர்கள் பொருட்டாயினும் கச்சேரிக்குப்போனுல், அங்கே அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை இல்லை. தாசில்தார் முதலான பெரியோர் தமது ஊருக்கு வந்தால் மணியக்காரர் அவர்களுக்கு வேண்டும் உணவுப்பொருள்களையும் விடுதிகளையும் பாடுபட்டுத் தேடிக்கொடுப்பார். அதிகாரிகளுக்குக் குடியானவர்களால் ஏதேனும் ஆகவேண்டுவதிருப்பின், ஐயரே அவர்களுக்குத் தூது. அவர் குடியானவர்களுக்குப் போதித்து அதிகாரிகள் கருத்துக்கிணங்கும்படி செய்வார். அப்படியாயின் அதிகாரிகள் ஐயரை மதியாதிருப்பது எங்ஙனம்? அவர்கள் மதிக்கவே குடியானவர்கள் ஐயரை மதியாது இருப்பது எங்ஙனம்? கந்தையன் மாத்திரம் அவருடைய செய்கையை நன்

குணர்ந்திருந்தான். கந்தையனும் ஐயரும் ஒருவர்காரியத்தில் மற்றொருவர் தலையிடுவதில்லை.

எங்கள் மணியக்காரரிடத்தில் ஒரு சிறந்த குணம் உண்டு. அது பிறவிக்குணமோ கற்றுக்கொண்ட குணமோ என்பதை அறிதல் இயலவில்லை. ஊரார் ஐயரைக் கொடையில் கன்னன் என்று சொல்வது வழக்கம். எந்த வறியவனுயினும் கலியாணம் என்று சொல்லிக்கொண்டு அவரிடம் போனுல், அவர் மூன்று ரூபாவுக்குக் குறையாமல், மனங் கோணுமல் கொடுப்பார். ஊரில் காளியம்மன் திருவிழாவுக்கும் மற்றைப் பொதுக்காரியங்களுக்கும் பண்ணுடிகள் வரிப்பணம் கொடுக்கும்பொழுது, ஐயரும் அவர்களுக்கு மேலே இரண்டுபணம் சேர்த்துக்கொடுப்பதன்றிக் குறைத்துக் கொடுப்பதில்லை. அவர் வீட்டு வேலைக்காரர்களும், அவருக்குப் பாடுபடும் வண்ணுன், அம்பட்டன் முதலாயினேரும் அவர் தாராளமாகக் கொடுக்க உண்டு, அவரை வாயார மனமார வாழ்த்துவார்கள். ஐயர்வீட்டில் அவர் மகளுக்கு விவாகம் நடந்தபொழுது, அவர் ஊராருக்குச் செய்த விருந்தின் மேன்மையைக் குறித்து இன்னும குடியானவர்கள் புகழ்ந்து பேசுவதுண்டு. தம் மக்களுக்குப் பூணூற் கலியாணம் நடத்தினபொழுது, ஐயர் தம்மினத்தாரைத் திரள் திரளாய் வருவித்து, அவர்கள் உள்ளங்குளிர விருந்துசெய்து, பணமும் அளித்து அனுப்பினுர். அவர் பலவழிகளிலும் பணந்தேடிச் சேர்த்தமையை நினைந்து பாவத்தைப் போக்கிப் புண்ணியந்தேடக் கருதியோ, என்னவோ, கொடையில் அவருக்கிணையில்லை என்னும்படி தான தருமங்கள் செய்துவந்தார். அவருடைய திறமையையும் அறிவையும் பார்க்கினும் அவரது கொடையே ஊரிலும் அக்கம்பக்கங்களிலும் அவருக்குப்பெருமையை அளித்தது.

ஐயர் இப்பொழுது பெரிய செல்வராயிருக்கிறார்; பெரியதோர் புதுவீடுகட்டி, நிலமும் வாங்கிப் பெண்டிர் பிள்ளைகளோடு குடும்பம் நடத்துகின்றார். இப்பொழுது அவர் தெருவழியே வருகையில் திண்ணைகளில் உட்கார்ந்திருக்கும் பெண்களும் எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர். இப்பொழுது ஐயர் நல்ல நிலைமையில் இருப்பவராயினும் அவருடைய பழைய நிலைமை அறியத்தக்கது. அவர் தாய்தந்தையரற்ற ஓர் அநாதைப் பிள்ளையாய்த் தமது பதினைந்தாவது வயதில் இவ்வூருக்கு வந்தார். அக்காலத்தில் அவர் உடைக்கும் உண்டிக்கும் வழியின்றி, உடம்பெல்லாம் சிரங்கு பிடித்ததால் சொறிந்துகொண்டு, அழுக்குப் படிந்த கந்தை உடுத்தி யிருந்தார். காலஞ்சென்ற ஊர்ப் பண்ணடி-வேலப்ப கவுண்டர் அவர்மீது இரக்கங்கொண்டு அவரைப் பிள்ளையார் கோவிற் பூசாரியாக அமர்த்தினர். அவர் பலநாள் தம் கைப்படவே சமையல் செய்துகொண்டிருந்தார். ஊரில் எல்லோரும் அவரை வா போ என்றே பேசுவார்கள். சிலநாட்கழிந்தபின், கோவில் வேலை முடிந்து ஒழிந்திருக்கும் வேளையில், ஐயர் அப்பொழுது எங்களூர்க் கணக்குப்பிள்ளையாயிருந்த சோமசுந்தரம்பிள்ளை வீட்டுக்குப்போய், கணக்கு எழுதக் கற்றுக்கொண்டார். நாலைந்து ஆண்டுகளானபின் ஊர்ப்பண்ணடியைத் துரைத்தனத்தார் எங்களூர் மணியக்காரராக நியமித்தனர். அவர் அவ்வேலையைக் குருசாமி ஐயருக்குக் கொடுத்து அதைப் பார்த்து வரும்படி செய்தார். அதுமுதல் ஐயரே மணியக்காரர்; ஊர்ப்பண்ணடிக்கு யாதொரு சிரமமும் கெட்ட பெயரும் வாராதபடி பல ஆண்டுகளாக மணியம் நடத்திவருபவரானர்.

V

ஐயண்ண வாத்தியார்

ஐயண்ண வாத்தியாரை அறியாதார் எங்கள் ஊரிலுண்டா, அல்லது சுற்று வட்டத்திலுண்டா? அவர் ஊருக்கு அழகு; பெண்களுக்கு அமைச்சர்; ஆண்களுக்கு நண்பர்; குழந்தைகளுக்குப் பேய்; செல்வர்களுக்கு வேலையாள். அவர் பண்ணுடிகள் வீட்டுக்கு அடிக்கடி போவார்; பணக்காரர் வீட்டில் அரிச்சந்திரபுராணம் படிப்பார்; ஊர்ச்சாவடியில் வழக்காடுவார்; பள்ளிக்கூடத்தில் பகலெல்லாம் குடியிருப்பார். அவரை அறியாதார் உளராயின் அவர்கள் மற்றவர்களால் அறியப்படாதவராவார் என்பது வெளிப்படை.

எங்கள் வாத்தியார் தாமறியாமலே மடமடவென்று ஐந்துமுழ உயரம் வளர்ந்தவர். அவர் பார்வைக்கு உலக்கைக்குக் கையும் காலும் முளைத்ததுபோல் தோன்றுவார். அவருடைய தலை உலக்கையின் தலையில் கவிழ்த்த பானைபோல் பெரிதாயிருக்கும். அவருடைய கால்கள் தலையின் பாரத்தைத் தாங்க வல்லனவோ என்று ஐயுறத்தக்கன. அவர் காதிலே எண்ணெய் படிந்து படிந்து அழுக்கடைந்த சிவப்புக்கல் கடுக்கன் அணிந்திருப்பார். அவர் தலை முழுகி மயிர்கோதிக்கொண்டு வீதிவழியே கையாட்டி நடக்கும் பொழுது அடர்ந்த அவர் மயிரையே நோக்குவோமா, தமது மயிரால் அவருள் எழுந்த செருக்கையே வியப்போமா? நாள் தவறினும் அவர் குளிப்பது தவருது, குளிப்பது தவறினுலும் நெற்றியில் நாமந்தரிப்பது தவருது. அவர் வேட்டி எப்பொழுதும் பூப்போல வெள்ளையாயிருக்கும். அவர் எப்பொழுதும் மடி வைத்துப் பின்னுலே

வாற்கோவணந் தொங்க, பாதம் தவழும் வண்ணம் வேட்டி யுடுப்பது வழக்கம். அவர் ஒரு கணம் சும்மா இரார், ஏதேனும் ஒன்று செய்துகொண்டே இருப்பார்; விரைந்து நடப்பார். அவர் பேச்சு, குழந்தைகளின் மழலைச் சொல்லைப்போல் தோன்றும். அவர் நாக்குப் பெரிதும் மெல்லியது போலும்: அவர் பேச்சிலே லகர ஒலிகள் மிகுந்து காணும்: 'அவர்கள் வருகிறார்கள்' என்று அவர் சொல்வது 'அவர்கல் வருகிறார்கல்' என்று மற்றையோருக்குக் கேட்கும்.

சிலர் பெண்களிடம் பேசுவதற்குக் கூசுவார்கள். எங்கள் வாத்தியாருக்குப் பெண்களிடம் பேசுவது மீனுக்கு நீரில் சஞ்சரிப்பதுபோல் எளிது. பெண்களிடம் பேசும் பேச்சில் அவர் திறமை முற்றிலும் வெளியாகும். மண முடிந்த இளம் பெண்களாயின், 'அம்மணி, தாயே' என்று அவர்களை விளித்து, அவர்களுடைய குழந்தைகளையும் கணவர்களையும் தாய் தந்தையர்களையும் வாயாரப் புகழ்ந்து, இதம் படப்பேசி, அவர்களுடைய மதிப்பை எளிதில் பெறுவார். நாற்பது நாற்பத்தைந்து வயதுள்ள பெண்களிடம் பேசுகையில், அவர்களுடைய காட்டைப் புகழ்வார், தோட்டத்தைப் புகழ்வார், விளைச்சலைப் புகழ்வார்; அவர்களுடைய கணவர்கள் பணஞ்செலவு செய்த ஒன்றிரண்டு காரியங்களில் குறைகூறுவார்; அயலூரில் வாழ்க்கைப்பட்ட அவர்களுடைய பெண் மக்களுக்கு மேன்மேலும் நகைகள் செய்து போடவேண்டும் என்றுவற்புறுத்துவார். கிழவிகளிடம் பேசுகையில் அவர்கள் வருந்தும் நோயைக் குறித்துப் பரிந்து கேட்பார், அந்நோய்களுக்குத் தாமறிந்த மருந்துகளைச் சொல்வார். அவர் எந்தப் பெண்களிடமும் வாய் நிறையப் பேசுவார், எந்த வீட்டிலும் தாராளமாகப் போவார். பெண்கள் எல்லோரும் அவரைக் கொண்டாடுவார்கள், அவரு

டைய வருகையை மதிப்பார்கள். அவர் ஊர்ப்பண்ணுடி வீட்டுக்குச் சென்று பண்ணுடியிடம் ஒன்றிரண்டு வார்த்தை பேசிவிட்டு, சரேலென்று சமையற்கட்டுக்குப் போவார். அங்கே பெண்களிடம் சிறிது நேரம் இதமாகப்பேசி, தமக்கு வேண்டும் காய்கறிகளை மூட்டை கட்டிக்கொண்டு கொல்லை வாயிலின் வழியாய்த் தமது வீட்டுக்குப் போய்விடுவார்.

வாத்தியார் புருடர்களிடம் பேசுவதும், அவர்களைத் தம் வசப்படுத்துவதும் வியப்புக்குரியன. செல்வர்களான பண்ணுடிகளிடம் பேசும்பொழுது, சமயம் பார்த்திருந்து அவர்களைப் புகழ்வார்; அவர் புகழ்ச்சி செய்வது பண்ணுடிகளுக்குச் சிறிதும் புலப்படாதபடி திறமையாகப் பேசுவார். புகழப்பட்டோர் வாத்தியாரை நீங்கி வீட்டுக்குப்போய்த் தாங்கள் பேசிக்கொண்டிருந்ததை எண்ணும்பொழுது, வாத்தியார் தங்களைப் புகழ்ந்ததை நினைந்து நினைந்து மகிழ்ச்சியடைவார்கள். பண்ணுடிப் தமக்குக் கீழ்ப்பட்டோர் பதின்மரோடு பேசுகையில், அவர் பேசுவது தவருயிருந்தாலும், வாத்தியார் பண்ணுடியையே சார்ந்து பேசுவார்; ஏனெனில், அவர் அருளன்றோ வாத்தியாருக்கு வேண்டுவது. பண்ணுடி, தாம்வெள்ளைக் காக்கையைக் கண்டதாகச்சொன்னுல், வாத்தியார், "ஆம், வெள்ளைக் காக்கை உலகத்தில் பல உண்டு" என்பார். ஐந்துதலை நாகம் ஒன்று தமது தோட்டத்தில் இருப்பதாகப் பண்ணுடி சொன்னுல், உடனே வாத்தியார், அது இருப்பது உண்மைதானென்றும், புலவர்கள் பலர் ஐந்துதலை நாகத்தைக் குறித்துப் பாடியிருக்கின்ருர்கள் என்றும், புண்ணியம் புரிந்தோர்க்கே அது புலப்படும் என்றும் பண்ணுடியைத் தாங்கி உரக்கப் பேசுவார். கூட்டத்தில் ஓரிருவர் பண்ணுடியும் வாத்தியாரும் சொல்வது பொய்யென்று அறிந்து கொண்டாலும், பண்ணுடி

முகத்துக்காக எதிர்த்துப் பேசத் துணியார்கள். குடியான வர்களிடம் பேசுகையில், வாத்தியார் தாம் கற்ற அரிய நூல் களிலிருந்து மேற்கோள் பல எடுத்துக்காட்டி, தமது கல்வித் திறமையால் அவர்களைத் திகைக்கப்பண்ணி, அவர்களை வாய் பேச வொட்டாமல் மறுத்து, தாம் சொன்னவற்றையே அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்வார்; அவர்களும் தங்கள் வாத்தியாருக்குக் கல்வியில் இணையில்லை யென்று எண்ணிக்கொண்டு எழுந்துபோவார்கள். வறியவர்களான குடியானவர்களோடு பேசுகையில், வாத்தியார் அவர்களைச் சிறிதும் மதியார்; அவர்களோடு அவர் பேசுவதெல்லாம் அறிவுறுத்துதலாகவே இருக்கும். பேதைக் குடியானவர் கள் அவர் தம்மைக் கீழ்ப்படுத்துந்தோறும் அவரை மேம் படுத்துவார்கள். எளிய குடியானவர்களில் துட்டர்களாயும் முரடர்களாயு மிருப்போரை வாத்தியார் கண்டுபிடித்து, அவர்கள் தமது வீட்டுக்கேனும் பள்ளிக்கூடத்துக்கேனும் வந்தபொழுது, பண்ணுடிகளுக்குரிய மரியாதையை அவர் களுக்குச் செய்து, அவர்களைத் தம் வசப்படுத்தி, சமயம் வாய்த்தபொழுது அவர்களிடத்தில் வேலையும் வாங்கிக் கொள்வார்.

பொதுவாகச் சொல்லுமிடத்து, எங்கள் வாத்தியா ரிடத்துள்ள ஒரு வலிய ஆயுதம் பொய்ப்புகழ்ச்சியே. பொய்ப்புகழ்ச்சியால் மகிழ்ச்சியடையாதாரும் வசப்படா தாரும் உலகத்தில் இல்லையென்பது அவர் துணிபு. எந்தக் காலத்தும், எந்தக்காரியத்திலும் அவர் தமது காரியம் சித்தி யாவதற்கு இந்த ஆயுதத்தையே நம்பியிருந்தார். அவர் பலநாட்களாகப் பிறரைப் புகழ்ந்து புகழ்ந்து, பழக்கப் பட்டு, பொய்ப்புகழ்ச்சி பாவம் என்பதையும் மறந்துபோ னார். பொய்ப் புகழ்ச்சியால் கைகண்ட பலன் கிடைக்கை

யில் அவர் பாவபுண்ணியத்தைக் கருதுவானேன்! அவர் கூறும் புகழ்ச்சிக்கெல்லாம் அடிப்படை தன்னலமாகும். நமது வாத்தியார் தன்னலமே உருக்கொண்ட ஒரு பிராணி. தாமும் தமது பெண்டுபிள்ளைகளும் பிழைக்கும்பொருட்டு அவர் சமயம் பார்த்திருந்து பேசும் எந்தப் புகழ்ச்சியும் பாவமன்று, எந்தப் பொய்யும் பெரிதன்று. எங்களூரில் கல்வியறிவில்லாத வேளாளர்கள் அவருடைய பொய்யை யும் புகழ்ச்சியையும் அறிந்துகொள்ளாதது பெரிதன்று; அவர் அறிவும் கல்வியுமுள்ள பலர் ஏமாந்துபோகும்படி பலமுறை பேசியிருக்கின்றார். அவர் பொய்ப்புகழ்ச்சியை யும் தன்னலத்தையும் மறைத்து, பொய்யை மெய்யாகக் காட்டி, பிறர் தம்மை நம்பி மதிப்பதற்குக் துணைக்கருவியா கக் கொண்டது விருந்தோம்பல். அவர் பண்ணுடிகளையும் மற்றுமுள்ள செல்வர்களான நண்பர்களையும் தம் வீட்டுக் கழைத்து, பண்ணுடிகளும் கண்டு ஏக்கமுற்றுப் பெருமூச் செறியும்வண்ணம் கடன்பட்டேனும் பல உண்டிகளைச் சித்தப்படுத்தி அடிக்கடி விருந்துசெய்வார். வாத்தியார் எலும்பில்லாக் கையரென்றும் செலவாளி என்றும் ஊரார் பேசிக்கொள்வதுண்டு.

எங்கள் வாத்தியார் தமது மனைவியாளுகையில் அடங் கினவர்; பெண்ணுசையும் பொன்னுசையும் மிகுந்தவர். அவருக்கு இப்பொழுது வயது நாற்பத்தைந்தாயினும், காதற்பேச்சுகளும் காதற்பாட்டுகளும் அவரை யொரு கணப்பொழுதில் குமரனுக்கிவிடும். உலகமே தலைவி மயம் என்பது அவர் கொள்கை. எனினும், அவர் காசமுள்ளவர்; அவரைப் 'பச்சைமிளகாய்' என்று ஊரிற் சிலர் சொல்வார் கள். அவர் பிறர் தம்மை யிகழ்ந்துபேசுதலை விரும்பார்.

ஐயண்ண வாத்தியாரின் கல்விப்பெருக்கைக் கொங்கு நாடு முழுவதும் அறியும். விவேக சிந்தாமணி, தனிப்பாடற் றிரட்டு' இவை யிரண்டும் அவருக்குத் தலைகீழாகப் பாடம். இவ்வரிய நூல்களிலிருந்து அவர் சில கவிகளைச் சொல்லி, உரை சொல்வாராயின் ஊரார் மெய் மறந்து திறந்தவாயில் ஈ புகுந்துணையும் கேட்டுக்கொண்டிருப்பார்கள். 'அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை,' 'நாய்வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டின்'' 'சந்திரனில்லா வானம்' என்ற முதல் எடுப்புகளையுடைய விவேக சிந்தாமணிப் பாட்டுகளும், காளமேகப் புலவரின் வசைப்பாட்டுகள் முதலாக யானைக்கும் பூனைக்கும் சிலேடை, எலிக்கும் புலிக்கும் சிலேடை முதலியவற்றைக்கூறும் தனிப்பாடற்றிரட்டுக் கவிகளும் அவர்பால் ஆயிரந்தரம் கேட்டுக் கேட்டு எங்கள் காதுகளிலெல்லாம் இன்னும் அக்கவிகள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அவர் அரிச்சந்திர புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களிலுள்ள பாட்டுகளின் கருத்துகளும் உருவும் வேறுபடுமாறு உரை சொல்வதில் வல்லவர். இவற்றிலுள்ள பாக்களை அவர் இராகத்தோடு பாடும்பொழுது, இராகந் தெரிந்தவர்கள் ஒழிய மற்றவர்கள் எவரேனும் வெறுப்புறுதல் என்றும் இல்லை. கொங்குநாட்டுத் தமிழ் வாத்தியார்கள் அனைவரும் விருத்தப்பாக்களையும் மற்ற பாக்களையும் எடுத்தலோசை படுத்தலோசையுடன் கருநாடக முறையாக வாசிப்பார்கள். ஊரிலுள்ள சிறுவர்களும் பெரியவர்களும் அவர்களைப் பின்பற்றியே படிப்பது தலைமுறை தலைமுறையாக வழக்கமாயிருத்தலால், கொங்குநாட்டிலே தமிழ்ப்பாக்களை நீட்டிவாசிக்கும் பழையமுறைவேரூன்றி நிலைத்திருக்கின்றது.

திருநெல்வேலிப் பக்கத்திலிருந்து வயிற்றுப்பாட்டுக்காக வெளிப்போந்த ஒரு கவிராயர் எங்கள் ஊருக்கு வந்து

சேர்ந்து, ஊரிலிருந்து சொல்லிக்கொள்ளாமல் ஓடத்தக்க நிலைமைக்கு வந்துவிட்டார். ஊர்ப்பண்ணுடிவீட்டில் அரிச்சந்திர புராணப் பிரசங்கம் நடைபெற்றது. கவிராயர் உரைசொன்னுர். எங்கள் வாத்தியார் பாட்டு வாசித்தார். அவர் மயான காண்டத்தில்,

வல்லியு மகனு மந்த மறையவன் மனையிற் சேர்ந்து
சொல்லிய பணிகளெல்லாஞ் சோர்வறச் செய்துபின்னும்
எல்லிரு சாமமென்ன வெழுந்திருந் தேவன்முற்றி,
அல்லிரு சாமஞ் சென்று லளித்த கூழுண்டுறங்கி.

என்னும் பாடலை வாசித்தலும், கவிராயர் அப்பாட்டைப் பலமுறையிழுத்து நீட்டி, திருநெல்வேலி வழக்கப்படி பாடினுர். எங்கள் வாத்தியார் அவருக்கு இளைத்தவரா? அவர் கவிராயரைப் பார்க்கினும் இருமடங்கு அப்பாடலை இழுத்துப்பாடினுர். கவிராயர் தம் திறமையைக் காட்டும்பொருட்டு வாத்தியாரைப் பார்க்கினும் நீட்டி வாசித்தார். இந்த நீட்டுபோரிலே உரைசொல்வது நின்றுபோயிற்று; வாசிப்பதிலேயே ஒருவரை யொருவர் வெல்ல முயன்றனர். கேட்போரும் எவர் வெல்ல முடியும் என்பதைக் கண்டுபிடிக்கும் நோக்கத்திலேயே இருந்துவிட்டார்கள். கவிராயர் வாத்தியாரைநோக்கி "என்ன ஐயா, நீர் வாசிப்பதில் எழுத்துக்களைச் சுக்குமி ளகுதிப் பிலி என்றுற்போல் பிரித்துப் பொருள் விளங்காதவண்ணம் படிக்கிறீர்" என்றுர். வாத்தியார் திருநெல்வேலிப் பழக்கத்தை யிகழ்ந்தார். இருவரும் தம்தம் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கு ஆதாரமாகமேற்கோள்களை வாரியெறியத் தலைப்பட்டனர். வாத்தியார் ஒட்டக்கூத்தன் பாண்டி நாட்டை யிகழ்ந்துசொன்ன கவியை மேற்கோள் காட்டினர். கவிராயர் கொங்கு நாட்டைக் கம்பர் பாடியதாகச்சொல்லும் கவியைச் சொன்னுர்.

அக்கவியால் கவிராயர் அங்குக் கூடியிருந்த வேளாளப் பிரபுக்களை யிகழ்ந்தவராவர் என்று வாத்தியார் கூறி, வேளாளர்களுடைய மேன்மையை விளக்கத்தொடங்கினர். ஊராரெல்லோரும் வாத்தியார் பக்கம் சேர்ந்துகொண்டனர். கவிராயர் சொல்லிக்கொள்ளாமலே ஊரைவிட்டுப் போய்விட்டார். ஐயண்ணவாத்தியார் தாம் கவிராயரை வென்றுவிட்டதாய் உள்ளூரிலும் அயலூர்களிலும் பறையடித்தார்.

எங்கள் வாத்தியார் மேற்சொன்ன நூல்களிலன்றி, திருக்குறளிலும் நாலடியாரிலும் நல்ல பயிற்சியுள்ளவர். அவற்றிலிருந்து அவர் அடிக்கடி சொல்லும் குறட்பாக்களிலும் வெண்பாக்களிலும் எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் மலிந்திருக்கும்; இருந்தாலென்ன? அவர் திறமை அவற்றினின்றும் மேற்கோள் சொல்வதிலன்று, உரை சொல்வதில். திருக்குறளுக்குப் பரிமேலழகர் முதலான பலர் உரைகண்டதாகச் சொல்கின்றனர்; உரைகாணுதவர்களில் எங்கள் வாத்தியார் ஒருவராயினும், அவர்களோடு சமமாக வைத்தெண்ணத் தகுந்தவரே யாவார். சில குறட்பாக்களுக்கு அவர்சொல்லும் உரை பரிமேலழகர் முதலான உரையாசிரியர்களில் காண்பது அரிது. அவர் தமது நுண்ணறிவால் கூறும் உரைகள் புதியவையாயினும், பொருத்தமானவையாகத் தோன்றும்.

வாத்தியாருக்கு இலக்கணப்படிப்புச் சிறிதும் இல்லையென்பதை ஊரில் அவரொழிய வேறெவரும் அறியார். தமிழ்க் கல்வியில் விருப்பமுள்ள சில வேளாளர்களுடைய பிள்ளைகளுக்கு வாத்தியார், தாம் இலக்கணம் சொல்லிக் கொடுப்பதாய்க் கூறி, அவர்களைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், நன்னூற் பாடம் வைத்து, ஓராண்டு கழியும் வரையிலும் சூத்திரங்களைப் பாடம் பண்ணி

ஒப்புவிக்கும்படி செய்வார். குழந்தைகள் சூத்திரங்களையே பாடம் பண்ணுவதை அறிந்த பெற்ருேர் சிலர் வாத்தியாரிடத்திலே குறைகூறினுல், அவர் உடனே போப்பையர் இலக்கண வினுவிடையை வாங்கி, அதைப் பாடபுத்தகமாக வைத்துவிடுவார். அக்குழந்தைகள் பள்ளிக்கூடத்தை விட்டுப் போகும்வரையிலும் அதைப் படித்துப் பாடம் ஒப்புவித்தல் வேண்டும். இலக்கண பாடம் முடிவடையும்பொழுது வாத்தியாரும் மாணுக்கர்களும் இலக்கணப் படிப்பில் ஒரேவிதமான ஞானமும் தேர்ச்சியும் உடையவர்களாயிருப்பார்கள். வாத்தியாருடைய இலக்கணப் படிப்பு இன்னதென்று அறிய விரும்புவோர் அவர் சில சமயங்களில் இடும் கையெழுத்தை உற்றுநோக்குவாராக. அவர் கையெழுத்து இது: 'அய்யணக்கவிருயற்.'

வாத்தியார் இருக்குமிடங்களிலே அடிக்கடி வாதங்கள் நிகழும். அவை நிகழுமிடங்கள் ஊர்ப்பண்ணுடிவீடு, மற்றைப்பண்ணுடிகளின் வீட்டுத்திண்ணைகள், ஊர்ச்சாவடி முதலியனவாகும். இவ்வாதங்களிலே கந்தையன்போன்றவர்களிடத்தில் வாத்தியார் அகப்பட்டுக்கொண்டால் அவர் தமது முழுத்திறமையையும் கல்விப்பெருக்கையும் காட்டி வாதிக்க நேரிடும். அவ்வாதங்கள் பார்ப்போருக்கும் கேட்போருக்கும் பெருமகிழ்ச்சியைத் தரத்தக்கன. பின்வருவன சில உதாரணங்கள்.

அடைமழைக் காலத்தில் ஒருநாள் மழை பல பலவென்று தூறிக்கொண்டிருக்கையில், ஊர்ப்பண்ணுடியின் வீட்டுத் திண்ணையில் பலர் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். தெருக்களும் சந்துகளும் சேறு நிறைந்திருந்தன. மழைத் தண்ணீர் எங்கும் பல சிறு கால்வாய்களாக ஓடிக்கொண்டிருந்தது. பலர் குளிருக்கு அடக்கமாகக் கொங்காடை

போட்டுக்கொண் டிருந்தனர். வாசலிலிருந்த ஆடுமாடுகள் நனைந்து சோம்பி நின்றன. ஒரு புறத்தில் வாத்தியார் கல்வி யின் சிறப்பைப்பற்றி மேற்கோள் காட்டி உரத்தகுரலில் பேசிக்கொண்டிருந்தார். அன்று அங்கே கந்தையனும் இருந்தான். அவன் வாத்தியார் பக்கலில் திரும்பிக்கேட்ட தும் வாத்தியார் மறுமொழி சொன்னதும் பின் வருமாறு:—

"ஏனுங்கையா, இவ்வளவு மழைபெய்யுதே, இந்தத் தண்ணியெல்லாம் எங்கே போகுது?"

"மழைத் தண்ணியெல்லாம் ஆறுகளிலே விழுகுது."

"ஆத்துத் தண்ணி?"

"ஆத்துத்தண்ணி௦௦ கடலில்போய் விழுகுது."

"ஆமா. இவ்வளவு தண்ணிபோய் விழுகுதே, கடல் தண்ணி பெருகி, கரையை உடச்சுப்போட்டு வெளியே வாராதோ?"

"வாராது."

"ஏன் வாராது?"

"ஏன் வாராதென்றால்,—அதுக்குக்காரணம் இருக்குது"

"அதுதா௦ என்ன காரணம்?"

"யாராவது தெரிஞ்சாச் சொல்லுங்க பார்ப்போம்"

"இங்கேயாருக்குத் தெரியுது. நீங்க சொல்லுங்கையா."

"அதெல்லாம் அந்த மகாவிஷ்ணு வேலே."

"அவரு என்ன பண்ணுரு?"

"அவர் வடவா முகாக்கினியை வைத்திருக்கிறுர், அது தண்ணியெல்லாம் உறிஞ்சிவிடுது. பிரளய காலத்திலேதா௦ அந்தத் தண்ணியெல்லாம் பெருகி உலகத்தை யெல்லாம் அடிச்சிகிட்டுப் போகும்."

"வடவா முகாக்கினி எங்கிறீங்களே, அது எங்கே இருக்குது?"

"சமுத்திரத்துக்குள்ளே."

"தண்ணிக்குள்ளே நீ இருந்தா அவிஞ்சு போகாதோ?"

"போகுமா?——போகாது"

"எம் போகாது? நீங்க சொல்றது தெரியலீங்கையா."

"இப்போ—ஆகாசத்திலே மழை பெய்யுது, சூரியனை அவிச்சுவிடுதோ ?"

"இல்லே."

"இதுவும் அப்படித்தா."

மற்றொரு நாள் மாலையில், ஊர்ச்சாவடியில் பலர் கூடிப் பேசிக்கொண்டிருக்கையில் கீழ்க்கண்ட வாதம் நடைபெற்றது. கேள்வி கேட்போன் ஒரு குடியானவன்.

"மதிபெரிசா, விதி பெரிசா ?"

"மதிதாம் பெரிசு."

"ஏனுங்கையா, அஞ்சு பஞ்ச பாண்டவர்கொ இருந்தாங்களே, அவுக எங் காட்டுக்குப் போனுங்கோ? அவுகளுக்கு மதியில்லியா ?"

"பஞ்சபாண்டவர்களைக் கணக்கிலெ எடுத்துக்கலாமா? அவுக எல்லாம் தேவப்பிறவிகள்; அந்த பகவானே பாண்டவர்களாகப் பிறந்ததுதானே; அவுக என்ன மனுசாளா, செத்துப் போனுங்களா?—இல்லியே. இன்னும் உயிரோடெதாம் இருக்கிறுங்கோ, நம்ம கண்ணுக்குத் தெரியலே. முன்னே அஸ்தினபுரம் இருந்த இடம் இப்பொ காடாக இருக்குது. அந்தக் காட்டுக்குள்ளே இப்பொ ஒருத்தரும் போறதில்லெ. சில வெள்ளக்காரர் அந்தக் காட்டுக்குள்ளெ என்ன இருக்குது பார்க்கவேணுமென்று காட்டுக்குள்ளே பகலெல்லாம் பிரயாணம் பண்ணி, கூடாரம் அடிச்சாங்கொ. ரவுலே இவுக தூங்கையிலெ சில குரங்குகொ பெரியபாறைகளைத் தூக்கியாந்து கூடாரத்துமேலே எறிஞ்சுது. கூடாரம்

கிழிஞ்சுபோச்சு, உள்ளே இருந்தவுகொ ரொம்பப்பேரு இறந்து போனுகொ, ஒரு வெள்ளக்காரன் மாத்திரம் உயிர் பிழச்சு வந்து சேர்ந்தா. இப்பொ வெள்ளக்காரரு அந்தக்காட்டுக்குள்ளேயே போறதே இல்லியே."

"மதிதாம் பெரிசு எங்கிறீங்களே. அப்படி யாராவது விதியெ மதியால் வெண்ணிருக்கிருங்களா?"

"ஆ, ஆ, எத்தனையோ பேர்."

"ரெண்டொருத்தரைச் சொல்லுங்க பாக்கலாம்."

"அப்பா, சொல்றது பெரிசல்ல, சொன்ன உனக்குத் தெரியாது."

அப்பொழுது மற்றொரு குடியானவன் கேட்கிருன்:

"ஏனுங்கையா, அப்பொ நீங்ககூட விதியைவெல்ல முடியுமா?"

"எம் முடியாது?"

"அப்படியானு உங்க ஒடலு இவ்வளவு ஒல்லியா இருக்குதே, அதைக் கொஞ்சம் பெரிசு பண்ணுங்கொ பாப்போம்."

"எதுக்குப் பெரிசுவேணும்?—கழுதெபோல; எனக்கு இதே போதும்.

வாத்தியாருக்குச் சாமை கொடுப்பதாய்ச் சொல்லியிருந்த மற்றொரு குடியானவன் சொல்லுகிருன்:

விதி பெரிசு விதிபோல தா எல்லா ஆகுமுண்ணு, சும்மா உக்காந்துகிட்டா நம்முளுக்கு சோறு வருமா? நீ கையெக் கட்டிகிட்டு சும்மா உக்காந்துக்கொ, சோளம் வளவுக்கு வருதாண்ணு பாக்கலாம்."

"ஏனப்பா வருமா? வாரது. பின்னே நீங்கொ சொல்றீங்களெ. பண்ணுடி சொன்னதுதா உங்க மனசிலெ ஏறியிருக்குது. அதெல்லாம் சொல்றவுக சொன்னுத்தா,

சொல்றபடி சொன்னுத்தானுண்டு," என்று வாத்தியார் அந்தக் குடியானவனைத் தூக்கிவைததுப் பேசினுர்.

ஊருக்குத் தென்கோடியில் எங்களூர்ப் பள்ளிக்கூடம் இருக்கின்றது. அது பலவாண்டுகளுக்குமுன் ஊரார் பொதுச் செலவில் கட்டியது. பள்ளிக்கூடத்துக்கு முன் பக்கத்தில், கல்லெறி தூரத்தில், மாரவண்ணுன்வீடு அமைந்துள்ளது. அவனுடைய கழுதைகள் பள்ளிக்கூடத்துக்கு முன்னும் பின்னும் நின்றுகொண்டும் படுத்துக்கொண்டுமிருப்பதைக் காணுந்தோறும் சிலர்க்கு, அவையும் தம் கீழ்மையையும் விதியையும் ஓர்ந்து, ஐயண்ணவாத்தியார் அருளால் தம் மருள் நீங்கி உய்யுமாறு சிறிது கல்விஞானம் அடையும்பொருட்டு அங்கே வந்தவைபோல் தோன்றும். பள்ளிக்கூடம் ஓர் நீண்ட கூடம். அதற்கு முன்புறத்தில் ஏழெட்டுக் கிளுவமரங்கள் செழித்து வளர்ந்து நிற்கும். பள்ளிக்கூடம் முற்றிலும் பாழடைந்த கட்டடம் என்று சொல்லுதல் எளிதன்று. எங்கும் ஓதம் படர்ந்திருந்தாலும்,உள்ளும் புறத்தும் உள்ள மண்சுவர்களில் சுண்ணும்புப் பற்று முற்றிலும் நீங்கிவிட்டதென்று எவரும் துணிந்து கூறுர். அடிச்சுவர்கள் மண்பெயர்ந்து குழிகுழியாய் இருக்கும். கூரையிலும் மூலைகளிலும் சிலந்திப்பூச்சிகள் தம் வினைத்திறமை தோன்ற வலைகள் பின்னியிருக்கும்; அவ்வலைகளிலே உலர்ந்துபோன பூச்சிகளும், அவற்றின் இறகுகளும், கை கால் முதலிய உறுப்புகளும் ஒன்றும் பலவுமாய் ஊசலாடும். வெளிச்சம் இல்லாத குறையை நீக்குவதற்குக் கூரையில் அங்குமிங்கும் சில சாளரங்கள் அமைந்துள்ளன; அண்ணுந்து பார்ப்போருக்கு அவற்றினூடே நீலநிறவானம் புலப்படும்.

ஒரு புறத்தே, அரிச்சுவடி படிக்கும் பிள்ளைகள் தம் கை விரல்கள் தேயாத வண்ணம் அவற்றைக் கழற்சிக்காய்த் தோல்களிலே புகுத்தி எழுதுவதற்கு மணல் பரப்பியிருக்கும். குடியானவர்களின் பிள்ளைகள் வாத்தியாருக்கு இருபுறமும் பனையோலையிற் பின்னிய தடுக்குகளில் அணியணியாய் உட்கார்ந்திருப்பார்கள். கீழ்வகுப்புப் பிள்ளைகள் ஓலைச் சுவடிகள் வாசிப்பவர்கள். அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி முதலியன அவர்களுடைய பாடங்கள். இடை வகுப்பினரான மாணவர்கள் படிக்கும் புத்தகங்கள்: அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை; புலந்திரன் களவு, விவேகசிந்தாமணி, சுப்பிரமணியர் மாலை, எண்சுவடி முதலிய அச்சுப் புத்தகங்கள். மேல்வகுப்புப் பிள்ளைகளின் பாடங்களாவன: திருவிளையாடற் புராணம், அரிச்சந்திர புராணம், திருக்குறள், நாலடியார், போப்பையர் இலக்கண வினாவிடை முதலியன. அன்றியும் அவ்வகுப்புப் பிள்ளைகள் குழிமாற்று, பொன்னிலக்கம், சதுரவாய், குறுந்தொகை, கீழ்வாயிலக்க முதலிய கணக்குகளைப் பாராது ஒப்புவித்தல் வேண்டும். பிள்ளைகள் எல்லோரும் துணியால் சதுரவடிவாய்த் தைத்த பைகளிலே தம் புத்தகங்களை அடுக்காகவைத்து, அப் பைகளின் நுனியிற் கட்டிய சிறு நூற் கயிறுகளால் பைகளைச் சுற்றிக் கட்டியிருப்பார்கள். அப் பைகளிற் பெரும்பாலன அழுக்குப் படிந்திருப்பினும், நாமகள் உறைவிடமாதலால், வெள்ளைத் துணியாலானவையே. ஒருசில மாணவர்கள் வறுமையாலோ, அல்லது நாமகள் பெண்ணென்பது கருதியோ, தங்கள் அன்னையர்களைந் தெறிந்த பலநிறமான சேலைத்துணிகளில் பை தைத்திருப்பார்கள். அப்பைகளுக்குள்ளே காகிதங்களாற் செய்த சிறு உறைகளில் பிள்ளைகள் தங்கள் எழுதுகோல்களையும்

மற்றும் தாம் தேடிய பல அரிய பொருள்களையும் பொதிந்து வைத்திருப்பார்கள்.

பொழுது புலர்வதன்முன் பிள்ளைகள் எழுந்திருந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு, சுவடியுங் கையுமாய்ப் பள்ளிக்கூடம் வந்து சேர்வார்கள்; ஏனெனில், எங்கள் வாத்தியார் 'ஏதானடி' அடிக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்தார். எல்லோருக்கும் முன் வந்த பையனுக்கு அடியில்லை. அவனுக்குப் பின்வந்தவர்களுக்கு வரிசையாக இரண்டு, மூன்று, ஐந்து பத்தென்று அவரவர்கள் வந்த வரிசை முறைக்குத் தக்கபடி பிரம்படி கிடைக்கும். அடிக்குப்பயந்து எல்லோரும் காலந்தாழ்க்காது வருவது வழக்கம். ஐயண்ண வாத்தியார் பிரம்பை நீட்டுவதில் கையைச் சுருக்குவது இல்லையாதலால், பிள்ளைகள் யாவரும் பல்விளக்காதும் காலைக்கடன் கழிக்காதும் அழுக்குக் கூட்டமாய் வந்து கூடுவார்கள். சில பிள்ளைகள் கண்ணிலே பீழை வழியும், சிலர் வாயிலே சலம் ஒடிக்காய்ந்திருக்கும், சிலர் மூக்கிலே இடைவிடாது சலம் ஒழுகிக்கொண்டிருக்கும், எல்லோர் தலைமயிரும் அலங்கோலப்பட்டிருக்கும். பிள்ளைகள் வந்து கூடிய சிறிது நேரத்தில் வாத்தியார் வந்து தமது இருக்கையில் அமர்வார். எல்லோரும் இரைந்து வாசிப்பதால் பள்ளி முழுவதும் ஒரே இரைச்சலாயிருக்கும். பின்பு வாத்தியார் பெரிய பிள்ளைகளைப் பாடங்கேட்பார். பாடமென்பது பெரும்பாலும் பாராது ஒப்புவித்தலே. திருவிளையாடல், நாலடியார், குறள் முதலிய நூல்களிலிருந்து சில பாடல்களைப் பிள்ளைகள் ஒப்புவிப்பார்கள். பாடல்களின் பொருளைக் கவனிப்போர் ஒருவரும் இலர். இப்பாடம் முடிவதற்குள் பிரம்பு பாதி குறைந்துவிடும், பிள்ளைகளின் உடம்புகளிலே தடிப்புகள் ஏராளமாய் உதித்து

விடும். பல பிள்ளைகள் அழுதகண்ணும் சிந்திய மூக்குமா யிருப்பார்கள். வாத்தியாருக்கு அடிக்க அடிக்கக் கோபம் மிகுந்து தம்மை மீறி அடிக்கத் தொடங்கிவிடுவார். ஆயினும், பெரிய பண்ணடிகளின் மக்களை வாத்தியார் அத்துணை அடிப்பதில்லை; ஏழைகள் வீட்டுப் பிள்ளைகளே துயருறு வோர். பெரிய பிள்ளைகளின் பாடம் முடிந்ததும் சிறு பிள்ளை களின் பாடங்களைக் கேட்குமாறு அவர்களுக்குக் கட்டளை யிட்டு, வாத்தியார் அங்கே வரும் குடியானவர்களிடம் உரையாடிக்கொண்டிருப்பார். பிள்ளைகள் படிப்பதில்லை யென்றும், அடியாதபிள்ளை படியாதென்றும், தாம் அடிப் பது முறையே என்றும் வாத்தியார் அவர்களுக்குச் சொல் லுவார். வந்த குடியானவர்களின் பிள்ளைகள் படிப்பில் சமர்த் தர்களென்று அவர்கள் மகிழுமாறு வாத்தியார் புகழ்வார். பெரியபிள்ளைகள் சிறிய பிள்ளைகளின் பாடங்களை அரை குறையாகக் கேட்பார்கள்.

காலைப்பாடம் முடிந்ததும் வாத்தியார் குடியானவர்க ளிடம் பேசிக்கொண்டிருக்கையில், பிள்ளைகளும் தமக் குள்ளே பேசிவிளையாடத் தொடங்குவார்கள். ஒரு சிறு வன் தன் மூக்கில் வடியும் நீரைத் துடைத்து மற்றொருவனு டைய முதுகில் தேய்ப்பான். இன்னுமொருவன் மற்றொரு வனுடைய தலையில் தன் தலைப் பேனைப் புகவிடுவான். ஒரு வன் இன்னுமொருவனுடைய எழுதுகோலைத் திருடித் தன் பைக்குள் வைத்து மறைப்பான். ஒருவன் அடுத்தவனைத் தொடையில் சிவப்பேறும் வண்ணம் சடுதியில் கிள்ளிவிட்டு, அல்லது, அவன் தலையில் நறுக்கென்று கொட்டிவிட்டு, ஒன் றும் அறியாதவன்போல் இருப்பான். ஒருவன் தன் தடுக்கி லிருந்து கிழித்த சிறிய ஓலைத்துண்டை மடித்துக் கீழே வைத்தலும், அது முறுக்கவிழ்ந்து துள்ளுவதை மற்றவர்

களுக்குக்காட்டி, அதைத் 'துள்ளு பூச்சி' யென்பான். ஒருவன் தனக்கு முன்னுலிருக்கும் மண்ணில் அடுத்தவனைத் திட்டியெழுதி, எழுதினதை உடனே அழித்துவிடுவான். ஒருவன் அடுத்தவன் காதில் குசுகுசுவென்று யாதோ சொல்லத் தொடங்கினவன போல் நடித்து, அவன் காதைக் கடிப்பான். மற்றுமொருவன் தன் மூக்கைத் தன் ஆள்காட்டி விரலால் அளந்து, அடுத்தவன் மூக்கையும் அளப்பதாகக் கூறி, அவன் மூக்கைச் சடுதியிற் கிள்ளிவிடுவான். சற்று மூத்தபையன் ஒருவன் தன்னருகே சென்ற ஒரு கட்டெறும்பை எடுத்து, அதன் நடுவில் அதை இரண்டாகக் கிள்ளி, மந்திரத்தால் அவ்விரண்டு துண்டுகளையும் தான் ஒன்றுசேர்க்க வல்லவன் என்று கூறி, அடுத்தவன் முழங்கைக்குள் அவ்விரு துண்டுகளையும் வைத்துக் கையை மடக்குவான். கைக்குள் இருந்த கட்டெறும்பின் தலை கையை வெடுக்கென்று கடித்தலும் கடியுண்ட பையன் கீச்சிடுவான். அவதிப்படும் சிறுவர்கள் வாத்தியாரிடம் முறையிட்டால், அவர் சொன்னவர்களையும் செய்தவர்களையும் சேர்த்து நையப் புடைப்பார். இவ்வாறு சிறிது நேரம் சென்றதும் எல்லாப் பிள்ளைகளையும் பழையது சாப்பிடுவதற்கு விட்டுவிட்டு, வாத்தியாரும் வீட்டுக்குப் போவார். ஒரு நாளில் காலை, நடுப்பகல், இடைப்பகலாக மூன்று முறை வாத்தியார் உணவு கொள்வதற்காகப் பிள்ளைகளை வீட்டுக்கனுப்புவார். மாலையில் பொழுது விழுந்ததும் பிள்ளைகள் எல்லோரும் முந்திரிவாய், மாகாணிவாய், குறுணிவாய் முதலிய கணக்குகளைக் காகூ என்றுகத்திவிட்டு;

அந்திக்குப் போ'ரோம் நாங்கள் அகந்தனில் விளையாடாமல்,
சுந்தர விளக்கின்முன்னே சுவடிகளவிழ்த்துப் பார்த்து,
வந்தது வாராத தெல்லாம் வகையுடன் படித்துக்கட்டிக்
கந்தனுர் கோழி கூவக் காலமே வா'ரோமையா.

என்னும் பாட்டைச் சொல்லி, சுவடி தடுக்குகளைத் தூக்கிக் கொண்டு தங்கள் தங்கள் வீட்டுக்குப் போவார்கள். பழையது சாப்பிடச் செல்லுகையில் மாணவர்கள் சொல்லும் பாட்டு பின் வருவாறு:—

காலமே எழுந்திருந்து கால்முகம் சுத்தி செய்து,
கோலமாம் நீறுபூசிக் குழந்தைகள் பசிகள் தீரப் [டோம்
பாடமும் படித்தோமையா, படுமடி பட்டுக் கொண்
சீடரை அனுப்புமையா, திருவடி சரணந்தானே.

எங்கள் பள்ளிக்கூடத்திலே, ஒரு மாதத்திலே, நிரவுதலாக மூன்று நாட்கள் ஓய்வு நாட்கள்; அவற்றிற்கு உவா நாட்கள் என்பது பெயர். அவையாவன: அமாவாசையும் அடுத்த நாளும் பௌர்ணிமையுமாம். உவா நாட்களுக்கு முந்திய நாள் மாலையிலேயே சிறுவர்கள் வெளிப்போந்து, சாணங் கொணர்ந்து பள்ளிக்கூடத்தை மெழுகிவிட்டு, தம் தம் வீடு சேர்ந்து, ஒவ்வொருவரும் ஆழாக்குகளில் சிறிது எண்ணெயும், உப்பும் புளியும்; ஒவ்வொரு விறகும் எடுத்துக் கொண்டுவந்து வாத்தியாருக்குக் கொடுப்பார்கள். அவர்கள் கொண்டு வருவன வாத்தியார் வீட்டுச் செலவுக்கு அடுத்த உவா நாள் வருமளவுங் காணும்; அன்றியும், அவை வாத்தியாருக்குப் பெரிதும் வேண்டற்பாலன. ஏனெனில், அவர் மாதச் சம்பளம் மூன்று மிடா சோளமாகும். ஒரு மிடா என்பது முப்பத்திரண்டு படி கொண்டது.

உவாநாட்கள் சிறுவர்களுக்குத் திருநாளாயின், மகா நவமி நாட்கள் வாத்தியாருக்குப் பெருநாளாகும். மகாநவமிக்குமுன் ஓரிரண்டு மாதங்களாகப் படிப்பை யெல்லாம் நிறுத்தி,வாத்தியார் சிறுவர்களுக்குப் பலவிதமான கோலாட்டம் பழக்கிவைப்பார். கோலடிக்கும் பொழுது, சிறுவர்கள்

வாணாசுர நாடகத்தில் உடாங்கனை, சித்திரரேகையைப் பார்த்துக் கூறும் காதற்பாட்டுகளைப் பாடுவார்கள். குடியானவர்கள் தம் மக்கள் அப்பாட்டுகளைப் பாடக் கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைவார்கள். மகா நவமிகாலத்தில் வாத்தியார் பிள்ளைகளை யெல்லாம் திரட்டி, அவர்களுக்கு அணிவன அணிவித்துப் புனைவன புனைவித்து, ஊர்மேல் அழைத்துக்கொண்டு சென்று, சிறுவர்களின் உறவினர்கள் வீடுதோறும் புகுந்து, கோலாட்டம் ஆட்டுவித்து, அவர்கள் தமக்கும் பிள்ளைகளுக்கும் வழங்கும் பரிசுகளைப் பெற்றுக்கொண்டு திரும்புவார். அப்பொழுது கிடைக்கும் வருமானத்தினால் வாத்தியார் தமக்கும் தமது பெண்டிர் பிள்ளைகளுக்கும் ஓராண்டிற்கு வேண்டுவனவான துணி மணிகள் வாங்கிக் கொள்வது வழக்கம். ஒரு வீட்டுக்குப் போனவுடனே கோலடிப்பதற்கு முன் பிள்ளைகள் சொல்லுங் கவி இது:

கடலைபொரி அவல் பயறு கரும்புமிளநீரும்
கற்கண்டு சீனியுடன் அப்ப மதிரசமும்,
வடைதோசை பணியாரம் வரிசை பலாச்சுளையும்,
வாகான எள்ளுருண்டை பொறி விளாங்கனியும்,
குடவயிறு தனில் நிறைய அமுதுகொள்ளும்பானே,
கும்பமத கம்பீர தும்பி முகத்தோனே,
அடைவுடனே—நகர்தன்னிலே வாழும்,
ஐங்கர நின்னிரு சரணம் அன்பில் மறவோமே.

வாத்தியாருக்கு வலது புறத்திலே சிறிது தூரம் விலகி ஒரு தடுக்கிலே உட்கார்ந்து ஒரு சிறுமி அல்லியரசாணி மாலை வாசிக்கின்றனள். அவள் எலுமிச்சம்பழம் போலச் சிவந்த மேனியள். அவள் முகத்தை ஒருமுறை நோக்கினோர்க்கும் நினைவுக்கு வருவன இவை: இரத்தம்போற் சிவந்து திரண்ட இதழ்கள், விசாலமான 'கஞ்சமென் னளவிற்றே

றேனும் கடலினும் பெரிய கண்கள்', அவற்றின் மேற் கவிந்த நீண்ட புருவங்கள், சிறிது பரந்து உயர்ந்த நெற்றி, நெருங்கித் திரண்ட மயிரில் முடிந்த கொண்டை. அவள் சிவப்பு முகத்துக்குக் கருப்பு மயிர் எத்துணை அழகு! அவள் புன் முறுவல் எத்துணை இனிது! அவள் உடை எத்துணை எளிது! கருப்புச் சிற்றுடை யொன்றே உடுத்தியிருக்கின்றனள். அச்சிற்றுடைக்கு வெளியே தோன்றும் பாதங்கள், கைகள், கழுத்து, முகம் ஆகிய இவை நிறவேறுபாட்டால், அச்சிற்றுடையால், எத்துணைப் பொலிவுற்று விளங்குகின்றன. அவள் மேனி கொழுத்துத் தளதளவென மின்னுகின்றது, கைவிரல்கள் யாவும் இரத்தப் பசை நிறைந்து சிவந்து தோன்றுகின்றன. அவளே ஊர்ப்பண்ணாடியின் ஒற்றைமகள்; வள்ளியம்மாள் என்னும் பெயரினள்; தன் தாய் தந்தையர்க்கன்றி ஊருக்கெல்லாம் அவள் செல்வக் குழந்தை. அவள் போகுமிடமெல்லாம் சிரிப்பும் விளையாட்டும் பின்தொடரும்; அவள் இருக்குமிடமெல்லாம் அன்பும் அடக்கமும் ஒளிசெய்யும். அவள் பன்னிரண்டு வயதுப்பெண். அவளை ஒருமுறை காண்போர் மீண்டுங் காண அவாவுவர்.

VI

பட்டி நோன்பு—பூ நோன்பு.

பட்டி நோன்பு.

எந்நாட்டிலும் நோன்புகளும் விழாக்களும் அந்நாட்டாரின் சரிதத்தை ஒருவாறு விளக்குவனவாகும். கொங்கு

நாட்டில் தொன்றுதொட்டு வழங்கும் நோன்பு பட்டி நோன்பு எனப்படும். அதுவே தமிழ் நாட்டின் மற்றைப் பாகங்களில் மாட்டுப்பொங்கல் என வழங்குவது. தொன்மையில் இந்நோன்பினும் பழைய வேறு நோன்பு எங்கும் காண்டலரிது. தமிழ் மக்கள் காடுதிருத்தி நாடுசெய்து ஏரோட்டிப் பயிர்த்தொழில் செய்தகாலத்தில் ஆடு மாடுகள் வளர்த்து அவற்றைப் போற்றி யிருத்தல்வேண்டும்; அந்நாட்களிலேயே இந்நோன்பும் தொடங்கி யிருத்தல் வேண்டும்.

இந் நோன்பு தை மாதத்தின் தொடக்கத்தில் வரும். அக்காலம், குடியானவர்கள் பயிரிட்ட நாள்முதல் தாம் பட்ட பாட்டின் பயனை அடைதல் கண்டு மகிழ்ந்து, அறுப்பு முடித்துத் தங்கள் விளைச்சலை யெல்லாம் வீட்டுக்குக் கொணர்ந்து, குவித்து வைத்து மகிழ்ந்திருக்கும் காலம். அந்நாட்களிலே முன்பனி பெய்யும், தென்றல் வீசத் தொடங்கும், மரங்களும் செடி கொடிகளும் தளிர்த்துப் பூத்துக் காய்த்திருக்கும். பறவைகள் கொழுக்கத் தின்று இனிமையாகப் பாடும். மக்களும் தம்மைச் சூழ்ந்திருப்பவற்றின் மகிழ்ச்சியை ஒரு சிறிது அடைந்து களிகூர்ந்திருப்பர். அக்காலத்தில், அந்தி நேரத்தில், ஊருக்கப்பால் தூரத்தேயுள்ள பட்டிகளினின்றும் பட்டியாட்கள் வாசிக்கும் புல்லங்குழலோசையும், மாடுகளின் கழுத்தில் அசையும் மணியோசையும், பட்டி நாய்கள் குலைக்கும் ஓசையும் கேட்கும். இரவிலே, பட்டப்பகல்போற் காயும் நிலவிலே, சிறுவர்கள் 'கட்டுத்தரையன்' முதலான விளையாட்டுகள் ஆடுவார்கள். இவ்வாறாக எல்லோரும் மகிழ்ந்திருக்கும் இக்காலத்தே, குடியானவர்கள் தங்களுக்கு விளைச்சலை யளிக்கப் பெரிதும்

பயன்பட்ட ஆடுமாடு, கன்று காலிகளை நினைந்து, அவற்றிற்குப் பொங்கல் வைத்தல் நேரிதே.

கொங்கு நாட்டிலே, தை மாதத்தில் மூன்று நாட்கள் பொங்கல் நாட்களாகும்: முதல் நாள் மணப் பொங்கலும், இரண்டாம் நாள் பட்டிப் பொங்கலும், மூன்றும் நாள் பூப் பொங்கலும் இடுவார்கள். இவற்றில் முதற் பொங்கல் பொதுப் பொங்கல்; இரண்டாம் பொங்கலே குடியானவர்களுக்குச் சிறப்பானது; மூன்றும் பொங்கல் ஊரிலுள்ள சிறுமிகள் இடுவது.

பொங்கல் தொடங்குவதற்கு முந்திய நாள், ஒவ்வொரு குடியானவன் பண்ணையிலும் வேலை செய்யும் ஆட்கள் பூளைப் பூவையும் வேப்பிலையையும் ஏராளமாகக் கொண்டு வந்து, தங்கள் பண்ணுடி வீட்டில் கொடுத்துவிட்டுத் தமக்கும் அவற்றில் சிறிது எடுத்துக்கொண்டு போவார்கள். அன்று வீடுகள் யாவும் சுண்ணும்பு பூசி வெள்ளைவெளேரென விளங்கும். அன்று மாலையில் ஒவ்வொரு வீட்டாரும் ஒரு பிடி பூளைப் பூவையும், ஒரு பிடி வேப்பிலையையும் சேர்த்து அவற்றைத் தங்கள் தங்கள் வீட்டிறப்பில் அங்கங்கே செருகித் தொங்கவிடுவார்கள். இவ்வாறு செய்வதற்குக் 'காப்புக்கட்டு' என்பது பெயர்.

மறுநாள் ஊரிலுள்ள மற்றைச் சாதியினராகிய செட்டிகள், கொல்லர்கள், தச்சர்கள் முதலாயினோர் பொங்கலிட்டு விருந்துண்டு மகிழ்வார்கள். குடியானவர்களும் அன்று பொங்கலிடுவது உண்டு; ஆயினும் அவர்கள் அதனை அத்துணைச் சிறப்பாகக் கொண்டாடுதல் இல்லை.

இரண்டாம் நாள் குடியானவர்கள் தங்கள் பட்டிகளில் இடும் பட்டிப் பொங்கல் நாம் அறியத்தக்கது. அப் பொங்கலிடும் முறையினின்றும் கொங்குநாட்டு வேளாளர்களுடைய

சில பழக்க வழக்கங்களும் கொள்கைகளும் அறியக்கிடக்கின்றன. அன்று எங்களூர்க் குடியானவர்களில் ஒருவராகிய பண்ணாடி – நல்லமுத்துக் கவுண்டருடைய வீட்டிலும் காட்டிலும் நடந்தவை கீழே கூறப்படுகின்றன. மற்றைக் குடியானவர்களின் வீட்டிலும் காட்டிலும் நடைபெறுவனவும் இவைபோன்றனவே.

பட்டிப்பொங்கலன்று காலையில், நல்லமுத்துக் கவுண்டர் வீட்டில், பெண்களும் வேலைக்காரர்களும் அங்குமிங்கும் ஓடிப் பரபரப்புடன் வேலை செய்துகொண்டிருந்தார்கள். வேலையாட்களிற் சிலர் பட்டிக்குப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு போவதற்காக வண்டிகளையும் எருதுகளையும் சித்தப்படுத்த முயன்று, நெகிழ்ந்த நுகத்தடிகளைக் கயிறு கொண்டு இழுத்துக்கட்டினர்; கடைமுளை கண்ணிக்கயிறுகளை யொழுங்குபடுத்தினர்; வண்டிச் சக்கரங்கள் கிறிச்சுக் கிறிச்சென்று ஓசையிடாமலிருக்கும்பொருட்டு எண்ணெய்த்துணிகளைக் கடையாணிகளுக்கருகில் சக்கரங்களிலுள்ள துவாரங்களிற் கோல்கொண்டு செலுத்தினர்; மாடுகளைக் குளிப்பாட்டி, அவற்றிற்குத் தீனிபோட்டுச் சதங்கை மாலை கட்டினர். சில ஆட்கள், பண்ணாடியும் அவர் குடும்பத்தாரும் குளிப்பதற்குத் தண்ணீர் காய்ச்சினர்; சிலர் சமையல் வேலையை விரைந்து செய்துகொண்டிருந்தனர்; சிலர் பொங்கலிடுதற்கு வேண்டிய அரிசி, உப்பு, புளி முதலியவற்றை அளந்தளந்து மூட்டை கட்டிக்கொண்டிருந்தனர். பண்ணாடிச்சி இடையிடையே வந்து நின்று, "அடே, குப்பா, உண்ணஅது கட்டியாகுலெ? சுருக்குண்ணு வேலை செய்றயா, தூங்கறயா?" என்றும்; "அடே, காளான், அந்த மக்கிரியை அப்படிப்போட்டா எனத்துக்காகும்? உணக்கு மொதல் போயுடுமுண்ணு நெனவே கெடையாது, போ" என்றும்; "ஏண்டா,

நஞ்சா, அந்தப் பச்சரிசியும் உப்பும் எங்நேரம் அளக்கறே? ஒரு வேலைக்கிப்போனு அண்ணக்கிப்பொழுது அதோடே போச்சு'' என்றும் வேலைக்காரர்களை அதட்டிக்கொண்டிருந் தாள். இந்த மிடுக்கிலே, ஒரு பூசணிக்காயைத் தூக்கிக் கொண்டுபோன நொண்டிக்கால்—சுப்பன் வாயிற்படியேறு கையில் காலிடறிக் கீழே விழுந்தான், காயுடைந்து போயிற்று. அவன், பண்ணுடிச்சி திட்டுவாள் என்னும் பயம் உள்ளே இருந்தமையால் விரைந்தெழுந்து, மெதுவாய் "எழவுதா." என்ருன். அதைக்கேட்ட மற்ற வேலையாட்கள், "என்னடா, நோம்பியண்ணக்கி எழவுங்கறே; உணக்குப் புத்தியிருக்குதா, இல்லயா?'' என்று அவனைக் கடிந்தார்கள். இதற்குள் அங்கே வந்த பண்ணுடிச்சி, உதடு துடிக்க, அவனை நோக்கி, "எழவுண்ணு சொல்றே? உண்ற மொண்டிக்காலெ வெச்சுகிட்டு உனக்கு எழவெடுக்கறது போதாது? நீ கட்டையிலேபோக, கரியாப்போக'' என்று வைதாள். சுப்பன் வாய்பேசாமல் காலையிழுத்திழுத்து நடந்துகொண்டு அப்பால் சென்ருன்.

கவுண்டர் குளித்து முழுகி, வெளுத்த வேட்டிகள் தரித்து, திருநீறணிந்து, திருநீற்றின்மேல் சந்தனப்பொட்டு வைத்து, அதன் நடுவில் குங்குமப்பொட்டுவைத்து, உண்டி முடித்து, வெற்றிலைபாக்குப்பை புடைக்கும்வண்ணம் புகையிலை முதலானவற்றை நிரப்பி, காலில் செருப்புமாட்டினுர். பெண்டிரும் நீராடி, தோய்த்த சேலைகள் உடுத்து, கொண்டையிட்டு, திருநீறணிந்து, சிந்தாக்கு தோள்வளையல் தாழ்வடம் முதலான நகைகள் புனைந்து, கன்னங்கள் புடைக்க வெற்றிலை பாக்குப் புகையிலையைத் துணித்துக் கிளம்பினர். வேலையாட்கள் வண்டிகளைச் சித்தப்படுத்தினர். ஒரு கட்டைவண்டி நிறையப் பூசணிக்காய்களும், இன்னும்

மூன்றுவண்டிகளில் அரிசி, சோளம், கொள்ளு, மொச்சை முதலிய தானியங்களும் பயறுகளும் ஏற்றப்பட்டன. ஒரு கூட்டுவண்டி நிறையப் பொங்கற் பானைகள் அடுக்கியிருந்தன. அப்பானைகளின் மேற்புறங்களில் வழக்கப்படி சுண்ணும்புக் கீற்றிட்டு, செம்புள்ளிகளும் கரும்புள்ளிகளும் வைத்திருந்தன. வீடுவாயில்களைப் பூட்டியபின்னர், பண்ணுடியும் அவர் பெண்டிர் பிள்ளைகளும் சதங்கைமாலை கட்டிய மாடுகள் பூட்டிய தமது வண்டியில் அமர்ந்தனர். சுமை வண்டிகளும் ஆட்களும் முன்னே செல்ல, பண்ணுடியும் அவர் குடும்பத்தினரும் பின்னே சென்றனர்.

இவ்வண்டிகள் ஊரினூடே சென்று, ஊருக்குத் தென்பாலுள்ள ஊர் மந்தையை அணுகின. உடனே அங்குக் காத்திருந்த பறையர்கள் பறைகொட்டி முழக்கிக் கொம்பூதினுர்கள். வண்டிகளும் கவுண்டருடைய காட்டிற்குச் செல்லும் இட்டேரியிலே சென்று மறைந்தன. மற்ற ஊர் மந்தைகளிலும் இவ்வாறே பறையர்கள் காத்திருந்து குடியானவர்களின் வண்டிகள் வந்து மறையுந்துணையும் கொட்டு முழக்கு அடிப்பது தொன்றுதொட்ட வழக்கம்.

பின்பு, கவுண்டருடைய வண்டிகள் விரைந்து சென்று அவர் காட்டை யடைந்தன. அங்கே பட்டியாட்களும் தோட்டத்தாட்களும் கவுண்டர் வரவை எதிர்நோக்கியிருந்தனர். அன்று அவர்களுக்கு ஓய்வு நாளாதலால், என்றும்போல் அவர்கள் காட்டு வேலைகளைச் செய்தல் இல்லை. ஆடுமாடுகளும் வெளியே போகாமல் பட்டிகளில் அடைபட்டு வயிருரத் தீனி தின்றிருந்தன. கவுண்டருடைய வண்டிகள் அவர் களத்துக்கருகில் அவிழ்த்து விடப்பட்டன. கவுண்டர் இதற்கென்று மூட்டை கட்டிக்

கொண்டுவந்த வெற்றிலை பாக்குப் புகையிலைகளைத் தமது காட்டிலே வேலை செய்யும் இறவாளர் முதலான வேலையாட்களுக்குக் கை நிறைய அள்ளிக் கொடுத்தார். இதற்குள் மாலைப் பொழுதும் வந்தது. கவுண்டர் வீட்டுப் பெண்கள் வேலையாட்களின் உதவியைக்கொண்டு பொங்க விடத் தொடங்கினர்.

பட்டிக்கு வெளியே, ஒரு புறத்தே, வரிசையாகக் கற்களைக்கூட்டி, பத்துப் பன்னிரண்டு அடுப்புமூட்டி, பொங்கலிட்டார்கள். பொங்கல்கள் ஆட்டிடையன் பொங்கல்,மாட்டிடையன் பொங்கல், கன்னிமார் பொங்கல், பெரியோர் பொங்கல் முதலாகப் பலவகையின. அடுப்பு வெளிச்சம் பட்டிப் படலின்மீது பட்டபொழுது பட்டியில் செருகியிருந்த பூளைப்பூவும் வேப்பிலையும் விளக்கமடைந்து தோன்றின; பட்டிக்குள்ளே யிருந்த ஆடுமாடுகள் மிரண்ட கண்களோடு திகைத்து நின்றன; பட்டிக் கப்பால் வெளிச்சம் மங்கி, சிறிது சிறிதாகக் குன்றி, சூழ்ந்த இருளிலே ஒளி மழுங்கி அடங்கிற்று. தொலை தூரத்தில் அங்கங்கே மற்றைக் குடியானவர்களின் பட்டிகளில் இடும் பொங்கலின் வெளிச்சம் ஒளிர்ந்தது; மாடு மேய்க்கும் பையன்களின் புல்லங்குழலோசை எங்கும் நிறைந்தது.

பொங்கல் வெந்துகொண்டிருக்கையில், கவுண்டர் தமது காட்டுப்பண்ணையடி யுள்ளிட்ட வேலைக்காரர்களோடு பட்டிக்குள் நுழைந்தார். பட்டியின் நடுவில் நான்கடி நீளமும் மூன்றடி அகலமும் அரையடி ஆழமுங்கொண்ட ஒரு பாத்தி கட்டினார்கள். அப்பாத்தியினுள் பட்டி மண் பரப்பி, அதன்மீது சாணத்தைக் கொட்டி நிரவினார்கள். அப்பாத்திக்குக் காப்புக்கட்டி, வழக்கப்படி அப்பாத்தியின் ஒரு புறத்தில் வெண் சுக்கங்கல்லெடுத்து எழுவர் கன்னிமார்களை

நிறுத்தி, அவர்களுக்கருகில் காதோலை, கருமணி, தாழை மடல், மடிப்புடைவை மைகோதியும் வைத்தார்கள். பழம் உரித்து வைத்துத் தேங்காய் உடைத்துப் பூசை செய்தனர். பொங்கலிட்டுக்கொண்டிருந்த பெண்டிர் உட்பட எல்லோரும் வந்து சாமி கும்பிட்டார்கள். பாத்தியின் நடுவில் தேங்காய்நீரும் தண்ணீரும் பட்டுக் குழம்பு மய மாயிருந்த சாணத்தினுள் கரும்புத்துண்டு, பச்சை மஞ்சள், ஒரு மூடி தேங்காய், ஒரு பழம் ஆகிய இவை எறியப்பட்டன. பின்பு கவுண்டர் ஒரு பசுவையும் இரண்டு கன்றுகளையும் பிடித்துக்கொண்டு வருமாறு கட்டளையிட்டு, அவை வந்தபின் அவற்றின் காதுகளைப் பாதி யறுத்து அச் சாணங் கலந்த நீரிற் போட்டார். வேலையாட்கள் சில மாடு களைக் கொணர்ந்து அப்பாத்தியினுள்ளே செல்லும்படி அவற்றை மிரட்டினார்கள். மாடு மிரட்டுதல் முடிந்ததும், பண்ணாடியும் வேலையாட்களும் எழுந்து நின்று, பண்ணாடி முன்னே செல்ல, மற்றையோர் பின் தொடர, "வாய்பூசு பட்டியாரே, வாய்பூசு; கைகழுவு பட்டியாரே, கைகழுவு; அசனம் பட்டியாரே, அசனம்" என்று கூவிக்கொண்டு, பட்டியினுள்ளே மும்முறை சுற்றி வந்தனர். பண்ணையத் தாட்கள் மாடுகளையெல்லாம் திரட்டி, அவற்றின் கொம்புக ளுக்குக் காவி பூசினர்; பட்டிவாயிலில் மாவிலைத் தோரணங் கட்டி, அதைக் கிழித்துக்கொண்டு ஓடும்படி பசு மிரட்டினார் கள். பசுக்கள் மிரண்டு வெளியே வந்தபொழுது, அவற்றின் முன் படைத்திருந்த தளிகையை மாட்டுக்காரன் வழக்கப் படி எடுத்துக்கொண்டு போனான். பின்பு எல்லோரும் பட்டி யைச் சுற்றிவந்து மாவிளக்கெடுத்துப் பழஞ் சூறையிட் டார்கள். அது முடிந்ததும் பொங்கலுக்குப் பூசை முடித்துக் கவுண்டரும் அவருடைய வேலையாட்களும் பட்டிக்குள் உட்

கார்ந்து பொங்கல் சாப்பிட்டார்கள்; அன்று வழக்கப்படி செய்திருந்த மொச்சைக் கொட்டையும் கத்தரிக்காயும் கலந்து சமைத்த குழம்பையும், சுண்டல் செய்த பூசணிக்கா யையும் எல்லோரும் வயிறூரத் தின்று மகிழ்ந்தனர்.

பின்பு கவுண்டர் தம் ஆட்களுக்குப் புதுவேட்டிகளும் வெற்றிலை பாக்கும் பரிசளித்து, பொங்கற்பானைகளையும் மற்றைப் பொருள்களையும் வண்டியிலேற்றுவித்துக்கொ ண்டு, தம் பெண்டிர் பிள்ளைகளும் பண்ணையத்தாட்களும் சூழ்ந்துவரப் புறப்பட்டு, நடுச்சாமத்தில் களைத்து வீடு வந்து சேர்ந்தார்.

பூ நோன்பு.

பொங்கல் கழிந்த மறுநாள் பூ நோன்பாதலால், எங் கள் ஊரிலுள்ள கன்னிப்பெண்கள் எல்லோரும் விடியற் காலையில் படுக்கைவிட்டெழுந்து, பல்விளக்கி, சீவிமுடிந்து, திருநீறணிந்து, ஆடை அணிகளைப்புனைந்து பூப்பறிக்கப் போவதற்குச் சித்தமாயினர். கன்னிப்பெண்களுக்கே இந் நோன்பு சிறப்பானதாயினும் இது எல்லாப் பெண்களுக்கும் பொதுவானதென்றே சொல்லுதல் தகும்; ஏனெனில், கன் னிப்பெண்களோடு வீட்டிலுள்ள சிறுமிகளும் மணமுடிந்த பெண்களும் கணவர்களை யிழந்த பெண்களும் உடன் சென்று, அந்நாளைத் திருநாளாகக் கொண்டாடுதல் எங்கள் நாட்டு மரபு.

ஊர்ப்பண்ணுடியின் மகள் வள்ளியம்மாள் உட்படக் கன்னிப்பெண்களும் மற்றைச் சிறுமிகளும் அவல், பொரி, கடலை, பழம், தேங்காய், வெல்லம், பச்சரிசி, பச்சைமஞ் சள், கரும்பு, கருமணி, ஓலை, நூலிழை ஆகிய இவற்றைத் தம் பெட்டிக் கூடைகளிலும் மடிகளிலும் நிரப்பி, சும்மாடு சுற்றித் தலையிலே பெட்டிக்கூடைகளை வைத்துக்கொண்டு,

தங்கள் தங்கள் உற்றார் பெற்றோரான பெண்கள் புடை சூழப் புறப்பட்டனர். புறப்பட்டவர்கள் திரள் திரளாய் ஊர் மந்தையில் வந்துசேர்ந்தனர்; எல்லோரும் வந்து கூடிய பின், எங்கள் ஊருக்குத் தெற்கேயுள்ள வறட்டாற்றை நோக்கிப் பூப்பறிக்கப் போனார்கள்.

அக் கன்னிப்பெண்கள் மற்றைப் பெண்கள் சூழ ஊரை நீங்கி வெளிப்போந்தது: விலையுயர்ந்த கற்கள் இழைத்த பொற்சடைவில்லையினின்றும் அக்கற்கள் கொத்தோடே பிரிந்து நகர்ந்ததுபோன்றிருந்தது; காட்டிலே படர்ந்த பூச்செடிகளில் தேனையுண்ட பட்டுப்பூச்சிகள், அக்காட்டை விடுத்துப் பூச்செடிகளோடே பறந்துபோனதுபோன்றிருந்தது; கடலினின்றும் பெரிய அலைகள் எழுந்து, நுரையைக் கொணர்ந்து கடற்கரையிலே பரப்பியதுபோன்றிருந்தது;மின்னற் கொடிகள், வானத்தைவிட்டு மேகங்கள் சூழப் புடைபெயர்ந்து சென்றதுபோன்றிருந்தது; மலையிலுதித்து மரங்களினூடே பாயும் அருவி, அம்மலையை நீங்கி மரங்கள் சூழ்ந்துவர இரைச்சலிட்டுச் சென்றது போன்றிருந்தது.

அப் பெண்கள் கூட்டத்திலே ஒருத்தி, தன் அருகே சென்ற ஒரு குமரியின் கொண்டை நெகிழ்ந்து அதினின்றும் மருக்கொழுந்து கீழே விழுவதைக்கண்டு, அவளை நிறுத்தி, அவள் கொண்டையை இறுக்கி முடிந்தபின் அக் குமரியின் முகத்தை நோக்கி, அவள் கன்னங்களிலே தன் விரல்களை யூன்றி நெட்டையெடுத்து, விரல்களுக்கு முத்தங் கொடுத்தாள்; அக்குமரி வெட்கி, தன் முன்றானையால் முகத்தை மூடிக்கொண்டனள். இளவயதினளான ஒரு விதவை தன்னருகே செல்லுங் குமரியை நோக்கி, "மேலைக்கு இன்னுக் காலம் நீ எந்த ஊர்லே பூப்பறிக்கிறயோ" என்று சொல்லிப் புன்னகை செய்தாள்;அது கேட்ட குமரி,

தன் தலைமீதிருந்த பெட்டிக்கூடையைச் சரேலென்று கீழே இறக்கி, அதில் எதையோ தேடுபவள்போல் உற்றுப்பார்த்தாள்; அருகில் இருந்தோரனைவரும் கொல்லென்று சிரித்தனர். ஒரு குமரிக்குப் பின்னே வெற்றிலை பாக்கு மென்று கொண்டு அவளோடு பேசிச் சென்ற ஒரு பெண், திடீரென நின்றாள்; குமரி திரும்பிப் பார்த்தாள்; அப்பெண் அவளை எறிட்டுப் பார்த்து, கட்குடித்து வெறியேறினவள்போல் தள்ளாடி நடந்து, தன் கைகளை நீட்டிப் பரப்பி, அக் குமரியைப் பிடிக்க விரைந்து சென்றாள்; அக்குமரி திரும்பிப் பார்த்தவண்ணமாகவே சிரித்துக்கொண்டு ஓடி, தனக்கு முன்னே செல்லுங் குமரிகள்மீது விழுதலும், அவர்களும் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு ஓடி, வயிறு வலிக்குந் துணையும் நகைத்து நின்றனர். ஒருவள் ஒரு பாட்டைப் பாடத்தொடங்கி, முதல் அடியைச் சொல்லி, ஒன்று மறியாதவள்போல் வாய்மூடிச் சென்றாள். அது கண்ட ஊர்ப் பண்ணுடியின் மகள் வள்ளியம்மாள் அவள் முன்றானையை வெடுக்கென அவிழ்த்துவிட்டாள். வள்ளியம்மாளுக்குப் பின்னே நின்ற மற்றொரு பெண், அவள் அறியாமல், சீவி முடிந்த அவள் தலையிலே, சிறிது அவலைத் தூவினாள். தன் தலையினின்றும் அவல் விழுவதைக் கண்டு, வள்ளியம்மாள் சினந்து, திரும்பி நின்று, தனக்குப் பின்னால் வருபவளைத் தூறினாள்; அப்பொழுது முன்றானை யவிழவிட்ட பெண் அவளைப் பார்த்து, "உனக்கு அப்படித்தான் வேணும்" என்று சொல்லிக் கேலி பண்ணினாள். வள்ளியம்மாளோடு ஒரு பேச்சேனும் பேசாதவர்களும், வலியவந்து அவளோடு ஒரு சிரிப்பேனும் சிரிக்காதவர்களும் அக்கூட்டத்தில் எவரும் இலர். அவள் அழகும் குணமும் எல்லோரையும் அவள் வசப்படுத்தின.

இங்ஙனமாக அவர்கள் பலவாறு பேசியும், விளையாடியும், நகைத்தும் ஊர் மந்தையை நீங்கி இட்டேரி வழியாய்ச் சென்று, ஆற்றங்கரையின் அருகிலுள்ள காடுகளை அணுகினர்.

அக்காடுகளில் அப்பெண்பிள்ளைகள் கூட்டங் கூட்டமாகப் பிரிந்துசென்று, தைமாதத்தில் மிகுதியாகப் பூக்கும் ஆவரம்பூ, பூளைப்பூ, ஊஞன்பூ முதலிய பூக்களைக் கைசோருந்துணையும் பறித்துத் தம் மடிகளிலும் பெட்டிக் கூடைகளிலும் குவித்தனர்.

இதற்குள் பொழுதும் உச்சிக்கு வந்தது. பின்பு அவர்கள் எல்லோரும் ஆற்றங்கரையை யடைந்து, அங்கே மர நிழலிலும் செடி நிழலிலும் தங்கிச் சிறிது இளைப்பாறினர். அங்கே தங்கி யிருக்கையில் அவர்கள் பேசிய பேச்சும் சிரித்த சிரிப்பும் எழுதவுமொண்ணாது, எட்டிலு மடங்காது.

சிறிது இளைப்பாறியபின் குமரிகளும் ஏனைச் சிறுமிகளும் ஆற்றில் இறங்கிக் குளித்தார்கள். குளிக்கையில் அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் நீரை வாரி யிறைத்தும், ஒருவரை யொருவர் பிடித்தும், ஓடியும், நீந்தியும், மூழ்கியும் நெடுநேரம் நீரில் விளையாடினார்கள். பின்பு எல்லோரும் கரைக்கு வந்து சிற்றாடைகளையும் சேலைகளையும் உடுத்திக்கொண்டனர். நீரில் மூழ்கியவர்கள் மீண்டும் மயிர் கோதிக் கொண்டையிட்டனர். யாவரும் திருநீறணிந்தனர்.

பின்பு சிறியோரும் பெரியோருமாகிய எல்லோரும் மாநிழலிலே தங்கி, ஆற்றங்கரையில் முளைத்த செடிகளின் இலைகளைப் பறித்து, அவற்றிலே தாம் கொணர்ந்த கடலை, பொரி, அவல், தேங்காய், பழம், பச்சரிசி, வெல்லம் முதலானவற்றை வைத்துத் தின்று, தண்ணீர் குடித்துப் பசி

யாறினர். எல்லோரும் வெற்றிலே பாக்குமென்று வேடிக்கை யாய்ப் பேசிக்கொண்டிருந்தனர்.

பின்பு பெண்பிள்ளைகளெல்லோரும் தங்கள் பெட்டிக் கூடைகளில் பூக்களை நிரப்பி எடுத்துக்கொண்டு, ஊரை நோக்கித் திரும்பினர். வரும் வழியிலே, அடுத்த ஊருக்குப் பிரிந்துபோகும் பாதை குறுக்கிட்டது. அங்கே எல்லாரும் நின்றனர். சிறிதுநேரத்தில் அவ்வூர்ச் சிறுமிகளும் பூப்பறித் துக்கொண்டு, அங்குவந்து, எங்களூர்ச் சிறுமிகளைச் சந்தித் தனர். சந்தித்த பெண்பிள்ளைகள் சண்டையிடுதல் தொன்று தொட்டுவரும் கொங்கு நாட்டு வழக்காதலால், அவர்கள் ஊரூராகப்பிரிந்து நின்று, சிறிதுநேரம் வாயாலும், கையா லும், காலாலும் ஒருவரையொருவர் ஏசினார்கள் ; முடிவில் பெரிய பெண்கள் பிரிக்கப் பிரிந்து தம் தம் ஊரை நோக்கிப் புறப்பட்டனர்.

எங்களூர்ச் சிறுமிகள் சிறிதுதூரம் நடந்தவுடன், ஊரிலிருந்து பறையர் கொட்டு முழக்கோடு வந்து அவர் களை வரவேற்றனர். பறையர்கள் வந்தபின் பெண்பிள்ளை கள் எல்லோரும் திரண்டு நின்று, பறையர்கள் கொட்டி முழக்கி முன்னே செல்ல, தம் பெட்டிக் கூடைகளைத் தலை மீது வைத்து, கீழே வரும் பாட்டைப் பாடிக்கொண்டு ஊரை நோக்கிச் சென்றார்கள்.

ஓலையக்கா(ள்) கொண்டையிலே ஒருசாடு தாழம்பூ,
தாழம்பூச் சிற்றாடை தலைநிறைய முக்காடு— (ஓலே).

நாழிநாழி நெல்குத்தி நடுக்கிணற்றிலே பொங்க(ல்)வைத்து,
நாட்டாரைக் கூட்டமிட்டு நடந்துபோறா(ள்) ஓலையக்கா(ள்)(ஓலே).

மேற்படியைத் தூர்த்துப்போட்டு வெற்றிலைக்காம்பைக் கிள்ளிப் [போட்டு,
மேனாட்டு ஓலையக்கா(ள்) மேற்கே குடிபோறா(ள்)— (ஓலே).

கும்பந் தலையிலே கோடாலி தோளிலே,
வன்னி மரம்பிளக்க வருகிறாளாம் ஓலையக்காள்— (ஓலே).

மஞ்சள் அறுபதென்பா(ள்) மைகோதி முப்பதென்பா(ள்);
மஞ்சட் குறைச்சலென்று மயங்கு’றாளா மோலையக்கா(ள்)- (ஓலே).

மாலே அறுபதென்பா(ள்) மைகோதி முப்பதென்பா(ள்);
மாலே குறைச்சலென்று மயங்கு’றாளா மோலையக்கா(ள்)— (ஓலே).

சீலே அறுபதென்பா(ள்) சிற்றாடை முப்பதென்பா(ள்);
சீலே குறைச்சலென்று சிணுங்கு’றாளா மோலையக்கா(ள்)—(ஓலே).

தான்போட்ட சிந்தாக்கைத் தான்கழற்ற மாட்டாமே,
தாயோடு சீராடித் தான்போறா(ள்) ஓலையக்கா(ள்)— (ஓலே).

அஞ்சடுக்குச் சிறுசட்டுவமாம் அரும்பேத்த மண்டபமாம்,
கொண்டெடுக்க மாட்டாமே குடிபோ’றா(ள்) ஓலையக்கா(ள்) (ஓலே).

பொரும்பி யடியிலே பொறிக்கோழி மேய்கையிலே,
பொரும்பி யலைக்கொட்டப் போ’றாளா மோலையக்கா(ள்)—(ஓலே).

தகரை யடியிலே தன்கோழி மேய்கையிலே,
தகரை யலைக் கொட்டத்தான் போறா(ள்) ஓலையக்கா(ள்)—(ஓலே).

கல் கிடக்குது கழுவாமே நெல்கிடக்குது குத்தாமே,
மேனாட்டு ஓலையக்கா(ள்) மேற்கே குடிபோ’றா(ள்)— (ஓலே).

ஓலையக்கா(ள்) கொண்டையிலே ஒரு சாடு தாழம்பூ,
தாழம்பூச் சுற்றிவரத் தாம்பாளங் கொட்டிவர— (ஓலே)

கட்டை தளதளெனக் கண்ணாடி மினுமினென,
பொழுது தளதளெனப் புறப்பட்டாளா மோலையக்கா(ள்)- (ஓலே).
அவரை சலசலென ஆடிமீ னோடிவர,
குதிரையெலாங் கொஞ்சிவரக் கொத்தளத்தார் குடைபிடிக்க,
(ஓலே).

பாக்குப் பதின் கலமாம் பச்சரிசி முக்கலமாம்,
எண்ணெய் இருநாழி இளந்தேங்காய் பத்தெட்டு,

இத்தனையும் கொண்டுவந்து இறக்கினுள் பந்தலிலே,
மலையாள பகவதிக்கு மாலையிடப் போருளாம்— (ஓலே).

கடுகாம் சிறுமிளகாம் காரணத்துக் கற்பூரம்,
நடுவே மணல் பரப்பி நல்லோலை புல்லோலை,
நாட்டுப்பனையோலை பேழைகொண்டு வருவாளாம்— (ஓலே).

முச்சிவைத்து முறம்வைத்து மூன்றிறகு ராட்டை வைத்து,
பானை கரி கழுவி பன்னீர் உலை வைத்து,
தென்னல் அரிசியைத் தீட்டிச் சமைத்துவைத்து,
ஆக்கினுள் சோறு கறி அலரிப்பூத் தன்னிறமாய்,
பொங்கினுள் சோறு கறி பொரசம்பூத் தன்னிறமாய்:
ஆக்கின கறிக்கு மேற்கறி யில்லாமே,
அள்ளி யெறிந்தாளே அழகான மார்மேலே,
துள்ளி விழுந்தாளே தூங்குமஞ்சற் கட்டிலிலே—
சிற்ருற்றங் கரைதனிலே சிறுமணல் கொழிக்கும் பெண்ணே,—
(ஓலே).

உற்ருரறியாமே உறவாட வல்லவையா?
தட்டாரறியாமே தாலி பண்ண வல்லவையா?
அடுப்புப் புகையாமே ஆக்கியிட வல்லவையா?
தாயோடு சீராடி நாயோடே போருளாம்— (ஓலே).

இவ்வாறு பாடிக்கொண்டு, சிறுமிகள் ஊருக்குட் சென்று பிள்ளையார் கோவிலை யடைந்து, பிள்ளையார் முன்னிலையில் பூக் கூடைகளை இறக்கிவைத்து நெடுநேரம் கொம்மியடித்தார்கள். பின்பு கூடைகளை யெடுத்துக் கொண்டு எல்லோரும் பூப்பொங்கல் வைக்கும்பொருட்டுத் தம் தம் வீட்டிற்குப் பிரிந்து சென்றனர்.

எங்கள் நாட்டுச் சிறுமிகள் மார்கழிமாதம் பிறந்த பின், ஒவ்வொருநாளும் விடியற்காலையி லெழுந்து, பல் விளக்கி, முகங்கழுவி, அவரவர் வீட்டுவாசலிலே கோல

மிட்டு, சாணத்தாற் பிள்ளையார் பிடித்துவைத்து, அக்காலத்தில் மிகுதியாகப்பூக்கும் ஆவரம்பூ, பீர்க்கம்பூ, பூசணிப்பூ முதலிய பூக்களையும், அறுகம்புல்லையும் பிள்ளையாருக்குச் சூட்டி, பிள்ளையார் கும்பிட்டு, அப்பிள்ளையாரைக் கருத்தாய் எடுத்து வீட்டுக் கூரையின்மேல் போட்டுவைப்பார்கள். பூநோன்பு வருவதற்குள் பிள்ளையார் எண்ணிக்கையில் நூற்றுக்கணக்காகப் பெருகி, வாழைக்காய் போன்றும் ஊமத்தங்காய் போன்றும் வடிவந்திரிந்து, தலையிற் சூடிய பூக்களும் உடம்பும் பனியால் நனைந்து வெய்யிலாலுலர்ந்து, கூரையின்மீது உட்கார்ந்தும் சாய்ந்தும் நின்றும் வீற்றிருப்பார். பூப்பொங்கலன்று சிறுமிகள் இப்பிள்ளையாரை யெடுத்து, ஆற்றிற் கொண்டுபோய் விடுவதற்காகப் பேழைகளிலும் பெட்டிக்கூடைகளிலும் தட்டுகளிலும் வைப்பார்கள்; மேலும், அன்று, தம்தம் வீட்டுவாசலில் மண்ணால் ஒரு பூத்திண்ணையும் போடுவார்கள். சிறுமிகள் பூப்பறிக்கச் சென்றபின், உள்ளூர் நாவிதர்கள் ஒவ்வொரு பூத்திண்ணையிலும் சுண்ணும்பால் ⊔ வடிவாய்க் கோலமிட்டு, அதனுள் நிலாப்பிறை, மைகோதி, சீப்பு, தேர் முதலானவற்றை எழுதிவிட்டுச் செல்வார்கள்.

பிள்ளையார் கோவிலை நீங்கிய சிறுமிகள் தம்தம் வீடு அடைந்து, பூத்திண்ணையிலே புதுப்பிள்ளையார் வைத்து, தாம் பறித்துவந்த பூக்களை அதன்மேற் கொட்டி, பூப்பொங்கல் இட்டார்கள். நாவிதனுக்கும் பறையனுக்கும் தனித்தனியாய் ஒவ்வொரு தளிகை வைத்துவிட்டு, வீட்டார் யாவரும் பொங்கலுண்டார்கள். சிறிது நேரங்கழிந்தபின், பெண்பிள்ளைகள் யாவரும் பிள்ளையார் எடுத்துக்கொண்டு, பிள்ளையார் கோவிலுக்குப் போய்ச் சேருதல்வேண்

டும் என்று வழக்கப்படி பறையன் பறைசாற்றினான். சிறுமிகள் பழம் பிள்ளையாரையும் புதுப்பிள்ளையாரையும் எடுத்துக் கொண்டு, அருமைக்காரர் வீட்டில் வந்துகூடி, முதலில் அங்கே கொம்மியடித்தார்கள். அருமைக்காரர் என்போர் கவுண்டர்கள் வீட்டில் சீர் சிறப்பு நடக்கும்பொழுது சடங்கு செய்யும் வேளாளர்களே. பின்பு எல்லோரும் மீளவும் பிள்ளையார் கோவிலுக்குச்சென்று சிறிதுநேரம் கொம்மியடித்து, பிள்ளையாரை ஆற்றிவிடும்பொருட்டு ஆற்றை நோக்கிச் சென்றார்கள். செல்லும்வழியிலே பறையர் கொட்டு முழக்காலும் 'ஓலையக்காள்' பாட்டாலும் எங்கும் சிலை எழும்பிற்று. ஆற்றையடைந்து சிறுமிகள் கீழ்வரும் பாட்டைப் பாடிக்கொண்டு தாங்கள் பல நாட்களாகப் போற்றிவைத்த பிள்ளையாரைப் பூவோடு ஆற்றில் இட்டார்கள்.

வட்ட வட்டப் பிள்ளையாரே, வாழைக்காய்ப் பிள்ளையாரே,
உண்ணுண்ணு பிள்ளையாரே, ஊமத்தங்காய்ப் பிள்ளையாரே,
வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி வளர்த்தினேன் பிள்ளையாரே,
வறட்டாற்றுத் தண்ணீரிலே ஓட்டிவிட்டேன் பிள்ளையாரே.

சிந்தாமல் சிதறாமல் பொறித்தேனே பூவே,
சிற்றாற்றுத் தண்ணீரிலே போ'றையே பூவே;
வாடாமே வதங்காமே வைத்திருந்தேன் பூவே,
வறட்டாற்று மேட்டிலே போ'றையே பூவே.

VII

அமாவாசைக் குறவன்.

கொங்கு நாட்டு வேளாளர்கள் ஒருவரோடொருவர் அடிக்கடி வழக்கிட்டுக் கச்சேரி புகுந்து வழக்காடிப் பணத்தை இறைத்துப் பாழ்படுத்துவார்களென்றும், சிலவேளைகளில் அவர்கள் வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறிக் கொலைகளும் கொள்ளைகளும் நடக்கும் என்றும் முன்னரே கூறினேன். பத்துப்பேர் பணக்காரர் உள்ள ஒவ்வொருசிறிய கிராமத்திலும் பண்ணாடிகளின் வழக்குக்கும் சண்டைக்கும் குறைவேயில்லை. எங்கள் ஊரிலும் இவ்வழக்குத் தலைமுறை தலைமுறையாய் நடந்து வந்தது. இவ்வழக்கில் ஊர்ப்பண்ணாடியும் அவருக்கு வேண்டுவோரும் ஒருதரத்தினர்; பண்ணாடி-காளியண்ண கவுண்டரும், கச்சேரி-முத்தக்காளும், அவர்களைச் சார்ந்தோரும் மற்றொரு தரத்தினர். இவ்விரு திறத்தாருக்கும் பொதுவான பகைவன் ஒருவன் இருந்தான், அவனே அமாவாசைக் குறவன்.

பண்ணாடி-காளியண்ண கவுண்டர் ஊர்ப்பண்ணாடிக்கு மாமன் ஆதல்வேண்டும்; ஆகவே., அவர்கள் இருவரும் நெருங்கிய உறவினர்கள். ஆதியில் காளியண்ண கவுண்டர் ஊர்ப் பண்ணாடிக்கு நிகரான பணக்காரரா யிருந்தார், ஆயினும் அவர் குடும்பம் நாளுக்கு நாள் அருகிவந்தது. அளவுக்கு மீறிச் செலவு செய்து அவர் கடனில் ஆழ்ந்தார். அவர் வீட்டு நாவிதனுக்கும் வண்ணானுக்கும் தலைக்குக் கூலி மாதம் ஒன்றுக்கு இரண்டுபிடா. ஊரில் எல்லோரும் தம் காட்டில் வேலை செய்வோருக்குக் கொடுக்குங்கூலி தலைக்கு நாள் ஒன்றுக்குப் பத்தணா, காளியண்ண கவுண்டர் கொடுக்குங் கூலி ஒருரூபா. அவர் மூன்று பெட்டிவண்டிகள் வைத்திருந்தார்:

அவை ஒன்றுக்கொன்று விலையுயர்ந்தவை; இரண்டு குதிரை வண்டிகள் வைத்திருந்தார் ; ஒரு வண்டிக்குதிரையும் ஒரு சவாரிக்குதிரையும் ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு வாங்கினார். நான்கு சோடி ஆலம்பாடி மாடுகள் அவரிடமிருந்தன: ஒவ்வொரு சோடியும் எண்ணூறு ரூபாவுக்குக் குறையாத விலை பெறுமானவை. இத்தனையும் அவருக்கு இன்றியமையாதன அல்லவாயினும், அவர் இவற்றோடு அமையாமல், தம் வீட்டில் ஒரு யானையையும் கட்டி வளர்த்தார். அவர் தமது மூதாதைகள் வசித்த பெரிய வீட்டை யிடித்து, ஆயிரக்கணக்காகச் செலவு செய்து புது வீடு கட்டினார். ஆயிரம் ரூபா கொடுத்து இராசபாளையத்திலிருந்து எட்டு நாய்களைக் கொண்டுவந்து வீட்டில் வளர்த்தார். எங்கள் ஊரையடுத்த சிறைக்காட்டிலே அவர் மரங்கள் வெட்டி, பன்முறை அகப்பட்டு, தப்பித்துக்கொள்வதற்குக் கச்சேரியில் வழக்காடி, ஒவ்வொரு வழக்கிலும் பத்தாயிரம் பதினையாயிரமாகச் செலவுசெய்தார். அவர் துரைத்தனத்தார் அநுமதியின்றி, தமது காட்டினருகே யிருந்த ஒரு பெரிய குளத்து நீரைப் பாய்ச்சித் தமக்குரிய பல புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற முயன்று, வேலைதொடங்கி, ஒன்றுக்கிரண்டாகக் கூலிகொடுத்து, அணைகட்டி வாய்க்கால் வெட்டிய பின், துரைத்தனத்தார் அநுமதி தராமையின் பெருந்தொகையை இழந்தார். அவருடைய சாப்பாட்டுச்செலவும் அளவுக்கு மீறியதே: அவர் ஒவ்வொரு நாளும் ஓர் ஆட்டுக் கடாவைக் கொன்று சமைத்து விருந்து செய்வார். அவர் தாமாக உண்டறியார்: அவர் உண்கையில் நாள்தோறும் பத்துப்பேருக்குக் குறையாமல் அவரண்டையிலிருந்து சாப்பிடுவார்கள். அவர் அயலூரிலிருந்து ஓர் துருக்க வைத்தியனை அழைத்து வந்து, ஒவ்வொருநாளும் ஓர் ஆட்டுக் கடாவைக்

கொன்று, அதன் புலாலினின்றும் ஒரு படி சாறு இறக்குவித்து, உடம்பில் வலுவேறும்பொருட்டு அதை அருந்துவது வழக்கம். அன்றியும் அவர் பெருந்தொகை செலவிட்டுப் பல மருந்துகளையும் செய்து தின்பார். கவுண்டர் தம்மைப் புகழ்வோருக்குக் கைகோணுமல் வாரிக் கொடுப்பார். மணியக்கார-குருசாமி ஐயர் திருட்டுப் புரட்டுச் செய்து அவரிடம் கொள்ளையடித்த பணத்தாலேயே செல்வராஞர் என்று ஊரார் சொல்வார்கள். காளியண்ண கவுண்டர் கண்ணை மூடிக்கொண்டு இத்தகைய செலவுகள் பலசெய்து பணத்தை யிழந்து, தமது வயல்களிற் பலவற்றை நாட்டுக்கோட்டைச் செட்டிகளுக்கு அடகு வைத்துப் பணம் வாங்கி, அதையும் சில நாட்களிற் செலவழித்துவிட்டார். முதலில் கவுண்டர் மேல் நாட்டுச் சாராயங்களை வாங்கிக் குடித்துக்கொண்டிருந்தார், கடன்பட்டு மெலிந்தபின் வருவாயின்றிக் கள் குடிக்கத் தலைப்பட்டார். நாள்தோறும் நான்கு குடங்கள் அவருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் செலவாகும். அவர் பல நாட்களுக்கு முன்னரே மனைவியை இழந்துவிட்டமையால், வீட்டில் வேலைசெய்யும் பணிப்பெண்களே அவருக்குக் காதற்கிழத்தியராயினர்.

காளியண்ண கவுண்டரிடத்தில் ஈகையும் இரக்கமின்மையும் ஒருங்கே குடிகொண்டிருந்தன. அவர் தம் வேலைக்காரர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்தாலும் அவர்களையடிப்பதற்கு அளவில்லை. தம் கட்டளையை மீறி நடந்த ஒரு வேலைக்காரனை விட்டத்தில் தொங்கவிட்டு, அவன் உடம்பு முழுவதும் இரத்தஞ்சொரிந்து அவன் குற்றுயிராகுந்துணையும் ஒரு முறை யடித்தார் பண்ணுடி. தம் சொற்படி நடவாத ஒரு வண்ணுனையும் வேலைக்காரனையும் அவர், எங்கள் நாட்டிலே சோளம் போட்டு வைக்கும்பொருட்டு நிலத்தில்

கிணறுபோல் தோண்டப்படும் சோளக்குழியில் இறக்கிக் குழியை மூடிவிட்டார், அவர்களுக்குச் சோளக்குழியே சவக்குழியாயிற்று. இத்தகைய நிலைமையிலிருந்த காளியண்ண கவுண்டர், ஆண்டுதோறும் செல்வப் பெருக்கடைந்த ஊர்ப்பண்ணாடி-சுப்பைய கவுண்டரைக்கண்டு பொறாமைப்படுதல் வியப்பன்று.

பண்ணாடி-காளியண்ண கவுண்டருக்கு மகன் ஒருவனே. அவன் பதினாறுட்டைப் பிராயத்தான். அறிவிலும் அழகிலும் சிறந்தவன். அவன் தெருவழியாய்ப் போகையில் ஊரிலுள்ள தச்சன், கொல்லன் முதலாயினோர் வீட்டுப் பெண்கள் அவன் மறையுந் துணையும் கண்கொட்டாது தங்கள் தங்கள் வீட்டு மதிலினருகில் நின்று எட்டிப் பார்த்து மகிழ்ந்து அவனை வாழ்த்துவார்கள். அவன் குணத்திலும் ஒழுக்கத்திலும் தந்தைக்கு முற்றிலும் மாறுபட்டவன். தன் தந்தையின் செய்கைகளை அவன் முற்றிலும் வெறுத்தானாயினும், செய்வது இன்னது என்பது தோன்றாமல் மனக் கவற்சிகொண்டிருந்தான். அவன் பெயர் வேலுச்சாமி.

எங்களூரில் ஒரு பண்ணாடிச்சிக்கு முத்தக்காள் என்பது பெயர். அவள் கணவன் இறந்து இப்பொழுது சில ஆண்டுகள் ஆயின. அவன் உயிரோடிருக்கையிலேயே மனைவியே கணவன், கணவனே மனைவி. அவள் வைத்தது சட்டம்: அவள் கிழித்த கோட்டைக் கடந்து கணவன் போதல் இயலாது. அவன் பெயரளவிற் கணவனா யிருந்தானேயன்றி, வீட்டுவேலை காட்டுவேலை எல்லாவற்றையும நடத்தினவள் அவளே. அறிவிலும் அழகிலும் மன உறுதியிலும் அவள் அவனினும் மேம்பட்டவளாதலின் அவன் அவளுக்கடங்கி நடந்துவந்தான். அவன் இறந்தபின் அவளே பண்ணாடியானாள்.

அவள் பெரிதும் அழகுடையவள். பலாச்சுளைபோன்ற நிறமும், கூரிய மூக்கும் விரிந்த கண்களும், மெல்லிய உடம்பும், சிற்றடிகளும் அவளை நோக்குவோர் கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவருந் தன்மையின. அவள் காலத்தில் எங்கள் வட்டத்தில் அழகில் அவளுக்கொப்பானவர்கள் இல்லை. அவள் விதவையான பின் வெள்ளைச் சேலை யுடுத்தியிருந்தனளேனும், அதுவும் அவளழகை எடுத்துக்காட்டுதற்கே பயன்பட்டது. அவள் தனது நீண்ட கூந்தலை முடிந்து தொங்கவிட்டிருப்பாள், அது அவள் முதுகின்மீது புரண்டு அழகு செய்யும். அவள் அழகினும் மன உறுதி பெரிது: அவள் எவருக்கும் அஞ்சாள்; அவள் ஆணாகப் பிறப்பது தவறிப் பெண்ணாகப் பிறந்தவள்; எந்தக் கூட்டத்திலும் அச்சமின்றிப் பேசுவாள்; அவளுடைய கண்டம் மணியடித்தது போன்றிருக்கும். அவளோடு எதிர்த்துப் பேசுவதற்கு ஆண்பிள்ளைகளும் துணிவுறார். அவள் காட்டிலும் வீட்டிலும் வேலைக்காரர்களை அச்சுறுத்தி வேலைவாங்குவாள்; அவள் இரைந்துபேசுவாளாயின், வேலைக்காரர்கள் நடுங்குவார்கள். ஆண் மக்களைப் போலவே அவள் வண்டியோட்டுவாள், ஏர் பிடிப்பாள். அவளுடைய காடுகள் எங்கள் ஊருக்குத் தெற்கே மலையடிவாரத்தில் சிறைக்காடுகளினருகில் இருந்தன. அச் சிறைக் காட்டினின்றும் அவள் இரண்டு பெரிய யானைக் கொம்புகளைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோய்விட்டாள் என்று கேள்வியுற்று, அவற்றை அவளிடமிருந்து மீளவும் அடையுமாறு அரசாங்கத்தார் எங்கள் வட்டத்துத் தாசில்தாரை அனுப்பினார்கள். அவர் எங்களூருக்கு வந்து மணியக்காரர் சாவடியில் தங்கி, முத்தக்காளை அழைத்துவருமாறு ஆளனுப்பினர். முத்தக்காள் வந்தபின், தாசில்தார் தாம் வந்த

அலுவலைச் சொன்னார். அவள் யானைக்கொம்புகளைத் திருப்பிக் கொடுப்பதில்லையென்று கூறவே, தாசில்தார் கடிந்து பேசத்தொடங்கினார். அவள் தாசில்தாரால் ஆனதைச் செய்துகொள்ளும்படி சொன்னாள். தாசில்தார் பின்பு நயந்து பேசினார். முத்தக்காள் அவரினும் நயந்து பேசலானாள். அவள் பேசப்பேச, தாசில்தார் தம்மையும் தாம் வந்த காரியத்தையும் மறந்து, அவள்வாயிலிருந்து வருஞ்சொல் ஒவ்வொன்றையும் பாடம் பண்ணுபவர் போல் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார். பின்பு தாசில்தாரும் முத்தக்காளோடு அவள் வீடு சென்று, சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விடைபெற்றுக்கொண்டு, தமது ஊருக்குப் போய், தாமே நேரிற் சென்று விசாரித்ததாயும், முத்தக்காள் யானைக்கொம்புகளை எடுத்துக்கொண்டு போகவில்லையென்றும் அரசாங்கத்தாருக்கு அறிவித்தார். முத்தக்காளின் கணவனிறந்தபின் ஊர்ப்பண்ணடி சில நிலங்களைப் பற்றி அவள்மீது வழக்குத்தொடர்ந்தார். முத்தக்காள் தானே நேராகச் சென்று, கச்சேரியில் தன் வழக்கை யெடுத்துச்சொல்லி வெற்றியோடு மீண்டாள். அதுமுதல் அவளுக்குக் கச்சேரி-முத்தக்காள் என்னும் பெயர்வழங்கிற்று. பின்னர் அவள் இதைப்போன்ற பல வழக்குகள் வென்று வந்ததுண்டு.

முத்தக்காள் தன் கணவனிறந்தபின் ஒரு புதுவீடு கட்டி, அதைக் கண்ணாடிபோல் வைத்திருந்தாள். அவ்வீட்டின் தரையெல்லாம் சாணமிட்டு மெழுகியிருக்கும்; அச்சாணத்தில் மெழுகினவர்களின் கைவிரல்கள் பதிந்து காய்ந்திருக்கும்; அங்கே சிறிது குப்பையையும் காண்டலரிது. அந்த வீட்டிற்குள் நுழைவோர் தம்மைத் தாமறியாமலே கால் துடைத்துக்கொண்டு போவார்கள்.

கச்சேரி-முத்தக்காளுக்கு ஒரே மகள் இருந்தாள். அவள் பத்துவயதினள். தாயாரின் அழகு அவளிடத்துச் சிறிதும் இல்லை. தன் மகளைப் பண்ணுடி-காளியண்ண கவுண்டரின் மகனுக்கு மணஞ்செய்தல் வேண்டும் என்பது முத்தக்காளின் உள்ளக்கிடக்கை. ஆகவே, அவள் ஊரில் நடக்கும் வழக்குகளில் காளியண்ணகவுண்டர் பக்கமே இருப்பாள்.

எங்களூரில் அமாவாசை யென்ற பெயரையுடைய ஒரு குறவன் இருந்தான். அவன் அமாவாசையன்று பிறந்தமையாலோ, அமாவாசை யிருட்டைப்போல் கருத்திருந்தமையாலோ, அல்லது அமாவாசை நாட்களில் அவன் தன் தொழிலை நடத்தியதாலோ அவனுக்கு அப்பெயர் வழங்கியதாதல்வேண்டும். அவன் குட்டையான ஆள். அவன் கைகளும் கால்களும் மார்பும் உருண்டு திரண்டு உறுதியாயிருக்கும். அவனுடைய மயிர் கழுத்தளவு நீண்டு சுருண்டு தொங்கும். அவன் தன் கையில் முழங்கைக்குமேல் தோள் வரையிலும் பரவியுள்ள தசையை முறுக்கேற்றுவானாயின் அது தேங்காயளவு புடைத்துப் பருத்திருக்கும். சிலர்கூடிக் கொண்டு அரிவாளின் பின்புறத்தால் அத்தசைத்திரளை ஒருவர்பின்னொருவராய் எத்துணை வலுவாய் ஓங்கி யடித்தாலும், அவனுக்குச்சிறிதும் நோய் தோன்றாது. அவன் திருடும் கோழிகளைத் தலையைத் திருகி, உதிரத்தைக் குடித்துவிட்டு, அதன் பச்சை மாமிசத்தைத் தேங்காய் கடித்துக்கொண்டே தின்பான் என்று எங்கள் ஊரில் அறிந்தோர் சொல்லுகின்றனர். அமாவாசை என்ற பெயர் சொன்னால் எங்களூரில் அழுதபிள்ளை வாய்மூடும். தொட்டிலிற் கிடந்து தூங்காது அழும் பிள்ளைகளை அன்னையர் "அமாவாசை வாரான், பேசாதே" என்று சொல்லித் தூங்கவைப்பது வழக்கம். அமாவா

சை பெரிய வில்லாளி: ஐந்நூறு அடி தூரத்தில் ஒரு தேங்கா யோட்டைக் கவிழ்த்து, அதை வில்வளைத்து உண்டை கொண்டு அடிப்பானாயின், அவ்வோடு சில்லுச் சில்லாகப் போகும்; அவன் தென்னை மரத்தின்மீது மறைந்து உட் கார்ந்திருக்கும் கொக்கைக் குறிபார்த்து, அதன் தலையை அடித்து வீழ்த்துவதாய்ச் சொன்னால், உண்டை தலையி லேயே படும்; கண்ணிலடித்து வீழ்த்துவதாய்ச் சொன்னால், உண்டை கண்ணிலேயே படும். அவன் முன்பு எங்களூர்த் தலையாரியா யிருக்கையில், திருட்டில் இணையில்லாதவன் என்ற பெயர் படைத்தமையால் வேலையினின்றும் நீக்கப் பட்டான். எங்களூர்க் குடியானவர்கள் முன்னிரவில் கோழிகளைக் கூண்டில் அடைத்துவைத்து, மறுநாட் காலை யில் பார்த்தால் கூண்டுகள் வெறுங் கூண்டுகளா யிருக் கும்; மாலையில் அவரைப் பந்தலிலும் பீர்க்கம் பந்தலிலும் பூத்துக் காய்த்திருந்த காய்கள், மறுநாட் காலையில் மாய மாக மறைந்துவிடும்; பட்டிகளிலும் வீட்டுக் கொல்லைகளி லும் இரவில் அடைத்திருந்த மாடுகள், நெடுந்தூரம் வழி நடந்து காலையில் ஒரு புதிய ஊரிற் சென்று தங்கும். இவற் றிற்கெல்லாம் காரணம் அமாவாசைக் குறவன் என்பதை எங்கள் ஊரார் பல நாள் முயன்று அரிதின் அறிந்துகொண் டார்கள். அமாவாசை அயலூர்களிலுள்ள குறவர்களுக் கெல்லாம் தலைவன், அவர்களுக்குள்ளே அவன் சொல் லுக்கு இரு சொல் கிடையாது.

அவன் சிறு குடியானவர்களின் பொருள்களைக் கொள் ளையடித்ததோடு நில்லாமல், நாளடைவில் பண்ணாடிகளையும் பதம்பார்க்கத் தலைப்பட்டான். அவன் காட்டுப்பன்றிபோல் இரு கொம்புகளுடைய ஒரு பெரிய பன்றி வளர்த்துவந் தான். அது தடையின்றிக் குடியானவர்களின் காட்டிலே

நுழைந்து பயிர்களை அழித்து, ஓட்டவருவோரை எதிர்த்து உர் உர் என்று உறுமித் துரத்தும். ஊரார் எல்லோரும் அதன்மீது பழிவைத்திருந்தனர். இது ஒருநாள் காளியண்ண கவுண்டரின் தோட்டத்தில் நுழைந்து கத்தரிநாற்றுக்களையழித்துவிட்டது. கவுண்டர் அதைக்கொல்லும்படி தமது ஆட்களுக்குக் கட்டளை யிட்டார். இதற்குப்பின் சில நாளில் ஊர்ப்பண்ணாடியின் பட்டியில் நான்கு செம்மறியாட்டுக்கடாக்களும், கச்சேரி—முத்தக்காளின் தோட்டத்தில் ஒரு மூட்டை பருத்திக்கொட்டையும், காளியண்ண கவுண்டர் தோட்டத்தில் ஒரு தோற்பறியும் காணாமற்போயின. எப்பொழுதும் பகைவர்களான இம்மூவரும் பொருளிழந்தமையால் தம் பகையையும் மறந்து, ஒன்றுகூடி, அமாவாசையின்மேல் வழக்கிட்டு, அவனை மூன்று வருடம் கொட்டறையிற் சேர்த்தனர்

மூன்று வருடங் கழிந்த பின்னர், அமாவாசை எங்கள் ஊருக்குத் திரும்பிவந்தான். அவன் வந்த நாள், பெரியவர்களும் சிறியவர்களும் அவன் எங்குப்போனாலும் பின் தொடர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவன் வந்த மறுநாள் அமாவாசை. அன்றிரவு ஓர்ஆள் வந்து அமாவாசையின் குடிசைக் கதவைத்தட்டி, அவனை ஊர்ப்பண்ணாடி கூட்டிக்கொண்டு வருமாறு சொன்னதாய்க் கூறி, அழைத்துச் சென்றான். அவன் ஊர்ப்பண்ணாடியினிடத்தில் யாது பேசினான் என்பதை நாம் அறியோம். பண்ணாடி வீட்டினின்றும் அவன் திரும்பிவந்து கதவுமூடுஞ் சமயத்தில் கொங்காடை தரித்திருந்த மற்றோர் ஆள்வந்து, அவனைக் காளியண்ண கவுண்டரிடம் அழைத்துக்கொண்டு போனான். அங்கே கவுண்டர் வீட்டில் கவுண்டரும் முத்தக்காளும் இருக்கக் கண்டு, அமாவாசை அவர்களிடம் பேசி, அவர்களின் விருப்பப்படியே தான் செய்வதாய்

இசைந்து, விடைபெற்றுக்கொண்டு திரும்பி வருகையில், அவன் முகத்தில் வெற்றிக்குறியும் களிப்பும் தோன்றின. அமாவாசை இம்மூவரிடத்தும் பேசினது இன்னதென்பது நமக்கு விளங்காவிடினும், அப்பொழுது ஊரில் பகையும் வழக்கும் மிகுந்திருந்தமையால், அவர்கள் அன்று தம் பகைவர்களுக்கு யாதேனும் தீங்குபுரிய எண்ணி, அமாவாசையை அழைத்து, அவனுக்குத் தக்க பரிசு கொடுப்பதாய் வாக்களித்து, அவனுதவியை நாடியிருத்தல்வேண்டும் என்பதை நாம் துணிந்து சொல்லலாம். அவனும் அவர்களுக்கு உதவிபுரியும் முகத்தான் அவர்கள்மீது தன் பழைய பழியையும் தீர்த்துக்கொள்ளுதல் எளிதென்று எண்ணி மகிழ்ந்திருத்தல் வேண்டும் என்பதும், அவர்கள் ஒருவரைக் கெடுக்க ஒருவர் தனித்தனி செய்த சூழ்ச்சியை அவன் வெளிப்படுத்தவில்லை என்பதும் வெளிப்படை.

அன்று இரவு நடுச் சாமத்தில்,ஊரில் தூரத்திலே, அங்கங்கே ஒவ்வொரு நாய் குலைக்கும் வேளையில், அமாவாசைக் குறவன் குடிசையிலிருந்து பதின்மர், தலையிலிருந்து கால் வரையிலும் கம்பளி போர்த்துக்கொண்டு புறப்பட்டனர். உற்று நோக்கினோர்க்கு அவர்கள் கைகளிலே இருப்புப் பூண் பிடித்த தடிகள் இருந்தது தோன்றும். அவர்கள் ஓசைபடாமல் நடந்து, ஊருக்குக் கிழக்கே ஊர்மந்தையினின்றும் போகும் வழியிலே சிறிதுதூரம் சென்று, புதர்களடர்ந்து இருண்டிருந்த ஓரிடத்துக்கு வந்ததும், அமாவாசை நால்வரைத்தெற்கே ஊர்ப்பண்ணடியின் காட்டை நோக்கி அனுப்பினான்; இன்னும் நால்வரை வடக்கே காளியண்ண கவுண்டரின் தோட்டத்தை நோக்கி அனுப்பினான்; மீந்திருந்த ஒருவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு கிழக்கு நோக்கி விரைந்து சென்றான்.

எங்கள் ஊருக்கு நேர் கிழக்கே நாலு கல் போனால் அங்கே ஒரு புளியந் தோப்பைக் காணலாம். அதற்குக் 'கொள்ளைக்காரன் தோப்பு' என்பது பெயர். அது எங்களூரிலிருந்து ஆள் எட்டாத தூரத்திலிருந்தமையாலும், அதற்கு அருகிலே ஊர் ஒன்றும் இல்லாமையாலும், எங்களூருக்கு அடுத்த பட்டணத்துச் சந்தைக்குப் போய்த் திரும்பும் வண்டிகளுக்கு வழி அத்தோப்பினூடே சென்றமையாலும், கொள்ளையடிப்பதற்கு அது தகுந்த இடம். பகலிலும் அவ்வழியே தனியாகச் செல்வோர் சுற்றிலும் பார்த்துக்கொண்டு விரைந்து நடப்பது வழக்கம். அத்தோப்பிலே காலங்கண்ட புளிய மரங்கள் ஏறக்குறைய நூறு உள்ளன. அங்கே பகலிலேயே வெய்யில் முகம் காண்பது அரிது. இரவில் உள்ளங்கை கண்ணுக்குத் தெரியாமல் எங்கும் இருள் மூடியிருக்கும்: மரங்களிலுள்ள பூச்சிகள் கீச்சிடும் ஓசைதவிர அங்கே வேறு ஓசை கேளாது; அம்மரங்களில் மின்மினிப் பூச்சிகள் இடையிடையே பளிச்சுப் பளிச்சென்று வெளிச்சம் காட்டும். அத்தோப்பின் நடுவே ஒரு பாழ்ங்கிணறு உள்ளது. அக்கிணற்றினுள்ளும் வெளியிலும் வேம்பும் கற்றாழையும் கள்ளியும் நெருங்கிப் படர்ந்து பார்ப்போருக்கு அச்சத்தை விளைவிக்கும். அத்தோப்புக்கருகிலே, ஒரு புறத்திலே, பெரியகுளம் ஒன்றும் உண்டு.

அமாவாசைக் குறவனும் அவனுடைய நண்பனும் இத்தோப்புக்கு வந்து சேர்ந்தனர். மேற்சொன்ன பாழுங் கிணற்றுக்கப்பால் சிறிது தூரத்தில், வண்டிப்பாதைக்கு அருகே, ஒரு பெரிய புளியமரம் நின்றது. அதன் கிளைகள் வண்டிப் பாதைக்கு மேலே குறுக்கிட்டுப் பரவியிருந்தன. அக்கிளைகளிற் சில கீழே செல்லும் வண்டிக் கூடுகளின் மீது உராயத்தக்க உயரத்திலிருந்தன. அமா

வாசை தன் நண்பனை அப்புளியமரத்தினடியில் நின்று, அன்று சந்தைக்குச் சென்றிருந்த கச்சேரி—முத்தக்காளின் வண்டிகள் அவ்வழியே வரும் ஓசை கேட்டவுடன் தனக்கு அறிவிக்குமாறு கட்டளையிட்டு, தான் பாதைக்குக் குறுக்கே சென்ற ஒரு பெரிய கிளையில் தாவி உட்கார்ந்து, ஒரு கிளையில் தலைவைத்து, மற்றொரு கிளையில் கால்நீட்டி, தன் நண்பன் கொண்டுவந்த கலயத்தை வாங்கி, அதிலிருந்த கள்ளை முற்றிலும் ஒரே மூச்சில் குடித்துவிட்டு, தன் மடியிலிருந்த புகையிலையை எடுத்து ஒரு சுருட்டுச் சுருட்டி தீக்குச்சி கிழித்து நெருப்புப் பற்றவைத்துச் சுருட்டுக் குடித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு ஒரு நாழிகை கழிந்த பின், கிறிச்சுக் கிறிச் சென்று சத்தமிட்டுக் கொண்டு நான்கு சந்தை வண்டிகள் தோப்பின் கீழ்புறத்தில் நுழைந்தன. கச்சேரி—முத்தக்காள் காலஞ் சென்ற தன் தம்பி மகனுக்குக் காது குத்தக் கருதி, அடுத்த சந்தையில் வேண்டும் பொருள்களை வாங்கிக் கொண்டு வருமாறு தன் ஆட்கள் பத்துப் பேரை நான்கு வண்டிகளோடு அனுப்பியிருந்தனள். அமாவாசையின் நண்பன் வண்டிகளின் வருகையை உணர்த்தி, மரத்தடியில் பதுங்கினன். அமாவாசை நிமிர்ந்து உட்கார்ந்து கொட்டாவி விட்டு, வண்டிகள் மரத்தடியில் வந்தவுடனே அவற்றின்மீது பாய்வதற்குச் சித்தமாயிருந்தான். முதல் வண்டியிவன் கீழ் வருதலும், இவன் சரேலென்று கிளையிலிருந்தபடியே வண்டிக் கூட்டின்மேல் தாவி உட்கார்ந்தான். உட்கார்ந்ததும் தன் கைவிரலை வாயில்வைத்து வலுவாய்ச் சீழ்க்கை யடித்தான். மரத்தடியிலிருந்த அவன் நண்பன் மறு சீழ்க்கை கொடுத்தான். அக்கணமே வண்டியிலிருந்தோர் யாவரும் திடுக்கிட்டனர். அமாவாசை இடிபோன்ற குரலில்

"அடே, வண்டியை நிறுத்துங்கடா" என்று கூவினான். வண்டிக்காரர்கள் அமாவாசையின் குரலை நன்கறிந்தவர்களாதலால், அவன் சொல்லுக்கு மீறி நடந்தால் தமக்குக் கேடு சூழ்வது உறுதி யென்றெண்ணி அவன் சொற்படி செய்தனர். அமாவாசை வண்டிக்கூட்டின் பின்புறம் நகர்ந்து சென்று, கூட்டின் ஓரத்தை ஒரு கையாற் பற்றிக்கொண்டு, குனிந்து, மற்றொரு கையை வண்டிக்குள் விடுத்துத் தடவிப் பார்த்தான். அவன் கை ஓர் ஆளின்மேற் பட்டதாயினும், அந்த ஆள் மூச்சுக்கூட விடவில்லை. அமாவாசை தடவிப் பார்த்தபொழுது அந்த ஆளின் தலை மயிர் அவன் கைக்கு அகப்பட்டதால், அவன் கூட்டின்மீது படுத்துக் கொண்டே இருகைகளையும் வண்டிக்குள் விட்டு, அந்த ஆளின் தலைமயிரைப்பற்றி ஆளை வெளியே இழுத்தான். உள்ளே இருந்த ஆள் மணியக்கார-குருசாமி ஐயர். அவர் அடுத்த பட்டணத்துக்கு ஓர் அலுவலாகப்போய், இராத்திரி கச்சேரி-முத்தக்காளின் வண்டியிலேறி, ஊருக்குத் திரும்பிவந்துகொண்டிருந்தார். அமாவாசை அவரை இருகைகளாலும் இழுத்து வண்டிக்கு வெளியே அந்தரத்தில் நிறுத்தினான். ஐயர், "எங்கப்பா, அமாவாசை, அமாவாசை, என் உயிரைக் காப்பாத்து, உனக்குப் புண்ணியமாப் போறது. உனக்குக் கும்பிடுபோடறேன், உங்காலைப் பிடிக்கிறேண்டா, சாமி, என்னைக் காப்பாத்து, ஊருக்குப் போனதும் உனக்கு நூறு ரூபா குடுக்கறேன்" என்று ஓலமிட்டார். அமாவாசை அவரை ஓர் ஆட்டு ஆட்டி, "ஏண்டா பாப்பா, வெள்ளாளர்கூடச் சேர்ந்துகிட்டுக் கொட்டறைக்கி அனுப்பினையே, அப்பொ நல்லா இருந்ததா? கெட அப்படி, வாயி தொறந்தயோ, தீத்துப்போட்டண்ணு வச்சுக்கோ" என்று கூறி; இடதுபுறம் வீசி யெறிந்துவிட்டு, வண்டியி

னின்றும் கீழே குதித்து, வண்டிக்காரர்களைக் கூவி, வண்டிகளை யவிழ்த்துவிடுமாறு சொன்னான். வண்டிக்காரர்கள் ஈரற்குலையைக் கையிலே பிடித்துக்கொண்டு, பேசாது அவன் கட்டளைப்படி செய்தனர். பின்பு அமாவாசை வண்டியிலிருந்த பொருள்களை யெல்லாம் வண்டிக்காரர் மீது ஏற்றுவித்துக்கொண்டு, அருகே இருந்த பாழ்ங்கிணற்றுக்குப் போய், அப்பொருள்களை யெல்லாம் அதற்குள் எறிந்துவிட்டு, வண்டியிலிருந்தவர்களுடைய பணத்தை அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டு, அவர்களைத் தன் நண்பன் உதவியால் புளியமரங்களில் வண்டிக்கயிறுகொண்டு இறுகக் கட்டினபின், வண்டிக்காளைகளை யவிழ்த்துத் தன் நண்பனிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, மண்ணைக் கௌவிக்கொண்டு கிடந்த ஐயரிடம்போய், அவர் தனக்கு அவ்வப்பொழுது செய்த தீங்குகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி, அவர் தரித்திருந்த கடுக்கன்களையும் பட்டுக்கரை வேட்டிகளையும் பறித்துக்கொண்டு தன் குடிசையை நோக்கிச் சென்றான்.

இதற்குள் அவனுடைய ஆட்கள் ஊர்ப்பண்ணாடியின் காட்டில் ஒரு பட்டியில் நுழைந்து, பட்டியாட்கள் இருவரைக் கயிற்றால்கட்டி அருகிலிருந்த கிணற்றில் போட்டுவிட்டு, சில ஆடுமாடுகளைப் பற்றிக்கொண்டுபோயினர். காளியண்ண கவுண்டரின் தோட்டத்துக்குப்போன ஆட்கள், அவருடைய சோளத்தட்டுப் போர் இருபதிலும் தீ வைத்துவிட்டு, சவாரிக்காளைகள் நான்கைப் பிடித்துக்கொண்டு போயினர்.

மறுநாட்காலையில் எங்கள் ஊரெங்கும் அமாவாசையின் பேச்சே பேச்சாயிருந்தது. காளியண்ண கவுண்டரும் கச்சேரி - முத்தக்காளும் அவன் தங்களுக்குத் தீங்

கிழைத்தான் என்பதை முதலில் நம்பாதவர்களாயிருந்து, தங்கள் ஆட்கள் வந்து தோட்டத்திலும் தோப்பிலும் நடந்தவற்றை விவரித்துச் சொன்னபின் ஐயம் நீங்கினவர்களாய், உள்ளங் கொதிப்புற்று, அடுத்த பட்டணத்திலுள்ள போலீசதிகாரியை அழைத்துவரும்படி வண்டி அனுப்பி, அமாவாசைக் குறவன் வீட்டுக்குக் காவல்வைத்து, அதிகாரியின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். அமாவாசை இவையொன்றையும் கவனியாது வெறிக்கக் குடித்துத் தன் குடிசையில் குறட்டையிட்டு உறங்கிக்கொண்டிருந்தான். ஊர்ப் பண்ணுடி அன்று, முதற் கோழி கூப்பிடும் நேரத்தில் எழுந்திருந்து, கந்தையனையும் அழைத்துக்கொண்டு மலையை அடுத்த தமது தென்காட்டிற்கு வண்டியோட்டிக்கொண்டு போயிருந்தார். ஊரில் நடந்ததொன்றையும் அவர் அறியார்.

அமாவாசை அகப்பட்டான் என்று கேள்வியுற்று, போலீசதிகாரி பத்துச் சேவகர்களோடு விரைந்து வந்து சேர்ந்தான். காளியண்ண கவுண்டரின் ஆட்களும் கச்சேரி-முத்தக்காளின் ஆட்களும் ஊர்ப்பண்ணுடியின் ஆட்களும் அரிவாள், தடி, ஈட்டி முதலியவற்றை எடுத்துக்கொண்டு சென்று அமாவாசையின் குடிசையைச் சூழ்ந்துகொண்டனர். ஊரிலுள்ள ஆடவர், பெண்டிர், சிறியோர் எல்லோரும் அங்கே திரண்டு நின்றார்கள்.

குறத்தியொருவள் சனங்கள் கும்பலாய் வருதலைக் கண்டு, ஓடி, தூங்கிக்கொண்டிருந்த அமாவாசையை எழுப்ப முயன்றும் முடியாமல், உரத்த குரலில் அவனைச் சூழ்ந்த கேட்டைச்சொல்லி மறைந்தாள். அமாவாசை சிறிது கண் விழித்து, அவள் சொன்னதை அரைகுறையாய்க் கேட்டு, வெறியினால் அதைப் பொருட்படுத்தாமல் படுக்கையிலேயே கிடந்தான்.

அமாவாசையின் குடிசை வாயிலுக்குமுன் போலீசதிகாரியும் அவனுடைய சேவகர்களும் நின்றார்கள். காளியண்ண கவுண்டரும் முத்தக்காளும் அவனருகில் நின்றுகொண்டு தங்கள் ஆட்களை ஏவி, வீட்டைச் சுற்றி மற்றைய மூன்று பக்கங்களிலும் நின்று அமாவாசையைக் கைப்பிடியாய்ப் பிடிக்குமாறு கட்டளையிட்டனர். அதிகாரியின் சேவகர்கள் அமாவாசையைக் கூவிக் கதவைத் திறக்குமாறு பணித்தனர். வீட்டிற்குள்ளிருந்து யாதொரு அரவமும் கேட்கவில்லை. நான்கு சேவகர்கள் முன்னேறி, அமாவாசை வீட்டின் கதவைக் காலா லெட்டியுதைத்தார்கள். கதவையடித்த அரவங்கேட்டு அமாவாசை விழித்தெழுந்து, பிடரி மயிரைக் குலுக்கி, அருகே ஒரு மூலையில் வைத்திருந்த ஓர் ஈட்டியையும் அரிவாளையும் கையிலெடுத்து, கலங்கிய தன்னறிவை ஒரு வழிப்படுத்தி ஒருகணம் சிந்தித்தான். இதற்குள் கதவின்மேல் அடிகள் இன்னும் வலுவாக வீழ்ந்தன. அடுத்த கணத்தில் கதவு உடைந்து வழி திறப்பது உறுதியென்று அவனுக்குத் தோன்றிற்று. அப்பொழுது வீட்டின் பின்புறத்தில் சில ஆட்கள் குடிசைமீதேறி, அங்கே உட்கார்ந்து குடிசையைப் பிய்த்தெறிவதை அவன் கண்டு, துணுக்கெனப் பாய்ந்து, அவர்களில் முதலில் நின்றவனின் கழுத்தை நோக்கி ஈட்டியாற் குத்தினான். அது அவன் கழுத்தில் நுழைந்து பிடரி வழியாய் வெளியே வந்தது. அமாவாசை ஈட்டியைக் கீழே இழுத்ததும் குத்துப்பட்டவன் வீட்டுக்கூரையின் கீழ் போட்டிருந்த மூங்கிற்றப்பைகளின்மேல் விழுந்தான். அமாவாசை அரிவாளால் அவன் மண்டையை வெட்டவே, அவன் இரத்தஞ் சொரிந்து மாண்டான். அவனுக்குப் பின்னால் நின்ற ஆட்களெல்லோரும் இறங்கி ஓடிவிட்டார்கள். அமாவாசை அரிவா

ளால் வெட்டிய அக்கணமே தாளுடைந்து கதவு படீரென்று திறந்தது. அமாவாசை ஒரே பாய்ச்சலில் வாயிற்படியண்டை வந்து நின்றான். கதவு திடீரென்று திறந்தமையினாலே காலாற் கதவையுதைத்த இரண்டு சேவகர்களும் நின்ற நிலை தவறி வாயிற்படியின்மேல் விழுந்தார்கள். அரை நொடியில் அமாவாசை அவர்களில் ஒருவனைத் தலைமயிரைப்பற்றிச் சரேலென்று உள்ளே இழுத்தெறிந்து, அவன்மீது ஒரு காலையூன்றி, வாயிற் படியில் குறுக்கே கிடந்த மற்றொரு சேவகன் எழுந்திருப்பதன்முன் அவன் நொறுக்குண்டு போகும்படி அவன்மீது கதவை வலுவாக மூடினான். அச் சேவகனின் தலை புண்பட்டது, அவன் விலாவெலும்புகள் முறிந்துபோயின. இவை யாவற்றையுங் கண்ட சேவகர்களும் ஆட்களும் அதிகாரியும் மற்றையோரும் பயந்து பின்னாலே ஓடிவிட்டனர்.

கோழிநெஞ்சு படைத்த வீரனான அவ்வதிகாரி தான் புறங்கண்டதைப் பிறர் பார்த்து நகைப்பார்களென்று நாணி, அமாவாசை வீட்டைவிட்டு வெளியே வாராமையால் சிறிது திடங்கொண்டு, மீளவும் தன் சேவகர்களை முன்னாலே செல்லும்படி ஏவி, அவர்கள் மறைவிலேயே நடந்து குடிசைக் கதவை அடைந்தான். அடைந்து யாது செய்வது என்பது தோன்றாமல் நிற்குந் தருணத்தில், கதவுக்குப்பின் ஒளிந்து நின்று கதவின் இடுக்கு வழியாய் வெளியே நிகழ்ந்தவற்றைக் கண்ணுற்ற அமாவாசை, அதுவே நல்ல சமயம் என்று எண்ணி, திடீரென்று கதவைத் திறந்து வெளியே பாய்ந்து, முன்னணியில் நின்ற அதிகாரியின் தொந்திவயிற்றில் காலால் ஒரு வலுத்த உதை வைத்தான். அதிகாரி தலைப்பாகை கழன்றோடும்படி மல்லாந்து வீழ்ந்தான். அதே நொடியில் அமாவாசை அதிகாரிக்குப் பக்கத்தில் நின்றிருந்த

ஓர் ஆளின் மார்பில் தன் ஈட்டியைப் பாய்ச்சி மீளவும் பாய்ந்து தன் குடிசைக்குள் நுழைந்து கதவை மூடிக்கொண்டான். மார்பில் காயம் பட்டவர் பண்ணுடி—காளியண்ண கவுண்டர். அவர் அங்கேயே மாண்டார்.

உதைபட்ட அதிகாரி சிறிதுநேரங் கழிந்து, மயக்கந் தெளிந்து ஒருவாறு எழுந்து நின்ருன். பின்னர் அவனும் கச்சேரி-முத்தக்காளும் மற்றையோரும் ஒன்றுகூடிச் சிந்தித்து, அமாவாசையின் வீட்டை நெருப்புக் கிரையாக்குவதே தக்கது என்று முடிவுசெய்தார்கள். அவ்வாறே அவர்கள் மண்ணெண்ணெயைக் கொண்டுவந்து அமாவாசையின் வீட்டின்மேல் தெளித்து, வீட்டின் பின்பக்கத்தில் தீ வைத்தார்கள். வீடு தீப்பற்றி எரியத்தொடங்கிற்று. அமாவாசை வெளியே வந்துவிடுவான் என்று பயந்து அதிகாரியும் சேவகர்களும் தூரத்திலே நின்று, அவனைச் சுட்டுக் கொல்லல் வேண்டும் என்று எண்ணி தம் வெடிகளை எடுத்துக் குறி பார்த்துக்கொண்டிருந்தனர். வீடு முழுவதும் கங்கும் புகையும் நெருப்பும் மூடி எரியவே, அமாவாசை வெப்பந் தாங்காமல், வருவது வந்தே தீரும் என்று நினைத்து, இடது கையில் அரிவாளும் வலது கையில் ஈட்டியும் ஏந்தி கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடிவந்தான். அவனைக் கண்டதும் சுற்றிலுமிருந்த சனங்கள் கூச்சலிட்டனர். அக்கணமே அமாவாசையின் மார்பிலும் முகத்திலும் வயிற்றிலும் ஆறு குண்டுகள் பாய்ந்தன; அதில் ஒரு குண்டு அப்பொழுது தான் அங்கு வந்து சேர்ந்த ஊர்ப்பண்ணுடி-சுப்பைய கவுண்டர் விட்டது.

இவ்வாருக அமாவாசைக் குறவன் மடிந்தானுயினும், அவன் புகழுடம்பு இன்னும் எங்களூரில் நிலைத்திருக்கின்றது. பண்ணுடி-காளியண்ண கவுண்டர் மடியவே, கச்சேரி-

முத்தக்காளும் அவள் மகனும் தங்களுக்கு உற்ற நண்பரை இழந்தனர். போலீசதிகாரி அன்று காட்டிய ஆண்மையை வியந்து துரைத்தனத்தார் அவரை இன்னும் மேலான பதவிக்கு மாற்றினார்கள் என்பது கேள்வி.

VIII

கடைக்காரி-காவேரியம்மாள்.

காவேரியம்மாள் காட்டிலே பூத்து உதிர்ந்துபோன மணமில்லாத ஒரு பூ; குச்சுவீட்டிலே ஒளிமழுங்கி எரிந்து அவிந்துபோன ஒரு விளக்கு; தோட்டத்திலே களையோடு தவறுதலாய்ப் பிடுங்கி யெறிந்த பலன் கொடுக்கும் ஒரு பூண்டு; வேலியிலே படர்ந்து நிழல் தந்து பட்டுப்போன காயாத மரங்களில் ஒன்று; வானிலே படர்ந்து சிறு துளி துளித்து மறைந்துபோன மேகம்; இன்ப துன்பங்களென்னும் ஆறுகள் அமைதியாகிய கடலிலே வீழ்ந்தது தோன்ற வந்த ஒரு கனவு.

காவேரியம்மாள் எங்களூரிலே பிறந்து வளர்ந்து திருச்சிக்குப் பக்கத்திலுள்ள ஓர் ஊரிலே ஓர் எளியவனுக்கு வாழ்க்கைப்பட்டு, ஆறுவது மாதத்தில் தன் கணவனை யிழந்து தான் பிறந்த ஊருக்குத் திரும்பிவந்தாள். அப்பொழுது அவளுக்கு வயது இருபது. அவளுக்கு இங்கே உற்றார் ஒருவரு மில்லாமையால் ஒரு சிறு கடை வைத்து வயிறு வளர்க்கத் தொடங்கினாள். தன்பால் அன்புள்ள வறியவளான தன் தங்கையையும் அவள் கணவனையும் தன் பக்கல் வாசஞ்செய்து, அவர்கள் குடும்பத்தையும் தானே காப்பாற்றிவந்தாள். தங்கை குழந்தைகளைத் தன் குழந்தைகளைப்போல் சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள். பத்து

வருடங் கழிந்தபின்பு தங்கை தன் குடும்பத்தோடு தூரத்திலேயுள்ள ஓர் ஊருக்குக் குடிபோய்விட்டாள். அவள் போனபின்னரும் காவேரியம்மாள் தான் மீத்துவைத்த பணத்தைத் தன் தங்கைக்கு அனுப்புவது வழக்கம். தங்கை மக்கள் இருவருக்குத் தன் செலவில் மணமுடித்து வைத்தாள். பின்னும் தங்கைக்கு வேண்டும் பொழுது தன்னுலியன்ற பண உதவி செய்ய அவள் பின் வாங்காள். நாளடைவில் அவள் கடை பெருகிவந்தது. அந்நாட்களில் இவ்வூரில் அவள் கடை ஒன்றே இருந்தது.

இப்பொழுது காவேரியம்மாளுக்கு வயது ஐம்பத்தைந்து. இத்துணைக்காலமும் அவள் இந்த ஊரிலேயே கடைவைத்து நடத்திவந்தாள். சிறுவயதில் அவள் கணவனை யிழந்தாளாயினும் இப்பொழுதும் அவள்மீது ஒருசிறு பழியுஞ் சொல்வார் எவரும் இலர்; சொல்வதற்கு எவருந் துணியார். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் ஈறாக இவ்வூரில் எல்லோரும் அவளை நன்கறிவார்கள். ஊர்க்கிணறு, ஊர்ப்பண்ணடி, காளியம்மன் கோவில், காக்கைப் புளியமரம் என ஊரில் வழங்கும் பொதுப்பெயர்களோடு காவேரியம்மாளின் பெயரும் இப்பொழுது சொல்லப்படுகிறது. அயலூர்களிலும் அவளை யறியாதோர் சிலரேயாவர். அவள் உண்மையும் நேர்மையும் ஊரெல்லாம் அறிந்தன. அவள் குணத்திலும் ஒழுக்கத்திலும் குழந்தைபோன்றவள்: கள்ளங் கபடு அறியாதவள்: பிறரை வஞ்சித்தல் இன்னதென்பதை யுணராதவள்: இரக்கமே உருக்கொண்டவள். தனக்கென்று சுகத்தை அவள் தேடினது என்றும் இல்லை. பறையர், சக்கிலியர் முதலாயின ஏழைகளுக்கு அவள் தன் கடையிலுள்ள பொருள்களை இருகைகளாலும் வாரிக்கொடுப்பாள், அவர்கள் இன்புறுவதே அவளுக்கு மகிழ்ச்சி. அவ்வேழை

கள் அவளைத் தாய்போற் போற்றி, எப்பொழுதும் அவளைச் சூழ்ந்திருப்பார்கள். மழையில்லாத பஞ்சகாலத்திலே அவர்கள் பிழைப்பதெல்லாம் அவளாலேயே ஆதலின், அவ்வேழைகளின் வீட்டில் அவள் பெயர் எப்பொழுதும் துதிக்கப்படும். அவ்வேழைகள் தங்கள்பண்ணடிகளான குடியானவர்களுக்குக்கூட அவ்வளவு பணிந்து இசைந்து வேலை செய்யமாட்டார்கள். காவேரியம்மாள் நாலைந்து நாள் தன் தங்கை வீட்டுக்குப் போயிருந்து வருவதாய்ச் சொன்னால், அவர்கள் எல்லோரும் கண்ணீர் உகுப்பார்கள். அவர்கள் வருந்துதல் கூடாதென்றெண்ணி அவள் ஒருநாளும் ஊரைவிட்டுப் போனது இல்லை. அவ்வேழைகள் அவளைத் தெய்வமாக மதித்து அவளுக்கு மனமாரச் செய்யும் குற்றேவலும் உதவியும் பார்ப்போர் மனத்தை உருகச் செய்யும். அவர்கள் தன்னை மதிக்கின்றார்கள் என்றறிந்து அவள் மீண்டும் இரக்கமும் ஈகையும் மிகுதிப்பட நடந்து கொள்வதன்றி, செருக்குறாள்; செருக்குறுவது எங்ஙனம்? செருக்கு இன்னதென்பதை அவள்என்றும் உணர்ந்திலளே. அவளுடைய அடக்கமும் பெருந்தன்மையும் ஊராரெல்லோரையும் தம் வசப்படுத்தின. ஊரிற் பெரியோர் காவேரியம்மாளுக்கு ஓர் உதவிசெய்ய நேரிடின், அதைப் பெரும்பேறாகக் கொள்வர்; அவளுக்கு உதவிவேண்டுவதாயின், ஆண்களும் பெண்களும் ஒருங்கே முந்துற்றுச் செய்வர். உண்மையும் நேர்மையும் மிக்க கொங்கு நாட்டார்களுள் இவள் ஓர் எடுத்துக்காட்டாவாள்.

காவேரியம்மாளின் வீடு ஊருக்கு நடுவே போகும் பாதையோரத்தில் உள்ளது. அதைச் சுற்றிலும் ஒரு பாதியில் ஒரு சுவரும், மற்றைப்பாதியில் செழித்து வளர்ந்ததோர் கொடிக்கள்ளி வேலியும இருக்கின்றன. அச் சுவர் ஓடைக்

கற்களாற் கட்டப்பெற்று, பல இடங்களிலே சிதைந்து இறுதியில் குட்டிச்சுவராய் முடிந்தது. சுவரின்மீதிருந்து வீழ்ந்த பெரிய கற்கள் அதனினின்றும் சிறிது தூரம் விலகி உருண்டு கிடக்கும். மற்றொரு பாதியில் சுற்றி வளர்ந்த கொடிக்கள்ளி வேலியிலே வேலிப்பருத்திச் செடி படர்ந்திருக்கும்; அங்கே குருவிகள் கிசு கிசு என்று சத்தமிடும்; வேலிக்கடியே கோழிகள் மேய்ந்துகொண்டிருக்கும். காவேரியம்மாளின் வீட்டுப் புறக்கடையும் வாசலும் அகன்று நீண்டவை. புறக்கடையில் பலவாண்டுகள் கண்ட ஒரு கருவேலமாமும், அதனருகில் சட்டி பானைகள் அங்கங்கே எறிந்திருந்த குப்பைமேடும் உள்ளன. வாசலில் நிலத்தில் தோண்டிய ஒரு பெரிய அடுப்பும் அதன்மீது வைத்த ஒரு பெரிய மிடாவும், சட்டிபானை கழுவினதால் கரித்தண்ணீர் படிந்த சிறிய இடமும் காணப்படும். காவேரியம்மாளின் வீடு இப்பரந்த இடத்தின் நடுவில் அமைந்த ஒரு குச்சு வீடு: அது ஐந்து அங்கண இடங்கொண்டது; கம்பந்தட்டால் வேய்ந்தது. அவ் வீட்டுக்கு ஒரு சிறிய திண்ணையும், வீட்டினுட் செல்வோர் குனிந்து போகாவிடின் தலை முட்டிக்கொள்ளும் படியான ஒரு நிலையும், சிறு சந்துகள் நிறைந்த ஒரு கதவும் சிறப்பானவை.

அவ்வீட்டினுள்ளே, இடது பக்கத்துச் சுவரண்டையில் அடுப்பும் சட்டிபானைகளும், பருப்புக்கடை மாம் அகப்பை முதலியனவும் உரிகளும் உள்ளன. இதுவே காவேரியம்மாளின் சமையலறை. அடுப்பிலே நேற்றுச் சமைத்து மீந்த பருப்பும் புளிச்சாறும் சுண்டவைத்திருக்கும். அடுப்பு மூலையில் தீ யெரிக்கும்பொருட்டு மொச்சைச் செடியின் கொடிகள் குவியலாக வைத்திருக்கும். தண்ணீர் மொள்வதற்கு ஒரு செம்பும், குடிப்பதற்கு ஒரு கிண்ணமு

மன்றி இங்கே வேறு பாத்திரங்கள் காணவில்லை. கதவுக்கு இடப்புறமிருந்து கழுத்தளவு உயர்ந்த ஒரு சுவர் அவ்வீட்டின் குறுக்கே பாதிதூரம் நீண்டுள்ளது. கொங்கு நாட்டில் அதற்குக் 'கண்ணுடிச் சுவர்' என்பது பெயர். ஆயினும் இங்கே காவேரியம்மாளின் வீட்டில் அச்சுவரின்மேல் கண்ணுடியைக் காணேம்; ஒரு மைகோதியும் ஈர்கோலியுமே கிடக்கின்றன. அச் சுவரின் பக்கலில் ஒரு குத்துவிளக்கு வைத்திருக்கின்றது. அச் சுவருக்குமேலே உள்ள விட்டத்தின்மேல் ஒரு கிழிந்த பாயும் அழுக்குப்படிந்த தலையணையும் உள்ளன. நடுவீட்டு மாடத்தில் காணப்படும் நெருப்புப்பெட்டி, ஊசி, பஞ்சு, காய்ந்த வெற்றிலைச் சருகுகள், ஓரிரண்டு பாக்குகள் முதலாயின சிலபொருள்கள் அங்கே எப்பொழுது வந்தன, எப்பொழுது போவன என்பது எவரும் அறியார். அம்மாடத்தை யொட்டி வலது பக்கத்திலே இரண்டு விட்டங்களில் தொங்கவிட்ட ஒரு சிறு கயிற்றில் காவேரியம்மாளின் ஆடைகள் தொங்கும். அவை யாவன: விதவைகள் உடுக்கும் வெள்ளைச் சேலை யொன்று, போர்த்துக்கொள்வதற்குப் போர்வை ஒன்று, பழைய சேலை கிழிந்துபோனபின் அதிலிருந்து கிழித்த துண்டு ஒன்று. வீட்டின் வலது பாதியே கடைப் பொருள்கள் வைக்குமிடம். அங்கே இடம் போதாமல் பல பொருள்கள் ஒன்றன்மேலொன்று அடுக்கிவைத்திருக்கும். இரண்டு மூலைகளிலும் உள்ள அடுக்குப்பானைகளிலே கொள்ளு,பச்சைப்பயறு, துவரம் பருப்பு, அரிசி, கம்பு, கடலை, மொச்சை, மிளகாய், கொத்துமல்லி, மஞ்சள், கடுகு, சீரகம் முதலிய பொருள்கள் விற்பதற்கு வைத்திருக்கும். பெரும்பான்மையான இடத்திலே சோளமும் பருத்தியும் குவித்திருக்கும். எங்கள் ஊரில் ஊரார் தானியங்களையும், பருத்தி முதலானவற்றை

யும் கொடுத்துக் கடைப்பொருள்கள் வாங்குவது வழக்கம், காசு கொடுத்து வாங்குவது அருமை. இன்னும் தட்டுகளிலே வேகவைத்த மொச்சைக் கொட்டை, வள்ளிக்கிழங்கு, அவல், பொரி, தேங்காய் முதலியன வைத்திருக்கும். பருத்திக் குவியலுக்கு மேலே கட்டிய ஒரு நீளக்கயிற்றில் வாழைக்காய்கள் பழுப்பதற்கென்று தொங்கவிட்டிருக்கும்.

காவேரியம்மாளின் வாழ்நாட்களில் ஒருநாள் போலவே வருடம் முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் கழியும்; ஆயினும், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைதோறும் அவள் அடுத்த ஊர்ச் சந்தைக்குக் கடைப் பொருள்கள் வாங்கப்போவாள்: அச்சந்தை நாட்களும் ஒரே தன்மையானவை. ஆகவே, அவளுடைய வாழ்நாட்கள் கழியுமாற்றை அறிய அவாவுகின்றோர், அவள் ஒரு நாளில் காலை தொடங்கி மாலைவரையிற் செய்வனவற்றைக் கீழ்வரும் வரலாற்றைப் படிப்பதால் உணரலாம்.

எங்கள் ஊரில் கோழி கூவியவுடன், காக்கைப் புளிய மரத்தில் சிலகிழக்கர்கங்கள் விழித்தெழுந்து, கா கா என்று கத்தி மீளவும் அடங்கும். அப்பொழுது காவேரியம்மாள் எழுந்திருந்து, காலையில் விற்பனை செய்வதின் பொருட்டு முந்தினநாள் இராவிலேயே கழுவி வைத்திருந்த வள்ளிக் கிழங்குகளை வாசலிலிருக்கும் மிடாவில் வைத்து நெருப்பு மூட்டி வேகவைப்பாள். அவ்வேளையில் ஊரின் நடுவிலுள்ள வழிச்செல்லும் வழிப்போக்கர்கள் அவள் வீட்டு வாசலில் தீயெரிவதையும், தீயின் முன் அவள், நரைத்த மயிர் முகத்தைச் சுற்றித் தொங்க உட்கார்ந்துகொண்டு அந்த உலகத்துப் பிராணிபோல் ஆட்டம் அசைவு இல்லாமல் இருப்பதையும், அவளருகில் ஒரு பூனை படுத்திருப்பதையும், நெருப்பு எரிகையில் எதிரிலே இருந்த வீட்டுச் சுவர் விளக்க

மடைந்து அதில் நிழல் தோன்றுவதையுங் காண்பார்கள். பின்பு அவள் வீட்டடுப்பைப் பற்றவைத்து, மொச்சையையும் காராமணிப் பயறையும் பானைகளிலிட்டு வேகவைப்பாள். அவை வெந்த பிறகு கட்டு வடித்துக்கொண்டு, அவற்றை இறக்கிவிட்டு, உலைவைத்துச் சோளச் சோறு சமைப்பாள்; வடித்த கட்டினுல் ஒரு சாறு காய்ச்சுவாள். சில நாட்களில் பருப்புச் செய்துகொள்வதுமுண்டு. வெந்த பயறுகளில் உப்பிட்டு அவற்றைக் கூடைகளில் போட்டு, கிழங்குகளைத் தட்டிலே கொட்டி விற்பனைக்காக வெளியே எடுத்து வைப்பாள். இதற்குள் பல பலவென்று விடிந்து போனமையினுல் சிலர் நெருப்புவேண்டும் என்று சொல்லி வருவார்கள். சிலர் கிழங்கும், சிலர் பயறும், மற்றுஞ் சிலர் வெற்றிலைபாக்கும் வாங்குவதற்கு வருவார்கள். ஆண்களும் பெண்களும் அணியணியாய் அவள் கடைக்கு வருதலும் போதலுமாயிருப்பார்கள்.

பொழுது விடிந்து சிறிது நேரமானவுடன் இருபது சக்கிலியர்கள், ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளுமாய்க் கந்தையுடுத்திய கோலத்தோடு காவேரியம்மாளின் வாசலிலே வந்து நிற்பார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு சட்டியும், சிலர் காவேரியம்மாள் அடுப்பு எரிப்பதற்கென்று சிறிய விறகுச் சுள்ளிக்கட்டுகளும் கொண்டு வந்திருப்பார்கள். அவள் பயறுவடித்த கட்டைப் பெரிய பானையிலே கொணர்ந்து, அவர்கள் கொண்டுவந்த சட்டிகளிலே எல்லோருக்கும் சிறிது சிறிது ஊற்றுவாள்; வந்த சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் வேகவைத்த கிழங்குத் துண்டுகளையும் பயறுகளையும் அள்ளிக்கொடுப்பாள்; இன்னும் கேட்போருக்கு வெற்றிலையும் பாக்கும் புகையிலைக்காம்

பும் கொடுப்பாள். இத்தருமம் அவள் கடைவைத்த நாள் முதல் நடைபெற்று வருவது.

பின்பு காவேரியம்மாள் பழையதுண்டு தன் கூடையை எடுத்துவைப்பாள். துணியால் தைத்த பத்துப் பன்னிரண்டு பைகளிலே கடலை, பொரி, அவல், வெல்லம், பாக்கு முதலியவற்றை நிரப்பி; சிறு கூடைகளிலே வெற்றிலை, தேங்காய், பயறு, கிழங்கு முதலியவற்றை எடுத்து, கூடை நிறைய வைத்து; வீடு பூட்டி, சும்மாடு சுற்றிக் கூடையைச் சுமந்துகொண்டு காவேரியம்மாள் ஊருக்குள் புறப்படுவாள். அக்கூடை பெரிதும் கனமுள்ளதாயினும் அவள் அதைச் சுமந்து சுமந்து வழக்கப்பட்டிருந்தமையால் கனம் தோன்றவில்லைபோலும்! அவள் இப்பொழுது கிழத்தன்மையை அடைந்தமையால் முன்போல் விரைந்து நடத்தல் முடியாது. அவ்ளுடைய அடிகள் இயற்கையிலேயே சிறிது கோணலானவை; இப்பொழுது அவை தரையில் நெடுநேரம் உராய்ந்துகொள்கின்றன. தன் அடிகளை இழுத்து இழுத்து நடந்துகொண்டு அவள் பெரிய குடியானவர்களின் வீடு தோறுஞ் சென்று, குடியானவர்களின் மனைவிகள் கேட்கும் பண்டங்களைக் கொடுத்துப் பருத்தியாயினும் தானியமாயினும் பெற்றுக்கொள்வாள். சில பெண்கள் தமக்கு வேண்டும் பண்டங்கள் வாங்கும் பொருட்டுக் காவேரியம்மாள் வருவாள் வருவாளென்று அவள் வரும் வேளையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் வீட்டுக் கைக்குழந்தைகள் அவளைக் கண்டதும் தாவியோடி, அவள் கூடையை இறக்கிவைப்பதற்கு முன்பே அவளை யிழுத்து உட்காரவைத்து, அவள் மடியில் உட்கார்ந்துகொண்டு, அவள் கொடுக்கும் தின்பண்டங்களைத் தின்று தின்று அவளைமகிழ்விப்பார்கள். அவள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் தின்பண்

டங்களுக்கு மாற்றாக அன்னையர் வற்புறுத்தினாலும் ஒன்றும் பெற்றுக்கொள்ளாள். அவள் ஒருநாளில் ஒருமுறையேனும் ஊர்ப் பண்ணாடியின்மகள் வள்ளியம்மாளைப் பார்க்காவிடின், அவள் கண்கள் பூத்துப்போகும். பண்ணாடியின் வீட்டுக்குச் சென்று வள்ளியம்மாளுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து விட்டு பருத்தியும் தானியங்களும் நிறைதலாலே கனம் சிறிதும் குறைவுபடாத கூடையைத் தூக்கித்தலையிலே வைத்துக் கொண்டு காவேரியம்மாள் மெதுவாக நடந்து, பறைச்சேரியையும் சக்கிலியர் சேரியையும் அணுகி, அங்கே ஒரு மேட்டு நிலத்தில் கூடையை இறக்கிவைத்து, கால்களை நீட்டி உட்காருவாள்.

காவேரியம்மாள் வந்ததை யறிந்த அக்கணமே, அச்சேரிகள் வெறுஞ் சேரிகளாக, பறையர்களும் சக்கிலியர்களும் நெருங்கிவந்து அவளைச் சூழ்ந்துகொள்வார்கள். சிலர் தம்மிடமுள்ள பருத்தியையும் தானியங்களையும் கொடுத்துத் தமக்கு வேண்டியன வாங்கிக்கொள்வார்கள்; சிலர் பருத்திப் பம்பல் சோளப் பம்பல் வரும்பொழுது கடன் தீர்த்து விடுவதாய் வேண்டியவற்றை வாங்கிக்கொள்வார்கள். காவேரியம்மாள் தான் கொடுத்த கடனை வாய் திறந்து கேட்பதில்லை; வாங்கினவர்கள் கொடுத்தால் உண்டு, கொடாவிடில் இல்லை. வாங்கினவர்களில் கொடாதவர் எவரும் இலர்; ஏனெனில், அவள் தமக்குச் செய்யும் நன்றி அவர்களுக்குப் புலப்படும்படி வெளிப்படையாயிருந்தமையால், அவர்கள் அதை மறத்தலில்லை. காவேரியம்மாளுக்கு வஞ்சகஞ் செய்வதும், தம்மூர் காளியம்மனுக்கு வஞ்சகஞ் செய்வதும் ஒன்றே என அவர்கள் நினைத்திருந்தனர். காவேரியம்மாள் அடிசாய்ந்து சேரியிலிருந்து புறப்படுமளவும் பண்டங்களை எடுத்த வண்ணங் கொடுத்த வண்ணமா யிருப்பாள்;

சேரிக் குடிகள் அவளிடம் கையேந்தி வாங்கியவண்ணமாயி ருப்பார்கள். அவர்கள் புறச்சேரியினர் என்றாயினும், தன்னை அணுகுதல்கூடாதென்றாயினும் காவேரியம்மாள் கனவிலும் நினைத்திலள். அவளுக்கு எல்லோருமொன்றே: அவர்கள் ஏழைகளாதலின் மற்றையோரினும் பெரிதும் தன் அன்புக் குரியவர்கள் என்பதே அவள் கொள்கை. கொள்கை யென்றுகூறுவதும் தவறு: அவள் ஒன்றையும் எண்ணிப் பார்ப்பது இல்லை; தாமாக எழும் அவள் எண்ணங்கள் யாவும் இயற்கையிலேயே உண்மையையும் அன்பையும் அடிப் படையாகக் கொண்டவை.

அடிசாய்ந்தபின் காவேரியம்மாள் எழுந்திருந்து, சும் மாடு சுற்றிக் கூடையைத் தலைமீது எடுத்துவைத்துக்கொ ண்டு தன் வீடுவந்து சேர்ந்து, கைகால் கழுவி, சமைத்து வைத்திருந்த சோற்றை யுண்பாள். இரவு வரும்வரையில் கடைக்கு வருவோர்க்கு வேண்டிய பண்டங்களை விற்பாள். பின்பு மீந்த சோற்றில் நீர் வார்த்து, மீந்த சாற்றைச் சுண்ட வைத்து, பாய் விரித்துத் தன் பூனையைப் பக்கத்தில் வைத்துப் படுத்துக்கொள்வாள். அவள் முன்போல் இல்லாமையால் இப்பொழுது நெடுநேரம் களைத்துப்போகாது கண்விழித் திருத்தல் இயலவில்லை.

காவேரியம்மாள் ஒரு பூனை வளர்த்துவந்தாள். அது அவளை விட்டு நீங்குவது அரிது. அவள் படுத்துக்கொள் ளும்பொழுது அது அவள் பக்கலிலேயே படுத்துக்கொள் ளும்; அவள் எழுந்து வேலை செய்யும்பொழுது அது அவள் காலைச் சுற்றிக்கொண்டு திரியும். அந்தப் பூனை கருத்தரித் திருந்தபொழுது காவேரியம்மாளின் முன்றானையிலேயே படுத்துக்கொண்டு குட்டிபோட்டதாய்த் தெரிந்தோர் சொல் கின்றனர். அவள் கடைவிற்கும் பொருட்டு வெளியே

போகையில் அப்பூனையும் அவளைப் பின்தொடர்ந்து வாசல் முடியச்சென்று, பின்பு அப்பாலே செல்ல முடியாமையால் அவளை அரிதிற் பிரிந்து, அவள் திரும்பி வருங்காலும் மியா மியா என்று புலம்பிக்கொண்டிருக்கும்.

காவேரியம்மாளுக்கு ஆடுமாடுகள், நாய்,கோழி ஆகிய இவற்றின்மீது உள்ள ஆசை அளவிடத் தக்கதன்று. அவள் வாங்கிவிட்ட ஓர் ஆட்டுக்கடா ஊர்ப்பண்ணுடியின் பட்டியில் அவள் பெயரால் வளர்ந்து கொழுத்திருக்கின்றது. சில ஆண்டுகளுக்குமுன் அவள் ஒரு பசு வைத்திருந்தனளாம். அதை அவள் குழந்தைபோல் வளர்த்தமையால் அது அவள் சொன்னபடி செய்யுமாம். அது ஒரு நோயால் இறந்த பின்னர், காவேரியம்மாள் பின்னும் மாடு வளர்த்து அது இறக்க நேரிடின் பிரிவாற்றுதல் அரிதென்றெண்ணி, பசு வளர்ப்பதை ஒழித்தாள்.

காவேரியம்மாளுக்குக் குழந்தைகளே தெய்வம். ஊர்க் குடியானவர்களின் குழந்தைகளெல்லாம் அவளை அறியும். யாதேனும் ஒரு வீட்டில் குழந்தைகள் பிணங்கிக்கொண்டு தேற்றியும் தேருவாயின், அன்னையர் அழுகை நிறுத்தும் பொருட்டு அக்குழந்தைகளைக் காவேரியம்மாளிடம் கொண்டுவருவது வழக்கம். அவள் அக்குழந்தைகளைத் தன் கைகளில் வாங்கிச் சீராட்டுவாளாயின், அவர்கள் அக்கணமே அழுகை ஒழிவர். தெருக்களிலே விளையாடிக்கொண்டிருக்கும் தம் குழந்தைகளை வீட்டுக்கழைக்கும் அன்னையர் அவர்களைக் "காவேரியம்மா வந்திருக்கிறு" என்று சொல்லிக் கூப்பிடுவார்கள்.

காவேரியம்மாளின் வீட்டுக் கருகில் ஓர் ஆண்டி குடியிருந்தான். அவன் ஒருநாள் கடைக்குப் போயிருந்தபொழுது அவள் அடுக்குப்பானைகளில், ஒரு சட்டியில்,

பணம் போடுவதைப் பார்த்திருந்து, மறுநாள் அவள் கடை விற்க வெளியே போயினபின், அப் பணத்தைக் களவாடிக் கொண்டுபோனுன். பணம் களவு போனதை அவள் சிறிதும் அறிந்திலள். மூன்ரும் நாள் அவ்வாண்டி எதை யெண்ணியோ அப்பணத்தைக் கொண்டுவந்து முன்பிருந்த இடத்திலேயே வைத்துவிட்டான். அன்றியும், அவ்வாரம் காவேரியம்மாள் சந்தைக்குக் கடைப்பொருள்கள் வாங்கப் போயிருந்தபொழுது, அவன் பண்டங்களை வாங்குவதிலும் அவற்றை வண்டிக்குக்கொண்டுவந்து சேர்ப்பதிலும் அவளுக்குப் பெரிதும் உதவிபுரிந்தான். மறுநாள் அவள் அவன் புரிந்த உதவியை எண்ணி, அவன் மகனுக்கு ஒரு பெட்டிக்கூடை நிறைய வேகவைத்த வள்ளிக் கிழங்குகளைக் கொண்டுபோய்க் கொடுத்தாள்.

சந்தையிலே ஒரு செட்டி பலவருடங்களாகக் காவேரியம்மாளுக்குக் கடலை, பொரி, வெற்றிலை பாக்கு விற்பது வழக்கம். காவேரியம்மாளின் நேர்மையையும் உண்மையையும் அவன் அறிந்து, அவள்பால் பெரிதும் மதிப்புடையவனு யிருந்தான். ஒரு சந்தை நாள் அவள் அவனிடம் தனக்கு வேண்டுவன வாங்கிக்கொண்டு தவறுதலாய்க் கொஞ்சம் பணம் சேர்த்துக்கொடுத்தாள். அப்பொழுது அவனேனும் அவளேனும் அதைக் கவனிக்கவில்லை. அன்று இரவு செட்டி வீட்டுக்குச் சென்று கணக்குப் பார்க்கையில் பணம் மீந்திருந்தது கண்டு, காவேரியம்மாள் சேர்த்துக் கொடுத்தது நினைவுக்கு வரவே, அவன், உடனே ஒரு குதிரை வண்டியை வைத்துக்கொண்டு நடுச்சாமத்தில் எங்கள் ஊருக்கு வந்து, அவளிடம் பணத்தைச் சேர்ப்பித்துவிட்டு, பின் ஊருக்குத் திரும்பிப்போனுன்.

பலவாண்டுகளாய்க் காவேரியம்மாளை விட்டுப் பிரிந்திருந்த அவள் தங்கை ஒருநாள் எங்களூர் வந்து சேர்ந்தாள். அவள் காவேரியம்மாளுடைய கிழத்தன்மையைக் கண்டுவருந்தி, இனி அவள் அவ்வூரில் ஒரு நாழிகையும் இருத்தல் கூடாதென்றும், அவள் தன் உற்றுரோடு சேர்ந்து நல்ல வண்ணமாய்க் கண் மூடுதல் மேலானதென்றும், காவேரியம்மாளால் வளர்க்கப்பட்ட தன் மக்கள் கடைசிக் காலத்தில் அவளைக் காப்பாற்றுவார்கள் என்றும், அவர்கள் அவளை யழைத்துவரச் சொன்னார்கள் என்றும் வேண்டுமளவு காவேரியம்மாளுக்குப் போதித்தாள். பலநாள் உழைத்துக் கைகால் சோர்ந்து ஒழிவென்பதையே அறியாத காவேரியம்மாள், தங்கை சொன்னதை நம்பி ஊரை விட்டுப் போகத் துணிந்தாள். அவளுக்கு ஒத்த வயதினர்களான ஆண்களும் பெண்களும் அவள் போவது தகுதியன்றென்றும், அவள் கண் மூடினால் ஊரார் அவளை அன்போடு எடுத்து அடக்கஞ்செய்வார்களென்றும், பலநாட் பழகிக் கடைசிக் காலத்தில் தன் சொந்த ஊரை விட்டுப் போவது அழகன்று என்றும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்ச் சொன்னார்கள். அவர்கள் பல சொல்லியும், காவேரியம்மாள் தன் தங்கையின் தூண்டுதலால் ஊரைவிட்டுப் போவதாய் முடிவுசெய்தாள். இதையறிந்த ஊரிலுள்ள ஏழைகளும் குழந்தைகளைப்பெற்ற அன்னையரும் பலவாறு துக்கித்தனர்; துக்கித்துமென்? காவேரியம்மாள் தான் பல நாட்களாய்த் தேடி மீத்து அடுப்புக்குழியில் புதைத்து வைத்திருந்த பணத்தையும், தன் கடைப் பொருள்களையெல்லாம் விற்றுவந்த பணத்தையும் எடுத்துக்கொண்டு, தன் தங்கையுடன் ஒரு வெள்ளிக்கிழமை காலையில் புறப்பட்டு, தான் பிறந்து வளர்ந்த ஊரை நீங்கிப்போனாள்.

*   *   *   *   *

பத்து வருடங்கள் கழிந்தன. கூதிர்ப்பருவத்திலே, ஐப்பசி மாதத்திலே, ஒருநாள் பிசு பிசுவென்று சிறிது மழை தூறுகையிலே, பட்டியாட்கள் பால் கறந்துகொண்டு வீட்டுக்கு வரும் வேளையிலே, எங்களூர் மந்தையில் ஒரு கிழவி வழி தெரியாது தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்தனள். அவள் பெரிதும் களைத்திருந்தாள். அவள் தலை மயிர் பஞ்சு போல் நரைத்திருந்தது. அவள் தடுமாறி ஒரு மேட்டிலே அடியெடுத்து வைத்துக் கால் சறுக்கி விழப்போய், கைகளை யூன்றி எழுந்திருந்து மெல்ல மெல்ல நடக்கலானாள். ஊர்க் கிணற்றண்டைவந்து, அவள் கிணற்றைஅடையாளங்கண்டு பிடித்து, சிறிது நின்று பெருமூச்செறிந்தாள். பின்பு திரும்பி அப்பாலே தோன்றும் கோவிலைப் பார்த்து எதையோ எண்ணிக் கண்ணீர் உகுத்தாள். மீளவும் மெதுவாக நடந்து ஊருக்குள் நுழைந்து, ஊர்ப்பண்ணாடியின் வீட்டையடைந்தாள்: அழுக்குப் பிடித்திருந்த அவள் வெள்ளைச் சேலை முற்றிலும் நனைந்திருந்தது. அவள் பண்ணாடியின் வீட்டினுள் நுழைந்தபொழுது, அங்கிருந்த வேலைக்காரர்கள் அவளைப் பிச்சைக்காரி யென்றெண்ணி, அவளை வைது வெளியே போகுமாறு சொன்னார்கள். "நீ யாரு?" என்று அவர்கள் கேட்டும் அவள் மறுமொழி சொல்லாது நடந்தாள். "எங்கெ போறே?" என்று அவர்கள் மீளவும் அதட்டிக் கேட்க, அவள், "அம்மிணி வள்ளியாத்தாளைப் பாக்கோணும்" என்று சொன்னாள். ஓர் ஆள் ஓடி வள்ளியம்மாளை அழைத்துவந்தான். அவள் கையிலே ஒரு விளக்குக் கொண்டுவந்து கிழவியைப் பார்த்து அடையாளந் தெரிந்துகொள்ள முடியாமல், "நீ யெங்கே வந்தே?" என்றாள். "வள்ளியாத்தா, உனக்குக்கூடத் தெரியிலே அம்மா?"

என்றாள் கிழவி. உடனே வள்ளியம்மாள், "அடெ, காவேரியம்மா" என்று கூவிக்கொண்டு விளக்கை வைத்துவிட்டு ஓடிவந்து, அவளைக் கட்டிப் பிடித்துக் கோவென்று கதறினாள். இந்த அரவத்தைக் கேட்டுப் பின்கட்டில் இருந்த கவுண்டர் மனைவியும் மற்றைப் பெண்களும் அங்கே வந்து காவேரியம்மாளின் கோலத்தைக்கண்டு அழுது, அவளுக்கு நேரிட்டது யாது என்று கேட்டார்கள்.

காவேரியம்மாள் தன் தங்கை அழைத்துச் சென்றதையும், தன்னிடத்தில் இருந்த பணத்தைக் கண்டு முதலில் தங்கையும் அவள் மக்களும் தனக்குச் செய்த மரியாதையையும், பின்பு அவர்கள் தன் கையிலிருந்த பணத்தைப் பிடுங்கிக்கொண்டு தன்னைப் புறக்கணித்ததையும், தான் வளர்த்த தன் தங்கையின் மக்கள் தங்கள் மனைவிகளின் சொற்களைக் கேட்டுத் தன்னைத் திட்டி வீட்டைவிட்டுத் துரத்தியதையும், தான் படாத பாடுபட்டு அலைந்ததையும், தன் தங்கையும் தன்னைக் கைவிட்டதையும், முடிவில் தான் பிறந்தவிடஞ் சென்று சாவதே மேலென்று புறப்பட்டு வந்ததையும் விவரித்துச் சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்டவர்கள் எல்லோரும் அவள்பொருட்டு அங்கலாய்த்தார்கள். இதற்குள் வெளியே போயிருந்த பண்ணாடியும் அங்கே வந்து, நடந்தவற்றையெல்லாம் கேட்டறிந்து, "அடே முண்டே, ஊரை விட்டுப் போகாதீண்ணு நாங்கொ சொன்னதைத் கேட்டயா? அது போனாப்போகுது, எந்திரி; உனக்கொண்ணும் கொறவில்லெ. நீ சாகறவரையிலும் நம்ம வளவுலெ மகராசியா சாப்பிட்டுகிட்டு இரு. உண்ணி நீ சம்பாதிக்கவும் வேண்டாம், அலையவும் வேண்டா." என்று காவேரியம்மாளைப் பார்த்துச் சொல்லி, அவளைக் குளிப்பித்துச் சோறு போடும்படி

தம் மனைவிக்குச் சொன்னார். காவேரியம்மாள் மூன்றுநாள் பண்ணாடி வீட்டில் தங்கியிருந்து இளைப்பாறினாள்.

அவள் ஊரிலிருந்து வருகையிலேயே சிறிது காய்ச்சலும் இருமலும் கண்டிருந்தமையால், வள்ளியம்மாள் அவளருகில் இருந்து அவளுக்குக் குற்றேவல் புரிந்துவந்தாள். குடியானவர்களும், பறையர் சக்கிலியர்களும் அவள் வருகையைக் கேள்வியுற்று, அவளை வந்து பார்த்துத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நான்காம் நாள் தனக்கு உடம்பு முற்றிலும் குணப்பட்டுவிட்டதாயும், தான் பழையபடி கடைவைத்து நடத்தவேண்டும் என்றும் காவேரியம்மாள் ஒரேகாலில் நின்றதால், பண்ணாடியும் ஊராரும் அவளுக்கு மீண்டும் கடை வைத்துக் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

காவேரியம்மாள் போனதுமுதல் பாழாய்க்கிடந்த அவள் வீட்டைப் பழுதுபார்த்து, அவளுக்குக் கை முதலும் ஊர்ப்பண்ணாடி கொடுத்தார். மற்றைக் குடியானவர்கள் அவளுக்கு வேண்டிய மற்றைப்பொருள்களை உதவினர். அவள் பழையபடி சந்தைக்குப் போய்ப் பண்டங்கள் வாங்கி வந்து கடை நடத்தலானாள்.

இப்பொழுது காவேரியம்மாளின் நிலைமை முன்னிருந்த நிலைமையினின்றும் முற்றிலும் மாறுபட்டுள்ளது. இப்பொழுது அவளுக்குக் கண்கள் தெரியா: அவள் கடைப்பொருள்களை மாற்றிக்கொடுக்கிறாள்; பறைச்சேரி சக்கிலியர் சேரிகளில் அவள் முன்போலத் தன் கூடைக்குப் பின் உட்கார்ந்திருந்தாலும், சில இழிகுணத்தினர் அவளறியாமல் பண்டங்களைத் திருடிக்கொள்கின்றனர்; தராசும் துலாக்கட்டையும் நிறுப்பதில் அவள் பிழை செய்கின்றனள்; வீட்டில் அடுப்பண்டை வேலைசெய்கையில் அவள் அறியாமல்

அவள் சேலையில் தீ பற்றிக்கொள்கின்றது. உடம்பில் வலு வில்லை: கடைக் கூடையைத் தூக்கிச் செல்லுதல் அவளால் இயலாத காரியம். மறதியால் அவள் எடுத்த பொருள் கொடுத்த பொருள்களை மறந்துவிடுகிறுள். எனினும், அவள் தன் காரியங்களை அரைகுறையாகவேனும் சோர்வின்றிச் செய்கின்றனள். சாந்துணையும் அன்ன மளிப்போர் ஊரி விருப்பினும் அவள் தன் கைப்படச் சம்பாதித்து உண்பதையே மேலாகக் கருதுகின்றனள்! அவள் இன்னும் ஏழைகளுக்கு உதவிசெய்ய முயல்கிறுள்; முன்னையினும் பன்மடங்கு குழந்தைகளைக் கொண்டாடுகின்றுள்!

அவள் ஊரைவிட்டுப் போனபின் எங்களூரிலும் பல மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவள் இருந்தபொழுது சிறுவர் சிறுமிகளாயிருந்தோர், இப்பொழுது வயதுவந்தவர்களாயிருக்கின்றனர். அவள் வயதினர்களான ஆண்களும் பெண்களும் பலர் காலஞ்சென்று விட்டனர். அவள் காலத்தில் அவள் கடையொன்றே இவ்வூரில் இருந்தது. இப்பொழுது அவள் கடையினும் பெரிய கடைகள் பல தோன்றியுள்ளன; வாணிபத் துறைகளும் வாணிபப் பொருள்களும் மாறியுள்ளன. இப்பொழுது எல்லாக் கடைகளிலும் பொடி சுருட்டு முதலான புதிய பொருள்கள் தலைகாட்டியிருக்கின்றன. காவேரியம்மாள் இப் புதிய கடைகளோடு போருக்கு நிற்றல் இயலாத காரியம்.

ஊருக்கு வருகையில் கண்ட காய்ச்சலும் இருமலும் காவேரியம்மாளை நீங்காது படிப்படியாய் வளர்ந்து இறுதியில் அவளைப் படுக்கை சேர்த்தன. அவள் படுக்கையில் படுத்த நாள்முதல் ஊரார் அவளிடம் காட்டும் அன்பும், செய்யும் உதவியும் அளவிடத்தக்கன அல்ல. அவள் கையில் வாங்கித் தின்று பிழைத்த ஏழைகள் அவள் வாயிலில் கட்டிக்

காத்திருக்கின்றனர். ஒரு குழந்தை, தன் தாயார் பழுக்கப் போட்டிருந்த ஒரு சீப்பு வாழைப்பழங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை இருகைகளாலும் மார்புறத்தழுவி, வரும் வழியில் கல்லிடறி விழுந்தும் எழுந்திருந்து, தட்டித்தடுமாறி நடந்து வந்து, காவேரியம்மாளை யெழுப்பி, அவள் அருகில் உட்கார்ந்து, அவள் கையிற் பழங்களைக் கொடுத்து, "காயம்மா, இந்தா, பழந் திண்ணு" என்று வேண்டுகின்றான்.

காவேரியம்மாளின் காலங் கழிந்தது. அவள் இறந்த அன்று பண்ணடிகள் எல்லோரும் தங்கள் காட்டு வேலை, வீட்டு வேலைகள் யாவற்றையும் விடுத்துவந்து, அவளை அடக்கஞ் செய்யவேண்டுவனவற்றைச் செய்கின்றனர். பெண்டிர்களும் பிள்ளைகளும் அழுது புலம்புகின்றனர். ஏழைகள் தங்கள் தெய்வம் போய்விட்டது என்று நைகின்றனர். குடியானவர்கள் காவேரியம்மாளுக்குத் தேர் அலங்கரித்து, அதில் அவள் சவத்தைக் கிடத்தி, பறைகளும், தப்பட்டைகளும், சங்கு சேகண்டிகளும் முழங்க, ஊரார் பின்தொடர்ந்துவர, அவளைக் கொண்டுசென்று, ஊர்ச்சுடலையில் அடக்கஞ் செய்தனர்.

அவள் சவக்குழியின்மீது நட்ட ஒரு துளசிச் செடி இப்பொழுது செழித்து வளர்ந்துள்ளது. அக்குழியின்மீது வீசும் காற்று இளங்காற்றாகுக; அதன்மேற் படும் வெய்யில் தண்ணியதாகுக; அதன் அருகில் நடப்போரின் அடிகள் மெல்லெனப்படுக; அதைக் காண்போர் உள்ளம் தூயதாகுக!

IX

பொழுது போக்கு.

எங்கள் நாட்டிலுள்ள பெரிய ஊர்களிலே, வருடத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை ஊரார் ஒன்று சேர்ந்து, கோவலன் கதையேனும் அண்ணன்மார் கதையேனும் நடத்துவிப்பார்கள். இக் கதைகளை உடுக்கை யடித்துக் கொண்டு பாடுவதற்கு அங்கங்கே கைதேர்ந்த பாட்டுக்காரர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு வருடமுழுவதும் வயிற்றுப் பிழைப்பு இக் கதைகளைப் பாடுவதினாலேயே நடைபெறும். அவர்களிற் சிலர் உடுக்கை யடிப்பதில் வல்லவர்கள்; சிலர் கேட்போர் மனது உருகும்படி பாடுவதில் வல்லவர்கள்; சிலர் உடுக்கை யடிப்பதிலும் பாடுவதிலும் ஒருங்கே வல்லவர்கள். பின்சொல்லப்பட்டவர்களே எல்லோராலும் வேண்டப்படுவோர். மற்றையோருக்கு ஒரு கதை முடிப்பதற்குச் சம்பளம் இரண்டு மிடா, இவர்களுக்குச் சம்பளம் நான்கு மிடா. கதை நடக்கையில் சிலர் ஒரு பணம் இரண்டு பணம் கொடுத்து, எல்லோர் முன்னிலையிலும் பாட்டுக்காரனால் வாழ்த்துப் பெறுவதும் உண்டு. கதை முடிவடையும் நாளில் பாடகர்களுக்குக் குடியானவர்கள் புது வேட்டிகளைப் பரிசளிப்பார்கள்.

கொய்யாமரத்து வீட்டுச்-சின்னண்ண கவுண்டர், ஒரு நாள் ஊர்ச் சாவடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், அங்கே கூடியிருந்த சில குடியானவர்களும் கொல்லர் தச்சர் முதலாயினோரும் அவரை நோக்கி, தாங்கள் கோவலன் கதை கேட்டுப் பல நாட்களாயினவென்றும், ஊரிலே பொழுது போவதில்லை யென்றும், பலர் காலங் கழிக்க வழி

யறியாது ஊர் வம்பு பேசிக்கொடுக்கிறார்களென்றும், அவர் நல்ல பாட்டுக்காரனை அழைத்துக் கதை நடத்தினால் அது தங்களுக்குப் பெரிய நன்றியாகும் என்றும் கூறினார்கள். கவுண்டர் கதைகள் நடப்பித்தலிலும் கேட்பதிலும் பெரிதும் விருப்பமுடையவராதலின், அவர் அன்றையத்தினம் எங்களூரிலிருந்து பத்துக்கல் தூரத்திலுள்ள புளியம்பட்டியிலிருக்கும் பாட்டுக்கார—வேலபண்டாரத்தை வருமாறு ஆளனுப்பினார். பண்டாரம் கவுண்டரை வந்து பார்த்து, கதை தொடங்குவதற்கு நல்ல நாள் நியமித்துக்கொண்டு சென்றான். இச்செய்தி ஊர்முழுவதும் பரவவே, ஆண்களும் பெண்களும் குறித்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

குறித்த நாளிரவு, பொழுது விழுந்து ஏழெட்டு நாழிகையானபின், குடியானவர்கள் உண்டி முடித்து வெற்றிலை பாக்கு எடுத்துக்கொண்டு, சின்னண்ண கவுண்டரின் வீடு வந்து சேர்ந்தனர். தெற்கு நோக்கிய கவுண்டர் வீட்டுத் திண்ணையிலே, வாயிற்படிக்குச் சிறிது தூரத்திலே, ஒரு குத்துவிளக்கு வைத்திருந்தது. அவ் விளக்குக்கு இரு புறத்திலும் திண்ணை நிறையச் சனங்கள் உட்கார்ந்துகொண்டிருந்தனர். ஒருபுறத்துத் திண்ணையில் வயதுசென்ற பண்ணாடிகளும் குடியானவர்களும் இருந்தனர்; மற்றொருபுறத்துத் திண்ணையில் அவர்களுடைய பெண்டிர் கூடி இருந்தனர். வீட்டு வாசலிலே, நிலா வெளிச்சத்திலே, ஏழைக் குடியானவர்களும், தச்சன், கொல்லன் முதலாயினோரும், அவர்கள் பெண்டிர் பிள்ளைகளும் உட்கார்ந்திருந்தனர். வீட்டுக்காரரான கவுண்டர் திண்ணையில் ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்து, தம் உறவினரோடு பேசிக்கொண்டும் வெற்றிலை பாக்குத் தின்றுகொண்டும் இருந்தார். பற்போன கிழவர்

கள் தங்கள் பைகளினின்றும் சிறிய இருப்புரல்களை எடுத்து வெற்றிலைபாக்கு இடித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில், கவுண்டர் வீட்டில் உண்டி முடித்து வேல பண்டாரமும் அவனுடைய தாளக்காரனும் திண்ணைக்கு வந்து, எல்லோருக்கும் வந்தனஞ் செய்து; குத்து விளக்கினருகில் உட்கார்ந்து, உடுக்கையையும் தாளங்களையும் முறையே கையிலேந்தினர். கதை தொடங்கிற்று.

பாட்டுக்காரன் உடுக்கை யடித்துக்கொண்டு பாடுகையில் தாளக்காரன் உடுக்கையடிக்குத் தக்கபடி தாளம் போடுவான். பாட்டுக்காரன் ஓர் அடியைப் பாடினபின், தாளக்காரன் 'ஆமர்மோ' என்று சொல்வான்; அல்லது அவ்வடியின் ஈற்றிலுள்ள சொல்லைத் திரும்பச் சொல்வான்; பாட்டுக்காரன் இரண்டா மடியைப் பாடுதலும் தாளக்காரன் 'நானுனே னுனேனன்ன' சொல்வான்.

வேல பண்டாரம் முதலில்,

முந்தி முந்தி விநாயகரே, முக்கண்ணனார் தன்மகனே,
ஐந்து கரத்தோனே, அருள் சடையான் புத்திரனே,
வெட்பாலைக் குள்ளிருக்கும் சப்பாணிப் பிள்ளையாரே,
சப்பாணிப் பிள்ளையாரே, பொற்பாதம் நான் மறவேன்:
கோவலனார் தன்கதையைக் குற்றமின்றி நான்பாட
விக்கினங்கள் வாராமல் விநாயகரே முன்னடவீர்.

என்று தொடங்கி, இன்னும் முருகன் துதி, சிவன் துதி, திருமால் துதி, வாணி துதி முதலியன பாடி;

பட்டணமாம் பட்டணமாம், காவிரிப்பூம் பட்டணமாம்,
கஞ்சிகொண்டு களைபறிக்கும் காவிரிப்பூம் பட்டணமாம்,
சோறுகொண்டு மதகடைக்கும் சொர்ணகிரிப் பட்டணமாம்,
காவிரிப்பூம் பட்டணத்தில் கனதுரையாம் வர்த்தகர்கள்,
மானாகன் செட்டியென்றும் மாச்சோட்டான் செட்டியென்றும்,

செட்டிகளிருந்ததும், கோவலன், கண்ணகி, மாதவி முதலியவர்களின் பிறப்பும் வளர்ப்பும் விவாகமும் கூறி; கோவலன் கண்ணகியோடு மதுரை சென்று சிலம்பு விற்கப் போகையில் இடைச்சியை நோக்கிச் சொன்னதாகப் பாடும் பாட்டு இது:

ஆட்டாலே மாட்டாலே மிகுந்தவளே தாயே,
ஆயனை யென்னாளும் வளர்த்தவளே தாயே;
மாட்டாலே ஆட்டாலே மிகுந்தவளே தாயே,
மாயனை யெந்நாளும் வளர்த்தவளே தாயே;
மதுரைக்கு நான்போய் வருமளவுந் தாயே,
மயிலனையா ளுந்தனடைக்கலந் தாயே;
தென்மதுரை நான்போய் வருமளவுந் தாயே,
தேன்மொழியா ளுந்தனடைக்கலந் தாயே;
கனமதுரை நான்போய் வருமளவுந் தாயே,
கண்ணகி உந்தன் அடைக்கலந் தாயே.

பின்னர், கோவலன் சிலம்பு விற்கப்போய் வெட்டுண்ட பின் கண்ணகி,

ஏற்றிவைத்த திருவிளக்கு இருளடைந்து போகக் கண்டாள்;
ஒற்றிவைத்த சந்தனந்தான் உமிபோலுதிரக்கண்டாள்; [டாள்;
கொண்டை கலையக் கண்டாள், கொண்டையிற் பூ வாடக்கண்
வாடாத மல்லிகைப்பூ வாடிக் கருகக்கண்டாள்;
மஞ்சளழியக் கண்டாள், மணமழிந்து போகக்கண்டாள்;
கோதுமைத் தாழ்வடமும் கொலுசு முதிரக்கண்டாள்;
உட்கழுத்து வயிரமணி உருவி விழக்கண்டாளே;
வாழ் மதுரைப் பட்டணத்து மதிலிடியக் கண்டாளே;
உள்ளூரில் தோதுதான் உடையக்கண்டாள் பத்தினியும்,
அசலூரில் தோதுதான் அச்சு முறியக்கண்டாள்;
தேங்கா யுடையக்கண்டாள், செம்பு சலம் குறையக்கண்டாள்;

முந்நூறு வேதியர்கள் முகூர்த்தமிட்ட மாங்கிலியம்,
கடகங் கழன்றுவிழக் கண்டாளே பத்தினியும்;
தாலி பறி போகக்கண்டாள், தலைவனங்கே மாளக்கண்டாள்;
மாலை பறிபோக மணவாளன் மாளக்கண்டாள்; [ள்;
காளியம்மன் கோவில்முன்னே கண்டதுண்டஞ் செய்யக்கண்டா
குலைவெட்டி சாய்த்ததுபோல் கோவலனுர் சாயக்கண்டாள்;
சிறுகுடலும் பெருகுடலும் சிதறிவிழக் கண்டாளே;
மணிக்குடலும் பெருகுடலும் மண்மேல் விழக் கண்டாள்.

இவ்வாறு கனவு கண்டதையும், கண்ணகி புலம்பினதையும், அவள் கோவலனை யெழுப்பினதையும், முடிவில் அவள் தெய்வமானதையுங் கூறி, ஏழெட்டு நாளில் பண்டாரம் கோவலன் கதையை முடித்தான்.

இவ்வாறு உடுக்கை யடித்துக்கொண்டு பாடும் பாட்டுகள் துன்பச் சுவையை எடுத்துக் காட்டப் பெரிதும் பொருத்தமானவை. இரவில்,ஊரடங்கியபின்,பாட்டுக்காரன் பல மெட்டுகளிலும் பல தாளங்களிலும் பாட்டுகளைச் சொல்லுகையில், கேட்போர் மனம் நெக்குவிட் டுருகுவதையும், பலர் கண்ணீர் உதிர்ப்பதையும் நேரிற்கண்டோரே அறிவர்.

எங்கள் நாட்டிலே, கார்காலங் கழிந்து வேனிற்காலம் வருகையில், பல ஊர்களிலும் வாலிபர்கள் ஓயிற் கொம்மியடிக்கத் தொடங்குவார்கள். அவர்கள் நாள் முழுவதும் காட்டிலும் தோட்டத்திலும் களத்திலும் வேலை செய்து பொழுது போனபின் வீட்டுக்கு வந்து, உண்டி முடித்து, தகுதியான ஒரு பொதுவிடத்தை அடைவார்கள். கொம்மியடிப்பதினுலுண்டாகும் தேகப்பயிற்சியாலும் மனமகிழ்ச்சியாலும் அவர்களுக்குக் களைப்புத் தோன்ருது. தெருக்களிலும் இடமகன்ற வீட்டு வாசல்களிலும் கொம்மி பெரும்பாலும் நடைபெறும்.

எங்களூரில் கொம்மி கற்றுக்கொள்வோர் நஞ்சன், குப்பன், வேலப்பன், முருகையன், பெரியண்ணன், சின்னன், பழனியப்பன் முதலான இருபதின்மர். அவர்கள் உள்ளூர்க் காளியம்மன் பண்டிகை நாட்களில், கொம்மியடிப்பதில் கைதேர்ந்தவர்களாய்த் தங்கள் திறமையை எல்லோரும் அறியக் காட்டுதல்வேண்டும் என்ற பேரவாவினல் தூண்டப்பெற்று, பண்டிகைக்கு மூன்று மாதத்துக்கு முன்னரே, அயலூரிலிருந்து கொம்மி வாத்தியார்—சொக்கன் செட்டியை அதன்பொருட்டு அழைத்துவந்து, மாதச் சம்பளம் பேசி, நல்ல நாளில் வள்ளியம்மன் கொம்மி தொடங்கினர்கள்.

கொம்மியடிப்போர் கோவணம் வைத்து முழங்காலுயரத்தில் வேட்டி யுடுத்துக்கொள்வார்கள்; தலையிலே சுங்கு வைத்துத் தலைப்பாகை கட்டியிருப்பார்கள்; கைகளிலே துண்டு வேட்டிகளை மடித்துப் பிடித்துக்கொள்வார்கள். இக் கோலத்தோடு அவர்கள் வரிசையாய் நின்றதும் அவர்களுக்கு முன்னே வாத்தியார் நின்றுகொண்டு பாட்டுச் சொல்ல, அவர்கள் பாட்டுக்கிணங்க நடந்தும் சாய்ந்தும் நிமிர்ந்தும் உட்கார்ந்தும் கையாட்டியும் கால் தூக்கியும் பாட்டுச் சொல்லிக் கொம்மியடிப்பார்கள். பாட்டுக்கிசைய மத்தளமும் தாளமும் அடிக்கப்படும். மத்தளமடிப்போன் பெரும்பாலும் பயிற்சி யில்லாதவனுதலால் மனம்போன படி வாசிப்பான்; தாளம் மத்தளத்தோடு ஒவ்வாமல் தனி வழியே செல்லும்; தாளம் இசைந்து வருதற்குரிய வெளிப்படையான இடங்களில் மாத்திரம் மத்தளமும் தாளமும் ஒன்று கூடும். ஆயினும், கொம்மியடிப்போர் தாளம் விடுதல் அரிது. அவர்கள் பாடும் பாட்டு இது:

செம்பவளக் கால் நாட்டி நன்றாய்ச்
சிறந்த தளங்களைப் பூட்டி,
கம்பலைப் பொன்மணி நிரப்பி, அதில்
கனம் பொருந்துந் தழை பரப்பி,
பருத்த குமி ழாணிவைத்து, வள்ளி
பாதம் வைக்க ஏணி வைத்து,
ஏணிதனிற் பாதம் வைத்து, வள்ளி
ஏற வள்ளி மனது வைத்து,
பேணியவள் பரணிருந்தும், வள்ளி
பெற்றியுடன் வளம்பொருந்தும்,
வரிசை அண்ணன் மார்போக, அங்கே
வள்ளியும் பாங்கியுமாக,
விரைந்து கையிற் கவண்சேர்த்தாள், வள்ளி
விளைந்த தினைப் புனங்காத்தாள்;
திசையை நோக்கிப் பார்த்திடுவாள், வள்ளி
தெய்வங்களைக் கும்பிடுவாள்;
அசையாத பரணேறி, வள்ளி
அன்னைவள்ளி மனந்தேறி;
பாங்கியரைப் பிரியாமல் நெஞ்சில்
பல நினைவுங் குறியாமல்,
தீங்குவரச் செய்யாமல் கிளி
தினைக்கதிரைக் கொய்யாமல்,
வீசுங் கவண் மாறுமல் அம்மன்
வேற்று முகம் பாராமல்,
காசலையப் பரண்மீது நின்று
காத்தாளே குறமாது;
இரு தனங்க ளசைந்தாட உண்டை
எறிந்தாளே கவணிசைய;

பருவ முகிற் குழல்சரிய வள்ளி
பண்புடனே கவணெறிய,
கைவளைகள் கலகலென வள்ளி
கவணெறிந்தா ளுடல்பன்ன,
மெய்யிலிட்ட பணிதுலங்க, உண்டை
வீசுகின்றாள் கவணிலங்க;
வஞ்சியிடை துவளநின்றாள், அம்மன்
மணிக்குர லோலமிட்டாள்;
அஞ்சுகப் பெண்குரல் போடக் கேட்டு
அன்னங்கள் வந்திசை யாட,
பூங்குயில்கள் சூழ்ந்து மொய்க்க, அன்னப்
பூவைகளும் புகழ் பொய்க்க,
மாங்குயில்க ளிசைபாட, புள்ளி
மயிலனமும் நடமாட,
செப்பு சிலைக் கண்ணாளே அம்மன்
தினைப்புனங் காத்திருந்தாளே.

இக்கண்ணிகளை வாத்தியார் நான்கு பிரிவாகப் பகுந்து கொள்வார். முதற் பிரிவு முடியுந்துணையும் கொம்மி யடிப் போர் வலதுகாலையும் இடதுகாலையும் மாற்றி மாற்றி எடுத்து வைத்து, அதற்கிசையக் கையிற் பிடித்த துண்டுவேட்டி களை வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் அலைப்பார்கள். வாத்தியார் 'தை' என்று சொல்லி இரண்டாம் பிரிவைத் தொடங்கினவுடனே பாட்டும் தாளமும் விரைந்து செல் லும். கொம்மி யடிப்போர் எல்லோரும் ஒருங்கே வலது புறம் திரும்பி நின்று, வலதுபுறம் ஓரடி யெடுத்துவைத்தும் இடதுபுறம் ஓரடி யெடுத்துவைத்தும் சாய்ந்தும் எழுந்தும் தங்கள் பழைய இடத்தைச் சேர்வார்கள். மூன்றாம் பிரிவிலே பாட்டும் தாளமும் இன்னும் முடுகிச் செல்லும். கொம்மி

யடிப்போர் வலதுபுறஞ் சாய்ந்தும் இடதுபுறஞ் சாய்ந்தும் ஓரடி யெடுத்துப் பின்னுல் வைத்தும் பழையபடி தம்மிடத்தை அடைவார்கள். நான்காம் பிரிவு மற்றைப் பிரிவுகளைக் காட்டிலும் கடுகிச்செல்லும். வலதுபுறஞ் சாய்வதும், இடதுபுறஞ் சாய்வதும் பின்னுல் அடியெடுத்து வைப்பதும் அன்றி, எல்லோரும் குதித்து இடதுகாலெடுத்து முன்னுலூன்றி, வலதுகால் முழங்காலை மடக்கி உயரத் தூக்கி வைத்து, தலைக்குமேல் ஒருங்கே கைதட்டிக் கொம்மியடிப்பார்கள். இவ்வேளையில் மத்தளமும் தாளமும் கொம்மியடியும் ஒன்றுக்கொன்று முந்துற்றுச்செல்ல, இறுதியில் மத்தளக்காரன், பாட்டைத் தொடர்ந்துசெல்லாமல் தாளத்தையெல்லாம் மறந்து, தலையை ஒருபக்கம் திருப்பிக் கொண்டு கடுகியடிப்பதே உய்யும் வழிபோலப் படபட வென்று அடித்து முடிப்பான்; தாளக்காரன் தலையைச் சாய்த்து, தாளங்களைத் தன் செவியண்டையில் வைத்து மத்தளக்காரனுக்குப் பின்னிடாதவண்ணம் தட்டுவான். கொம்மி கற்றுக்கொள்வோரிற் புதியவர்களான சிலர் பழக்கமின்மையால் முறைதவறிக் குதிப்பதும் ஆடுவதும் பார்ப்போருக்கு விடாத நகைப்பை விளைவிக்கும்.

வாத்தியார்—சொக்கன் செட்டி இக்கொம்மி ஒன்றே அறிவார் என்று நினைப்பது தவறு. இன்னும் பலவகைப் பாட்டுகளும் ஆட்டங்களும் அடங்கிய வேறு கொம்மிகளையும் அவர் கற்பிக்க வல்லவர். அவற்றிலே, கொம்மியடிப்போரை வட்டமாக நிறுத்தி, "எறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே" என்று தொடங்கும் திருப்புகழைச் சொல்லிக்கொண்டு பல அரிய ஆட்டங்களோடு அடிக்கும் 'வட்டக்கொம்மி' சிறந்தது.

கொம்மியடிப்பது ஒரு சிறந்த விளையாட்டு. அதில்

நல்ல தேகப்பற்சியும், பாடு தோன்ருதிருப்பதற்குப் பாட்டும் தாளமும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. இவ்விளையாட்டு எங்கள் நாட்டிலே, பல இடங்களிலே நாளடைவில் அருகி வருகின்றமை வருத்தத்தைத் தருவதாகும்.

எங்களூருக்கு ஊர்ச்சாவடி ஒரு பொதுவிடமென்று முன்னரே சொன்னேன். அது நான்கு அங்கண இடங்கொண்ட ஒரு கூடம். அதன் பெரும்பாகம் ஓர் உயர்ந்த திண்ணையாலானது. திண்ணைக்கு வலதுபுறத்தில் ஒரு நடையொன்று செல்லும். அத்திண்ணைக்கு முன்பு வீட்டிறப்பைத் தாங்கிய சில தூண்கள் நிற்கும். இச்சாவடியிலே நாள் முழுவதும் சிலர் கூடியிருப்பார்கள்: நாலைந்து பேருக்கு எப்பொழுதும் குறைவில்லை. குறித்த நாட்களில் ஊர்ப்பொதுக் காரியங்களையும் வழக்குகளையும் பண்ணுடிகள் முதலாயினோர் கூடிப் பேசி முடிக்கும் இடம் இதுவே. மற்றை நாட்களில் இங்கே கூடியிருப்போர் பெரும்பாலும் பற்கள் கழன்று தடியூன்றி நடக்கும் தலைநரைத்த கிழவர்களும், வேலையில்லாத பண்ணுடி மக்களும், பொழுது போக்குக்காக வரும் குடியானவர்களும், வேலையொழிந்த நேரத்தில் ஊர்வம்பு பேசுதற்கெண்ணிவரும் கொல்லன், தச்சன் முதலாயினோரும் ஆவர். எங்கள் வாத்தியாரும் அடிக்கடி அங்கே போவார். சாவடியில் ஊர்ச்செய்தி முழுவதும் ஆராய்ச்சிக்கு வரும். குடும்பங்களில் நடப்பன குடும்பத்தாருக்கும் தெரியா, அங்கே கூடுவோருக்குத் தெரியும். அவர்கள் தம் குற்றங்களை உணரார், பிறர் குற்றங்களையும் குணங்களையும் தூற்றுவார்கள். அவர்கள், ஊரில் அவன் இத்தகையன், அவன் இன்னவனை ஏமாற்றினுன்; இவன் இவ்வழியில் பணக்காரன் ஆனுன், ஆதலால் இவன் நோயால் அழுந்துகின்றுன் என்றும்; அவள் கணவனை யடக்கியாள்பவள், இவளுக்கும்

அண்டை வீட்டானுக்கும் நேசம் உண்டு என்றும்; அக்கலி யாணத்தில் அது சொள்ளை, இக்கலியாணம் ஒழுங்காக நடந் தது என்றும்; தீர்ப்புச் செய்வார்கள். ஊர்ச்சாவடியில் நடக் கும் பேச்சு இத்தகையதென்பதை ஒருவாறு உணர்த்து தற்குக் கீழ் வருவன ஒன்றிரண்டு போதும்.

ஒரு நாள் நடுப்பகலில், சாவடியில் சில குடியானவர்க ளும் வாத்தியாரும் கூடியிருந்தார்கள்.

1-வது குடியானவன்:—இன்னம் பத்து நாளக்கி மழை யில்லாமெ இப்பிடியெ வெய்யக்காஞ்சுதுண்ணு, அப்புறம் குடியானவம் பாடு—

2-வது குடியானவன்:—இல்லில்லெ, மழை பேயும், உண்ணிமேல்தானே மழை பெய்யற நாளு.

3-வது குடியானவன்:—இப்பொ எங்கே அப்பிடி மழை பேயுது? அதெல்லாம் முன் நாள்லெ. இப்பத்தா॰ காலங் கெட்டுப்போச்சே. இரவது வருசத்துக்கு முன்னே ஒரு பணத்துக்கு அஞ்சு வள்ளச் சோளம் வித்துதாமே. இப் பொ அப்பிடி விக்கிதா? அதெல்லாம் முன்னே.

வாத்தியார்:—முன்காலத்திலே,

வேத மோதிடும் வேதியர்க் கோர்மழை,
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை,
காதல் மங்கையர் கற்பினுக் கோர்மழை,
மாதமூன்று மழையெனப் பெய்யுமே.

இப்போ,

அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை,
வரிசை தப்பிய மன்னவர்க்கோர்மழை,
புருடனைக்கொன்ற பூவையர்க் கோர்மழை,
வருடமூன்று மழையெனப் பெய்யுமே.

1-வது குடியானவன்:—ஆமாங்கையா, அதுதாெ வாசுத்துவம். முன்னிருந்தமாதரெ இப்பொ சனங்க இருக்குறுங்கோ? முன்னே பணக்காரனுனலும் ஏழையானலும் காலுல தாெ நடந்துபோறது, ஒரு நாளக்கி அம்பது கல்லுண்ணுக் கூட நடந்தேதாம் போவாங்களாெ; இப்பொ ஒரு கல்லுப் போகோணு முண்ணுலும் பொட்டி வண்டி.

3-வது குடியானவன்:—முன்னுளப்போலெ இப்பொ ஏதுங்கறேெ? பத்துலெ, நூறுலெ, எப்பவாவது நோம்பி வந்தாத்தான் நெல்லஞ்சோறு, தொவரப்பருப்பு உம்பாகளாம். இப்பொ எந்தப் பண்ணுடி சோளங்கம்பு திங்கிறமங்கறுெ?

1-வது குடியானவன்:—வெள்ளக்காரங் காலத்துலே தலே தலக்கிப் பண்ணுட்டு: சின்னவுக பெரியவுக வார்த்தை கேக்கறுங்களா? இல்லெ? முன்னப்போல பொம்பளேகதாெ கப்புத்தவுறுமே நடக்கறுங்களா? காலங் கலிகாலமல்லோ!

வாத்தியார்:—காலங் கலிகால மெங்கறது சரி. வெள்ளக்காரனெண்ணு சொன்னீங்களே, அவனுரு தெரியுமா?

1-வது குடியானவன்:—தெரியாது.

வாத்தியாயர்:—இப்பொ,—முன்னே துரியோதனுதிகொ இருந்தாங்களே, அவுங்கொ பாண்டவருக்குப் பண்ணின பாதகத்துக்காக கடவுள் அவுகளே இந்தப் பிறவியிலே வெள்ளக்காரனுகப் பிறப்பிச்சாரு.

3-வது குடியானவன்:—வெள்ளக்காரனுகப் பொறக்கறது நல்லதுதானுங்கையா?

வாத்தியார்:—எப்பிடி நல்லது? சும்மா சொல்லிப் போட்டா தீந்துதா? தெரிஞ்சு பேசவேணும். வெள்ளக்காரன் பறையனல்லவா? இல்லாட்டி அவன் பறையங்கையிலே சொறு வாங்கித் திம்பானு?

2-வது குடியானவன்:—வெள்ளக்காரந் தானுங்கையா அதிகாரம் பண்றும்? இல்லாத புதுமை யெல்லாங் கண்டு பிடிச்சிருக்கிறும்?

வாத்தியார்:—இதென்ன இப்படி சொல்றீங்க? ஆனு, துரியோதனன் அதிகாரம்பண்ணலேயா? அவனுக்கு சாமர்த்தியம் இல்லியா? வெள்ளக்கார ரெல்லாம் துரியோதனுயுங்கொ. அதிலே உங்குளுக்கு சந்தேகமே வேண்டியதில்லெ.

4-வது குடியானவன்:—அது இருக்கட்டுமுங்கையா. வெள்ளக்காரம் இத்தனையெல்லாங் கண்டு புடிச்சிருக்கருனே, உசுரெ வாங்கி உசுரெக் குடுக்கறதுக்கு அவனுலே முடியுமுங்களா?

வாத்தியார்:—முடியாமென்ன? ஆனு, இப்பொ முடியாது. உயிரை வாங்கி உயிரு குடுக்கறது கண்டுபிடிச்சாச்சுதுண்ணு, அதோடெ கலியுக முடிவல்லவா?

இவ்வாருக இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், காவி படர்ந்த துவையல் வேட்டி யுடுத்திருந்த நடுவயதுள்ள ஒரு குடியானவன் அவ்வழியே சென்றுன். அவனைக்கண்டு சாவடியிலிருந்த மற்றொரு குடியானவன், "ஏனுங்கண்ணு, வாங்கோ. எங்கிருந்து வாரீங்கோ?" என்று வினவினுன். வழியில் நின்ற குடியானவன், 'பக்கத்தூருக்குப் போயிருந்தேம்,' என்று மறுமொழி சொல்லிக்கொண்டே சாவடிக்குள் நுழைந்து, ஒரு புறத்தில் விலகி யுட்கார்ந்தான். அப்பொழுது எல்லோர் முன்னிலையிலும் அவ்விரு குடியானவர்களுக்குள் நடந்த பேச்சு இது:

"என்னங்கொ, பக்கத்தூர்லெ?"

"பெரியக்கா மகன் செல்லணன் செத்துப்போனும், எளவு விசாரிச்சுப்போட்டு வலாமுண்ணு போனேன்."

"யாரு, வெள்ளிரித் தோட்டத்துச் செல்லணு?"

"ஆமா."

"அவனுக்கு என்னங்கோ?"

"அவஞ் செத்ததைக் கேட்டீண்ணு-அது ஒரு கூத்து."

"எப்பிடீங்கொ? அட, பாவமே!"

"போனவாரம் சந்தைக்கித் தேங்கா கொண்டுபோகோணுமுண்ணு, தெக்குத்தோப்புக்குப் போயி, காயெறக்கி வண்டியிலெ பாரமேத்திப்போட்டு வளவுக்கு வந்தா. அண்ணைக்கி ராத்திரி சோறுங்கறபோது தாயாரொடத்திலெ 'அம்மா, ஒரு மரத்திலெ மட்டையைப் புடுங்கிக் கீளே போட்டேஞ். அப்போ என்னமோ கைலே சுருக்குண்ணுது. கொஞ்சம் நத்தங்கூட வந்துது. அந்தப் புண்ணுக்குச் சுத்தறதுக்கு ஒரு துணி கொண்டூட்டுவா' இண்ணு சொல்லி, கைக்குக் கட்டுப் போட்டுகிட்டா. பின்னே, மறு நா, வெடியாலெ, வண்டிக்கி ஒரு மாடு வேணுமுண்ணு ஊருப் பண்ணுடி வளவுக்குப் போனு. அங்கே போனவருசம் அந்தத் தோப்பை குத்தகக்கிப் புடிச்சிருந்த சின்னுஞ்செட்டி திண்ணேலே உக்காந்திருந்தா. அவன் இவனைப்பார்த்து, 'என்ன, செல்லணு, கையிலெ கட்டு?' எண்ணு கேட்டா. இவன் நடந்ததெச் சொன்னு. சின்னுஞ் செட்டி 'எந்த மாத்துலே?' எண்ணு கேட்டா. இவன் மரம் குறிப்புச் சொன்னு.

அப்பொ சின்னுஞ்செட்டி, 'அடெ, பாவி, அந்த மாத்துலெ அடைப்பாம்பு இருக்குதே. நானு அந்த மாத்துலே காயெறக்கறதே கெடையாதே' எண்ணு சொன்னு. அப்பவே செல்லணுனுக்குப் புண்ணு வலியெடுத்து, நஞ்சேறி, அந்திநேரஞ் செத்துப்போனு. அது உண்ணிச் சொல்லி எனத்துக் காகுது? கவலே மாடு கால் நொண்டீட்டு இருந்தது, என்ன ஆச்சோ. நாம் போய்ட்டுவாரே."

குடியானவன் போனபின், அங்கிருந்தவர்களில் இன்னுஞ் சிலர் கொட்டாவி விட்டு, எழுந்து, தம் கைகளைத் தலைக்குமேலே தூக்கி, இடுப்பை வளைத்துச் சடைவு தீர்த்து, தங்கள் வேட்டிகளிலே ஒட்டியிருந்த குப்பையைத்தட்டி, மேல்வேட்டியை உதறி, தம் தம் வேலையைப்பார்க்கும்பொருட்டுப் புறப்பட்டுபோயினர். புதியவர்கள் சிலர் ஒவ்வொருவராய் வந்தனர். வந்தவர்களுள்ளே முத்தண்ண கவுண்டன் என்பவன் ஒருவன். அவனுக்கு ஊரிலே கோமாளி-முத்தணன் என்னும் பெயர் வழங்கிவந்தது. அவன் பெண்டு பிள்ளை, வீடு வாசல் இல்லாதவன். அவனுக்கு வயது ஐம்பது. பணக்காரப் பண்ணுடிகளின் வீட்டிலே போட்டதைத் தின்றுகொண்டு ஊர் வம்பு பேசுவது அவன் தொழில். அவன் எப்பொழுதும் வேடிக்கையிலும் விளையாட்டிலும் விருப்பமுடையவன். அவனிருக்கு மிடமெல்லாம் சிரிப்புமயமாயிருக்கும். அவன் பெண்களைப்போல் பேசவல்லவன்; பாடியும், தொந்திவயிறு குலுங்கும்படி ஆடியும் பண்ணுடிகளை மகிழ்விப்பான். மற்றையோருக்கு வலதுகைபோல அவனுக்கு இடது கை பயன்படும். பத்துப் பதினைந்து மயிர் கூடிய உச்சிக்குடுமியையுடைய சொட்டைத்தலையும், அடர்ந்து நீண்டு வளர்ந்த நரைத்த மீசையும் அவனுக்குச் சிறப்பானவை.

கோமாளி-முத்தணன்வரும்பொழுது நமது வாத்தியார் இழவுக்குப் போய்வந்த குடியானவன் சொன்ன செய்தியை ஆதாரமாகக்கொண்டு, மதியினும் விதியே பெரிதென்னும் தம் கொள்கையை நிலைநிறுத்த முயன்று, தமக்குத் தெரிந்த மேற்கோளையெல்லாம் கூறி, தமது திறமையைக் கண்டு தாமே மகிழ்ந்து, எழுந்து வெளியே புறப்பட்டுப் போனுர். கோமாளி அவர் போவதைக்கண்டு கண்ணிமை

த்து, சாவடிக்குள் நுழைகையிலே, 'நெடுமால் திருமருகா நித்த நித்தம் இந்தெழவா? வாத்தியார் சாகானு வயிற்றெரிச்சல் தீராதா?' என்று பாடிக்கொண்டு உள்ளே வந்தான்.

கோமாளி:—இந்தொ வாத்தியாரு நம்ப தெரிஞ்சவம் போல குதிக்கரு௶. இவன் சேதி எனக்குத் தெரியும்.

ஒருவன்:—அது என்னங்க, அண்ணு?

கோமாளி:—இவன் இந்தொ ஊருக்கு வந்த புதுசுலே, தெக்காலே, ஒரு வளவுலே குடியிருந்தா௹. இவன் வளவுக்குப் பக்கத்துலெ ஒரு குறும்பனும் அவம் பொண்டாட்டியும் இருந்தாங்கோ. வாத்தியாரு அவமேலே ஆசப்பட்டு அவகிட்டப் போயி, சொன்ன௶. அவொ பத்தினி. அதுக்கவொ மறுநா வரச்சொன்னு. மறுநா புருசனெ அட்டாலியிலே ஒளிச்சுவெச்சுப் போட்டு, இருந்தா. வாத்தியாரு போயி அவகூடப் பேசிகிட்டு இருந்தா௹. அட்டாலி மேலே என்னமோ சத்தமாச்சு. வாத்தியார் என்னெண்ணு கேட்டா௹. அட்டாலிமேலே வெகுநாளாக ஒரு பேயி இருக்குதுண்ணு குறும்பிச்சி சொன்னு. அப்போ, அட்டாலிப்பேயி கம்பிளியைப் போத்துகிட்டுவந்து, வாத்தியாரெ தலதலெயாக் குட்டுது, குத்துது, காலப்புடிச்சி இளுக்குது, கிள்ளுது, ஒதைக்குது. வாத்தியாருக்கு அளுக்காச்சுவருது. வாய்தொறந்தா மானக்கேடு. அட்டாலிப்பேயி வாத்தியாரை ஒதஒதைதண்ணு சலிக்கிறவரையிலெ ஒதச்சு, கதவுக்கு வெளியிலே தள்ளித் தாளுப் போட்டிக்கிட்டுது. எட்டு நாகாச்சலெண்ணு வாத்தியாரு பள்ளிக்கொடத்துக்கு வல்லே.

இதைக் கேட்டோர் யாவரும் வயிறு வலிக்கும்படி நகைத்தனர். அவர்களில் ஒருவன்,

"இது, மணியகார ஐயர் முத்தக்கா கிட்டப் பட்டது

போலத்தா." என்றான். அங்கிருந்தோர் வாயின்மேற் கை வைத்து அவனைப் பேசாதிருக்குமாறு சொல்லினர்.

பொழுதுபோக்கில் முக்கியமானவை மூன்றே இங்கே கூறப்பட்டன. தென்னாட்டார் வருடந்தோறும் எங்கள் ஊருக்கு வந்து நடத்தும் அரிச்சந்திர நாடகமும், பெண்கள் ஊர்க்கிணற்று மேட்டில் கூடிப் பேசும் பேச்சும், கிழவிகள் இராட்டினம் வைத்து நூல் நூற்கையில் சொல்லும் கதைகளும் பாட்டுகளும், சிறுவர் சிறுமியர் ஆடும் பல வகையான விளையாட்டுகளும் விரிவஞ்சி இங்கே எழுதாது விடப்பட்டன.

X

வள்ளியம்மாள் திருமணம்.

பண்ணுடி—காளியண்ண கவுண்டர் காலஞ்சென்ற பின் அவருடைய குமாரர் வேலுச்சாமி கவுண்டர் பண்ணுடியானார். அவர் பண்ணுட்டுக்கு வந்த சில நாட்களில் கடனில் ஆழ்ந்திருந்த தமது குடும்பத்தைச் சீர்ப்படுத்தினார்: அல்லும் பகலும் காட்டிலும் தோட்டத்திலும் உழைத்து இரண்டு வருடங்களில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கடனை ஒழித்தார்; அவசியமில்லாத வண்டிகளையும் குதிரைகளையும் யானையையும் விற்றார்; தம்மிடம் நட்புச் செய்யவந்த தமது தந்தையின் பழைய நண்பர்களை அறவே ஒதுக்கினார்; வீட்டில் நடந்த வீண் செலவுகளை நிறுத்தினார். இவ்வளவு செய்தபின்னும் கடன் மீந்திருந்தது கண்டு தம் நிலங்களிற் சிலவற்றை விற்றுக்கொடுத்துக் கடனை முற்றிலும் தீர்த்துவிட்டார். அவர் வயதிற் சிறியவராயிருப்பினும், அவருடைய அடக்கமும் ஆழ்ந்த புத்தியும் ஊரில் அவருக்

குப் புகழைச் செய்தன. அவர் குடும்பத்தை ஒழுங்குபடுத் தினது கண்டு வியந்து, ஊர்ப்பண்ணாடியும் அவர்பால் பெரி தும் மதிப்புடையவராய், காளியண்ண கவுண்டரோடே தம் பகையையும் மறந்து,வேலுச்சாமி கவுண்டரிடத்தில் நட் புக்கொண்டார். அவர்கள் இருவரும் நெருங்கிப் பழகவே அவர்களுடைய குணங்களையும் கொள்கைகளையுஞ் ஒருவர்க் கொருவர் பாராட்டுவாராயினர். நாளடைவில் வேலுச்சாமி கவுண்டர் ஊர்ப்பண்ணாடியின் வீட்டுக்கு அடிக்கடி வருத லும் போதலுமா யிருந்தார்; அவரை ஒரு நாழிகை காணு விடினும் ஊர்ப்பண்ணாடிக்குப் பொழுதுபோவது அரிதாய் இருந்தது.

ஊர்ப்பண்ணாடியின் மகள் வள்ளியம்மாள் புத்தியறிந் து மூன்று வருடங்களாயின. அவள் அழகிலும் குணத்தி லும் நிறைவுற வளர்ந்து, 'தாவிப்படரக் கொழுகொம்பிலாத தனிக்கொடிபோல்' இருந்தனள். அவள் கலியாணம் எப் பொழுது வரும் வரும் என்று ஊரார் எதிர்பார்த்துக்கொ ண்டிருந்தனராயினும், அவளுக்குக் கணவனுவான் இன்னுன் என்பது சிலரே அறிவர். வேலுச்சாமி கவுண்டர் தன் தந் தையினிடம் அடிக்கடி வந்துபோவதை யறிந்து அவள் விருப்புற்றனளோ, வெறுப்புற்றனளோ, நாம் அறியோம். ஊர்ப்பண்ணாடி வீட்டு வேலைக்காரர்கள் மறைவாகத் தங்க ளுள்ளே பேசிக்கொண்டனவற்றிலிருந்து நாம் அறியலா வன இவையே: வேலுச்சாமி கவுண்டர் தன் தந்தையோடு உண்டிகொள்ள வரும் நாட்களில், என்றும் மடைப்பள்ளி புகுந்து வேலை செய்யாத வள்ளியம்மாள், அங்குச் சென்று சமையல் வேலையைத் தானே நேரிற் பார்த்து, மற்றை நாட் களைப் பார்க்கினும் அன்று காய்கறிகளும் பணியாரங்களும் சுவைதரும்படி சித்தப்படுத்துவாளாம்; அவை தம் மகள்

செய்தவை என்பது அறியாத ஊர்ப்பண்ணாடி சோறுண்கையில் சமையற்காரர்களைக் கூவி, "ஏண்டா, இண்ணக்கி சாறு கறியெல்லாம் நல்லா இருக்குதே, இது யாரு பண்ணினது?" என்று கேட்பாராம்; அவர்கள் உண்மையைச்சொல்வார்களாம்; அதுகேட்டது முதல், பண்ணாடியினிடம் சிறிது முன் ஓயாது பேசிக்கொண்டிருந்த வேலுச்சாமி கவுண்டர் சிந்தனையிலாழ்ந்து, இடையிடையே விழித் தெழுந்தவர் போலப் பண்ணாடி கேட்டவற்றிற்கு மறுமொழி சொல்லுவாராம். வீட்டுக்கு விருந்தினர்வந்தால் அவர்களுக்குச் சிறந்த உணவு அளித்தல் முறையேயன்றோ? அன்றியும், வேலுச்சாமியும் வள்ளியம்மாளும் ஐயண்ண வாத்தியாரிடம் கல்வி கற்ற ஒருசாலை மாணாக்கர்களன்றோ?

அவ்வருடம் வள்ளியம்மாள் மற்றைப் பெண்பிள்ளைகளோடு பூ நோன்புக்குப் பூப்பறிக்கச் சென்று, திரும்பி ஓர் இட்டேரிவழியாய் வருகையில், இரண்டு காளைகள் வாலை நீட்டிக் காதை நெரித்து, குளம்புகள் பட்டவிடத்தில் புழுதி கிளம்பும்படி நான்குகாற் பாய்ச்சலாய் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு, சடுதியில் இட்டேரியின் ஒரு புறத்தினிருந்து பாய்ந்து, பெண்கள் கூட்டத்தினுள்ளே நுழைந்தன. பெண்கள் கூச்சலிட்டுப் பிரிந்து பல திசைகளையும் நோக்கி ஓடினர். வள்ளியம்மாள் திரும்பிப்பார்த்து ஓடுவதற்குள் காளைகள் அவளை நெருங்கிவிட்டன; அடுத்த கணத்தில் அவள் காளைகளின் கால்களில் அகப்பட்டிருப்பாள். இதற்குள் கண கணவென்று சதங்கைமாலைகள் ஓசையிட ஒரு பெட்டிவண்டி எதிர்ப்புறத்தினின்றும் விரைந்துவந்து அக்காளைகளுக்கு முன் நின்றது. வேலுச்சாமி வண்டியிலிருந்தபடியே சாட்டையாற் காளைகளை ஓங்கியடித்து, அவை மிரண்டு நிற்கையில் அவர் கீழே குதித்து, வள்ளியம்மாளைக்

கையாற் பற்றி அழைத்துக்கொண்டு அப்பாற்சென்று, அவளைத்தேற்றி, அவளையும் தமது வண்டியிலேற்றுவித்து வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாய்க் கூறினார். வள்ளியம்மாள் வாய்திறந்து ஒன்றும் பேசாவிடினும், அவள் கண்கள் அவள் கருத்தை வெளிப்படுத்தின. இதற்குள் பிரிந்துபோன பெண்கள் வந்து கூடினமையால் வள்ளியம்மாளை அவர்கள்பால் விடுத்துக் கவுண்டர் தமது காட்டுக்கு வண்டியேறிச்சென்றார்.

இது நடந்த சில நாட்களுக்குப்பின்னர், தம் பெண்டு பிள்ளைகளை வீட்டிலே விடுத்து, பத்துப்பேரோடு சேர்ந்து கொண்டு ஊர்ப்பண்ணாடி திருப்பதிக்குச் சாமி சேவிக்கப் போனார். அப்பொழுது எங்கள் ஊரில் திருநெல்வேலியிலிருந்து வெண்கலத்தொண்டை-முத்தையபிள்ளை யுட்படச் சிலர் வந்து அரிச்சந்திர நாடகம் ஆடிக்கொண்டிருந்தனர். அமாவாசைக் குறவனுடைய சுற்றத்தாரான அயலூர்க் குறவர்கள், அவன் இறந்தபின், ஊர்ப்பண்ணாடியின் மீதும் வேலுச்சாமியின்மீதும் பழிவைத்துப் பழிதீர்த்துக்கொள்ளத் தருணம் பார்த்திருந்தனர். ஊரில் நாடகம் ஆடுவதும், ஊர்ப்பண்ணாடி ஊரில் இல்லாமையும் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு அனுகூலமா யிருந்தமையால், அவர்கள் நாடகப் பந்தலில் ஊரார் கூத்துப்பார்த்துக் கொண்டிருக்கையில், சாமத்தில், கவுண்டர்கள் இருவருடைய வீடுகளையும் கொள்ளையடிப்பதாய் முடிவுசெய்திருந்தனர். இச்செய்தியைத் தன் கடையிலே சில குறவர்கள் மறைவாய்ப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு, எங்களூர்க் கள்ளுக்கடைக்காரன் வேலுச்சாமிக்கு அறிவித்தான். அவர் ஊர்ப்பண்ணாடியின் மனைவியையும் மகளையும் தெற்குத் தோட்டத்திலுள்ள களத்துக்கு அனுப்பி, அவர்களுக்குக்

காவல்வைத்து, தாம் இருநூறு ஆட்களோடு வீட்டில் மறைந்திருந்து, குறவர் வரக்கண்டு, அவர்களை யெதிர்த்து, நையப்புடைத்துத் திருப்பி யடித்தார். ஊர்ப்பண்ணுடி திரும்பிவந்து நடந்ததைக் கேள்வியுற்று மகிழ்ச்சிகொண் டிருந்தார்.

ஒருநாள் ஊர்ப்பண்ணுடியும் வேலுச்சாமியும் பண்ணு டியின் வீட்டில் உண்டி கொள்கையில், சமையற்காரர்கள் ஒரு குழம்பை யூற்றி, வேலுச்சாமியைப் பார்த்து, "இதெ ன்ன கொளம்பு? சொல்லுங்கொ பாக்கலாம்" என்றனர். வேலுச்சாமி குழம்பைச் சுவைத்துப்பார்த்து, "இது வெண் டக்காய், தெரியாதா?" என்றார். சமையற்காரர்கள் ஓயாமல் நகைப்பது கண்டு, பண்ணுடி, "என்ன கொளம்படா?" என்று கேட்டார். சமையற்காரர்களில் ஒருவன், "இது அம்மிணி கள்ளிக்காயைக் கிள்ளிப் போட்டுக் காச்சுனதுங் கோ" என்றான். உண்டிமுடிந்தபின் பண்ணுடி வீட்டினுள் யாதோ வேலைபார்த்துக்கொண்டிருந்தார். வேலையாள் ஒரு வன் ஒரு தட்டில் வேலுச்சாமிக்கு வெற்றிலை பாக்குக் கொண்டுவந்து வெளியே திண்ணையில் வைத்தான். வேலுச் சாமி ஒரு வெற்றிலையைத்தின்று, அது வெற்றிலைபோற் கார மில்லாதது கண்டு, தட்டை உற்று நோக்கினார்; தட்டிலே வெற்றிலைபோல் தோன்றியவை ஊணுன் இலைகளாய் இருக் கக்கண்டு வெட்கினார்.

பின்னர், சிலநாட்களிலே பெரியோர்கள் வேலுச்சாமிக் கும் வள்ளியம்மாளுக்கும் விவாகம்பேசி நிச்சயதாம்பூலம் வழங்கினார்கள். மணமகன் மணமகளுக்குப் பல நகைகளை யும், பெருந்தொகையான பணத்தையும் பலர் முன்னிலையில் பரியமாகச் செலுத்தினார். பல ஊர்களுக்கும் மணஓலை அனுப்பினார்கள். மணமக்களின் வீடுகள் அலங்கரிக்கப்

பட்டன. பலவகை வாத்தியக்காரர்களும் அழைக்கப்பட்டனர். கலியாண காலத்தில் நடைபெறும் பாட்டுக்களரிகளையும் வாணவேடிக்கைகளையும் சிறந்த விருந்தையும், கண்டும் உண்டும் மகிழும்பொருட்டு அயலூரிலுள்ள சனங்கள் யாவரும் மூன்றுநாட்களுக்கு முன்னரே எங்களூர்வந்து சேர்ந்தனர். மணநாளன்று மாப்பிள்ளை பட்டிக்குப்போய்ப் பால் கொண்டுவந்து, தன் தாயாரில்லாமையால் சிறிய தாயாரின் கால் தொட்டுக் கும்பிட்டு, ஆசிபெற்று, உற்றூர் உறவினர் புடைசூழ மணக்கோலத்துடன் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று, அங்கே இருந்தார். பெண்வீட்டார் கொட்டு முழக்குடன் கோவிலுக்குச்சென்று, மாப்பிள்ளையை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், மணவறையில் இருத்தினார்கள். வாத்தியம் முழங்க, மறையோன் வேதஞ்சொல்ல, கொங்கு வேளாளர்க்குரிய சீர் சடங்குகள் யாவும் நடைபெற்று, மணமகன் பெண்ணுக்குத் தாலிகட்டினார். பின்பு தொன்றுதொட்டுவரும் வழக்கப்படி மாப்பிள்ளையையும் பெண்ணையும் மணையிலே வைத்து, கருப்ப நாவிதன் மண வாழ்த்துச் சொன்னான். அவ்வாழ்த்து, கம்பர் கொங்கு நாட்டில் இருக்கையில் அந்நாட்டு நாவிதர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர் பாடிக்கொடுத்ததென்று கொங்கு நாவிதர்கள் சொல்லுகின்றனர். அது பின்வருமாறு:—

கிரேதா திரேதா துவாபர கலியுகம்,
சேரனொருவன் சோழனொருவன்,
பாரமாமுடி பாண்டிய னொருவன்,
மூவருங்கூடி ராச்சியமாண்டு,
செம்மையுடனே சிறந்திடுங்காலம்;
கருவூர் தன்னைக் காத்தருங் கூடி,
திருவருள் திருயுகம் சிறந்த மானிடர்

தாயது சுத்தம் வாழ்வது பொத்தம்;
இந்திரன் றன்னை இனியது தந்தருள்
பக்குவமான பரியமும் பேசி,
திக்குள்ளோர்கள் பலபேருங்கூடி,
வேதியர் பக்கல் விரைவுடன் சென்று,
சோசியரை யழைத்துத் தோத்திரங் கேட்டு,
இந்த மாப்பிள்ளை பெயர்தனைக் குறிப்பித்து,
இந்தப் பெண்ணின் பேர்தனைப் பேசி,
இருபேருடைய் பெயர்தனைக் கேட்டு,
கயிற்றினை யோட்டிக் கயிற்றுப் பொருத்தம்
ஒன்பது பொருத்தம் வேதியர் சொல்ல;
மைத்துனமாருக்கு—சென்று நடந்து சிலபேரும் கூடி,
வாசற்பல்லி விளித்தடை நிமித்தம்
சிறியோர் பெரியோர் சிறந்தவரெல்லாம்
கூறிய சொல்லைக் குறிப்புடன் கேட்டு,
உத்தாமான தட்சிணங் கேட்டு;
நாளது குறித்து நல்விருந்துண்டு;
வாழ்வது மங்கைக்கு மனமது குளிர்ந்து,
நாளைத்திங்கள் நற்கலியாணம்,
பிடிபிடி வெற்றிலை பிடிதனிற் பிடித்து
பாக்கு வெற்றிலை பலபேர்க்குங் கொடுத்து,
அன்னமுந் தேனும் அனைவோர்க்குங் கொடுத்து;
மிக்க மாப்பிள்ளையை விரிதனிலிருத்தி,
பெரிய கலத்திற் பிரபலமாக
உரிய அரிசி ஒருமூன்று வள்ளம்,
முக்காலிதன்னில் முகூர்த்தமாய் வைத்து,
பாரிய வெல்லம் பாக்கு வெற்றிலையும்
வரிசை குறையாமல் மதிப்புடன் வைத்து,

மாப்பிள்ளை தனக்கு மதிமுகந் துடைத்து,
விழுந்த மீசையை விளங்கிட ஒதுக்கி,
எழுதீர்த்தம் இசைந்திட நீரும்
மேளமுடனே வளாவியே வார்த்து,
வன்னப்பட்டால் மயிர்தனை முறுக்கி,
ஆவின் பாலும் அன்னமும் பழமும்
வந்தவர்க்குடனே வந்தவ ரழைத்து,
முறைமையதாக நிறைநாழி வைத்து,
சர்க்கரை நைவேத்தியம் தூபங் கொடுத்து,
சாணங் கொண்டு தரையை மெழுகி,
கணபதி தன்னைக் கருத்துடன் நாட்டி
அறுகதுசூட்டி அருள் பொருந்திட
குழவிக்குக் கங்கணம் குணமுடன் தரித்து,
குப்பாரி கொட்டிக் குலதேவதை யழைத்து,
செப்பமுடன்மன்னவர்க்குத் திருநீற்றுக்காப்பணிந்து,
உண்டு பசியாறி உறவின ரனைவரும்
பந்தற் களரிக்குப் பாக்கிலை வழங்கி,
சந்தோஷமானர் தங்கமுடி மன்னர்;
இணையோங்கு மங்கையரை ஏந்திழையைத் தானழைத்து,
மந்தாரை மல்லிகையும் மருக்கொழுந்து மாலையிட்டு,
சந்தனம் புனுகு சவ்வாது மிகப்பூசி,
ஆடை யாபரணம் அழகுடன் பூண்டு,
அம்மி வலமாக அரசாணி முன்னாக,
ஆயிரம் பெருந்திரி அதுவும் வலமாக,
நாக்காசு நாட்டி நல்ல முகூர்த்தமிட்டு,
பேய்க்கரும்பு நாட்டி பிரமனதுவைத்து,
சந்திரரும் சூரியருஞ் சபையோருந்தானறிய,
இந்திரனார் நல்லதங்கை இணையோங்க வந்தபின்பு,

அடைக்காயும் வெற்றிலேயும் அடிமடியிற் கட்டியபின்
பிறந்தவரைச் சுற்றிப் பேழைமூடி தான்சுமந்து,
முன்னே ஒருதாரமாய் விநாயகர்க்கிணையோங்கி
பின்னே ஒருதாரமாய்ப் பிறந்தவர்க்கிணையோங்கி,
மாதாவுடனே மகனுரும் வந்திறங்கி,
தேங்காய் முகூர்த்தமிட்டுச் செல்வ விநாயகர்க்குப்
பாங்காகக் கைமுகிழ்ந்து பாரிசெய்யப் போமுரென்று,
பயணம்பயணமென்று பாங்காக மன்னர்களும்,
மதகரி யலங்கரித்து மன்னவர்களேவினர்கள்;
தந்தையரானவர்கள் தண்டிகைமே லேறிவர,
தமையனுரானவர்கள் யானைமேலேறிவர,
வெள்ளைக்குடை வெண்சாமரை விருது சூழ்ந்துவர,
கைத்தாளம் பம்பை கனகதப்பு தானூத,
துத்தாரி நாகசுரம் சோடுகொம்பு தானூத,
நாடிவந்த பேர்களெல்லாம் நக்ஷத்திரம்போல் வருக,
தேடிவந்த பேர்களெல்லாம் தேர்வரிசைபோல் வருக,
மேள வாத்தியங்கள் மேதினியில் தான்முழங்க,
காளை கொம்பரிக் கனத்த சபைதனிலே,
கட்டியங்கள் கூறக் கவிவாணர் முன்னடக்க,
நாட்டியங்களாடிவர நயகுஞ்சம் வீசிவர,
பருசுகள் பறந்துவரப் பல்லக்கு முன்னடக்க,
யானைமேற் பேரிகை அதிர முழங்கிவர,
குதிரைமேற் பேரி குமுகுமென்று தான்முழங்க,
சுருளிருட்டியவான் தீவட்டி முன்னடக்க,
இடக்கை வலக்கை இருபுறமுஞ் சூழ்ந்துவர,
ஆடுவான் பாடுவான் ஆலத்தி முன்வரவே,
தேடிவந்து கைமுகிழ்ந்து தியாகமென்ற பேர்களுக்கு
வந்துகண்ட கவிவலார்க்கு வரிசைதனைக் கொடுத்து,

விந்தையுடன் வேதியர்க்கு வேண்டியதெல்லாங் கொடுத்து
மன்னவரைக்கண்டு வாவென்று தானழைத்து,
போதவே பால்வார்த்துப் போசனமுந் தானளித்து,
தாயாருடன்கூடிச் சாப்பிட்டிளைப்பாறி,
தாயாரைப் பார்த்து தன்மகனுந் தெண்டனிட்டார்,
போய்வா மகனேயென்று போற்றி விடைகொடுத்து,
வெகு சனத்துடனே விடுதிக்கு வந்திறங்கி,
வாழ்பெரிய மன்னவர்க்கு வரிசையனுப்புமென்றார்;
நாழியரிசி கூடை நன்றாகத் தானனுப்பி,
பொன்பூ மட நல்முகூர்த்தம் பேடைமயிலாட்குப்
பெட்டிகளும் பேழைகளும் பொன்னுகளும் சீப்புகளும்,
பட்டுப்பணி நகையும் பாக்கிலையும் மாங்கலியம்,
அருமைபெற்ற பெரியோர்கள் அன்னநடைக் காரர்களும்,
வன்னக்கிளைக் கச்சையர்க்கு வரிசை யனுப்புமென்றார்;
பொன்னு விழக்கையினாலே போனமுடி தானெடுத்து,
கொண்டுவந்த பொன்முடிப்பைக் கோதையர்க்கு முன்பு வை
கண்டு மனமகிழ்ந்தார் கன்னியர்களெல்லோரும்; [த்துக்
நாட்டிலுள்ள சீர்சிறப்பு நாங்கள்கொண்டு வந்தோமென்று,
பின்னேவந்த சனங்களெல்லாம் பின்னுமொரு பொட்டுமிட்
மந்தாரை மல்லிகைப்பூ மருக்கொழுந்து மாலையிட்டு [டார்;
சந்தனம் புனுகு சவ்வாது மிகப்பூசி,
முல்லையிருவாட்சி முனைமுறியாச் சண்பகப்பூ,
தண்டைமாலை கொண்டைமாலை சொர்னமாலை தொடைமாலை
ஆடையாபரண அலங்கிருதஞ் செய்தபின்பு,
பொட்டுமிட்டுப் பொன்முடிந்து போதவே யலங்கரித்துப்
பட்டமினிக் கட்டினார் பாரிலுள்ள தாமரைக்கு;
நிட்டமுடன் பேழைதனில் சோறுநிறை நாழிவைத்து,
நட்டுமுட்டுத் தான்முழங்க நாட்டார் சபைக்குவந்து,

இடமதிலிருந்து வலமதிலே வந்து,
செஞ்சோ றஞ்சிடம் சுற்றிவந்து தானெறிந்து,
திட்டிகழித்துச் சிவசூரியனைக் கைமுகிழ்ந்து,
அட்டி செய்யாமல் அழகு கலைக்குவந்து,
சுத்தமுடன் கலம்விளக்கிச் சோறரிசி பால்பழமும்,
பத்தியுட னத்தனையும் பாரித்தார் மணவறையில்;
திட்டமுடன் மாப்பிள்ளை செப்பமுடன் மாலையிட்டு,
வாரார் மணவாளன் மாமன்களைப் பந்தலுக்கு,
முக்காதமுள்ள முகூர்த்தமுள்ள பந்தலுக்கு;
அடியும்பெற்றோர் பாணி அஷ்டகிரிதானறிய
கண்ணாளனையழைத்துப் பெண்ணோட்டம் பாருமென்று
துட்டுப்பொன் மோதிரப்பொன் வெள்ளைப் புள்ளடி,
வேந்தோர் நாணயம் நம்ம சந்திரரை,
ஆடையாபரணம் அலங்கரித்துக் குழல்கோதி,
அழகுகொண்டை தான்முடிந்து அனைவோரும் சம்மதித்துப்
பொன்பூட்டி வந்தவர்க்குப் பூதக்கலம் தானனுப்பி,
அன்பாகப் பாக்கிலையும் அடைவாகத் தான்கொடுத்து,
தாய்மாமனுரைத் தயவுடனே தானழைத்து,
தாய்மாமன் வந்து தன்சனங்களெல்லோரும்,
வாவென்று தானழைத்து வரிசையுள்ள தாய்மாமன்,
அத்தனைபேரும் அனைவோரும் வந்திறங்கி,
தாய்மாமன் முன்னே தவறாமல் பொட்டுமிட்டு,
நாற்காதமுள்ள நகரிலுள்ள பந்தலுக்கு,
ஐங்காதமுள்ள அகலமுள்ள பந்தலுக்கு,
அன்னங்கள் நின்று அலங்கரிக்கும் பந்தலுக்கு,
தும்பிகள் நின்று துவண்டாடும் பந்தலுக்கு,
வண்டுகள் நின்று மனங்குளிரும் பந்தலிலே,
இன்பமுடன் மாப்பிள்ளையை இருத்தியே மணவறையில்,

மாப்பிள்ளைக்கு மைத்துனன்ரா வாவென்று தானழைத்து,
கலம்பெரிய அரிசிதனில் கைகோர்வை தானிருத்தி,
கம்பரிட்டவாழி கங்காகுலம் விளங்க,
மங்களமும் கண்ணி சொல்ல வாத்திய மெல்லாம் அடக்கி,
சிங்காரமான தெய்வசபை தனிலே,
அருமைபெற்ற பெரியோர்கள் அழகுமணஞ் செய்தபின்பு;
தங்களுக்குத் தாங்கள் தம்கைக்கோர் பொன்கொடுத்து,
கைதாரை செய்தபின்பு கங்கணமுந் தான்செலுத்தி,
செங்கையினுலே சிவப்பிட்டார் இருவருக்கும்;
சிறு சீர் முதலியது சிலமுடன்தான் செலுத்தி
காட்டினுர் நாழி தொட்டுக் கைமுகிழ்ந்தார் பெரியோரை,
அரிசி யளந்தாராம் அனைவோருந் தாமறிய;
காகம் இறக்கினுராம் கன்னி மணவாளருக்கு;
புடைவைதனைப் போட்டுப் பின்னுந்தலை முழுகி,
மங்களமும் சோபனமும் வகையாய் முடித்தங்கே,
மாமன் கொடுத்த வரிசையது கேளாய்:
கட்டிலு மெத்தையும்——காளாங்கி,
அத்தியடிதுத்திப் பட்டு ஆனையடி தேவாங்கு,
மெத்தையின்மேல் பஞ்சவர்ணம் மேகவர்ணத்தூசு,
மேகவர்ணம் ஞானிவர்ணம் மிக்கமதாரி,
உண்ணக்கலமும் ஒருபது செம்பும்,
வர்ணக்கம்பளி வளிம்பாக் கொடுத்து,
கட்டுக்கடாரி கன்றுப் பசு நூறு,
சுத்தப்பால் பசு தொண்ணூறு,
இருநூறு எருமையில் எண்பது இயல்வான சுரவை,
பிரவையாடு பொருந்திய முந்நூறு,
ஆடையாபரணம் பொன்னும் பொருளும்
அடைவாக வரிசை பெற்றுர் அழகு மணவாளர்;

ஆல்போல் தழைதழைத்து அறுகதுபோல் வேரூன்றி,
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க;
பார்த்தவர்களெல்லோரும் பதினாறும் பெற்றெடுக்க;
கேட்டவர்களெல்லோரும் கிளைகோத்திரமாய் வாழ்ந்திருக்க.

பின்னுரை.

நான் பிறந்த ஊரை நீங்கி இருபது வருடங்களானமை யின், சென்றவருடம் ஊரைப் பார்க்கும்பொருட்டு அங்கே போயிருந்தேன். ஊரிலே பல மாறுதல்கள் நிகழ்ந்திருக் கக் கண்டேன். நான்கு மச்சுவீடுகளும், பல ஓட்டுவீடுகளும், வேறு பல புதிய வீடுகளும் புதிதாய்த் தோன்றியுள்ளன. தெருக்கள் சில ஒழுங்காயும் சுத்தமாயும் இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தேன். ஏழைக்குடும்பங்கள் சில செல்வக் குடும்பங்களாக மாறியும், செல்வக்குடும்பங்கள் சில ஏழைக் குடும்பங்களாக மாறியும் இருக்கக்கண்டேன். என்னையறிந்த பல முதியோரும் சில கூட்டாளிகளும் இறந்துபோயினர். நான் ஊர்ச்சாவடிக்குப் போயிருந்தபொழுது, அங்கே கூடியிருந்தோர் பெரும்பாலும் புதியவர்களாயிருக்கக் கண்டு, என்னை யறிந்தோர் சிலர் அங்கே கூடியிருந்தவர்கள் இன்னின்னார் என்று சொல்லக்கேட்டு, பழைய எண்ணங் கள் சில நினைவுக்கு வருதலும், அரிதின் முயன்று சிலரை அடையாளங் கண்டுபிடித்தேன். இருபது வருடங்களுக்கு முன் மணியக்கார ஐயர் ஒழிய வேறெவரும் எங்கள் ஊரில் குப்பாயம் தரித்துக்கொள்வதில்லை; இப்பொழுது பண்ணடி கள் உட்பட எல்லோரும் தங்கள் உடம்பை மறைத்துக்

கொள்வதற்குக் குப்பாயம் அணிந்துகொண்டிருக்கின்றனர். சில குடியானவர்களின் காலில் வெள்ளி மிஞ்சி காணப்படவில்லை. பண்ணுடிகள் வீட்டுப் பெண்டிர் பலர் கல்லிழைத்த கம்மல் அணிந்திருக்கப் பார்த்தேன். பண்ணுடிகளும் பல குடியானவர்களும் பழையசோறு உண்பதை நிறுத்தி, காப்பியும் உப்புமாவும் அருந்துகின்றனர். ஊரிலே முன்னிருந்தவற்றைப் பார்க்கினும் பெரிய கடைகள் பல கிளேத்துள்ளன; அவற்றில் ஒரு துணிக்கடையும் ஒரு தையற்கடையும் இருக்கக் கண்டேன். கடைகளில் பீடியும் சுருட்டும் பொடியும் மிகுதியாக விலேப்படுகின்றன. குடியானவர்களும் தங்கள் பேச்சிலே இடையிடையே உருமாறிய சில ஆங்கிலச் சொற்கள் வழங்குவதைக் கேட்டேன். கிறிஸ்தவ பாதிரிமார்கள் எங்கள் ஊரில் இப்பொழுது ஆங்கிலம் கற்பிக்கும் பொருட்டு சிறு பாடசாலே ஒன்று வைத்திருக்கின்றனர். ஐயண்ணவாத்தியார் பள்ளிக்கூடம் இன்னும் நடைபெறுகின்றதாயினும், குடியானவர்கள் தங்கள் பிள்ளேகளேப் பெரும்பாலும் ஆங்கில பாடசாலேக்கே அனுப்புகின்றனர்.

ஊர்ப்பண்ணுடி—சுப்பைய கவுண்டர் இப்பொழுது கிழத்தன்மையை அடைந்திருக்கின்றாராயினும், அவரது உடம்பு சிறிதும் கட்டுத் தளரவில்லே. முன்னிலும் இப்பொழுது அவர் பணக்காரராயிருப்பினும், ஊரில் புதிதாகப் பண்ணுட்டுக்கு வந்திருக்கும் வாலிபர்கள் அவர் வார்த்தையை அத்துணே மதிப்பதில்லே. அவருடைய மனேவி இறந்து ஐந்து வருடங்களாயினவாம். வள்ளியம்மாளேப் பார்த்தல் வேண்டும் என்ற ஆசை இழுத்துச்செல்ல, அவள் வீட்டுக்குப் போனேன். நான் ஊரைவிட்டுப்போகையில் வள்ளியம்மாள் இருந்தபடியே இப்பொழுதும் இருக்கக்கண்டு, ஆவலுடன் அவளோடு பேசத்தொடங்கினேன். அவள் என்னே அறிந்துகொள்ளாமல், "அம்மா, அம்மா, யாரோ

உன்னைக் கூப்படறாங்கோ" என்றாள். அடுத்த கணத்தில் வள்ளியம்மாள் அங்கே வரக்கண்டு, நான் முன்பு கண்ட பெண் அவளுடைய மகள் என்பதை அறிந்துகொண்டேன். வள்ளியம்மாள், அழகு முற்றுப்பெற்று, நடுப்பிராயத்தையும் முழுவளர்ச்சியையும் அடைந்திருந்தாள். அவள் என்னை ஆவலுடன் வரவேற்றாள் என்று நான் சொல்வது மிகையாகும். நான் காவேரி யம்மாளின் உறவினன் என்பது ஒன்றே அவள் என்னை மதிப்பதற்குப் போதும். அவள் இப்பொழுது காவேரி யம்மாளின் சவக்குழியின்மீது ஒரு சிறு மாடங்கட்டி, அதில் ஒரு துளசிச்செடியை வைத்து வளர்ப்பதுமன்றி, நாள்தோறும் அந்திநேரத்தில் அங்கே விளக்கேற்றி வைக்கின்றாள். நான் அவளோடு பேசிக்கொண்டிருக்கையில், பத்துவயதும் ஆறுவயதுமான இரண்டு சிறுவர்கள் கையில் புத்தகமும் கற்பலகையும் ஏந்தி, இரைந்து பேசிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தனர். அவர்களில் இளையவன் தன் புத்தகத்தை அங்கிருந்த கட்டிலின்மீது எறிந்துவிட்டு, அங்கே கிடந்த ஒரு மூங்கிற்கழியைத் தன் கால்களுக்கிடையிற் செலுத்தி, "குதரே, ஓடு குதரே, ஓடு, ஓடு" என்று சொல்லிக்கொண்டு, சுற்றிச்சுற்றிக் குதிரைச் சவாரி செய்யத் தொடங்கினான். மூத்த பையன் அடக்கத்தோடு தன் தாயினிடம் வந்து, கிறிஸ்தவ வாத்தியார் அன்று கற்பித்த ஆங்கில பாடத்தை வாசித்துக் காட்டினான். மூத்த பையனுக்கு அவன் தாயின் கண்களும் உதடுகளும் நெற்றியும் அமைந்துள்ளன; இளையவன் தாயாரைக் காட்டிலும் தகப்பனாரையே பின்பற்றியுள்ளான். இதற்குள் பண்ணடி-வேலுச்சாமி கவுண்டரும் அங்கே வரலானார். வெற்றிலை பாக்கு மென்று மென்று அவருடைய முன்பற்கள் அருகிப் போயிருந்தது தவிர, அவரிடத்தில் குறிப்பான வேறு மாறுபாடுகள் காணவில்லை. அவர் தமது தோட்டத்துக் கிணற்

றில் இப்பொழுது பம்பு வைத்துத் தண்ணீர் இறைப்பதாய் என்னிடம் கூறினர். எங்கள் ஊர் பெரிய கிராமமாயிருந்தலால், ஊர்ப் பொதுக் காரியங்களை நடத்துவதற்குத் துரைத்தனத்தார் பண்ணுடிகளடங்கிய ஒரு சபை கூட்டி, அதற்குத் தலைவராக வேலுச்சாமி கவுண்டரை நியமித்திருக்கின்றனர்.

கந்தையன் முன்னிலும் பதின்மடங்கு செல்வம் சேர்த்துள்ளான். நான் துணிக்கடை வைத்திருக்கும் எனது பழைய நண்பனுன முருகன் செட்டியைச் சந்தித்து, அவன் கடைக்கு எதிரில் செல்லும் பாதையில் நின்று அவனேடு அளவளாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அப்பாதையின் ஒரு கோடியிலே, பெரியதோர் பீப்பாய்க்குக் கையுங் காலும் முளைத்து அது நடப்பதுபோல் ஒரு மனித உருவம் தோன்றி, மெதுவாக நடந்துவந்து எங்களைக் கடந்து சென்றது. தொண்டையிலிருந்து முழங்கால் வரையிலும் வயிறு படைத்த அப்பெருமான் மணியக்கார—குருசாமி ஐயர் என்று என் நண்பன் சொல்லக்கேட்டு, நான் வியப்படைந்தேன். ஐயண்ண வாத்தியாருக்கு இப்பொழுது காது கேளாது, கண் பாராது; ஆகவே, அவர் பள்ளிக்கூடம் முன்போல் அவ்வளவு செழித்திருக்கவில்லை. ஆயினும், வள்ளியம்மாளின் தூண்டுதலால் ஊர்ப்பண்ணுடியும் வேலுச்சாமி கவுண்டரும் தங்கள் செலவில் ஒரு மளிகைக்கடை வைத்து, வாத்தியாருடைய மூத்தமகனை அதை நடத்தும்படி செய்திருக்கின்றனர். கச்சேரி—முத்தக்காள் தன் மகளை அயலூரானுன ஒரு செல்வனுக்கு மணஞ்செய்வித்து, தன் குடும்பத்தையும் தன் மருமகன் குடும்பத்தையும் தானே நடத்துகின்றுள்.

முற்றிற்று.

அரும்பத உரை.

அங்கணம் (VIII, IX)—இரண்டு விட்டங்களுக்கு நடுவிலுள்ள இடம்; பத்து முழத்தளவு.

அடிசாய்தல் (VIII)—நடுப்பகலான பின், பொழுது மேற்கே செல்லுகையில், நம்முடைய அடியி னின்றும் நிழல் கிழக்கே சாய்தல்; அடி சாயும் நேரம்: நடுப்பகல் கழிந்து பிற்பகல் தொடங்கும் நேரம்.

அட்டாலி (IX)—அட்டாலை: வீட்டின் மேலறை,

அம்பாரம் (I)—அடுக்கு, புகையிலைகளைக் கட்டுக்கட்டி அடுக்காகத் தொங்கவிடுதல்.

அம்புலி (III)—சோளக்கூழ்.

அருங்கொம்பு (II)—உச்சியிலுள்ள கொம்பு.

அறிகுறி(II)—அறிவதற்கான குறி, landmark.

ஆலம்பாடி மாடுகள் (VII)—கூரிய கொம்புகளும் நீண்ட வாலும் அழகிய மேனியும் உடைய உயர்ந்த சாதி மாடுகள்; காங்கயத்து மாடுகள் என்றாற்போல.

உடும்பு (III)—பார்வைக்குப் பாம்புபோல் தோன்றும் ஒரு நான்கு கால் பிராணி.

ஊர்ப்பண்ணாடி (III,IV)—ஊர்க்குடியானவர்களுக்குத் தலைவன்.

கட்டு (VIII)—சாறு.

காறை (IV)—வெள்ளிக்கம்பியாற் செய்து கணுக்காலின்மேல் அணியும் ஒரு காலணி.

கொங்காடை (V)—மழையும் குளிரும் படாதபடி தலைமீது மடித்துப்போடும் கம்பளி.

கொய்சுவம் (II)—கொசுவம்; பெண்கள் உடுத்தும் ஆடையினின்றும் இடைக்குப் பக்கத்தில் வெளியே தொங்கவிடும் தலைப்பின் மடிப்பு.

சமன் (III)—summons.

சிலை (I)—எதிரொலி, echo.

சிறைக்காடு (IV)—Reserved Forests.

சுங்கு (II, IX)—மடிப்பு.

தாம்போட்டுதல் (III)—கம்பு, சாமை முதலிய சிறுதானியங்களை, கொய்த கதிர்களின்றும் உதிர்க்கும் பொருட்டு மாடுகளையும் எருமைக் கடாக்களையும் தாம்பாற் பிணித்து அக்கதிர்களின்மேல் ஓட்டுதல்.

தொண்டுபட்டி (II)—ஒருவனுடைய ஆடுமாடுகள் வரம்புகடந்து அயலானுடைய காட்டிற்குள் மேயப் புகுந்தால், அவை தொண்டுபட்டியிலே அடைக்கப்படும்; அது மணியக்காரன் சாவடியினருகில் உள்ளது.

தொலை (I)—கவலையிறைக்கும் கிணற்று மேட்டில் நட்ட கால்களும் அவற்றில் கோர்த்த உருளையும்.

நடை (IX)—வீட்டிற்குள் நடப்பதற்கான வழி.

நிலை (VIII)—கதவுநிலை, door-frame.

பண்ணூட்டு (X)—பண்ணையை ஆளுதல்.

பம்பல் (I)—பரவுதல்; சோளப்பம்பல்: சோளம் விளையுங்காலம்.

பரியம் (X)—மணமகன் மணமகளைக் கருதி அவள் தாய்தந்தையர்க்குக் கொடுக்கும் வெகுமானம்.

புத்தியறிதல் (I, X)—திரளுதல், பக்குவமாதல்.

மக்கிரி (VI)—பெரிய கூடை.

மந்தை (I, II, VIII)—ஊரைச்சுற்றியுள்ள பொதுவிடம்.

மாராப்பு (II)—மார்பை மறைக்கும் சேலையின் ஒரு பகுதி.

மானிறம்(III)—மானின் நிறம்.

வள்ளம் (III)—இரண்டுபடி கொண்ட ஒரு மரக்கால்; ஒரு வள்ளக் காடு: ஒரு வள்ளத்தானியத்தை விதைக்கத்தகுந்த இடங்கொண்ட காடு.

வாங்கு (II)—வளைந்த கைப்பிடியையுடைய சிறு ஆயுதம்.

Printed at the Guardian Press, 158-B, Broadway, Madras.

பிழையும் திருத்தமும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
2	1 மேலிருந்து	கவியில	கவியில்
5	12 கீழிருந்து	பீழை	பீளை
4	6 கீழிருந்து	கும்பக்காள்	குப்பக்காள்
17	4 ,,	வரட்டாற்றில்	வறட்டாற்றில்
29	8 ,,	காளியம்மன	காளியம்மன்
31	7 மேலிருந்து	ஒமுங்கு படுத்துவார்கள்.	ஒழுங்கு படுத்து [வார்கள்.
37	10 ,,	'ր' வடிவுடையது.	ր வடிவுடையது.
54	10 ,,	மச்சா,	"மச்சா,
61	13 கீழிருந்து	கால் வெசய்வித்து,	காவல் செய்வித்து
62	6 ,,	வொச்சுக்கலாமா?	வெரச்சுக்கலாமா
63	4 மேலிருந்து	அவர்கoளைத்	அவர்களைத்
71	14 கீழிருந்து	பண்ணுடிப்	பண்ணுடி
74	3 மேலிருந்து	தனிப்பாடற்றிரட்டு'	தனிப்பாடற்றிர [ட்டு
76	5 ,,	கவிாாயர்	கவிராயர்
80	7 கீழிருந்து	விதிபெரிசு	"விதி பெரிசு,
81	2 மேலிருந்து	தூக்கிவைததுப்	தூக்கிவைத்துப்
105	10 கீழிருந்து	ஆகவே.,	ஆகவே,
125	1 ,,	வேலியும	வேலியும்
131	4 ,,	தம்மூர்	தம்மூர்க்
158	1 மேலிருந்து	ஒமுங்குபடுத்	ஒழுங்குபடுத்
170	14 ,,	பொருட்டு	பொருட்டுச்

For Copies Please apply to

1. SWADESAMITRAN BOOK DEPOT,

POST BOX No. 126,

Madras.

OR

2. DASS PRESS,

VRIDDHACHALAM,

South Arcot District.